# தேசபக்தன் கந்தன்

K. S. வேங்கடரமணி

சுவேதாரண்ய ஆச்ரமம்
மயிலாப்பூர் : சென்னை.

# முன்னுரை

தமிழின் முன்னேற்றங் கருதித் தேனீப்போ லுழைத்துவரும் என் நண்பர்களான ஸ்ரீமான்கள் P. N. அப்புஸ்வாமி, T. K. சிதம்பரநாத முதலியார், C. R. ஸ்ரீநி வாஸன், (சுதேசமித்திரன் பத்திராதிபர்) R. கிருஷ்ண மூர்த்தி ('கல்கி', ஆனந்த விகடன்) முதலிய சிலர் என்னைத் தூண்டி ஊக்கியதனால் நான் முதன் முதலாக இத் 'தேச பக்தன் கந்தன்' கதையைத் தமிழில் எழுதலானேன். ஆங் கிலமாகிய வெல்லப்பாகின் சுவையிலேயே நெடுநாளாக ஆழ்ந்து களித்து வரும் எனக்குத் தாய்மொழியாகிய கொம்புத்தேனின் சுவையருமை இப்பொழுதுதான் புலப் பட லாயிற்று.

தமிழ் நடையிற் செல்ல நான் தயங்கிக்கொண்டி ருக்கையில், எனக்கு அந்நடை சிறிது சிறிதாகப் பழகுதற் கேற்றதொரு நடைவண்டி யாகச் சுதேசமித்திரன் வாரப் பதிப்புக் கிடைக்க, அதனுதவியால் நடைதிருந்தி ஓடி யாடத் துணிவு பிறந்தது. அதனால் இதனைத் தனிப்புத்தக மாக வெளியிடலானேன். வாரப்பதிப்புக்கு என் வந்தனம்.

இதனை வெளியிடும் விஷயத்தில், மதனபள்ளி காலேஜ் தமிழாசிரியர் பண்டித அ. கோபாலையரவர்களுடைய குமாரரும், மயிலாப்பூர் இராமகிருஷ்ண மிஷன் ஹைஸ்கூல்

தமிழ்ப் பண்டிதரும், கவிதாரஸத்தில் ஸ்வானுபவம் பெற்றவருமான நண்பர் ஸ்ரீமான் G. சேஷாத்திரி ஐயர் செய்த பேருதவி மிகவும் பாராட்டத்தக்கது. அவ்வுதவியின்றி இதனை நான் திருத்தமுற வெளியிட்டிருக்க முடியாது. அன்னார்க்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

இப்பதிப்பில் உலக வழக்கான பல தமிழ்ச் சொற்களும், பிறபாஷைச் சொற்களும் அங்கங்கே காணப்படும். அவை அவ்விடங்களுக்குப் பொருத்தமாயிருக்குமெனக் கருதியே அவ்வாறமைக்கப்பெற்றன. அறிஞர் அதனைக் குற்றமாகக் கொள்ளாரென நம்புகிறேன்.

இங்ஙனம்,

காவிரிப்பூம்பட்டினம்,
10—8—1932.

K. S. வேங்கடரமணி.

## அத்தியாயம்—1

### ஆக்கூர்க் கள்ளுக்கடை

I

மாயவரத்திலிருந்து, கீழ் கடற்கரையின் அரசி யென வழங்கிவரும் தரங்கம்பாடிக்குப் புதி தாய்ப் போடப்பட்ட சிறு கிளை இருப்புப் பாதையில் ஆக்கூர் என்னும் அழகிய சிற்றூர் ஒரு ஸ்டேஷன். அவ்வூர் கடலுக்கு மூன்று மைல் அருகாமையில் இருந்தாலும், ஒருநாள் மாலைப் போது அங்கு மிகவும் அமைதியாயிருந்தது. கடற்காற்று இன்னும் அங்கே வீசத்தொடங்கவில்லை; ஏனெனில் அது கடலலைகளோடு ஓடியாடி, கரையருகில் கோலமிடுவது போல் நுரையைச் சிதறிக் கடலிலேயே விளையாடிக்கொண் டிருந்ததுபோலும்.

மணி நாலடித்து ஐந்து நிமிஷம். மாயவரம் போகும் 9-ம் நம்பர் ரெயில்வண்டி ஆக்கூரிலிருந்து ஊதிக்கொண்டு உல்லாசமாய்ப் புறப்பட்டது. மிகப் பழையதான ஐந்தே வண்டிகள் சேர்ந்த அத்தொடர், நெடுநாள் உழைத்துச் சலித்த ஒரு பழைய எஞ்சினால் இழுக்கப்பட்டது. இப் பொழுது அந்த எஞ்சின் பழையதாகக் காணப்பட்டா லும், ஒரு காலத்தில் அது 'தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்' என்று சிறப்பாகவிளங்கியதாதலால், இப்போதும் அதன் வீரியம் முழுதும் போய்விடவில்லை. வீரியக் குறைவையும்

அது காட்டிக்கொள்ளாமல் தன்னுடைய 'கடபட' சத்தத்தால் ஈடுபண்ணிக்கொண்டது. இத்தள்ளாதகாலத்தில் அப்புதிய பாதையைத் தானடைந்தது பற்றி அந்த எஞ்சின் அளவிலா மகிழ்ச்சியடைந்தது. ஆனால், அப்புதிய பாதையோ இந்தப் பழைய எஞ்சின் தனக்கு வாய்த்ததைப் பற்றி மிகவும் வருந்திப் பொருமிக்கொண்டிருக்க, அதனைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அந்த எஞ்சின் ஆடியசைந்து உல்லாசமாய் ஓடிக்கொண்டிருந்தது.

## II

9-ம் நம்பர் ரெயில் ஊதும் ஒலியே தினந்தோறும் ஆக்கூர்க் கள்ளுக்கடையில் குடியர்கள் கூடுவதற்கு மணியடிப்பதுபோலாகும். அழகிய தென்னந் தோப்பின் நடுவே, அகன்ற நீர் நிலையின் அருகில் ஆச்ரமம்போல விளங்கிய அக்கள்ளுக்கடை, ஏழை மக்களின் குடிவெறிக் களியாட்டத்துக்கு மிகவும் ஏற்றவிடமாயிருந்தது. பண்ணையாட்கள் தினந்தோறும் மாலையில், சேற்றுவயலில் தம் வேலை தீர்ந்ததும், குளத்தில் வந்து குளித்துவிட்டு, குளியால் குளிர்ந்த தம் சரீரத்தைக் குடியால் வெப்பமுறச் செய்து களிப்பது வழக்கம்.

இருப்புப் பாதை போடுவதில் கூலிவேலை செய்த ஏழை மக்களுக்குப் பணம் மிகுதியாகப் புரண்டுவிட்டபடியால், இக்கள்ளுக்கடை மாயவரம்-தரங்கம்பாடி இருப்புப் பாதையின் சீமந்த புத்திரியாகத் தோன்றிச் செல்வமாய் விளங்கியது. அது தோன்றின நாள்முதல், தேன்கூட்டில் ஈ மொய்ப்பதுபோல அங்கே கூட்டமுங் கூடத் தொடங்கிற்று. ஏழைகள் நெற்றி வேர்வை நிலத்தில் பொழியச்

சேகரிக்கும் பொருள் ஒரு சிற்றுறுபோலக் கள்ளுக் கடைக்கு ஓடிற்று. கரிகாற் சோழன் ஆட்சிக் காலம் முதல் இதுவரை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஒரு கள்ளுக்கடை யில்லாத ஆக்கூரில் இப்போது அது சுலபமாக வந்து தோன்றியது. பேரரசராலும் ஆகாத ஒன்றை இந்த ரெயில்பாதை இலகுவில் சாதித்துவிட்டது!

மாயவரம்-தரங்கம்பாடி கிளை ரெயில்பாதை போட உத்தரவானது தெரிந்ததுமே, கள், சாராயக் கடைகளுக் கரசனான குத்தகைக்காரன் ஒருவன், வழக்கப்படி, புதுக் கள்ளுக்கடை யேற்படுத்துவதற்குரிய சர்க்கார் அதிகாரிகளுக்குத் தங்க ஜரிகை கட்டின ரோஜாப்பூமாலைகளையும் பொன்போற் பழுத்த எலுமிச்சம்பழக் கூடைகளையும் மற்றும் மனத்துக்கினிய சில பொருள்களையும் அனுப்பினவத் தான். அதன் பயனாக, அந்த ரெயில் பாதையில் மண் வெட்டியின் முதல் கொட்டு விழுமுன் இக்கள்ளுக்கடை முளைத்துவிட்டது.

ஆக்கூர்ப் பெரியபண்ணை முதலியாருக்கு முப்பதினாயிரம் தென்னைமரங்களுண்டு. அப்படிப்பட்டவரன்றோ கள்ளுக்கடைக்குச் சரியான யஜமானர் என்று முதலியாரின் மந்திரிகள் சிலர் யோசனைசெய்து, 'தங்கச் சுரங்கம் தன்னிலத்திலிருக்கப் பிறர் வந்து தங்கமெடுக்கும்படி விடுவதா?' என்று முதலியாருக்கு எடுத்துக்காட்டிப் போதனை செய்ய, அவரும் அதற்கிணங்கினர். அவர் பாலிய வயதினர்; சுறுசுறுப்பும் துணிவுமுள்ளவர்; விவாகம் ஆகாதவர். துணிந்த மனமும், எதையும் பரீட்சித்துப்பார்க்கும் ஆவலும் சேர்ந்தால், பரம்பரையான பெருஞ்செல்வமும் பஞ்சுப்பொதியில் தீப்பொறியிட்டதுபோலாகுமன்றோ?

முதலியார் ஏற்கெனவே நெல் யந்திரம், மோட்டார் பஸ், ரயில்வே கண்ட்ராக்டு முதலிய பலவிஷயங்களில் தலையிட்டு அடிபட்டவர். இப்பொழுது கள்ளுக்கடை விஷயத்தில் ஏன் பிரவேசிக்கக்கூடாது? என்று யோசித்தார். 'தென்னைமரம் வைப்பது புண்ணியமானால், அதிலிருந்து, ஏழைகள் தேன்போல விரும்பி அருந்தும் இனிய கள்ளிறக்குவதுமட்டும் எப்படிப் பாவமாகும்? சண்டிகளான சோம்பேறிப் பண்ணையாட்களுக்கு நாம் தாராளமாய்க் கொடுக்கும் கூலியின் ஒரு பாகமாவது இக்கடையிலிருந்து நமக்குத் திரும்பக் கிடைக்குமன்றோ?' என்று தனக்குத் தானே சமாதானம் செய்துகொண்டு அவ்விஷயத்தில் பிரவேசித்தார்.

ஆனாலும், பெரியபண்ணை முதலியார் இந்த அற்ப வியாபாரத்தைத் தினம் தானே கவனிக்கமுடியுமா? ஆகையால், அந்தப் பொறுப்பை அவர் தன் சிநேகிதனை குத்தகைக்காரனிடமே ஒப்புவித்துவிட்டார். பிறகு கேட்பானேன்! கடையில் கள்ளூற்றுப் பெருக ஆரம்பித்தது. கள் வெகுநயமாய்த் தண்ணீர்போலக் கிடைக்கும்போது, கள்ளுக்கடையில் திருவிழாப்போலக் கூட்டங் கூடுவதும் அதிசயமா!

## III

ஆக்கூரில் கள்ளுக்கடை புதியதாதலால், தினந்தோறும், பண்ணையாட்கள் தம் வேலை முடிந்ததும், குழந்தைகள் பள்ளிக்கூடம் விட்டவுடன் அரைத்துணி யவிழ்ந்ததும் தெரியாமல் மிட்டாய்க்கடைக்கு ஓடுவதுபோல, வயலிலிருந்து கள்ளுக்கடைக்கு ஓடுவார்கள். அவ்வூரில் குடிக்

குப் பேர்போன் சில பழம் பெருச்சாளிகளேயன்றி, பெரும்பாலும் எல்லாருக்குமே குடிப்பது புது வழக்கமாயிற்று. ஆகையால் கடையில் எப்பொழுதும் திருவிழாக் கூட்டந்தான். குடித்துக் களித்துக் கூத்தாடும் அக்கூட்டம் மூன்றுவகையான பிரிவுடையதாய் நடந்து வந்தது:

நந்தன், மூக்கன், காட்டேரி என்பவர்கள் பழைய பெருச்சாளிகள் என்று சொல்லப்பட்ட இனத்தின் தலைவர்கள். அவர்களுக்குக் கள்ளை இவ்வளவு நயமாகக் கண்டவர் குடிக்கும்படி செய்ததில் சம்மதமில்லை.

இருளன், கறுப்பன், இருளப்பன் இவர்கள் கிராமத் தலையாரியான அம்மாவாசையுடன்கூடி, கள்ளுக்கடைக்கே யஜமானர்போல் அட்டகாசம் பண்ணி வந்தனர். இவ்விரண்டு வகுப்பாரும் ஜாதியில் பறையர். இவர்களுக்கு உழவே தொழில்; குடியே கொண்டாட்டம்.

கோவிந்தன், பாவாடை, நல்லான் இவர்கள் தம் உறவின்முறையார்களுடன் கொஞ்சம் கௌரவமாய்த் தலை குனிந்து கடையில் நுழைவார்கள். இவர்கள் படையாட்சி வகுப்பைச் சேர்ந்தவர்கள். நாயக்க அரசர்கள் காலத்தில் இவ்வகுப்பார் படைவீரர்களாயிருந்து பெரும் பேர்பெற்றவர்கள். இப்போது இவர்கள் அந்த வீரத்தைக் கள்ளுக்கடைச்சண்டையில் செலுத்தி, நந்தன், மூக்கன், காட்டேரி, இருளன், கறுப்பன், இருளப்பன் முதலானவர்களை வாயால் ஓங்கி அடித்து வெல்லலானார்கள்.

இம்மையிலும் மறுமையிலும் நல்லின்பங்களை அனுபவிக்க இயலாதவர்கள் இந்தப் பேதைப் பண்ணையாட்கள். பரந்த இவ்வுலகில், கால்குழிநிலங்கூட இவர்களுக்

குக் கிடையாது. வீடும் இல்லை வாசலும் இல்லை. ஆயினும் இவர்கள் கள்ளுக்கடையில் இந்திரசபையின் இன்பம் தமக்குக் கிடைத்ததாக மகிழ்வார்கள். செக்கில் பூட்டின மாடுகள்போல் உழைக்கும் அவர்களுக்கு, இக்கால நவீன நாகரிகத்தின் கொடுமையால் அவ்வுழைப்பு 'சேற்றிலே செக்கிழுப்பது' போல் பின்னும் கொடுமையாகிவிட்டது.

IV

முதல் வகுப்பாரின் தலைமையை வகித்த நந்தன், புதிதாய்க் கள் குடிக்க ஆரம்பித்தவர்களைப்பற்றி வெறுப்புடன் முணுமுணுக்கத் தொடங்கி, "அண்ணே மூக்கா! குடியின் முறை நயம் ஒண்ணுந்தெரியாத இந்தப் பேதைகளைப் பாரு! குடிக்கவும் தனிப் பொறப்புத்தான் பொறக்கணுமப்பா! அவன் கை தடுமாறறத்தெப் பாரு! செத்த மாட்டைக் கொத்தற காக்கா போலே கூட்டங்கூடிக் கூச்சல்தான் மிச்சம். தலையாரி அம்மாசி கைவரிசெ வயல்லெ செல்லும்! இங்கேயுமா அவஞ்செங்கோல்? அது கள்ளுக் கடேலெ கலயத்தை அடக்கியாளுமா?" என்றான்.

நந்தனுக்கு வயது எழுபது. ஆனாலும் கள்ளுக்கலயத்தின் கழுத்துப் பிடியில் கை நடுக்கமில்லை; நிதானமும் உண்டு. அவன் குடியின் தேர்ந்த அனுபவத்தை அவன் கண்பார்வையே காட்டும். அவனுக்கு இந்தப் புதுக் குடிகாரர்களால் கள்ளின் மதிப்புக் கழுநீர்போலாகிவிட்டதில் மிகவும் வருத்தம்.

'நந்தா! இந்தப் பயவளுக்கு நம்ம கோலாலே ஒரு புத்தி போட்டணும். அம்மாசெ வயலில் தலையாரின்னு என்ன? இங்கே அவன் ஒடஞ்சுபோன கள்ளுக் கலயத்

அக்குங் கேடுதானே! இங்கே நாமதான் தலையாரி; அவன் கிறுக்கையும் நல்லா அடக்கணும்!" என்று மூக்கன் சொன்னான்.

காட்டேரி மூன்றுமொந்தைக் கள்ளை உள்ளே செலுத்திவிட்டு, தைரியமாய்ப் பேசலானான். பார்வைக்கு அவன் பயங்கரமான பிராணி. "மூக்கா! எப்பவும் போலே நீ முட்டாத்தனமாப் பேசறே. அம்மாசி கிறுக்குக்கு என்ன காரணம்? யோசிச்சுப்பாரு."

மூக்கன் கொஞ்சம் வருத்தத்துடன் அதை ஆமோதிக்காதவன்போல் இருமிக் கனைத்துக் கொண்டான். ஆனால் காட்டேரி அதை லட்சியம்பண்ணாமல் பேசத் தொடங்கினான்:—"அண்ணே! அம்மாசெ நம்ப சின்னப் பறக் கூட்டத்துக்குத்தான் நாட்டாமைக்காரன். அதுனாலெயா அவனுக்கு செல்வாக்கு? எசமான் பலமில்லெ அவனுக்கிருக்குது; நல்லான் இட்டது எசமானுக்குச் சட்டம்; அம்மாசெ முழிச்சது நல்லானுக்கு முழி. நந்தண்ணே! நீயே பாரு. மூக்கனுக்கு இதெல்லாந் தெரியாது. மாடு செத்தா மூக்கிலே வேக்கும் அவனுக்கு - கழுவுக்கு மூக்கிலே வேக்கிருப்போலே."

இவ்வாறு கூறிய காட்டேரி சிறிது ஆலோசிப்பவன் போல் மேலே பார்த்துக் கனைத்துக்கொண்டு மறுபடியும் சொல்லலானான்:—'நாம நாளெல்லாம் பாடுபட்டா கள்ளு குடிக்க காலணா சேக்கறது ஆண்டவனுக்கு வெளிச்சம். கள்ளெ விட்டா வேறெ சொகமேதண்ணே நம்பளுக்கு? பேதெப் பறையனுக்குப் பாலுண்டா பழமுண்டா? நெய்யுண்டா தயிருண்டா? வீடுண்டா வாசலுண்டா? கட்டின பொஞ்சாதியும் பண்ணெப் பறச்சி; பெத்த புள்ளெ

யும் பண்ணெ மாட்டுக்காரப் பயதானே? சேத்துலே செக திலே கல்லுலே முள்ளுலே அலெஞ்சு திரிஞ்சு எப்பவும் பாடுபடற பொறப்பே பறப்பொறப்பு. கள்ளெ விட்டா வேறே சொகமேது நமக்கு?''

நந்தனும் மூக்கனும் காட்டேரியின் பிரசங்கத்தைக் கேட்டு உள்ளங் களித்துத் தலையை மும்முரமாய் ஆட்டினார்கள். காட்டேரி அதைக்கண்டு ஆனந்தங்கொண்டு, இன்னொரு கலயம் கள்ளுண்டு கம்பீரமாய்ப் பின்னும் பேசத்தொடங்கினான் :—"நல்லான் அம்மாசி களஞ்சியப் பெருச்சாளிக. அவுங்களுக்குக் கொறையென்ன? ஏருழுது சேத்திலே பாடுபட்டுச் சோறு சம்பாரிக்கணுமா?''

காட்டேரிக்குச் சிறுவயதில் களஞ்சியப் பெருச்சாளி யென்று பெரிய பேருண்டு. ஏனெனில் கடவுள் கொடுத்த நீண்டு வளர்ந்த தன் கைகளை அவன் எப்பொழுதும் நீளப் பிரயோகமே செய்துவந்தான். புது மைனர் முதலியார் காலம் முதல் களஞ்சியக் காவலுக்கு நல்லானும் அம்மாவாசையும் வந்துவிட்டப்படியால் காட்டேரிக்குச் செல்வமும் செல்வாக்கும் குறைந்துவிட்டன. ஆனாலும், இன்னமும், நந்தன், மூக்கன், காட்டேரி ஆகிய இவர்களுக்குத் தினந்தோறும் சேற்றிலுழைத்தே சாப்பிடவேணுமென்பதில்லை. பெரிய முதலியார் காலத்தில் சுமார் நாற்பது வருஷங்களுக்குமுன், ஒரே நாள் இராத்திரியில், இவர்களூர்க்கு அடுத்ததாகிய சுரைக்காய்த் தேவனுடைய கிராமத்தைக் கொள்ளையிட்டுக் கூத்தறுப்பு அறுத்துப் படையெடுத்து ஜெயித்ததற்காக இம்மூவர்க்கும் அன்றுமுதல் மாதம் முக்கலநெல் பென்ஷனைக் கொடுப்பட்டு வருகிறது. ஆகையால், இவர்கள் வயிற்

றுக்கவலை நீங்கி, வேலையற்றிருக்கும் காலங்களை, பெரும் பேரும் லக்ஷ்மீ கடாக்ஷமும் பெற்ற பெரிய வக்கீல்கள் போல் வீண் பேச்சில் செலவழித்து வந்தார்கள்.

V

இருளன், கறுப்பன், இருளப்பன், ஆகிய மற்றொரு வகுப்பார் பேச்சிலாவது கட்கலயுப் பயிற்சியிலாவது முதல் வகுப்பாருக்குத் தோற்றவர்களில்லை.

"இருளண்ணே! இண்ணக்கி ஒனக்குப் புணம் எப்படி ஆப்டுச்சு? நான் தெணறிப்போயிட்டேன். ஒனக்கும் ஒருவாரமா வேலையில்லெயே!" என்று முதலியார்பண்ணையில் தலைமுறை தலைமுறையாக வேலைசெய்துவரும் கறுப்பன் இருளனைக் கேட்டான்.

இருளனும் அப்படிப் பண்ணையில் இருந்தவன் தான். அவன் நல்ல உழைப்பாளியாயிருந்தும் அதிர்ஷ்டம் பளுசையாய்ப் போய்விட்டான். அமாவாசையால் தூண்டப்பட்டுத், தான் செய்த திருட்டில், தனக்குச் சிறிதும் பலனில்லாமல் அமாவாசை எல்லாவற்றையும் அபகரித்துக் கொண்டதனல் அவனுடன் சண்டையிட்டுக்கொண்டு அதன்மூலம் பண்ணையிலிருந்து சில நாட்களுக்கு முன் விலக்கப்பட்டான். அவன் கறுப்பன் கேள்விக்குப் பதிலாக, "கறுப்பா! எப்படிச் சம்பாரிச்சேன் தெரியுமா? பொண்டாட்டியே அடிச்சேன்; காசு கெடெச்சுது!" என்றான்.

"அது எப்படி அண்ணே?" என்றான் கறுப்பன்.

'இப்படி அடிச்சேன்!' என்று இருளன் கையை ஓங்கிக்காட்டி, "அவ ஒளிச்சு வச்சிருந்த வெள்ளிக் காப்பு

வெளிவர வரைக்கும் பொடச்சேன் அண்ணே! அடி ஒத வறதுபோலெ அண்ணந்தம்பி கூட ஒதவான்" என்றான்.

"அந்த வெள்ளிக்காப்பா? ஒம் பய காப்பில்லே அது!"

"அதான், அதான். வீட்டுக்குக் கேடா இருந்திச்சு. அவ அதெ நெனச்சு நெனச்சு பாத்துப்பாத்து அழுதுக் கிட்டே இருந்தா; அது தீந்துது. அது கடக்கட்டும். கறுப்பா! நீ என்ன பண்ணே? ஒம் பண்ணலேயும் பத்து நாளாக் கூலியில்லெயே? மொதலியாரு மோட்டார் பயணத்திலெயே இருக்கறாப் போலேக்கிது. இதெல்லாம் நல்ல காலத்துக்கா?"

"ஆமாம் இருளா; கேடுகாலந்தான். இந்தப் பண் ணேலெ வேலெ செய்யறதெவிட பட்டினி கடந்து சாக லாம். ஆடுமாடுங்களுக்கு உள்ள கவனங்கூட நம்ம கிட்ட இல்லெ. நல்லான் அம்மாசி போலொத்த திருட்டுப் பெரட்டு ஆசாமிகளுக்குத்தான் இது காலம். நேத்து ராவு நாங்க கண்ணேடெ கண்ணு கொட்டலே. ஒடேலெ வுளுந்து கடந்த கருகம்ரத்தெ ராவோடெ ராவா கோடாலி எரவவாங்கி வெட்டிப் பொளந்து அஞ்சு சொமையாக் கட்டி, நானும் அவளும் பயலும் சொமையோடெ ராவே சேத்துலென் செகதிலேன் கல்லுலேன் முள்ளுலேன் பத்துக்கல்லு நடந்து மாயவரம் போனம். எங்கேபோன என்ன? திருட்டு வெறகு திருட்டு வெறகுதானே? யாரு சரியா வாங்கறுக. பொயுது வெடியுமுன்னே பாதி வெலெக் கிக் கொடுத்துட்டு ஒடிவந்துட்டேன். இதோபாரு!" என்று கறுப்பன் தன் கையைக் காட்டினன்.

அவன் கையில் ஒரு முழுரூபாய் பிரகாசித்தது. இருளன் தன் பேராசைப் பார்வையை அளந்தளந்து அந்த ரூபாயின்மேல் செலுத்தினன். கடையில் மற்றவர்களும் அந்த ரூபாயைப் பார்த்து மகிழ்ச்சியடைய, கறுப்பன் குதூகலத்தோடு கதையை ஓட்டினன்.

"ரூபாயெ ஒடெக்காமே கடெக்கிக் கொண்டாந்து சேத்தேன் அண்ணே! அவ கைக்கி கிளாசு வளே போட்டுக்க அரைக்காரூபா கெஞ்சினு; கெஞ்சின கையெத் திருகி ஒடிச்சேன்; கன்னத்துலே ஒரு அறெ குடுத்தேன். பய இட்டிலிக்குக் காசு கேட்டான்; வாயிலே ஒரு அறெ அறெஞ்சேன்; ஒரு ஒதே குடுத்தேன். இதோ பாரு முழு ரூபா. நாலு நாளு நல்லாக் குடிச்சு மெய் மறந்து சொர்க்கம் போகலாம்!" என்று முடித்தான் கறுப்பன்.

"ஆனு, கறுப்பா! இந்தத் திருட்டுக்காக ஒன்னே புடிச்சு ஒதெச்சா என்ன பண்ணுவே! அந்தாலே அம்மாசி யிருக்கருன்; நல்லானும் இருக்கருரு."

"இருந்தா என்ன? கள்ளுக்கடேலே களவுகூட உண்டா அண்ணே? சாதி வயக்கும் மறந்துட்டெயோ? அம்மாசி யிருந்தா என்ன? அவனுக்கு ஒரு மொந்தே குடுத்தா எங்கூட அவனுஞ் சத்தியம்பாடருன். இதோ பாரு! அவனெக் கூப்படறேன். அண்ணே அம்மாசே! இண்ணக்கி என்ன ரொம்ப மொம்மரமாயிருக்குது?"

"ஏ சோம்பேறிகளா! ஒங்க காரியத்தெப் பாத்துக்குங்கடா. கறுப்பா! அந்த ரூபா எங்கேடா திருடினே?"

"திருடினலும் ஒம்பங்கு எங்கே போச்சு?"

"அப்படின்னு அது திருட்டில்லே; கடை கள்ளுக் கடை; சரிதான் !"

"பலேபேஷ் அம்மாசி! அப்படின்னு நீதான் எங்க ளுக்குத் தகுந்த தலையாரி. எந்நாளும் நீயே களஞ்சியக் காவலாயிருந்து எங்களைக் காப்பாத்தணும்" என்று ஒரே பாட்டாக் மெட்டுப்போட்டு இருளன் கறுப்பன் இருளப்பன் மூவரும் பாடினார்கள்.

குடிவெறியில் எல்லோரும் தன்னை ஒன்றும் கேட் காமல் மறந்துவிட்டதற்கு இருளப்பன் சந்தோஷமடைந் தான். ஏனெனில், ஒருமாதம் முந்தி அவன், பண்ணைக்கு விருந்தாக வந்திருந்த ஒரு குழந்தையின் கெடியாரச் சங் கிலியை, அக்குழந்தை பண்ணைத்தோட்டத்தில் பூப்பறித் துக்கொண்டிருக்கும்பொழுது தைரியமாய்த் திருடி, அதைக் கள்ளுக்கடைக்காரன் மூலமாகவே விற்று, வந்த பணத்தை ஒரு மாதக் கள்ளுக்கு விலையாக ஏற்பாடுசெய்து கொண்டுவிட்டான்.

## VI

முன் இரு வகுப்பினரைவிட, மூன்றும் வகுப்பினரா கிய கோவிந்தன், பார்வாடை, நல்லான் இவர்கள்தான் கள்ளுக்கடையில் பெரியமனிதர்கள். ஆனாலும் அவர்க ளும் பேச்சில் சளைத்தவரில்லை; கலயத்தின் கணக்கிலும் சளைப்பில்லை. நல்லான் இவர்களில் தலைமை யுடையவன். பண்ணையில் அவனுக்கு மணியம் வேலை.

"நல்லான்! பண்ணைவேலை உனக்குக்கொஞ்சநாளாய்ச் சலித்துப் போய்விட்டதே, ஏன்? முதலியார் வழி பிடிக்க வில்லையோ? இந்தக் களஞ்சியப் பெருச்சாளி வேலையை விட்டு வேறே ஏது செய்தாலும் யோக்கியமப்பா" என்று

நல்லானுக்கு உறவுமுறையோனான கோவிந்தன் பரிவுடன் கூறினான். இவன், பிறருக்கு ஏதாவது வத்தி வைப்பதி லேயே நோக்கமுள்ளவன்.

"கோவிந்தா, நீ சொல்வது சரிதான். என் சம்பளம் பதினெட்டு மாதமாய் பாக்கி நிற்கிறது. யஜமானுக்கோ வழியிலே போகிறவர்களெல்லாம் மந்திரிகள். வஞ்சனை யன்னியில் உழைப்பவருக்குப் பலனில்லை. பாதி நிலம் இன்னம் சாகுபடி ஆகவில்லை. ஆள்களுக்கோ முன்மாதிரி பயமில்லை. ஊரான் எலக்சனுக்காக ஓடியாடிப் பண்ணைக் காசைப் பாழாக்கும் யஜமானுக்கு யார்தான் புத்தி சொல்ல முடியும்? இளவயசும் கூடி நிற்கிறது. சர்க்கார் உத்தியோகஸ்தன் எவ்வளவு அற்பனானாலும் அவனுக்கு நம் யஜமான் தயவு முழுக்க உண்டு. அரிக்காச்சல் போட்ட விரை நெல்லில் இரண்டு வண்டி அவன் வாசலில் போய் விழுந்துவிடும். நமக்கென்றால் கணக்கேது, வழக்கேது; பணமேது, நெல்லேது; பண்ணைக்கும் பேருக்கும் இந்த நாளில் அத்து எங்கேயிருக்கிறது? நம்ம தேசபக்தர் கந்தன் சொல்வதுபோல் திடீரென்று ஒரு நாள் இடி விழுந்து எல்லாம் நாசமாகப்போகிறது நிச்சயம்." என்றான் நல்லான்.

"நீயும் கந்தன் மாதிரி நன்றாய்ப் பேசத் தெரிந்து கொண்டுவிட்டாய் நல்லா! அவர் சொல்லும் உன்சொல் லும் ஒத்திருக்கிறது. நாம் பாடுபட்டுச் சேகரிக்கும் தானியத்தில் நமக்குப் பாத்தியம் கொஞ்சமும் இல்லையா னால் நாம் ஏன் உழைக்கவேணும்? நல்லா! நீ மேல் கொண்டு காரியத்தை நடத்து. நாங்களும் உன்னைப்பின் தொடருகிறோம். அமாவாசை உன் கையாள்தானே?

உன்பேச்சை மீறி அவன் ஒருநாளும் நடக்கமாட்டான். நம்ம தேசபக்தர் கந்தன்சொல்வதுபோல இந்தப்பேதைப் பண்ணையாள்களை ஒன்று சேர்த்து ஒரு உருவாக்கு. எல்லாருக்கும் அதனாலே சேமமுண்டு. நான் உன்னைக் கைவிடமாட்டேன். தெய்வம் சாட்சியா கையில் கலயத்தை வைத்துக்கொண்டு சொல்லுகிறேன்; இது தப்பாது" என்று நல்லானைத் தூண்டினான் கோவிந்தன்.

"ஆமாம் கோவிந்தா. நம் கந்தனும் அப்படித்தான் சொல்லுகிறார். இந்தக் கள்ளுக்குடியை ஒழித்து, பாவத்தைப் போக்கி ஒழுங்காக வேலை செய்து காலங்கழிக்கச் சொல்லுகிறார்"

"ஆமாம் அண்ணே, அவர் வாக்கைத் தெய்வ வாக்கா வைத்துக்கொண்டு நடப்போம். அவர் தேசபக்தர்; சந்நியாசிபோலே இருக்கிறார். இன்று காலையில் அவர் எழைகளுக்கு ராட்டினமும் கதர்த் துணிகளும் கொடுத்தார். நேட்டாலில் அவர் பெரிய பணக்காரர் என்று கேள்வி. கலெக்டர் வேலைக்குக்கூடப் படித்தவர் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர் என்னிடம் நிரம்பவும் பிரியமாயிருக்கிறார்" என்று நல்லான் தம்பி பாவாடை அவனோடு சொன்னான். அவன் பதினாறு வயதுள்ள பாலியன்.

"பாவாடை! அவர் எல்லாருக்கும் நல்லவர்தான். உன்னிடம் மிக்க அன்புள்ளவர். நமக்குள்ளே நீதானே கொஞ்சம் படித்தவன். உன்னையாகிலும் நான் மேல் கொண்டு வாசிக்க வைக்கக்கூடாதா? அதுவும் பாவந்தான். எல்லாம் இந்தக் கள்ளுக்கடைதான் காரணம். நமக்கு வரும் பணம் இதுக்குத்தான் சரியாய்ப்போகிறது. கந்தன் சொல்வதுபோல, இது நம்மைக் குப்பைக்குச்

சமானமாக்கிவிட்டது. எல்லாம் இதனுல் கெட்டுப்போய் விட்டது. முதலியார் பண்ணைக்கு அழிவுகாலம் கிட்டி விட்டது. நல்லதுக்கா எந்நாளும் இல்லாத இந்தக் கள்ளுக் கடை இங்கே ஏற்பட்டது" என்று நல்லான் மனமாரச் சொல்லிப் புலம்பினுன்.

'ஆமாம் அண்ணு, இந்தக் கள்ளுக்கடை தொலைந் தால்தான் நமக்கு நல்லகாலம். நம் குடும்பத்துக்குக் கேடு இதுதான். கௌரவத்துக்கும் குறைவு; பொருளுக்கும் அழிவு. கந்தன்தான் நம்மை ஆளாக்கி விடவேணும். முதலியாரைக்கூட அவர் ஒருவேளை மாற்றிவிடக்கூடும். அவர் முகத்தில் சுத்தமான களை வீசுகிறது. சந்நியாசி யோகம் அவர் கண்ணில் தளும்புகிறது. அவர் இட்ட வாக்கு அழியாது. அவர் எண்ணின எண்ணம் நிறை வேருமல் போகாது. நம்முடைய யஜமானரும் ஒருக்கால் திரும்பினுலும் திரும்பலாம்" என்முன் பாவாடை.

"அது ஒருநாளும் இல்லை பாவாடை! சேற்றில் அழுந்தின மொட்டுத் திரும்பவும் பூக்குமோ? பெரிய ஆச் சியைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. கலியாண மாகாத தன் செல்லப்பிள்ளை நாடோடியாய் அலைவதனுல் கெட்டவழிகளில் சென்றுவிடுவானே என்று அவள் மனம் கலங்கிப் புலம்பித் தவிக்கிருள். கண்ணீர் சோர அந்த அம்மாள் அழுவதைப் பார்க்கவும் சகிக்கவில்லை—. அதோ கந்தன் வருகிருர் பார்—சூரியன் உதித்தால் போலே. அவர் வார்த்தைப்படி நாம் நடக்காவிட்டாலும், அவரை வணங்கி மரியாதையாவது செய்வோம்" என்று நல்லான் உண்மையாகவே பேசினுன்.

---

# அத்தியாயம்—2

## காதலின் கிளர்ச்சி

I

சென்னமா நகரின் தென்பாலுள்ளது அடையா றென்பதோ ராறு. அதன் முகத்துவாரத் துக்கருகில், தேவைக்கு மேல் நீண்டு அழகு வாய்ந்ததாய், சர்க்காரின் அற்ப திட்டத்திற் குட்படாததாயு முள்ள ஒரு பால முண்டு. அடையாறு மிகவும் அகலமுள்ளதாயினும் மழைக்காலந் தவிர மற்றக் காலங்களில் அதில் ஜலம் ஓடுவது கிடை யாது. கடலானது ஆற்றில் வெகுதூரம் எதிர்த்து ஓடி அதன் நீரையும் உப்பாக்கி விடுகிறது.

பாலத்தின் நடுவில், கோட்டை மதில் போலுள்ள கைபிடிச்சுவரில் சிறிது சாய்ந்து நின்று கடலைநோக்கிப் பார்த்தால் என்ன அற்புதக் காட்சி! பசுமை நிறைந்த சோலையடர்ந்த நிலமும், குளிர்ந்த நீரும், இவற்றில் படி யும் கதிரவன் காந்தியும் என்ன தோற்றம்! இக்காட்சி எக் காலும் மறக்கத்தக்கதன்று.

இந்தப் பாலங் கடந்து கிழக்கே திரும்பினல், பிரம்ம ஞான சங்கத்தின் விசாலமான தோட்டம். இது தத்வ ஆராய்ச்சி செய்யும் தபோதனர் தங்கும் பர்ணசாலைகளு டன் கூடிய தவவனம்போற் காணப்படும். அங்கே எங் கும் பசுமையும் புதுமையும் பரிமளமும் நிரம்பி விளங்கும். எப்பொழுதும் சஞ்சரிக்கும் இயல்புள்ள காற்றுக்கூட

இங்கு வந்தால் சற்றுநேரம் தங்கித் தவம்செய்ய நினைக்கும்போல் தோன்றும்.

தோட்டத்தின் ஒருபா லுள்ள பெரியதோர் ஆலமரத்தினருகில், மிகவும் அழகாய் அமைக்கப்பட்ட விருந்தினர் விடுதி ஒன்று உண்டு. அது, இயற்கையும் மனிதனும் ஒன்று கூடிப் போட்டி போட்டுக்கொண்டு கட்டினாற் போன்றது. அங்கே, தாயைப் புலம்பி யழைக்கும் குழந்தையின் மழலைக் குரல்போலக் கடலின் அலையோசை மெல்லெனக் காதுக் கெட்டும். அடையாறும் அக்கடலின் புலம்பலுக்குப் பதில் கூறுவதுபோலச் சிற்றொலியுடன் சுழலிட்டு மேன்மேல் ஓடிக்கொண்டிருக்கும். சிறு பறவைகள் உருவில்லாத இனிய பாட்டுக்களைப் பாடித் திரிந்துகொண்டிருக்கும்.

கரடு முரடான கற்கள் நிறைந்த பாதையின் கஷ்டமறியாத வெள்ளையரின் சுகவேட்டைச் சிறுபடகுகள் கம்பீரமாய், அப்பழுக்கின்றிப் பால்போல் வெள்ளிய சிறு பாயை விரித்துக்கொண்டு, வேனிற்கால வானத்திற் சஞ்சரிக்கும் வெண் மேகம்போல அடையாற்று நீரில் அசைந்து போய்க்கொண்டிருக்கும். அந்தப் படகு மரக்கட்டையே யானாலும், வெள்ளையரின் இந்நாட்டுப் பரிபாலன வெளித்தோற்றம் போலக் கம்பீரத்துடன் சிறிதும் அழிவு பயமின்றி, தைரியமாய் நீரில் மிதந்து அசைந்து ஓடிக்கொண்டிருக்கும்.

ஆக்கூர்க் கள்ளுக்கடையில் ஆட்கள் கூடும் அதே நேரம்; மாலை சுமார் நாலுமணி. தன் பர்ணசாலையை விட்டு வெளிவந்த ஒரு வனகன்னிகையைப்போல முற்

கூறிய விருந்தினர்விடுதி அந்த ஆலமரத்தினருகில் அப்பழுக்கின்றி விளங்கியது.

அம்மாளிகை மாடியின் தாழ்வாரத்தில் அணங்கு ஒருத்தி அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தாள். அவள் மாசற்ற பளிங்கு போன்ற வடிவழகு வாய்ந்தவள். ஆண்களில் உத்தமரான மகாத்மா காந்தியின் சிஷ்யைகளில் ஒருத்தி. பெண்களிற் சிறந்தவளான டாக்டர் அன்னி பெஸன்ட் அம்மைக்கு மிகவும் வேண்டியவள். அன்று காலையில்தான் பம்பாயிலிருந்து வந்தாள்.

அம்மாதரசியாகிய ராஜேசுவரிபாய், மோட்டார் வரும் பாதையை அடிக்கடி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாள். நீரில்லா ஆறுபோலக் காணப்படும் அப்பாதையோ வளைந்து போய்த் தென்னந்தோப்பினிடையே மறைந்துள்ளது. சிறிது தூரத்திற்கப்பால் பெரியசாலையில் மோட்டார்கள் ஓடும் ஒலி இடையிடையே மெல்லெனக் காதுக்கெட்டியது. மோட்டார்த்தாரையின் ஓசையைக் கேட்கும் போதெல்லாம் ராஜேசுவரி மெய் சிலிர்த்துச் சந்தோஷமடைவாள். அம்மாளிகையின் மாடியிலிருந்து பார்க்கப் பார்க்க அடையாற்றுப் பாலத்தின்காட்சி அளவற்ற சிறப்பு வாய்ந்ததாயிருந்தது.

மாளிகையை ஒட்டி ஆற்றோரமாய்ப் போடப்பட்டுள்ள உல்லாசமான நடைபாதையில், காளைப்பருவத்தானொருவன் பாலைக் குடிக்கப் போகும் பூனைபோல் மெல்ல அடி வைத்து விரைவாய் நடந்துபோய் மாளிகையின் மாடிப்படியிலும் ஓசையின்றிப் பரபரப்புடன் ஏறி ராஜேசுவரி அறியாமல் அவள் பின்புறமாய்ச் சென்று அவளுடைய மெல்லிய தோளில் செல்லமாய் ஒரு தட்டுத் தட்டினன்.

அவன் வரவை எதிர்நோக்கி, ஸ்வப்னுவஸ்தைபோல் தன்னை மறந்திருந்த ராஜேசுவரி திடுக்கிட்டு விழித்துத் திரும்பிப் பார்த்தாள். வேறொரு ஸ்திரீயானல் அப்பொழுது பயந்து கூக்குரலிட்டிருப்பாள்.

“ மனம் தவித்துக்கொண்டிருக்கும் எனக்கு உன்னுனுடைய இந்தத் திருட்டுச் செல்லத் தட்டு எதற்காக ரங்கா? இன்னமும் முன்போல் குழந்தைப் பிள்ளையாய்த் தானிருக்கிருய். எல்லாருக்கும் ஒரு படிப்பிணையைத் தந்த இக்கட்டான இந்த ஆண்டு உனக்கு அப்படி யில்லைப்போ லிருக்கிறது ” என்று ராஜேசுவரி அன்பும் கோபமும் கலந்த தொனியில் பரபரப்புடன் பேசினுள்.

ரங்கன்: “ அப்படியொன்றுமில்லை ராஜி; உன்னைப் புதுவழியால் மகிழ்விக்க முயன்றேன்.”

ராஜேசுவரி: “ உன் முதல்குமாஸ்தா ஏற்படுத்தினதோ இந்தப் புதுவழி ?”

ரங்கன்: “ ஒரு வருஷமாய்ப் பிரிந்திருந்த நாம் மறுபடி கூடின இம் முதல்தடவையில் காதலின் அருமையைக் காட்டாத இந்த வீண் பரிகாச வார்த்தைகள்தானு பேசிக்கொள்ள வேணும்? அன்று பம்பாய் ரயிலடியில் நாமிருவரும் பேசிக்கொண்டதை இதற்குள் நீ மறந்துவிட்டாயோ ராஜி! அந்த வார்த்தையிலேயே ஆழ்ந்து வேரூன்றி, இந்தப் பாழாய்ப்போன கலெக்டர் வேலையிலும் காதலை விடாது காப்பாற்றிக் காலந் தள்ளி வருகின்றேன் நான்.”

ராஜேசுவரி: “ என்ன இதற்குள்ளேயே கலெக்டர் வேலையில் விரக்தி வந்து விட்டாற் போலிருக்கிறதே! ரூ. 500 சம்பளமும் அதிகாரமும் போதவில்லையோ? லண்

ட்ன் நகரில் நீ செய்த பிரசங்கங்களை மறந்துவிட்டாயோ? ‘இந்தியர்களுக்குத் தினசரி வரும்படி ஓரணாத்தானே’ என்று தலைகாட்டிப் பேசின மனம் எங்கே போயிற்றோ?

ரங்கன்: “ராஜி! நானா மறப்பவன்? அப்பொழுது இவ் விஷயங்களைப்பற்றிப் புஸ்தகங்களிலிருந்து படித்துப் பேசினேன்; இப்பொழுது நம் நாட்டின் ஏழ்மை நிலை தினந்தோறும் என் அனுபவத்திலேயே நன்கு விளங்குகிறது. ஏழைத் தனத்திலும் கல்விக் குறைவிலும் நம் நாட்டைப்போலக் கேவலமான நாடு உலகில் வேறெதுவுமில்லை; நிச்சயம். ஆனால், இதற்கு மருந்து கடையிலில்லை; நம்முடைய கையில்தா னிருக்கிறது. சர்க்காரை யெதிர்பார்ப்பதனால் ஜனங்களுக்கு ஒன்றும் பலனில்லை. தின வெடுத்தவன், தானே சொரிந்துகொண்டால்தான் சுகம்.”

ராஜேசுவரி: “சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய பாட்டை இவ்வளவு சுலபமாகவும் சரியாகவும் கைக்கொண்ட உன்னுடைய குசாக்ர புத்தியே புத்தி!”

ரங்கன்: “ஏழைகளின் ஸ்திதியைப பற்றிப் பேசவா உன்னை நான் இங்கே அழைத்தேன்?”

ராஜேசுவரி: “அதைவிடச் சிறந்த பேச்சு வேறென்ன இருக்கிறது?”

ரங்கன்: “வேறு உண்டு; அதுதான் ராஜியைப் பற்றிப் பேசுவது.”

ராஜேசுவரி சிறிது கூச்சமுற்றாள்; அவள் முகம் சிவந்தது. ஆனால் அவை காதலின் கோளாறு அல்ல; கோபத்தின் அறிகுறிகள்.

ரங்கன்: (மறுபடியும்) “ராஜி! நீ என்னதான்சொல்லு, நீ யில்லாமல் எனக்குப் பதினாயிரம் பொன்வந்தாலும்

சுகமில்லை. நாமிருவருமாக ஆக்ஸ்போர்டில் மூன்று வருஷ காலம் வளர்த்த தேசபக்தியை நல்லவழியில் எல்லோருக்கும் ஊட்டி, நாட்டின் நன்மையைத் தேட நாம் இனிமேலாவது பாடுபட வேண்டாமா? வாயால் பேசிக் குணமென்ன? காரியத்திலல்லவோ காட்டவேண்டும். நம் நாட்டில் பேச்சுக்குக் குறைவில்லை; ஐப்பசிமாதத்து மழைபோல அளவின்றிப் பொழிகிறோம்; பலனேது? அம் மழைவெள்ளத்தைச் சீர்படுத்தி அடக்கி ஆறாகச் செய்து, அதிலிருந்து பல வாய்க்கால்களைப் பிரித்து உழுவதற்கேற்ற நிலங்களில் பாய்ச்சினாலல்லவோ பின்பு விதை விதைத்து நடவு நட்டு அறுப்பறுத்து உணவாக்கலாம்? நம் நாடு பாழாவதற்கு முதற் காரணம் கிராமங்களின் சீரழிவே யாகும். அங்கல்லவோ நமக்கு முதலில் வேலை.”

ராஜேசுவரி: ஆமாம் சரி, ரங்கா; ஆனால் சர்க்கார் வேலையிலிருந்துகொண்டு கிராமச் சீர்திருத்தம் செய்வதெப்படி? இப்பொழுது சர்க்காரின் வேலை தேசத்தொண்டர்களைச் சிறைக்கனுப்புவதைத் தவிர வேறுண்டோ?”

ரங்கன்: ”ராஜி! ஸர்க்கார் உதவியில்லாமலே நாட்டின் சீர்திருத்த வேலையைச் செய்துவிட முடியுமா? வாயால் வளமையாய்ப் பேசலாமே தவிர, ஒருவனால் என்ன முடியும்? நானும் இதுவரையில் உன்னைப் போலவே எண்ணியிருந்தேன். அது நிச்சயம் முடியாதென்று இப்போதுதான் விளங்குகிறது. கல்லை அலையால் கரைக்க முடியுமா? அது இருக்கட்டும்; நமக்கு மணமான பிறகு இவ்விஷயத்தைப்பற்றி நன்கு ஆலோசித்து நாமிருவரும் சேர்ந்து பாடுபடுவோம். தேச பக்தி எனக்குப் போய்விட்டதென்று நினைக்கிறாய்?”

ராஜேசுவரி புன்சிரிப்புடன் ரங்கன் வார்த்தையைக் கேட்டுவந்தாள். நீர்ச்சுழல்போல அவள் கன்னங்கள் குழிந்தன. அது அவளழகை அதிகப்படுத்தியது.

ரங்கன்: "ராஜி! இப்பொழுதே நீ தீர்மானித்துக் கொள்ளவேணும். சகல சம்பத்தும் நிறைந்த நீ உன் வாழ்நாளை வீணுக்கலாமா? அழகுவாய்ந்த ஒரு கப்பல் நவரத்தினங்கள் வீந்தாலொழிய வேறெதையும் ஏற்றிச் செல்ல மாட்டேனென்று கரையருகே மணலிற் பாய்ந்து வீணே கிடக்கலாமா?"

"அதனால் அது நிலக்கரியை ஏற்றிச்செல்லவேண்டுமென்று சொல்லுகிறாயா ரங்கா?" என்று ராஜி புன்சிரிப்புடன் கேட்டாள். அவ்வார்த்தை ரங்கனுக்குத் தேள் கொட்டினதுபோ லிருந்தது. ஏனெனில் அவன் சாமள வர்ணமுடையவன். அவ்வார்த்தை தன்னைக் குறித்துச் சொன்னதாகவே கருதினன். ஆனாலும் இதுபோன்ற வார்த்தைகள் அவன் மனத்தை நீடித்துத் துன்பப்படுத்துவதில்லை. வெள்ளம் வருங் காலங்களில் மலையருவியில் உருண்டுவரும் கூழாங்கற்கள் போன்ற தன்னுடைய அலங்காரச் சொற்களுக்கு இது ஏற்ற அபராதமென்றே அவன் எண்ணினன்.

ஆனாலும், ஒரு நிமிஷம் யோசித்து, "கரி யென்றால் என்ன அற்பமாய்ப் போய்விட்டதோ ராஜி! அதில்லாமல் இவ்வுலகில் நீரேது நெருப்பேது, உண்ண உணவேது?" என்றான். குப்புற விழுந்தாலும் 'குதித்தேன்' என்று சொல்லிச் சமாளித்துக்கொள்ளும் இந்தச் சாமர்த்தியம் இல்லாவிட்டால், வீடற்ற, கதியற்ற ஏழை ரங்கன்

இருபத்தைந்து வயதுக்குள் தூரதேசம் சென்று திரும்பி அஸிஸ்டெண்டு கலெக்டர் வேலையுடன் வரமுடியுமா?

ரங்கன் சுற்றிலும் பார்த்து, "ராஜீ! சீமையில் நாம் கொண்ட காதலை வளர்ப்பதற்கு இத்தாழ்வாரம் தகுதியில்லை. அதோ பார் அப்படர்ந்த ஆலமரத்தின் விரிந்த அழகை! அதன் நிழலையடைந்து நமது பழைய காதலைப் புதுப்பிப்போம். அவ்வாலமரமும் தாமரைபோன்ற உன் பாதங்களை முத்தமிடும்படி தன் கிளைகளைத் தரைசேரத் தாழ்த்தியிருப்பதுபோல் தோன்றுகிறது. அங்கே போய், ஒரு வருஷமாக உள்ளே நிறைந்து ததும்பிக்கொண்டிருக்கும் நம் காதற் சுவையை நுகர்ந்து களிப்போம் வா" என்று கூறி அழைத்தான்.

## II

"ரங்கா! சீமையில் நாம் நினைத்ததுபோலவா நம்முடைய வாழ்வு இங்கிருக்கிறது? நாட்டின் விடுதலையாகிய பேரின்பப் பெருங்காதல், சிற்றின்பச் சிறு காதலை என் மனத்தினின்றும் அடியோடு சிதைத்து விட்டதே! தேச நன்மைக்கு உழைக்க என் மனம் தளும்பிக்கொண்டிருப்பதை நீ அறியாயோ?" என்றாள் ராஜேசுவரி.

இதைக்கேட்ட ரங்கன் பாம்பு படமெடுப்பதுபோல் தன் தலையை நிமிர்த்தி, நாவைத் துழாவினான். குண்டூரில் கலெக்டராயிருந்து, தினந்தோறும் பல தேசபக்தர்களைச் சிறைக்கு அனுப்பிய ரங்கனுக்கு, ராஜேச்வரியின் வார்த்தையிலிருந்தும், அவள் பார்வையிலிருந்தும் அவளுடைய தேசபக்தியின் வரம்பற்ற நிலை நன்கு புலப்பட்டது.

ராஜேசுவரி தன் கழுத்தை அழகாகச் சிறிது வளைத்து, மெல்ல நிமிர்ந்து, மேலே நோக்கிச் சொல்லத்

தொடங்கினாள் : "இவ்வுலகு ஒரு புதிய குழப்பத்தில் அகப்பட்டிருக்கிறது. பழமையெல்லாம் குப்பைத் தொட்டியில் போய்விடும். வளமைதங்கிய புதிய நாகரிகம் ஒன்று, நீரின்மேல் தோன்றும் தாமரைத் தளிர்போலத் தோன்றிவருகிறது. சீமையில் நாம் புத்தகங்களைப் படித்துக் கண்ணவிந்து போயிருந்தோம். உலக நடவடிக்கைகள் நமக்குத் தெரியவில்லை. நீயோ இந்த ஒரு வருஷ உத்தியோக தர்பாரிலேயே மெய்மறந்து விட்டாயென்பது நிச்சயம். இந்த ஐந்து நிமிஷத்தில் அறிந்துகொண்டேன் அதை. கோடியில் ஒருவராய் அவதார புருஷரான மகாத்மா ஜீ தலைமைவகித்து நம் இந்தியநாடு புது நாடாகும் பொருட்டு உழைத்து வரும்பொழுது, சர்க்கார் உத்தியோகத்தை வகித்துப் பெட்டியடி ஆளாய்க் கணக்கெழுதி வருவது பாபமல்லவா?"

"ஆமாம் ராஜி, பாபம்தான், ஒத்துக்கொண்டேன். ஆனால் நான் சர்க்காரோடு போடும் தேசபக்திச் சண்டையைப்பற்றி உனக்கென்ன தெரியும்? அதை உனக்கன்றி வேறு யாருக்குத் தெரிவிப்பது? அதற்குத்தான் தந்தியடித்து உன்னை இங்கு வரவழைத்தேன். தேசபக்தியைக் காட்டுவதென்றால் உன்னைப்போலக் காங்கிரஸில் சேர்ந்து உழைத்தால்தானா? வேறு வழியில்லையா? சர்க்கார் வேலையிலிருந்தாலும் தேசபக்தியைக் குறித்து என் சண்டை போடக் கூடாது? உன்னைப்போல் காங்கிரஸில் சேர்ந்து உழைக்கலாமென்றெண்ணினேன்; ஆனால் இந்த ஐ. ஸி. எஸ். பாஸாய்விட்டதே! அப்படியே கலெக்டர் வேலை ஆனால்தானென்ன? என்னுடம்பொடு கலந்த தேசபக்தி அழிந்துபோய்விடுமா? உப்பா சர்க்கரையா, ஜலத்

தைக் கண்டு கரைந்துபோக. தேசபக்தி யென்பதும் தைரியம் முதலிய குணங்கள்போல ரத்தத்தில் பிறப்பது; அழிவில்லாதது; காலதேச வர்த்தமானங்களுக்குக் கலங்காதது" என்று ரங்கன் கூற, ராஜேச்வரி பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்தாள்.

ரங்கன் மறுபடியும் "என் ஒரு வருஷத்திய கலெக்டர் தர்பார் கதையைச் சொல்லுகிறேன் கேள்: தொண்டர்களின் தொந்தரவு குண்டூரில்தான் மும்முரம். என் மேலதிகாரிகள் அது காலித்தனமான கலகமென்றும் ஒரு நொடியில் அதை அடக்கிவிடலாமென்றும் கருதுகிறார்கள். ஆனால் அது முடியாதென்று நான் பலமுறை கவர்னருக்கும் கவுன்ஸில் மெம்பருக்கும் எழுதியிருக்கிறேன். 'தடியடியாவது குண்டுகளாவது ஜனங்களின் குறைவைத் தீர்த்துவிட முடியாது; அவர்கள் அபிவிருத்தியை எவ்விதத்திலும் நாடவேண்டும்' என்று நன்கு எடுத்துரைத்தேன். கூடியவரை தேசபக்தியை விடாமலே ராஜாங்கம் நடத்தினேன். அதனால் என்னை இப்பொழுது, அமைதி நிலைபெற்றுள்ள என் தஞ்சாவூருக்கே மாற்றிவிட்டார்கள். அதுவே என் தேசபக்திக்கு ஒரு அறிகுறி. ராஜீ! இப்பொழுதாவது நீ ஒப்புக்கொள்வையா?" என்றான். ராஜேசுவரி இதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல், ஏதோ யோசிப்பவள்போல் மௌனமாயிருந்தாள்.

ரங்கன்: நான் தஞ்சைக்கு மாற்றலாகிப் போவதே என் தேசபக்திக்கு நற்சாட்சி ராஜி! இதைத் திரும்பவும் சொல்லுகிறேன். போய்ச்சேர்ந்து வேலை ஒப்புக்கொள்ள ஒருவார அவகாசம் உண்டு. அதில் உன்னைக்கண்டு அள

வாவி ஆனந்திக்கவே உன்னை இங்கு வரவழைத்தேன். இந்தக் குழப்பமான சமயத்தில் உன்னையன்றி வேறு யார் எனக்கு ஆதரவு? ராஜி, என்னை மறுக்காதே. நீ இவ்வாறு பேசுவாயென்றும் எண்ணினேன். ஏனெனில், நீ பம்பாயில் ஒத்துழையா இயக்கத்தை நடத்தி வந்தது எனக்கு நன்றாய்த் தெரியும்; பத்திரிகைகளில் பார்த்தேன். டெல்லி கவர்ன்மெண்டார் கூட உன்மேல் குறிப்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். உன் போக்கு வரவைக் கவனித்து வரும்படி சென்னை அரசாங்கத்துக்கும் தந்தி வந்திருப்பதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டுக் குட்டையையும் எங்கே நீ கலக்கிவிடுகிறாயோ என்று சர்க்காருக்கு உன்னிடங் கொஞ்சம் அச்சந்தான்.''

ராஜேசுவரி: ஆமாம் ரங்கா. நீயும் ஒரு கருவியாக, இருவருமாய் இந்தக் குட்டையைக் குழப்பினால்தான் வெகுநாளைச் சேற்றைக் கரையேற்றலாம். ஆனால் அரசாங்கத்தை அண்டினவருக்குத் தேச பக்தியும் உண்டோ? கேட்பவர் சிரிப்பர். உன் வாதம் தகுதியற்றது. சர்க்கார் வேலையிலிருந்துகொண்டு நீ தேசபக்தியை ஊட்டிவளர்ப்பதாகச் சொன்னால் யார் நம்புவார்கள்? குழந்தைக்குச் சொல்லும் கதைபோலல்லவோ இருக்கிறது. நாடு முழுதும் தேசபக்தி நிரம்பிப் புத்துயிர் பெற்று ஆடி, கண்ணீர் விட்டுக் கதறுவது உன் கண்ணுக்குப் புலப்படவில்லையா? இதைத் தடுக்க யாரால் இயலும்?''

ராஜேசுவரி இவ்வாறு கூறிவரும் வேகத்தில், கையை உயர்த்தி ஓங்கித்தட்டினாள். அதைக்கேட்டு, அருகே ஆலமரத்தின் உயர்ந்தகிளையொன்றில் காதலால்குலவிக்கொண்டிருந்த இரண்டு குருவிகள் திடுக்கிட்டுப் பயந்தோடின.

"ரங்கா, ஸர்க்காரிடத்தில் இப்பொழுது ஜனங்களின் குடுமிதான் அகப்பட்டிருக்கிறது; உடலும் உயிரும் அங்கில்லை. அவை சுதந்திரக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றன. நீயும் உன் உத்தியோகத்தை விட்டுக் காங்கிரஸில் சேர்ந்து, என்னுடன் ஒத்துழையாமையில் ஈடுபட்டுத் தேசத்தொண்டு செய்தால் இப்பொழுதும் நான் உனக்கு அடிமைதான்" என்று கூறிப் பெருமூச்சுவிட்டுச் சிறிது தயங்கி மறுபடியும் கூறுகிறாள்.

"பம்பாயில் சில விஷயங்கள் நன்றாய்த்தான் செய்தார்கள்; ஆனாலும் அங்கே நம் நாட்டு விடுதலை நாடகத்தின் முதலங்கங்கூட முடிந்ததாகாது. நான் அங்கிருந்து ஆயிரம் மைல் நமது காதல்கூறிப் பாட வரவில்லை. உன்னையும் தேசபக்தியாகிய பேரின்பக் காதலுக் குட்படுத்தும் பொருட்டே வந்தேன். உனக்கு நானும் நாடும் வேண்டுமானால் உடனே கலெக்டர் வேலையை விடு; காங்கிரஸில் சேரு; ஏழைமக்களுக்கிரங்கி உழை. அவர்கள் துயரத்தை நீ அறிந்திருந்தால் இப்படியும் இருப்பாயோ? சிறையில் போட்டாலென்ன, தடியடி பட்டாலென்ன? எதையுந் தாங்கி நமது நாட்டின் விடுதலை வெற்றிக்கொடியை அடங்காப் புகழுடன் உயர்த்துவாயாகில், இந்த என்து அற்பவுடல் உனக்கன்றி வேறெவருக்கு? நம்முடைய சந்ததியாவது சுதந்திரம் பெற்ற நம் தேசத்தில் பிறக்க வேண்டாமா? நம்மைப்போல் அடிமையாய்த் தானா பிறக்க வேண்டும்?"

இவற்றையெல்லாம் கேட்டுவந்த ரங்கன், நாட்டில் தேசபக்தி யென்னும் பெருவெள்ளம் அலைமோதிக் கரைபுரண்டோடுவதையும், அவ்வெள்ளத்திலுண்டாகும் சுழ

யில் அகப்பட்டுச் சக்தியற்று மிதக்கும் புஷ்பம்போல ராஜேச்வரி இருப்பதையும் அறிந்தான்.

ரங்கன்: கோடீசுவரனுக்கு ஏக புத்திரியான உனக்கு ஏன் திடீரென்று இந்த தேசபக்திப் பித்து உண்டாயிற்று. ஏழைகளுக்காக நீ கண்ணீர் ஆறுகக் கதறினாலும், அவர்களுடம்பிலுள்ள அழுக்காவது போகுமோ ? அவரவர் தம் சொந்த முயற்சியின்றி முன்னேற்றமடைய முடியுமோ ? ஏன் இந்த வீண் பாடு, வீண் பச்சாத்தாபம்! அணங்கு போன்ற உன் அழகை மாளிகையில் வைத்துக் கண்டு மகிழாமல் சிறையில் அடைத்துச் சிதைப்பதா! தேசத் தொண்டர்களுக்கு வரும் கொடிய காலம் எனக்குத் தெரியும். இந்த வெள்ளைக்காரச் சிங்கத்தைச் சிரழிக்க எவராலும் இயலாது".

இவ்வாறு கூறிய ரங்கன், சிறிது சோர்வடைந்து ஒரு நிமிஷம் ஆற்றிக்கொண்டு, பின்னும் பேசத் தொடங்கினான் :

"ஆஹா! ராஜீ! ஒரு நாட்டை ஒருநாளில் நம் இஷ்டப்படி சீர்திருத்த முடியுமா? நான் என்ன சொல்லியென்ன? நீ கேட்கப்போவதில்லை. உனக்கிதைச் சொல்வதைவிட, இந்தக் கடலை, 'அலை ஓங்கி அடையாற்றினுட் புகுந்து அதன் நன்னீரை உப்பாக்காதே'யென்று சொல்லலாம்போலிருக்கிறது. தேசபக்தி கடல்போலப் பொங்கும்போது நானென்ன செய்யலாம்? அக்கடலில் அகப்பட்டவர்களோடு வாக்குவாதமும் உண்டோ ?"

ரங்கன் பேச்சைக்கேட்டு ராஜேசுவரி ஆச்சரியமடைந்தாள். "என்ன ரங்கா நீகூட இப்படி மாறிவிட்டாய்! ஏழைகளிடத்தில் நீ எளிமையாய்ப் பழகியது, அவர்களிடத்தில்

நீ வைத்திருந்த தயை. எல்லாம் எங்கே போய்விட்டன? அந்தக் குணந்தானே உன்னிடத்தில் என்னை ஈடுபடச் செய்தது. எல்லாம் கலெக்டர் உத்தியோகத்தின் மகிமை!” என்ருள்.

ரங்கன்: “மாறுதலொன்றுமில்லை ராஜி; உன் மாயக் கண்ணுக்கு மாறுதலாய்த் தோன்றுகிறது. நான் வேலைக்கு வந்த பிறகு எனக்கு விஷயங்கள் நன்கு விளங்குகின்றன. நம் வாழ்க்கை மலைப்பிரதேசத்தின் ஒழுங்கற்ற இடங்கள் போலக் கல்லும் முள்ளும் நிறைந்தது. ஒரு நன்மை செய்யப்போனாலும் அதனல் சில தீமைகள் நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் உண்டாகின்றன. ஓருயிரைக் காப்பாற்ற நீ ஓரடி எடுத்து வைத்தால், அந்த அடியிலேயே பல ஜீவன்கள் மிதிபட்டு அழிகின்றன. பல கால உழைப்பின் பயனுக ஓர் அரசியல் முறை யேற்படுகிறது. ஆனல் அப்படிப்பட்ட முறையைச் சிதைக்கக் கணநேரம் போதாதோ? இப்பொழுதுதான் உலக அனுபவமாகிய கண்பெற்ற எனக்கு எல்லாம் தெளிவாய்த் தெரிகின்றன. ராஜி! ஒருவாரம் என்னுடனிருந்து பழகிப்பார். பிறகு நானெவ்வளவு கொடியவனென்பது உனக்கே விளங்கும்.”

ராஜேசுவரி தன்னை மறந்து யோசனையிலாழ்ந்திருந்தாள். ரங்கனே, தேவியைப் பிரார்த்திப்பவன்போல் அரைக்கண்ணை மூடிக்கொண்டு சொல்லலானுன்:—

“ராஜி! நீ யில்லையானல் எனக்குயிரேது, வேலையேது, சுகமேது? காற்றில்லா நெருப்புச் சாம்பல்தானே? என்னை நீ அங்கீகரிப்பதாக உறுதி கூறு. ஆக்ஸ்போர்டில் நாமிருவரும் பலமுறை சந்தித்துப் பரமானந்தத்துடன் பேசிக்கொண்ட திட்டத்தின்படி, இனி நாமிருவரும்சேர்ந்து நாட்

டின் நன்மைக் குழைப்போம். பலநாளாக அடிமைப்பட்ட பேதைகளான இவ்வேழைமக்களுக்கு வர்க்கு வன்மையை வழங்குவோம்; இடவசதிகள் ஏற்படுத்துவோம்; வாழ்க்கையில் ஊக்கத்தையும் உண்டாக்குவோம்; சுதந்திரப் பேரின்பத்தையும் அதற்குரிய மார்க்கத்தையும் காட்டுவோம்; பழமையாகப் படிந்துள்ள சேற்றை அப்புறப் படுத்தி, கலங்கின குட்டைபோன்ற அவர்கள் வாழ்க்கையைத் திருத்தி, நன்னீர்பாய்ச்சி நலப்படுத்துவோம். ஒரு கலெக்டரால் முடியாவிட்டால் வேறு யார்தான் இதைச் செய்யக்கூடும்? வாயால் பேசிப் பயனென்ன? காரியத்தில்லவோ காட்டவேண்டும். ஏட்டுச்சுரைக்காய் கறிக்காகுமோ? இப்பெரிய காரியத்தைக் கலெக்டர்தான் நன்கு நிறைவேற்றமுடியும். ஒரு சிற்றரசனுக்கொப்பான இந்தக் கலெக்டர்வேலையைச் சரியாய் நடத்தினால் லக்ஷக்கணக்கான ஏழைகளின் வாழ்வை மேன்மைப்படுத்தலாம். ஒரு வாரம் தயவுசெய்து பொறுத்துக்கொள். பிறகு எல்லாம் உனக்கே நன்றாய்த் தெரியவரும்.''

ராஜேசுவரியின் முகம் சிறிது சம்மதத்தைக் காட்டிற்று. அவள் "ரங்கா, நீ சொல்வது சரி. நமக்கு ஸ்வராஜ்யம் கிடைத்தால் உன்வழி நல்லவழிதான். ஆனால் இப்பொழுது நடக்கும் முறையில் ஏழைகளுக்கு இடமேது? சிலருடைய சுயநலமற்ற உழைப்புக்கூட ஏழைகளைப் பாதுகாவாமல் செல்வவான்களின் செல்வத்தை மிகுதிப்படுத்துவதாகவே ஆய்விடுகிறது. ஆகையால் இப்பொழுதுள்ள அரசியல் முறையை அடியோடு மாற்றினாலன்றி நாட்டுக்கு நன்மையில்லை. இப்போது நடந்துவரும் கிளர்ச்சியின் சிறந்த லக்ஷ்யமும் அதுதானே? சகல ஜனங்களுக்கும்

நன்மையுண்டாகத்தக்க வழியைத் தேடும் நோக்கமே இக் கிளர்ச்சிக்குக் காரணம். இப்பெரிய காரியத்தில் நீயும் ஈடுபட்டு, ஒரு கொட்டு மண்போட்டுக் கரையைச் சீர்படுத்தி, ஆற்றுநீர் கடலிற் பாய்ந்து வீண் போகாமல் வயலிற் பாய்ந்து பயன்படும்படி செய்யவேண்டாமா? என் காதலை நீ விரும்பினுல் இதுதான் வழி; இதுதான் என் தீர்மானம். நீ கலெக்டராய்ப் போகும் ஜில்லா விலேயே நான் என் தொண்டை இயற்றப் போகி றேன்; எனக்குத் தாலிகட்டவேண்டிய உன் கையே சிறைத் தண்டனை யுத்தரவை யெழுதட்டும். அதுவும் ஈசன் செயலானுல் எனக்கு மிகவும் சம்மதமே. ஆனுலும் நீ சொல்லுகிறபடியே ஒருவாரம் நாம் சேர்ந்திருந்து கவ னித்தபின் நன்கு யோசித்துத் தீர்மானிப்போம்" என்று நிதானமாய்ப் பதில் கூறினுள்.

ரங்கன் முகமலர்ச்சியுடன் "ஆமாம் ராஜி? அப் படியே செய்வோம். இன்னும் ஒரு வாரம் எனக்கிருக் கிறது. இப்பொழுது நாமிருவரும் கீழ் கடற்கரையின் அரசியாகிய தரங்கம்பாடிக்குப் போவோம். மேல் கடற் கரையிலிருந்து வந்த 'நீரரமங்கை' போன்ற உனக்குத் தரங்கம்பாடியே தகுந்த இடம்" என்றுன். ராஜேசுவரி யும் அதற்கிசைந்து தலை யசைத்தாள்.

ரங்கன்: "இரவு எட்டுமணிக்கு எழும்பூர் ஸ்டேஷனில் நாம் சந்திப்போம். போட் மெயில் எட்டரைக்குப் புறப்படு கிறது. ஏழே முக்காலுக்கே நான் வந்து ஸெகண்டு கிளாஸ் கேட்டில் காத்திருப்பேன்; மறந்துவிடாதே."

ராஜேசுவரி: "மறக்கமாட்டேன். அவசியம் எட்டு- மணிக்கு வந்துவிடுவேன்."

ரங்கன் காதல் கனிந்த பார்வையுடன் ஒருதரம் ராஜேச்வரியைப் பார்க்க, அவள் கண்களும் அவ்வாறே கணப்பொழுது ரங்கன் கண்களோடு கலந்தன. அவை காதலால் சிறிது புரண்டு அழகாய் ஜ்வலித்தன. தாமரையிதழிற் பனித்துளிபோல ஒரு நிமிஷம் அவள் கண்களில் நீர் ததும்பிக்கொண்டிருந்தாலும் மறு நிமிஷம் அக்கண்கள் அமைதியும், இயற்கை யாற்றலும் நிறைந்து விளங்கின.

---

## அத்தியாயம் 3

### ஆக்கூர்க் கள்ளுக்கடை

“ஏன் இன்ணக்கி இவ்வளவு நேரம்” என்று நந்தன், மூக்கன், காட்டேரி, இருளன், கறுப்பன், இருளப்பன் ஆகிய அறுவரும் ஒரே கூப்பாடாகக் கந்தனை வரவேற்றுக் கூவினார்கள். இவர்களோடு சேர்ந்து, அங்கே குடி வெறியால் பலவிதமாய் மயங்கிக் கிடந்த கூட்டமும் கூப்பாடு போட்டது. அக்கூட்டம் கள்ளுண்டலைவிடக் கந்தனிடத்தில் அதிக திருப்தியுடையதாகக் காணப்பட்டது. ஏனெனில் கந்தன் எப்பொழுதும் ஏழைகளிடம் அன்புகொண்டு, அவர்களுக்கு ஆதரவான இனிய வார்த்தைகள் பேசுபவன். மேலும், குடிகாரனுக்குக் குடியாதவனிடத்தில் இயற்கையாகவே ஒரு மரியாதையும் உண்டல்லவா?

கந்தன், வழக்கம்போலில்லாமல் அன்று ஏதோ ஆலோசனையில் ஆழ்ந்திருந்தான். அவன் முகத்தில் துறவியின் களையும் சாந்தமும் பிரகாசித்தன. இலை நடுவில் புஷ்-

பிக்கும் புஷ்பம்போல் எப்பொழுதும் உள்ள புன்சிரிப்புக் காணப்படவில்லை.

"கந்தண்ணே, ஏன், இன்றையதினம் என்ன விசேஷம்? எப்பொழுதும் உள்ள சிரிப்புக்களையைக் காணோமே! சூரியன் போன்ற உமக்கு இந்த மேக மறைப்பு எப்படி ஏற்பட்டது?" என்று நல்லான் மிகவும் மரியாதையுடன் கந்தனைக் கேட்டான். அவன் இவ்வாறு கேட்டதே கொஞ்சம் துணிவுதான். ஏனென்றால், மூன்று கலயம் கள் முன்னேயே உட்சென்றுவிட்டது. கள்ளுண்ட பேதைமையைக் காட்டிக்கொண்டு அவன் விழிகள் புரள, வாயில் குழந்தைபோல் மழலைச் சொல்லும் புன்சிரிப்பும் தடுமாறின. கந்தன் வரும்பொழுது நல்லான் நாலாவது கலயத்தில் பாதி குடித்துக்கொண்டிருந்தவன், கந்தனுக்கு மரியாதை காட்ட வெண்ணிக் கையிலிருந்த கலயத்தை முழுதும் உட்கொள்ளாமல் கீழே உருட்டிவிட்டான். அந்தப் பாக்கியமற்ற கலயமோ தலைகவிழ்ந்து தரையில் உருண்டுகொண்டு ஒரு தென்னைமரத்தடியிலே போய்த் தடைப்பட்டு, மேலே தன்னைப்போலப் பாளையில் கவிழ்ந்து நிற்கும் கலயத்தைத் தாழ்மையுடன் பார்த்து வருந்துவதுபோல் ஆகாயத்தை நோக்கி அண்ணாந்து நின்றது.

கந்தன், "நல்லான், இன்று சமாசாரம் உனக்குத் தெரியாதோ, உங்கள் யஜமான் சமாசாரம்? உங்களுக்குக் கண்ணுங் காதும் இருந்தென்ன? அவற்றைச் சரியாக உபயோகித்தாலல்லவோ பிரயோசன முண்டு? கள்ளுக் கடைக்கு வரத்தான் உபயோகிக்கிறீர்கள். உங்களுக்காக நான் வருந்தி என்ன பயன்? அது உங்களுக்குதவியாக வில்லையே! உங்கள் எஜமான் சமாசாரம் இன்று உங்களுக்

3

குத் தெரியாதே' என்று கூறி, மேலும் வருத்தத்துடன் சொல்லலானான்:

"எனக்குக் கேடு நினைக்கும் பெரியபண்ணை முதலியார்—உங்கள் யஜமான், தன்னால் ஒன்றும் முடியாமல், இப்பொழுது சர்க்கார் உதவியைக்கொண்டு என்னையும் என் வேலையையும் நாசம் செய்ய முயலுகிறார். கலெக்டரையும் போலீசையும் கைக்குள் போட்டுக்கொண்டு ஏற்பாடுகள் ஆகிவருகின்றன. ஆனால், நாகப்பன் மகன் கந்தனை இவர்களால் அழிக்கமுடிந்தாலும், இப்பரதநாடெங்கும் பொங்கிவரும் தேசபக்திக் கிளர்ச்சியை அழிக்கமுடியுமோ? முதலியார் பலம் நீங்கள் கொடுத்த பலந்தானே? அதை நீங்கள் அறியவில்லையே? உங்கள் முதலியாரை இவ்வூர் ரயிலடியில் இப்பொழுதுதான் கண்டேன். புது ஸ்டேஷன் மாஸ்டரோடு பேசிக்கொண்டிருந்தார். புது ஸ்டேஷன் மாஸ்டர் எங்கேயோ பஞ்சத்திலடிபட்டவன் போலிருக்கிறான். ஆனால், என்ன அதிசயம்! அவன் மனைவி ஒரு தெய்வப்பெண்போ லிருக்கிறாள். நானும் பல நாடுகள் ஓடி ஆடித் திரிந்திருக்கிறேன்; ஆனாலும் மின்னல் கொடிபோன்ற இந்த அழகை நான் எங்கும் பார்த்ததில்லை. இந்திரலோகத்துப் பாரிஜாதம் இங்கே ஒரு குப்பைமேட்டில் முளைத்தாற்போல, அவனுக்கு அப்பெண் கிடைத்தது இணையில்லாத பாக்கியந்தான்!"

இவ்வாறு கூறிய கந்தன், மெய்மறந்து சிறிதுநேரம் தனக்குத் தானே பின்வருமாறு மொழிந்துகொண்டிருந்தான்:

"நம் முதலியார் இப்படிப்பட்ட உருவங்களைக் கண்டால், காதல்தூண்டக் கண்கொட்டாமல் பார்த்துப்

பிரமித்து நிற்பது அதிசயமா? அங்குமிங்கும் உலாவிக் கொண்டே அடிக்கடி ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டுப்பக்கம் திரும்பிக் கள்ளத்தனமாய் நோக்கினர். அவ்வீட்டு ஜன்னல் வழியே வீசின அவள் மேனியின் ஒளி, மின்னல் போல் அவர் விழிகளை எட்டியது. ஆனால் இதெல்லாம் நல்லதற்கா? இனிவரும் ஏதோ ஒரு பெரிய கேட்டின் எதிரொலி இப்போது என் காதுக்கு எட்டுகிறது.''

பிறகு அவன், தான் பேசுவது குடித்துப் புரண்டு கிடக்கும் அக்குடிகாரர்க்கேற்ற பேச்சன்றென்று அறிந்து அதை மாற்றி வேறுவிதமாகப் பேசத் தொடங்கினன்:—

“நல்லான்! முதலியாரோ என்னைக் கொஞ்சங்கூட மதிக்கவில்லை. என்னைக் கண்டவுடன் அவர் கண்களில் கோபமும் பகையும் சொலித்தன. ஆனாலும் நான் அதைப் புன்சிரிப்புடன் இனிமையாய் அங்கீகரித்துக்கொண்டேன். நேட்டாலில் என் பங்களாவும் தோட்டமும் நான் இல்லையே என்று புலம்புகின்றன. அவற்றைவிட்டு, என் தாய்நாட்டுக்குத் தொண்டு செய்வதற்காகவல்லவோ இந்த ஆக்கூர் மண்மேட்டை அடைந்தேன். ஆனால், நம் தாய் நாட்டு வாழ்வு இவ்வளவு கேவலமாயிருக்குமென்று நான் கனவிலும் கருதவில்லை. நான் உங்களோடு ஒரு வருஷம் பாடுபட்டும் பலனென்ன? உங்கள் குடி குறைந்ததா? ஏழ்மை நீங்கியதா? படிப்புண்டா? வேறு சுகமுண்டா? குடியைத் தவிர வேறு எதில்தான் நீங்கள் தேர்ச்சி யடைந்திருக்கிறீர்கள்? என் கைப்பணமும் நான் பட்டபாடும் விழலுக்கிறைத்த நீராய்விட்டனவே! என் வார்த்தைகள் காதில் விழும்போது, குப்பை மேட்டை அடைத்த குக்கல் போல ஒரு நிமிஷம் நல்ல புத்தி திரும்புகிறது. அடுத்த

நிமிஷம் அது பறந்துபோய்விடுகிறது. மறுபடியும் மாலையில் கள்ளுக்கடையில் தான் முடிவடைகிறது."

இவ்வாறு பேசிவந்த கந்தன், சிறிது சோர்வடைந்து பெருமூச்சுவிட்டு, கொஞ்சம் கனைத்துத் தொண்டையைத் திருத்திக்கொண்டு மறுபடி பேசத்தொடங்கினான். நந்தன் மூக்கன் காட்டேரி இருளன் கறுப்பன் இருளப்பன் ஆகியோர் அவனைச் சூழ்ந்துகொண்டு சாரமாய்க் கேட்கத் தொடங்கினார்கள்.

"ஏ நந்தா, இருளா! நல்ல முயற்சியெடுத்து உங்களைத் திருத்தி மனிதராக்கிக்கொள்வதற்கு இதுதான் ஏற்ற சமயம். கள்ளுக்குடியை ஒழியுங்கள்; கள்ளத் தொழிலைத் தவிருங்கள்; ஆக்கூர்க் கள்ளுக்கடையை அடியோடு தொலையுங்கள். இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கரிகாற் சோழன் காலத்திலும் இல்லாத இக்கள்ளுக்கடை இந்தப் பஞ்சக்காலத்திலா இங்கிருக்கவேணும்? உங்களுக்குச் சோற்றுக்கில்லாத காலங்களில் நான் கொடுத்த பணத்தையும் இந்தப் பாழாய்ப்போன கள்ளுக்கடையில் தானே கொண்டுவந்து கொட்டியிருக்கிறீர்கள்! இது நியாயமா? நல்லான், நீ எதற்கு மணியம்? இந்தக்கள்ளுக் கடைக்கா? இந்தப் பேதைகளை நல்வழியில் நடத்தத் திறமையில்லையென்றால் நீ என்ன மணியம்? நீ தலைமை வகித்து ஆட்களை அடக்கிக்கொண்டுபோகத் திறமையுள்ளவன்தான்; அதை நல்ல வழியில் செலுத்தினாலல்லவோ பிரயோசனம்? இவர்களை ஒன்றுசேர்த்துத் தமிழ் நாட்டுக்கு நீ ஒரு புதிய சிறந்த வழியைக் காட்டவேண்டாமா? இவர்கள் என் வார்த்தையை மதிக்காவிட்டாலும், உன் சொல்லைத் தட்டுவார்களா? இந்தக் கள்ளுக்குடி இவர்

களைக் கள்ளுக்கடை மண் கலயத்திற்கும் கேடாக அடித்து விட்டதே!”

இப்படிப் பேசிக்கொண்டே வந்த கந்தன் எழுந்து நின்று கையை வீசி ஆவேசத்துடன் பேசலானான்:

“நல்லான்! பாரத நாட்டில் நவீனக் கிளர்ச்சியின் ஓசை எங்கும் நிரம்பியிருக்கிறதே, அது உன் காதுக்கு இன்னும் எட்டவில்லையோ? இப்பொழுதாகிலும் முயலா விட்டால் எப்பொழுதுதான் நமக்கு நல்ல காலம்?”

இப்படி எதிர்பாராத ஆவேசத்துடன் கந்தன் பேசியது, உள்ளங் கவரும் தேசபக்தியை விளக்கத் தனக்குத் தானே பேசிக்கொண்ட பேச்சுப்போ லிருந்தது. கடைசியில் அவன், கள்ளுக்கடையின் அலங்கோலக் காட்சியைக் கண்டு, சகிக்க முடியாத துயரமுற்றுக் கண்களை மூடிக் கொண்டான். இதைப் பார்த்தவுடன் நல்லானுக்கு அந்தக் குடிவெறியிலும் விஷயம் கொஞ்சம் மனதில் பட்டது.

நல்லான்: ஆமாம்! சரி கந்தா, உன்தேசத்தில் உன் பேச்சுக்கு மதிப்புண்டு; காரியம் ஜெயிக்கும். ஆனால் இங்கே முதலியார் இட்டதுதானே சட்டம்? இங்கே அவரது தானே ராஜாங்கம். நீரில் முதலைபோல ஆக்கூரில் பலம் அவருக்கு. நம்முடைய பேச்சால் காரியம் நடக்குமா?”

கந்தன்: நல்லான்! “நான் சொல்வதை நீ சரியாய்த் தெரிந்துகொள்ளவில்லை. முதலியார் தன் வழியே போகட்டும். அவரை நாம் வழிமறிக்கவேண்டாம். நம் வீட்டை நாம் சரிபண்ணிக்கொண்டால் போதும். அதுதான் பிறருக்கு நாம் காட்டக்கூடிய நல்ல வழி. அன்பும் தைரியமும் நமது வாழ்வை எவ்வளவு உயர்த்தும் என்று ஆலோசித்துப் பார். பழகப்பழகத்தான் அவற்றின் அருமை

தெரியும். பிறர்க்கு நாம் கேடு செய்யவேண்டாம். கெட்ட எண்ணங்களை எண்ணவும் வேண்டாம். சீக்கிரமாக இந்தப் பக்கங்களில் சீர்திருத்தம் ஏற்படாவிட்டால், நான் கட்லோசை இடையருத தீவாந்தரங்களில் சென்று என் பிற்காலத்தைக் கழிக்கப்போகிறேன். கடற்கரையோரத்தில் வெய்யிலிற் கிடந்து வீணுகும் கிளிஞ்சலைப்போல் நானும் செயலற்றுக் கிடப்பேன்.''

கந்தன் இவ்வாறு பரவசமடைந்து பேசுவதைப் பார்த்து நல்லான் மனம் பதைத்துப் பதில் கூறுகிருன்:—"ஏழைகள் தங்களைத் தாங்களே சீர்திருத்திக்கொள்ள முடியுமோ? பெரியமனிதர்க ளல்லவோ அவர்களுக்கு வழிகாட்டவேண்டும். முதலியாரோ அதற்கேற்றவரில்லை. பால்யம்; பயமறியாத, உறுதியற்ற புத்தி யுடையவர். வயது 23 கூட ஆகவில்லை. கலியாணமும் ஆகவில்லை. கேட்கவேணுமா? கட்டுக்கடங்காத காளைதானே! அவர் தாயார் கூக்குரலிட்டு அழுகிருள். காரியஸ்தர், பண்ணையாள்கள் எல்லாருக்கும் சம்பளப் பாக்கி ஏராளமாயிருக்கிறது. கபடற்ற வேலைக்குக் கூலி கிடையாது. துர்மந்திரித்தனம் செய்கிறவனுக்கும் ஏமாற்றுகிறவனுக்கும் அளவற்ற பணம். சர்க்கார் வேலைக்காரன் என்ருல் கேட்கவே வேண்டாம். வில்லைச் சேவகன் முதல் கலெக்டர் வரைக்கும் இவர் சோற்றைத் தின்னுதவன் இல்லை. அவர்களோ சோற்றையும் தின்றுவிட்டு, துர்ப்போதனைசெய்து தட்டிக்கொடுத்துப் போவார்கள். இதனுல்தான் இந்தப் பண்ணையும் கெட்டது. ஆள்களுக்குள் கலகமும் சோம்பேறித்தனமும் மிஞ்சிப்போய்விட்டது. இனிமேல் அவர்களை அடக்கவும் முடியாது; திருத்தவும் முடியாது. ஒருநாளில்லாவிட்

டால் ஒருநாள் இந்த யானைபோன்ற நெல் களஞ்சியம் சூறையாகப் போகிறது. கொள்ளைக்கும் தீக்கும் இரையாகிச் சாம்பலாய்ப் போகப்போகிறது நிச்சயம். வயிற்றின் கொடுமை மிஞ்சினால் கையின் கொடுமையை யார்தான் தடுக்க முடியும்!"

இதைக் கேட்டதும் நந்தன் மூக்கன் காட்டேரிகள் கொள்ளையடிக்கக் காலங் கிட்டிவிட்டதென மிக்க மகிழ்ச்சியடைந்து கைகொட்டிக் கர்ச்சித்தார்கள்.

கந்தன் இவற்றையெல்லாம் கவனித்துக் கேட்டு, "அந்தவழி தப்புவழி யல்லவோ நல்லான்? அதனால் ஜனங்களின் உணவுப் பொருளுக்கும் செல்வத்துக்கும் அழிவே தவிர ஒருவருக்கும் லாபமில்லையே" என்று சாந்தமாகப் பதில் சொன்னான்.

"எங்களுக்குத் தெரிந்த வழி அதுதானே; படிப்பில்லாத படையாட்சிகளுக்கு வேறே என்ன வழி? சந்தேகமுண்டானால் இவர்களையுங் கேளு!" என்றான் நல்லான்.

"நல்லான் சொல்வதே நல்லவழி" என்று எல்லாரும் கைகொட்டி ஆமோதித்தார்கள். நந்தன், மூக்கன், காட்டேரி, இருளன், கறுப்பன், இருளப்பன் ஆகியவர்கள் ஒரே குரலாக, "அப்பா! இதுதான் நல்ல சமயம் கொள்ளையிட. எசமானும் ஊரிலில்லே. கள்ளும் இண்ணக்கி ஜலம்போலே கிடைச்சிருக்குது. நம்ம கூலி பாக்கியும் வர வழியில்லெ. இண்ணெக்கே வேலையை முடிச்சுடுவோம். நல்ல காரியத்துக்கு நாள் கடத்துவதில் சுகமில்லே" என்றார்கள்.

கந்தன், "அது கூடாது; இப்படிக் குத்திக் கிளப்பி ஆவேசத்தோடு பண்ணைக்குக் கேடு செய்வதில் என்ன

லாபம்? கடைசியில் உங்களுக்கே அது கேடாய் முடியும். இதனால் வீண் கலகங்கள்தான் முற்றும்'' என்று கூறி, 'அதோ பாருங்கள், கரியன் வருகிறான் அந்த மாமரத்தின் பக்கத்தில்' என்று மெல்லப் பேச்சைக் கொஞ்சம் மாற்றினான்.

கரியன் கந்தனைப்பற்றித் துப்பறிவதில் முதலியாரால் ஏவப்பட்டவன். அவன் பூமியை அடியளப்பவன்போல உல்லாசமாய் மெல்ல மெல்லக் காலடி வைத்து இவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தான். கந்தன் அவனை ஊக்கமுடன் நோக்கிப் புன்சிரிப்புடன் அன்பாய் அழைத்தான்.

'கரியா, நூறுவயசுடா ஒனக்கு' என்று இருளப்பன் அவனைக் குலாவி அழைத்து, 'மொகத்துக்குப் பொட்டுப் போலே கள்ளுக்கடைக்குக் கரியன்; கண்ணாலத்திலே புரோகிதர்போலே கள்ளுக்கடையிலே அவனன்னிலே ஒண்ணும் நடவாது' என்றான். இப்படி ஆசிர்வாதம்பண்ணின இருளன், கந்தனுக்கும் கரியனுக்கும் முடிந்துவிடுவதிலேயே நோக்கமுள்ளவன்.

"ஆமாம் அப்பா! உங்கள் கண்ணைப்பார்த்தாலே தெரிகிறது, என்னைப்பற்றி நீங்கள் தூஷித்துக்கொண்டிருந்தீர்களென்று. என் தம்பி கந்தன் இருக்குமிடத்தில், பஞ்சுப்பொதியிலே தீப்பொறிபோலக் கலகத்தைத் தவிர வேறென்ன? கள்ளுக்குடியாதவர்களை நம்பவும் நம்பலாமோ? அவர்கள் எதுதான் செய்யமாட்டார்கள்! அதற்காகத்தான் கந்தனையும் 'கொஞ்சம் கள்ளுண்டு அதன் கண்ணியத்தைப் பாரப்பா' என்று நான் பலதடவை சொல்லியிருக்கிறேன்.'' என்று கள்ளுக்குடத்தின்மேற் கண்ணைச்

செலுத்திக்கொண்டே ஆனந்தத்துடன் கூறினான் கரியன். நல்லான், "இன்றைக்கென்ன கரியா, நரிமுகத்தில் விழித்தாயோ? ரயிலடியில் இன்றைக்கு நல்ல கொள்ளைதான் போலிருக்கிறது. உன் பேச்சைப் பார்த்தாலே தெரிகிறது' என்றான். உடனே கரியன் கையைத் திறக்க ஐந்து ரூபாய் அவன் கையிலிருந்து கலகலவென்று தரையில் விழுந்தது. கரியன் பணப்பெருமை தாங்காமல் கந்தனை ஒரு பார்வை பார்த்தான்.

கந்தனும் கரியனும் ஒரே குடும்பத்தில் பிறந்தவர்கள்; சிற்றப்பன் பெரியப்பன் மக்களாவர். அக்குடும்பம் ஒரு காலத்தில் மிக்க செல்வாக்குள்ளதாயிருந்தது. அவர்களுடைய பூர்வீகமான ஊர் தரங்கம்பாடிக்குச் சமீபத்திலுள்ள தில்லையாடி. அது சுமார் ஆயிரம் வீடுகள் கொண்டது; நாகரிகத்தில் முன்னேற்றமடைந்துவருவது. அவ்வூர் டேனிஷ் ராஜாங்கத்தின்கீழிருந்தபோது, கந்தனுடைய முன்னோர்கள் அங்கே மிகவும் நல்ல ஸ்திதியிலிருந்தார்கள். அந்தக் கிராம நாட்டாண்மை அக்குடும்பத்தாருடையதே. கரியன் தகப்பன் மூத்தவன். அவன் தன் குடும்பத்தை ஒரு அரசன் போல ஆண்டுவந்தான். அவன் தம்பியும் கந்தனுக்குத் தகப்பனுமான நாகப்பன், தமையனுடைய கடுமைக்குப் பயந்து, தன் 24-வது வயதில் நேடாலுக்கு ஓடிப் போய்விட்டான். அக்குடும்பத்தாருக்கே 24-வது வயது ஒரு முக்கியமான காலம். நேட்டாலில் நாகப்பன் வாழ்க்கை பிரசித்தமானது. அவன், மகாத்மா காந்தியின் கீழே தொண்டர் தலைவனாக மிகவும் ஊக்கத்தோடு உழைத்தான். அவரைத் துறவி வாழ்க்கையினின்றும் தேசத் தொண்டில் ஈடுபடும்படி மாற்றினவன் அவனே.

ஆகையால் நாட்டிற்காக உழைக்கும் பெரிய பரம்பரையில் பிறந்தவன் கந்தன். அவனுதிரத்தில் நாட்டுத் தொண்டென்பது அழியாப்பொருளாய் அடிப்படையாய் ஊறியிருந்தது. கந்தனுக்கும் 24-ம் வயது கலகப் பிராயமாகவே ஆயிற்று. அப்பொழுது அவன் ஆக்ஸ்போர்டில் படித்துக்கொண்டிருந்து ஐ. ஸி. எஸ். பரீக்ஷையிலும் தேறிவிட்டான். ஏதோவொரு காதல்விஷயத்தில்அடைந்த ஏமாற்றத்தால் மனஞ் சலித்து, உத்தியோகமுறை பழகுங் காலத்தில் ஐ. ஸி. எஸ். ஐயும் விட்டுவிட்டுத் தன் தாய்நாட்டுக்குத் திரும்பத் தீர்மானித்துத் தில்லையாடிக்கு வந்து சேர்ந்தான். அவன் வரும் சமயந்தான் மாயவரம் தரங்கம்பாடி கிளை ரயில்பாதை வேலை முடிவடைந்தது. கிராம அபிவிருத்திக்காக உழைப்பதற்கு அது ஒரு நல்ல சகுனமென்று அவனுக்குத் தோன்றிற்று. அவன் தன் குடும்பத்தாரில் கரிய ஞெருவனே மீதியிருக்கிறுனென்பதை அறிந்தான்.

டேனிஷ் அரசாங்கம் மாறி, பிரிட்டிஷ் ஆட்சி வந்தவுடன் கரியன் தந்தையின் செல்வமும் செல்வாக்கும் குறைந்துவிட்டன. அவன் சாகும்பொழுது கரியனுக்குத் திடலான மூன்று ஏக்கர் மண்மேட்டைத் தவிர வேறென்றும் மிச்சமில்லை. இந்தப் பிதிரார்ஜிதத்தையும் கரியன் ரூபாய் ஐந்நூறுக்கு விற்றுவிட்டு அத்தொகையை விருத்தி செய்யும் பொருட்டுத் தன் நிலைமைக்கும் துணிவுக்கும் ஏற்றவேலையொன்று தேடிக்கொண்டிருந்தான்; அப்போதுதான் தரங்கம்பாடி ரயில் பாதையும் போட ஏற்பாடாயிற்று. அது அந்தப் பக்கத்துக் கிராமவாசிகளனைவருக்கும் மிக்க குதூகலத்தைக் கொடுத்தது. கரியன் அப்பா

னேதயில் மண்வேலைக் குத்தகையை ஒப்புக்கொண்டு, தன்னிடமிருந்த ரூபாய் ஐந்நூறையும் அதில் கொட்டினன். பெரிய பரம்பரையில் பிறந்தவனுதலால், கரியனுக்குப் பிறரிடத்தில் அடங்கி நயந்துபோகும் வழி தெரியாது. அவன் தான் ஒப்புக்கொண்ட வேலையை ஒழுங்காகச் செய்ததிலேயே தன் முதலை யிழந்துவிட்டான். ஏனென்னில், தேன் கூட்டில் மொய்க்கும் ஈக்கள்போல மேஸ்திரி முதலாகத் தன்னை மொய்க்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களை அவன் சரியாகத் திருப்தி செய்விக்கவில்லை. ஆயினும் அவன் தைரியத்தைக் கைவிடாமல், தன் குலதெய்வமான தில்லையாடிப் பெரியநாயகியம்மன் முன்னும், ஒழுகுமங்கலம் மாரியம்மன்முன்னும் தான் போட்ட முதலை எப்படியாவது அந்த ரயில்பாதையிலிருந்தே எடுத்துவிடுவதாகப் பிரதிக்ஞை பண்ணிக்கொண்டான்.

கரியனே இயற்கையில் முரடன்; நல்ல துணிச்சலுள்ளவன். சில போக்கிலிகளைச் சேர்த்துக்கொண்டு ஒரேநாள் இரவில் ரயிலைத் தாக்கித் தகர்த்துக் கொள்ளையிடலாமாவென்று ஒருசமயம் நினைத்தான். ஆனல் நாகரிகம் மிக்க இந்த இருபதாம் நூற்றுண்டில் அப்படிச் செய்வது அவ்வளவு உசிதமில்லையென்று சிறிது தயங்கினன். தன் சிற்றப்பனைப்போல நேட்டாலுக்கு ஓடிவிடலாமாவென்றும் நினைத்தான்.

கரியனுக்கு ஆக்கூர் ஸ்டேஷனில் பாயின்ட்ஸ்மான் (Pointsman) வேலையும், போர்ட்டர் வேலையும் கொடுப்பதாக உத்தரவு வந்தது. அது தன் கௌரவத்துக்குக் குறைவென்று அவன் நினைத்தான். ஆனலும் 'நாளை வரும் பலாக்காய்க்கு இன்றுவரும் களாக்காய் மேல்'

என்பதுபோல வந்ததை விடக்கூடாதென்று சிலர் போதிக்க, முன்னமே மண்வேலைக் குத்தகையிலிருந்து கொஞ்சம் புத்தியடைந்திருந்த அவன் அதற்கிசைந்தான். மேலும் வேலை சிறிது தாழ்ந்ததாயினும், மேல் வரும்படி நன்ருகக் கிடைக்குமென்று அறிந்துகொண்டான். ஆதலால் அந்த வேலையை ஒப்புக்கொண்டு, தன் சபதத்தை நிறைவேற்ற, மூட்டை முடிச்சுகளுடன் வரும் பேதைப் பிரயாணிகளிடமிருந்து பணம் பறிக்க ஆரம்பித்தான். ரயில்வே நிறுவை யந்திரம் இவ்விஷயத்தில் அவனுக்கு மிகவும் உதவியாயிருந்தது. பேதைப் பிரயாணிகளோ நிறுவை யந்திரத்தின் கொள்ளைக்கு நீட்டிய கைபோல நீண்டுள்ள அளவுகோலைக் கண்டவுடன் பயந்து விடுவார்கள். அதனுல் கரியன்பாடு நல்ல வேட்டைதான்.

கந்தன் கரியனேடு நேசமாய் ஒத்து வாழலாமென்று தன்னுல் இயன்றவரை முயற்சிசெய்து பார்த்தான்; முடியவில்லை. கரியனுடைய சாமர்த்தியத்தையும், தைரியத்தையும், ஊக்கத்தையும் கண்டு மகிழ்ந்து, காட்டாறுபோல வீணே போய்க்கொண்டிருக்கும் அக்குணங்களைத் தேச நன்மைக் குழைப்பதில் திருப்ப எண்ணினன். அதுவும் பயன்படவில்லை. அவ்விருவரும் நீரும் நெருப்பும்போலத்தான் பழகிவந்தார்கள் கரியன் தன் தாழ்ந்த நிலையை யெண்ணிக் கந்தனிடம் நெருங்காமலே யிருந்தான். தாயாதிக்காய்ச்சல் சடுதியில் தீருமா?

அவ்வாருயினும், கந்தன் மனம் வேறுபடாமல் கரியனைக் கொண்டாடிவந்தான். தன் வம்சத்திற்குக் கரியனெருவனே யிருப்பதனுல், தன் சுக துக்கங்களுக்கு அவனே பாத்திரனென்று கருதி அவனிடம் மிகவும் அன்பு

செலுத்தி, அவனுக்குப் பொருள்கொடுத்து உதவ நினைத்தான். அந்த ரயில்வேலையை விட்டு, கட்குடியையும் நிறுத்தி விடும்படி எவ்வளவோ சொன்னான். அவன் அவ்வாறு செய்தால், தானே அவனுக்கு அடிமையாய் விடுவதாகவும் சொன்னான். கந்தன் இவ்வாறு சொல்லச் சொல்லக் கரியனுக்குக் கள்ளுக்கலயத்தில் மதிப்பு அதிகமாயிற்றே யன்றிக் குறையவில்லை. அவனுக்கு ஊள்ளூறக் கந்தனிடம் அன்பிருந்தாலும் தன் ஏழ்மைத்தனத்தாலும் கர்வத்தாலும் அந்த அன்பை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை.

கரியன் அன்று மிகவும் சந்தோஷமாயும் கிலகலப்பாயு மிருந்தான். கந்தன் அதைக்கண்டு மகிழ்ந்து கை கூப்பிக் கரியனைப் பிரியத்துடன் அழைத்தான். கரியன் மறுபடியும் தன் கையைத்திறந்தான்; கலகலவென்று ஐந்து ரூபாய் விழுந்தது. அந்த வெள்ளிக்காசுதானையா கரியனுடைய குதூகலத்திற்குக் காரணம்!

“ கந்தா ! போனது போகட்டும். இனிமேல் நாமிருவரும் ஒத்துவாழ்வோம். அதற்கடையாளமாகவாவது நீ ஒரு மொந்தை போடவேணும். அதில் என்ன தப்பு? கள்ளுக்கும் பாலுக்கும் வித்தியாசமில்லையென்று வேதத்தில் கூடச் சொல்லியிருக்குதாமே? அது மாட்டுப்பால்; இது மரத்துப்பால். பணக்காரர்களுக்குப் பாலும் ஏழைகளுக்குக் கள்ளும் தேவாமிர்தத்துக்குச் சமானம். நீ ஒரு தடவை ருசி பார்த்தால் பிறகு விடவேமாட்டாய்; மருமகன் எள்ளுப்பொடிக் கதைபோல் ஆகும்” என்று மொழிந்தான் கரியன்.

கந்தன் புன்சிரிப்புடன் அமைதியாய் எள்ளுப்பொடிக் கதையைக் கேட்டுத் தெரிந்துகொண்டான். குழந்

ஜைகளின் மழலைச்சிரிப்புப் போன்ற அவனுடைய சிரிப்பு, மாசற்ற அவனகத்தழகை முகத்திற் காட்டும் கண்ணாடி போலிருந்தது. பதில் பேசினால் ஒருவேளை ஏதேனும் வார்த்தை தவறி வந்து காரியங் கெட்டுவிடுமோவென்று கருதி அவன் ஒன்றும் பேசவில்லை.

கரியன் மறுபடி ஒரு முறை கையை விரித்துக்காட்டினான்; ரூபாய்கள் பளிச்சென்று மின்னின. கள்ளுக் கடைக் கூட்டத்தாரெல்லாரும் “சபாஷ் கரியா, இண்ணைச் சம்பாத்தியம் போலேருக்குது! எங்களுக்குக்கூட ரயில்லெ ஏதாவது ஒரு வேலெ பாத்துக் குடேன்” என்று கூச்சலிட்டனர். கரியன் களிப்புத் தாங்க முடியாதவனாய்க் கையிலிருந்த ரூபாய் ஐந்தையும் கள்ளுக்கடைக்காரனிடம் எறிந்து இதுக்கு மூணுகொடங் கள்ளு ஊத்தப்பா’ என்று சொல்லிக் கூத்தாடினான். பிறகு கேட்பானேன் கள்ளுக் கடையின் கோலாகலத்தை! ஒருமணிநேரம் அங்கே அமர்க்களப்பட்டது.

கந்தன் இக்காட்சியைக் கண்டு, பொறுக்க முடியாதவனாய்க் கரியனை அழைத்து, “ஏ கரியா! குடிக்கூத்தில் காலம்போவதே தெரியவில்லையோ? தரங்கம்பாடி வண்டி வரும் நேரமாயிற்றே. நீ வீட்டுக்குப்போய்ச் சாப்பிட்டு விட்டு ரயிலடிக்குப் போகவேண்டாமா?’ என்றான். கரியன் திடுக்கிட்டு, ‘ஆமாம்’ என்று சொல்லிப் புறப்பட்டான். கந்தனை ஒருமுறை தழுவிக்கொண்டு, இனி எப்போதும் அவனிடம் அன்போடிருப்பதாய்ச் சத்தியம் செய்தான். கந்தனும் வீட்டுக்குத் திரும்பினான்.

கள்ளுக்கடையிலோ கூக்குரல் ஓய்ந்தபாடில்லை. அக் கூச்சலால் அங்கிருந்த குளமும் அலைமோதிற்று. இந்த

அமர்க்களத்தில் "பயலுவளா, இண்ணைக்கித் தீட்டிடுவம், பயப்படாதீங்க; எசமான் ஊர்லெ இல்லெ; இதாஞ் சமயம்; விட்டுட்டா வராது; ஒரு மாசமாக் கூலியில்லெ; கரியம் புண்ணியத்திலே கள்ளும் நமக்குத் தண்ணிபோலே கிடைச்சிருக்குது," என்று காட்டேரியின் குரல் இடிபோலக் கிளம்பிற்று. நந்தன், மூக்கன், இருளன், கறுப்பன், இருளப்பன் எல்லாரும் 'அதுதான் சரி' என்று ஒத்துப் பாடினார்கள். குடி வெறியால் கலகம் முதிர்ந்தது.

ஆஹா! ஐந்து ரூபாய்க் கள் படுத்தும் பாடல்லவா! அதன் சக்தியை யாரறிவார்கள்? கள்ளுக்கடையை ஏற்படுத்தும் சர்க்காருக்குக் கூட அதன் சக்தி நன்கு தெரியாது. இந்தப் பேதைப் பறையருக்கு ஒரு மொந்தை கள் அகப்பட்டாலே போதும். ரூபாய் ஐந்துக்கு ஒரே காலத்தில் கிடைத்து விட்டால் கேட்கவும் வேண்டுமா? இந்திர லோகத்திலும் இந்த ஆநந்தம் உண்டோ! இந்திர சபை இங்கு வந்து சற்றுப் பார்த்துப் போகவேண்டும்!

## அத்தியாயம்—4.

முட்டைகளுக்கு மெத்தையிட்ட முதல்வகுப்பும், பிரயாணிகளுக்கு மூட்டையடைந்த மூன்றாம் வகுப்பும்.

I

ரங்கன் ராஜேச்வரிக்குச் சொல்லிய வாக்குத் தவறாமல் குறித்த நேரத்தில் ஆடம்பரமாய் முதல்தரமான 'பியூக்' டாக்ஸி வண்டியில் எழும்பூர் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தான். ஸிலோன் போட் மெயிலுக்காகக் காலையிலே

யே தரங்கம்பாடிக்கு முதல் வகுப்பு டிக்கெட் வாங்கித் தன் இடத்தையும் 'ரிஸர்வ்' செய்து விட்டான். ரிஸர்வ் செய்வதற்காகப் பேர் கொடுக்கும்போது, அநாவசியமான படாடோபம் வேண்டாமென்றெண்ணி, ஐ. ஸி. எஸ். பட்டமின்றி 'ஆர். எஸ். ரங்கஸாமி' என்று தன் பெயரை மட்டும் கொடுத்திருந்தான். மேலும் இப்போது உத்தியோக முறையிலின்றித் தனியே பிரயாணஞ்செய்யும் தான் ஐ. ஸி. எஸ். பட்டம் வகிப்பது தன் தோற்றத்துக்கு ஒத்திராதென்ற ஒரெண்ணமும் அவன் மனத்தில் ஊடாடிக் கொண்டிருந்தது. தன்னோடு சமையற்காரன், சோக்ராபையன் முதலிய ஒருவருமில்லை. ஏனெனில், ராஜியுடனிருக்குங் காலங்களில் இந்தக் கட்டுப்பெட்டிகளும் கூட இருப்பது அவ்வளவு சௌகரியப் படாதன்றோ?

ரங்கன், பார்வைக்கு ஒரு கலெக்டர் போன்ற டாம்பீகமான தோற்ற மில்லாதவனானாலும், கொஞ்சம் முகக் களையுடையவன். அவன் முகத்தில் சாந்தமயமான வசீகர சத்தி பரவியிருந்தது. நல்ல அங்க லக்ஷணங்களுடைய அழகன் என்று சொல்வதற்கில்லை. ஆயினும் அவனுடைய அறிவினொளி முகத்தில் விளங்கி, அவனுடன் பழகுவோர் மனத்தைக் கவரத்தக்கதா யிருந்தது. அவன் மழை போலப் பொழியும் வாக்கு வன்மையும் உடையவன். இவற்றைக் கண்டு மயங்கியே சீமையில் ராஜேச்வரி ரங்கனிடம் மோஹங்கொண்டாள். அப்போது அவன் ஏழைகளிடம் அன்பு காட்டிப் பேசிய இனிய சொற்கள் அவள் மனத்தை முழுதுங் கவர்ந்தன. ஏழைகளின் கஷ்டங்களைக் குறித்து உண்மையன்போடு பேசும் சொற்கள் எந்த மனத்தில்தான் தைக்கா! மின்மினியினிடத்து ஒளி

போல; தேர்ந்த வாசாலகருடைய வாக்கில் இத்தகைய சக்தி எப்பொழுதும் இருக்குமன்றோ?

ரங்கனிடம் இந்தச் சக்தியைத் தவிர வேறு அழகில்லை. நிறமோ கறுப்பு; நடையோ ஆபாஸம்; நெட்டிலிங்கை மரம்போல் ஒல்லியாக ஓங்கி உயர்ந்த உடம்பு. முகத்தில் களை கொஞ்சம் இல்லாவிட்டால் அவனை மதிப்பாரொரு வருமில்லை. பிறர் மனத்தை மயக்கி விரைவில் கவரக்கூடிய அவன் பேச்சே இந்தக் குறைகளையெல்லாம் நிரப்பியது. ஆகவே, ரங்கனோடு நெருங்கிப் பழகப் பழகத்தான் அவ னருமை பெருமைகள் புலப்படும்.

ரங்கன் கலெக்டர் வேலைக்கு வந்தது முதல் இந்தப் பேச்சுத் திறமையைப் பிரயோகிக்கச் சந்தர்ப்பமில்லை. சிவப்பு நாடாவும் கொடியும் கட்டி அலங்கரிக்கப்பட்ட பேப்பர்க் கட்டுகளில்தான் புத்தி புதைந்து கிடக்க வேண் டியதாயிற்று. ஆகவே பேச்சுப் பயிற்சிக்கு இடமேயில்லை. தன் பெருமையைப் புலப்படுத்தக்கூடிய பிரசங்கங்களுக்கு இடமில்லாமற் போகவே, பாவாடை கட்டி வில்லைபோட்ட சேவகர்களின் தர்பார் உதவியே அவன். பெருமையைக் காட்டுவதாயிருந்தது. இப்பொழுது ராஜேச்வரியின் பொருட்டு அதையும் விட்டுத் தனியே வந்துவிட்டபடி யால், குண்டூர் கலெக்டர் துரை எழும்பூர் ஸ்டேஷன் சந்திக்கரையில், தாயில்லாப் பிள்ளைபோலத் தயங்கி நிற்க வேண்டியதாயிற்று.

ரங்கன் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தவுடன் போர்ட் டர் படை அவனைச் சூழ்ந்துகொண்டது. ரங்கன் காலே ஜில் வாசித்துக்கொண்டிருந்தபொழுது, மூட்டை முடிச் சுக்களின் உபத்திரவம் சிறிதுமின்றி ரயில் பிரயாணம்

செய்வதில் பேர் பெற்றவன். ஏனெனில் லீவுக்கு அவன் ஊருக்குப் போகும்பொழுதெல்லாம் அரைத் துணி தவிர, மறுதுணிகூடக் கிடையாது; மூட்டையும் பெட்டியும் படுக்கையும் எங்கிருந்து வரும்? அவன் வேலைக்கு வந்த பிறகுதான் சௌகரியத்துக்காக இவற்றையெல்லாம் அதிகப்படுத்திக் கொண்டான். மூட்டையைக் கண்டால் போர்ட்டர்களுக்குச் சொல்லவும் வேண்டுமா— கற்கண்டைக் கண்ட எறும்புகள்போல.

எழும்பூர் ஸ்டேஷனில் மூன்றாவது வகுப்பு டிக்கெட் டுக் கொடுக்குமிடத்தைப் பார்த்தவுடன் ரங்கனுக்குத் தன் பழைய ஸ்திதி ஞாபகத்துக்குவர, அவன், அந்த ஸ்வப்னு வஸ்தையைக் கொடுத்த அப்பக்கத்தை நோக்காமல் ஆகாயத்தைப் பார்த்தவண்ணம் நின்றான். போர்ட்டர்களுக்கோ, நிஜாரும் தொப்பியும் அணிந்து தங்கள் முன் நிற்பவர் ஒரு கலெக்டர் துரையென்பது தெரியாது. அவரோ ஒரு நாட்டுச் சட்டைக்காரத் துரையென்றே நினைத்தார்கள்.

ரங்கனுடைய பேச்சுத் திறமை சபைகளில் செல்லும். போர்ட்டர்களுக்கு ஐக்கிய சங்கமொன் றேற்படுத்தி, விதிகளுடன் அதை நன்கு நடத்தச் சொன்னால் சாமர்த்தியமாக நடத்துவான். ஆனால், தன் மூட்டைகளுக்குப் போர்ட்டர்களிடம் கூலி பேசி முடிப்பதென்ற சிரம சாத்தியமான விஷயத்தில் அவன் சாமர்த்தியம் செல்லத்தக்கதில்லை. தன்னுடைய பத்துமூட்டைகளுக்கு ஐம்பதுபோர்ட்டர்கள் தன்னைச்சூழ்ந்து நான்நீயென்று கூக்குரலிடுவதைக் கண்டு அவன் பிரமித்து நின்றான். போர்ட்டர்களோ

புற்றிலிருந்து புறப்படும் ஈசல்கள்போல் வந்து வளைந்து சண்டையிட்டுக்கொண்டு மேல்விழுந்து தலைக்கொரு சாமானாக எடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். சிலர் யஜமானைத் தங்களுக்கு ஏற்கெனவே தெரியுமென்றும், முதல் நாள் கூடத் தாங்கள் அவர் மூட்டையை எடுத்து வைத்திருப்பதாகவும் சொன்னார்கள். மற்றும் சிலர், யஜமான் கண்ஜாடையால் தங்களையே கூப்பிட்டதாக வாதித்தார்கள். வேறொருவன் யஜமானுக்குச் சிறு பிராயம் முதல் பத்து வருஷமாகத் தானே மூட்டையெடுத்து வைத்தவனென்று பாத்தியம் கொண்டாடினன். அவர்களுடைய சாமர்த்தியத்தைக் கண்டு ரங்கன் செயலற்றுத் திகைத்து நிற்க, யஜமான் அனுமதியில்லாமலே அவர்கள் மூட்டைகளை யெடுத்துச் சென்றுவிட்டனர். தாடிக்காரனென்ன, வழுக்கைத் தலையனென்ன, கிராப் தலையனென்ன, கிழவனென்ன, குமரனென்ன - போர்ட்டர்களின் தினுசுக்குக் கேட்பானேன்!

இப்படித் தன் மூட்டைகளோடு ஒத்துழைக்கும் போர்ட்டர்களின் கலகத்தைத் தணிக்க, ஒத்துழையாமையை யடக்குவதில் மகா தீரனான ரங்கனால் முடியவில்லை. அவன் அப்படியே பிரமித்து நின்று, "நடக்கிறது நடக்கட்டும்; போர்ட்டர் கூலிதானே? இன்றைக்கெல்லாம் ஆனால் ஒரு ரூபாய் அதிகமாகப் போகிறது; போகட்டும். இந்த ஏழை ஜனங்களுக்கு இதுகூடச் செய்யக் கூடாதா? லண்டனில் ஏழைகளின்மேல் பச்சாத்தாபப் பட்டு எவ்வளவோ பேசியிருக்கிறோமே? அதன் மதிப்பு இந்த ஒரு ரூபாய்கூடப் பெறாதா?" என்று சமாதானம் பண்ணிக்கொண்டான்.

போர்ட்டர்கள் எப்பொழுதும் கெட்டிக்காரர்கள். அவர்களுக்கு ரயிலில் பலரிடம் பழகி அடிபட்டு உலகானுபவம் அதிகம். அவர்கள் ஏழைகளை மிரட்டி அவர்களிடம் அதிகக் கூலி வாங்கியும் திருப்தியின்றி அவர்களை வைது கொண்டே போவதும் உண்டு; பணக்காரர்களுடைய வாயடிக்குப் பயந்து அவர்களிடம் ஒரு வண்டி மூட்டைக்குப் பாதிக்கூலி வாங்கிக்கொண்டு மரியாதையாய்க் கும்பிடு போட்டுப்போவதும் உண்டு. முதல் ஒரு பார்வையிலேயே அவர்கள் பிரயாணிகளின் மனத்தை மூட்டை நிறுப்பது போல் வெகு சீக்கிரத்தில் நிறுத்து அளந்துவிடுவார்கள். புலவருங் கண்டு பொறாமைப்படத்தக்க இத்திறமை அவர்களுக் கிருந்தும் என்னபயன்? மூட்டை தூக்கிப் பிழைக்க வல்லவோ தலைவிதி யிருக்கிறது!

II

காலையில் டிக்கெட்டு வாங்க வந்தபொழுதே போர்ட்டர்கள் ரங்கனை அளந்து, அவன் முதல் வகுப்பு டிக்கெட் வாங்கியிருப்பதையும் அறிந்து கொண்டார்கள். ஆனால் அவன் கலெக்டர் என்று கனவிலும் கருதவில்லை. யாரோ ஒரு பணக்காரச் சுருட்டு வியாபாரி அல்லது மீன் வியாபாரி என்று எண்ணினார்கள். இவ்வியாபாரிகள்தான் பணத்தைச் சமுத்திர ஜலம்போல் அலட்சியமாய் இறைப்பார்கள். போர்ட்டர்களுடைய ஆசைக்கும் கூலிக்கும் அளவேது? வக்கீல்கள் போலப் பீஸ் கணக்குண்டோ? 'வந்ததெல்லாங் கொள்ளும் மகாராஜன் கப்பல்' என்பது போலத்தானே அவர்கள் பாடு.

ரங்கன் ஆலோசனையுடன் நின்றுகொண்டிருக்கையில் மூட்டைகளெல்லாம் ரயிலேறி விட்டன. ஆனால் அவன்

பிரயாணமோ கொஞ்சம் சந்தேகத்தில் வந்துவிட்டது. ஏனெனில், ராஜியையும் தன்னுடன் அழைத்துப் போவ தற்கு, முதல் வகுப்பில் ஒரு 'பர்த்து' தானே ரிஸர்வ் செய் யப்பட்டிருக்கிறதென்று அவன் மனங் கலங்கலானன்.

"நம்முடைய ஐ. ஸி. எஸ். மந்திராக்ஷரத்தைக் காலையிலேயே பிரயோகித்திருந்தால் இப்போது எல் லாம் சுலபமாய்விடுமே. இப்பொழுது போய் நான் கலெக்டர் என்று டிக்கெட் கலெக்டரிடம் சொல்லிக் கொள்வதும் அழகில்லை. அது நம் ஐ. ஸி. எஸ். வர்க் கத்துக்கே ஏற்றதன்று. ஏதோ முடிந்தவரை பார்ப் போம்!" என்று தனக்குள்ளே யோசித்துக்கொண்டு டிக்கெட் கலெக்டரிடம் சென்றான். அவனே, இந்திர லோகத்திலிருந்து அப்பொழுதுதான் வந்தவன்போல் இறுமாப்புடனும் கடுகடுப்புடனும் இரும்பு வாயிற்படியில் சாய்ந்துகொண்டு நின்றான். ரயில்வேலையில்தான் இந்தக் கடுகடுப்பு 'பேடண்ட்' செய்திருக்கிறார்கள்.

ரங்கன் டிக்கெட் கலெக்டரைப் பார்த்து, "ஐயா, நான் ஸ்டேஷன்மாஸ்டரைக் கொஞ்சம் பார்க்கலாமோ?" என்று மரியாதையாய்க் கேட்டான். 'முடியாது' என்று துப்பாக்கியிலிருந்து வரும் வேட்டுப்போல் பதில் வந்தது.

ரங்கன்: முடியாதா?

டி-க. முடியாதென்றால் முடியாதுதான்.

ரங்கன்: உள்ளே போகலாமோ?

"ஒரு அணு கொடுத்துப் பிளாட்பாரம் டிக்கெட் வாங்கிக்கொண்டால் போகலாம். நிக்கல் ஒரணுவை அதோ அந்த யந்திரத்தின் துவாரத்தில் செலுத்திக் கீழே யுள்ள கைபிடியை இழும்; டிக்கெட் வந்து விழும்" என்று

டிக்கெட் கலெக்டர், ஐ. ஸி. எஸ். பாஸ்பண்ணின அஸிஸ்டென்ட் கலெக்டருக்குச் சொல்லிக்கொடுத்தான். அந்த டிக்கெட்டு யந்திரம் புதிதாய் வைக்கப்பட்டதாகையால் வழக்கம்போல் அவன் தன் பஞ்சாங்கத்தை ஒதினன்.

ரங்கன் நிஜார் ஜேபியில் கைபோட்டுத் துழாவினன். கால் ரூபாய் வெள்ளி நாணயந்தான் கைக்கு அகப்பட்டது. 'ஐயா, ஒரு அணு நிக்கல் இல்லை; இதோ நாலணு இருக்கிறது; இதை வைத்துக்கொள்ளும்' என்று இனிய குரலில் புன்சிரிப்புடன் அந்தக் கால் ரூபாயை டிக்கெட் கலெக்டரிடம் காணிக்கையாகச் செலுத்தினன். டிக்கெட் கலெக்டர் திருட்டு விழி விழித்துக்கொண்டு அங்குமிங்கும் பார்த்து அந்தக் கால் ரூபாயைத் தன் பெரிய ஆஸ்தியாக நினைத்தான். ஊனற்ற எலும்பைக் கடிக்கும் நாய்க்கு வால் ஏன் ஆடுகிறது? இயற்கை வாஸனைதான். அது போலவே இந்த டிக்கெட் கலெக்டருக்கும் அந்தக் கால் ரூபாயால் உள்ளத்தில் பொங்கின அளவற்ற ஆனந்தத்தின் அறிகுறியாக அவன் விழிகள் விளங்கின. விறைத்துக் காய்ந்து நின்ற அவன், உடனே ரங்கனுக்கு உண்மைத் தொண்டனாகிவிட்டான்.

ரயில் சிப்பந்திகள் இப்படி இராப்பகல் உழைச்காவிட்டால் இவ்வுலகில், தலைப்பாக் கட்டின தடபுடல் சீமான்கள் எப்படி மணிக்கு நாற்பது மைல் வீதம் மண்மேற் பறக்க முடியும்?

"வாருங்கள் ஐயா, உள்ளே வாருங்கள். தங்களைப் போன்றவர்கள் இட்ட வேலையைச் செய்யத்தானே இங்கு எங்களைச் சம்பளங்கொடுத்து வைத்திருக்கிறுர்கள். ஸ்டேஷன்மாஸ்டர் செய்வதை நானும் செய்யக்கூடும். 'கலெக்

டராலும் முடியாததைத் தர்ணம் முடித்து வைக்கக்கூடும்' என்று வசனம் கேட்டதில்லையா?" என்று குழைய ஆரம்பித்தான் டிக்கெட் கலெக்டர்.

ரங்கன்: சந்தோஷம். ரயில் வேலையில் இவ்வளவு நயமாயிருப்பது அபூர்வம். உம்முடைய பேர் என்ன ஐயா? சம்பளம் என்ன?

டி. க: "என் பேர் ரங்கஸாமி; ஸ்நேகிதர்கள் ரங்கன் என்று சொல்லுவார்கள். எனக்குச் சம்பளம் ரூபாய் இருபத்தைந்துதான். ரொம்பஸம்ஸாரி. ஆண்டவன் அஞ்சு பெண்ணும் மூன்று பிள்ளையும் கொடுத்திருக்கிறார். ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டிதானே. தங்களைப்போலொத்த பிரபுக்கள்—"

ரங்கன்: "ஆம் ஐயா, நீர் சொல்வது சரியே. இப்போது உம்மால் ஒரு ஒத்தாசை நமக்கு ஆகவேண்டியிருக்கிறது. நான் தரங்கம்பாடிக்கு போட்மெயிலில் ஒரு பஸ்ட் கிளாஸ் டிக்கெட் வாங்கியிருக்கிறேன்.—"

டி. க: "பஸ்ட் கிளாஸ் டிக்கெட்டா! அப்படியானால் பிளாட்பாரம் டிக்கெட்டு வேண்டியதில்லையே! என்னிடம் தாங்கள் இதை முன்னமே சொல்லக்கூடாதோ?"

ரங்கன்: "பாதகமில்லை ஐயா, இருக்கட்டும். இப்போது என்னுடன் ஒரு லேடி வரவேண்டியிருக்கிறது. அவளுக்காக பஸ்ட் கிளாஸில் இன்னொரு இடம் வேணும். அவசர காரியம். நீர் கொஞ்சம் ஒத்தாசை செய்தால் நல்லது."

ரங்கன் குரல், காதலாலுருகிக் கூவும் மாடப்புறுவின் குரல்போல மிக இனிமையாயிருந்தது. டிக்கெட் கலெக்டர் மிகவும் மகிழ்ந்து, "தங்களைப்போன்ற கனவான்

களுக்காகத்தானே நாங்கள் இங்கே காத்திருக்கிறது. இதற்காகவா தாங்கள் ஒரு மணிநேரம் முந்தியே வந்தீர்கள்? இதோ ஐந்து நிமிஷத்தில் ஏற்பாடு செய்துவிட்டுத் தங்களுக்குத் தெரிவிக்கிறேன்" என்றான். உடனே தந்தி போல் ஸமாசாரம் பறந்தது. தேன் சொட்டின விடத்தில் ஈக்கும் எறும்புக்கும் யாராவது சொல்லி யனுப்ப வேண்டுமா?

ஆவலுடன் ஒடுங்கி முகத்தைப் பார்த்துநின்ற டிக்கெட் கலெக்டர் கையில் ரங்கன் மெல்ல ஒரு ரூபாயை நீட்டினான். டிக்கெட் கலெக்டர் கை வெகு அவசரமாய் அந்த ரூபாயின்மேல் பாய்ந்தது. ஏனெனில், வெள்ளிரூபாய் ஒரு வேளை கைதவறிக் கீழே கல்தரையில் விழுந்து சத்தங்கேட்டால் தன்பாடு ஆபத்தல்லவா? இந்தக் கூத்தில், கஷ்டகாலத்து ஸ்நேகத்திற்கு இதுவே சாக்ஷி என்று சத்தியம் செய்ததுபோல, டிக்கெட் கலெக்டர் கை மூளி நகம் அஸிஸ்டெண்டு கலெக்டரின் மிருதுவான மணிக்கட்டில் பீறிக் கொஞ்சம் இரத்தங் கசியச் செய்தது.

போட்மெயிலில் எப்பொழுதுமே கூட்டம் அதிகம்; அன்றிரவு முதல்வகுப்பில்கூட வேறு இடம் காலியில்லை. ஆனால் பெரிய தனிகரான செட்டியார் ஒருவர் ரங்கனுடைய அறையிலேயே கூடப் போவதாகத் தெரிந்தது. செட்டிமார்களோ பணங்காசு விஷயமல்லாத பொது உரிமைகளைப் பற்றிக் கொஞ்சங்கூடச் சட்டை செய்வதில்லை. அது அவர்க ளினத்தா ரியற்கை. இது தெரிந்த ரெயில்வே சில்லறைச் சிப்பந்திகள், அவர்களை இலகுவாய் ஆட்டிவைப்பது வழக்கம். நுகத்தடியில் பூட்டின மாடுகள் ஒட்டுபவனுடைய தாற்றுக் கோலுக்கு உட்

படுவதுபோல, 'செட்டிமார்கள் 'ரயிலேறினல் ரயில்கார னுக்குக் கட்டுப்பட்டுத்தானே போகவேணும்' என்று வேதாந்தம் பேசிக்கொண்டு, மூன்றுதேசத்திலும் முப்பது ஜில்லாக்களிலும் தங்களுக்கு வரவேண்டிய வட்டிவகையரா நிலுவைக்கணக்குகளிலேயே மனத்தைச்செலுத்தி இந்தத் துன்பங்களை மறந்துவிடுவது அவர்கள் வழக்கமாகும்.

மேற்கூறிய செட்டியாரவர்கள், ரங்களைவிட அரை மணிநேரம் முன்னே வந்திருந்தும் பயனில்லை. அங்கே அவர் நீரை விட்ட முதலையைப்போலப் பலமற்றவரே! ரயில்வே சிப்பந்திகள் அவரைக் கண்டுபிடித்து, 'ஒரு பெரிய துரை தன் துரைசாணியுடன் ஏகாந்தமாய் பஸ்ட் கிளாஸில் செல்லவேண்டியிருப்பதால், செட்டியா ரவர்கள் தன் மூட்டைகளுடன் செகண்டு கிளாஸுக்குப் போகவேண்டும்' என்று உத்தரவிட்டுவிட்டார்கள். செட்டி யாரும், வெளி அந்தஸ்துக்காகவே முதல்வகுப்பு டிக் கெட்டு வாங்கியிருந்தவராகையால், அவருக்கு அவ் வுத்தரவு பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோ லாயிற்று. 'நல்லது! மீனுக்ஷி அம்மன் கிருபையால் இன்றைக்கு நமக்கு ரூ. 16-8-7 எதிர்பாராத லாபம்!', என்று தன் குலதெய்வத்தைத் தியானித்துக் களிப்படைந்தார்.

III

தன்னிஷ்டப்படி இடம் ஏற்பாடானதும் ரங்கனுக் குச் சந்தோஷந் தாங்கவில்லை. தானும் ராஜியும் அந்த முதல் வகுப்பாகிய விமானத்தில் ஆனந்தமாய் மணிக்கு நாற்பது மைல் வீதம் மாயமாய்ப் பறக்கலாமென்று மனக் கோட்டை கட்டி உடல் பூரித்து வெளியே வந்து படிக்

கட்டினடியில் நின்று, கண்ணைத் துடைத்துக்கொண்டு ராஜேசுவரி வரும் திக்கை நோக்கி அவள் வருகைக்காகத் தவம் செய்துகொண்டிருந்தான். கம்பீரமாய், பூமியை அரைத்துக்கொண்டு தன் காலடியில் வந்து நிற்கும் ஒவ்வொரு மோட்டாரையும் பார்த்துப் பார்த்துக் கண்பூத்து ஏமாந்தான். 'ஐயோ! மணி ஓடுகிறதே! வண்டிபுறப்பட இன்னும் கால் மணிதானே இருக்கிறது. ராஜியை இன்னுங்காணோமே! ஒருவேளை மனம் மாறிப் போய்விட்டாளோ! அப்படிப்பட்ட சஞ்சல புத்தியுடையவளல்லவே அவள்!' என்று பலவாறு ஆலோசிக்கலானான்.

மூன்றும் வகுப்பு டிக்கெட்டுக் கொடுக்குமிடத்தில் குருக்ஷேத்ர யுத்தகளம்போலக் கூச்சலுங் கொந்தளிப்பும் நிரம்பியிருந்தன. அந்தக் கூச்சலிலிருந்து ராஜேச்வரியின் குரல்போல ஏதோ ரங்கன்காதுக்கு எட்டியது. உடனே அவ்விடத்தை நோக்கி ஓட்டம் பிடித்தான். போய் ராஜேச்வரியைக் கண்குளிரக் கண்டான்.

ராஜேச்வரி ரங்கன் நினைத்தபடி 'டாக்ஸி'யிலின்றி பஸ்ஸில் வந்ததனால் அவ்வளவு தாமதமாக வந்து சேர்ந்தாள். பஸ்காரனே பழைய ஜட்கா வண்டிக்காரர்களைப் போலக் கூவிக் கூவி மெதுவாய் ஆள் சேர்த்துக்கொண்டு வருகையில், ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குச் சமீபத்தில் டயர் படீரென்று வெடித்துப் போய்விட்டது. பிறகு அதற்குப் பிளாஸ்திரி போட்டு ஒட்டிக்கிட்டிச் சரிபண்ணி மெதுவாய் எழும்பூர் கொண்டுவந்து சேர்த்தான். ராஜேச்வரி பஸ்ஸை விட்டிறங்கியதும், அவள் கொண்டுவந்திருந்த இரண்டு மூன்று சாமான்களையும் ஓநாய்க் கூட்டம்போலப் பின்தொடர்ந்த போர்ட்டர்கள் கைப்பற்றிக்கொண்டனர்.

யார் அந்த மூட்டைகளை முதலில் தொட்டவனென்று அவர்களுக்குள்ளே பெரிய விவாதம் ஏற்பட்டுவிட்டது. இந்த விவாதம் லகுவில் சட்ட பூர்வமாகத் தீர்க்கத் தக்க அல்ப சொல்ப விஷயமில்லை. ஸர் முத்துசாமி ஐயரும், பாஷ்யம் ஐயங்காருங் கூட இவ்விஷயத்தில் திணறிப்போய் விடுவார்கள். ஏனெனில், யார்க்கும் வயிறு பசித்தால், அன்னத்தைக் கண்டவுடன் கண்கள் தந்தியடிக்க, கைகள் ஒரே வேகமாய் வாய்க்கு ஓடுமன்றோ? அப்படிதானே இவ்வேழைகள் பாடு!

ராஜேச்வரி மூன்றும் வகுப்பு கேட் பக்கம் போகத் தொடங்கினள். ரங்கன் காதல் விஞ்ச, 'கண்மணி ராஜி! அதன்று நம்முடைய வழி. அது இப்பூலோக நரகத்துக்குப் போகும் வழி. அந்தப் பக்கம் காலடி வைக்காதே, இப்படி வா. முதல் வகுப்புத் தனி வண்டி ரிஸர்வ் செய்யப்பட்டு நமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது!' என்று சொல்லி, கட்டுக்கடங்காத அந்தப் போர்ட்டர்களை அதிகார தோரணையில் பார்த்தான். அவர்களோ, 'யார் முதலில் மூட்டைகளைத் தொட்டது' என்ற விஷயத்தை இன்னும் தீர்மானித்தபாடில்லை! ரங்கன் தன் கையிலிருந்த பிரம்பை ஓங்கி அவர்களை அதட்டிவிட்டு, பீமசேனனையும் கும்பகர்ணனையும் சேர்த்து ஒருருவ மாக்கினாற்போன்ற உருவத்தோடு அங்கே வேடிக்கை பார்க்க வந்த ஒரு போர்ட்டரைப் பார்த்து, 'டேய்! நீ இதை எடு!' என்றான்.

"வேண்டாம் வேண்டாம், ரங்கா, அதிக சிரமம் வேண்டாம். உத்தியோக ஹோதாவைக் காண்பியாதே. அவரவர் சாமான்களை அவரவர்கள்தான் தூக்கவேண்

டும். மேலும், நான் மூன்றுவது வகுப்பில்தான் போகப் போகிறேன்; நீ வீணுக அவஸ்தைப்படாதே. உன் ஜபம் பலியாது!'' என்று தீர்மானமாய்ப் பேசினுள் ராஜேச்வரி.

"மூன்றுவது வகுப்பா! உனக்கென்ன பைத்தியமா ராஜி? நரகம் வேறு உண்டோ? கூட்டமும், எச்சிலும், துப்பலும், குப்பையும், அழுக்கும்—ஒருவர் தலைமேல் ஒருவர் கால்பட—அப்பப்பா! உனக்கா மூன்றும் வகுப்பு! இதுவும் என்ன லண்டனு? சீமையிலிருந்து வரும்போது பி. அண்டு ஒ. முதல்தரமான கப்பலில் முதல் வகுப்பில் ராணிபோல வந்தாயே! அந்தக் கப்பல் முழுதும் உன் சாமானுய்த்தானே இருந்தது! அப்பேர்ப்பட்ட நீயா இப்பொழுது இந்த எஸ். ஐ. ஆரில் மூன்றும் வகுப்பில் போவது! இதைவிடக் கண்ணராவி ஏதாவதுண்டோ? நாலு ஸ்டேஷன் போவதற்குள் திணறிப்போய்க் கூக்குரலிடுவாய்! இந்திர விமானம்போல ஒரு முதல் வகுப்பு வண்டி நமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது; நேரமும் ஆய்விட்டதே!'' என்று ரங்கன் புலம்பினுன்.

அவன் புலம்பல் வீண்தான்; ராஜேச்வரி காதில் ஏறவில்லை. அவள், 'நான் உன்னேடுகூடத் தரங்கம்பாடிக்கு வரவேண்டுமானுல் உடனே ஓடிப்போய் மூன்றும் வகுப்பு டிக்கெட் இரண்டு வாங்கிவா! வேறு பேச்சில்லை!' என்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்லி, கையில் சிறிய தோற்பெட்டியுடன், மேகங்களின் இடையே பிரகாசிக்கும் பூர்ணசந்திரன்போல் போர்ட்டர்கள் கூட்டத்தில் சோபையுடன் நின்றுள்.

எழும்பூர் ஸ்டேஷனிலோ, மூன்றுவது வகுப்பு டிக்கெட்டு வாங்குவதிலுள்ள சிரமம் அநேகமாக எல்லார்க்

கும் தெரிந்ததே! அதிலும் போட் மெயிலுக்கானால் சொல்லவே வேண்டியதில்லை! பகீரதன் கங்கை கொண்டு வந்ததுகூட இதை நோக்க அற்பமாய்விடும்! கழைக்கூத்தாடியின் சரீரப் பயிற்சித் திறமும், பகீரதனுடைய விடா முயற்சியும் சேர்ந்து நின்றால் ஒரு டிக்கெட்டு வாங்கலாம். டிக்கெட்டுக் கொடுக்கும் ஜன்னலுக் கெதிரில் பெரிதாய், ஆறடி உயரத்தில், சுற்றும் கிளிக்கூடொன்றுண்டு. ஒவ்வொருவனும் அதில் புகுந்து புறப்பட்டால்தான் டிக்கெட்டுக் கிடைக்கும். இதை ஸினிமாவில் போட்டுக் காட்டினாலும் நல்ல லாபங் கிடைக்கும். இந்த விஷயம் ரங்கனுக்கும் தெரியாததன்று. அவன் காலேஜில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் பலதடவை இடுக்குகளில் நுழைந்தும் அட்டைபோல் ஒட்டிக்கொண்டும் இக்கட்டுப்பட்டு டிக்கெட்டு வாங்கி அனுபவித்திருக்கிறான். அது மறக்கக்கூடியதா!

ரங்கன் பெருமூச்சு விட்டுக்கொண்டு கூட்டண்டை வந்தான். அங்கே ஒரு பெருங்கூட்டம் உறுமிக்கொண்டும், முணுமுணுத்துக்கொண்டும், திட்டிக்கொண்டும், மனதில் நல்ல காலமாய்ப் போகவேணுமே யென்று ஏழுமலையானை வேண்டிக்கொண்டும் தவித்துக்கொண்டிருந்தது.

டிக்கெட்டுக் கொடுக்கும் குமாஸ்தாவோ, குவிந்திருக்கும் பணக் குவியலின் முன்னே நாற்காலியில் சாய்ந்து கொண்டு இந்திரன்போல இறுமாந்து உட்கார்ந்திருந்தான். அவன் எழுபது வயதான பழம் பெருச்சாளி. எவ்வளவோ கஷ்டங்களைப் பார்த்துச் சலித்துத் தேறினவன். யமனுக்கே டிக்கெட்டுக் கொடுக்கக் கூடியவன். ரங்கனுக்கா அசையப் போகிறான்! அவனுக்கு அந்தக்

கிளிக்கூட்டில் புகுந்து தவித்துக் கத்துங் கூட்டத்தின் கூக்குரல் சகஜமாய்ப் போய்விட்டது. மேலும், வேறு சில கஷ்டங்களும் சமீபத்தில் அவனுக்குச் சேர்ந்துகொண்டன. அவன் புத்திரி ஒருவார முன் வைதவ்ய மடைந்து விட்டாள். அதற்கு லீவுகூடக் கிடைக்கவில்லை பாவம்! இந்த மனக்கலக்கத்தால், முதல்நா ளிரவு போட் மெயில் டிக்கெட் கொடுப்பதில் ரூ. 1-8-3 தட்டுக்கெட்டுப் போய் விட்டது. அந்த நஷ்டம் வேறே அவன் உயிர்க்குலேயைப் பற்றியது. 'ஆஹா! எத்தனை இட்லி, எத்தனை சேர் நல்லெண்ணெய் வாங்கலாம்!' என்று நினைத்து நினைத்துப் பெருமூச்சு விட்டான். (இந்த முதிய வயதிலுங்கூட 'இட்லி' என்றால் அவனுக்கு நாக்கில் ஜலம் ஊறும்.) அவன் நெற்றி நாமமோ தாரை தாரையாய்க் கொட்டும் வேர்வையால் நனைந்து மங்கியிருந்தது. ஊற்றிட்டு ஓடி வரும் வேர்வையைத் துடைப்பதனால் கைக்குத்தான் கேடு என்றெண்ணிச் சும்மா விட்டுவிட்டதனால், அவன், ஓயாத அபிஷேகம் பெற்ற ஜம்புகேசுவர லிங்கம்போல விளங்கினான்.

கூட்டில் சேருங் கூட்டமோ வரவர அதிகரித்தது. சுற்றுங் கூடும் கனந்தாங்காமையால் சிறிதும் நகராமல் நின்றுவிட்டது. இந்தக் கொள்ளேயில், டிக்கெட் கிளார்க்கின் நண்பனொருவன் அந்தக் கர்ப்பக் கிருகத்துக்குள்ளே ஸ்வாதந்தரியத்துடன் நுழைந்து, டிக்கெட் கொடுக்கும் தன் நண்பனைப்பார்த்து நெடுநாளானமையால் அவனோடு பெரிய சம்பாஷணையைத் தொடங்கிவிட்டான். அவன் தாராளமாய் யோகக்ஷேமங்கள் விசாரித்துக்கொண்டு, தன் கண்முன்னே கஷ்டப்பட்டு டிக்கெட்டுக்காகக் கெஞ்

சுஞ் கூட்டத்தைக் கண்டு நகைத்தான். டிக்கெட் கிளார்க்கும், இந்தச் சனியன் பிடித்த வேலையைச் சிறிது நேரம் நிறுத்திக்கொள்ள இதை வியாஜமாகக் கொண்டு, நண்பனுடன் தாராளமாய்ச் சம்பாஷணையைத் தொடங்கி, சோம்பல் முறித்தும், பல்லிடுக்கில் புகுந்திருக்கும் பாக்குத் துணுக்குகளை நாக்கினால் துழாவி வெளிப்படுத்தித் துப்பிக்கொண்டும் ஆனந்தமாய் நடத்திக்கொண்டிருந்தான். டிக்கெட்டில் தேதி வெட்டும் யந்திரத்தின் ஓசை நின்றுவிட்டது.

வண்டி புறப்பட ஐந்து நிமிஷந்தான் உண்டு. முதல் மணியோசை கலகலவென்று காதில் கேட்டது. ஆடுகள் போற் கூட்டிலடைபட்டவர்கள் மறுபடியும் கதறத் தொடங்கினார்கள். இந்நிலையில் ரங்கன் மெல்லக் கூட்டில் நுழைந்து டிக்கெட்டு வீரனுடைய உல்லாசத்தைக் கண்டு அடங்காக் கோபங்கொண்டு, 'என்ன ஐயா செய்கிறீர் டிக்கெட் கொடுக்காமல்? தூக்கமோ?' என்றான்.

"யாரையா அது, புது துரை? இப்பொழுதுதான் வந்தீரோ ஒட்டைக் கப்பலில்? இந்த 55 நிமிஷமாய் டிக்கெட் கொடுத்தபோது என்ன பண்ணினீரோ? தூக்கம் யாருக்கு?" என்று டிக்கெட்டு கிளார்க்கு அலட்சியமாய்த் தூக்கியெறிந்து பேசினான். ஆயினும், ரங்கன் வார்த்தை முழுதும் வீணாய்ப் போய்விடவில்லை. ஒரு நிமிஷத்துக்கெல்லாம் எல்லாரும் மனங்களிக்க, தேதி வெட்டும் யந்திரம் பேச ஆரம்பித்தது.

கூட்டம் மிகவும் குதூகலமடைந்தது. ஆனால் கூடு நகரமாட்டேனென்றுவிட்டது. புதிதாய் நுழைந்தவர் ஒவ்வொருவரும் தத்தமக்கு டிக்கெட்டுக் கிடைக்காது

போய்விடுமோ வென்ற பயத்தால் கூட்டைவிட்டு வெளி வராமல் மேன்மேலும் உள்நோக்கி நெருக்கினுர்கள். ஆகையால் டிக்கெட்டு வாங்கினவர்கள் வெளிவர வேண்டு மானுல் கூட்டின்மேல் ஆறடி உயரம் ஏறி வெளியே குதித் துத்தான் வரவேண்டும். இந்த ஸ்திதியைப் பார்க்க ரங்க னுக்கு மதி கதி கலங்கியது. ராஜேச்வரியோ ஒரே துக்கத்தி லாழ்ந்து சற்றுத் தூரத்தில் நிற்கிருள். அவள் முன் னேயா இந்த ஸர்க்கஸ்வித்தை பழகுவது என்ற யோசனை ஒருபுறம்.

ரங்கனுக்கு டிக்கெட்டு வாங்கும் முறை வந்தது. மெல்லக் கைநீட்டிப் பதட்டத்துடன் டிக்கெட்டை வாங்கி னன். ஏழுமலையானைக் கைகூப்பித் தியானித்துக்கொண்டு மூச்சடக்கிக் கூட்டின்மேலேறி வெளியில் குதித்தான். தலைகீழாகத்தான் கீழே வந்து சேரக்கூடுமென்று நினைத் தவன், கால் சரியாகத் தரையில் படிந்தமை கண்டு சந் தோஷமடைந்து பரபரப்புடன் சென்று ராஜியை அடைந் தான், காயம் பலமில்லை. ஆனுலும் மணிக்கட்டுக் கொஞ்சம் சுளுக்கிக்கொண்டது போலவும், கால் கட்டை விரல் கொஞ்சம் நசுக்கப்பட்டதுபோலவும் தோன்றிற்று. கழுத் தும் கொஞ்சம் ராஜபார்வைக் காசைப்பட்டதுபோல், சரி யாகத் திருப்பமுடியாம லிருந்தது. இவ்வளவோடு தப் பினது தம்பிரான் புண்ணியமென் றெண்ணி ரங்கன் மனங்களிக்க அவன் நாவும் அசையத் தொடங்கிற்று.

“ ராஜி, இதென்ன அக்கிரமம்! இதைப் பார்த்த பிறகு, நம் நாட்டுக்கு ஸ்வராஜ்யம் வேண்டுமென்று நீ சொல்லமாட்டாயென்றே நினைக்கிறேன். நல்ல காலம்! டிக்கெட்டோடு பிழைத்து வந்து சேர்ந்தேன். இந்தக்

கேவலம் எங்குங் கிடையாது! ஐம்பது வருஷ காலமாக ரயிலில் பழகியும், எறும்புக் குள்ள புத்திகூட நம்மவர்க்கில்லையே! ஒருவர் பின் ஒருவராகச் செல்லாமல் இப்படியா கழுதைக் கூட்டங் கூடுவது? சீச்சீ! இப்படி யிருந்தால் ஸ்வராஜ்யம் எப்படிக் கிடைக்கும்? டிக்கெட்ளார்க்கு செய்தது மிகவும் அக்கிரமம்; பொறுக்கமுடியவில்லை. தஞ்சை போனதும் கம்பெனி ஏஜண்டுக்கு நேரில் விஷயத்தைத் தெரிவிக்கிறேன். இப்படி அடிபட்டதும் ஒரு நன்மைக்குத்தான்!'' என்றான்.

அதற்குள் ராஜி குறுக்கிட்டு, “ ரங்கா, உன் உபந்நியாசம் சரிதான்; அதற்கு இடமும் காலமும் இதுதானா? வண்டியில் போய்ச்சேர்ந்தால் பிறகு ஸாவகாசமாய்ப் பிரசங்கத்தை வைத்துக்கொள்ளலாமே?'' என்றாள்.

அந்தப் பயங்கரமான கூட்டுக்குக் கொஞ்ச தூரத்தில், காக்கி அரை நிஜாரும் சிவப்புத் தலைப்பாகையு மணிந்த ரயில்வே போலீஸ் சேவகனொருவன், வாயில் வெற்றிலை பாக்கைப் போட்டு அரைத்து, சலவைக் கற்பதித்த தரையில் அங்கு மிங்கும் துப்பிக் கொண்டும், ரயிலுக்குப் போகும் அழகு வாய்ந்த சிறுமிகள் மீது கண்போட்டுக் கொண்டும் நின்றான். ரங்கன் அவனிடம் போய்ப் புகார் செய்தான். அவனோ, “ஐயா, நீர் இந்த ஊருக்குப் புச்சு போலேக்கீது! இது எப்பவும் நடக்கறதுதான்; என்ன அதிசயம்? என்வேலே இங்கே திருடறவங்களெயும் ஜோபிலே கைபோடறவங்களெயும் புடிக்கிறது மாத்திரந்தான். அதுதான் எனக்கு உத்தரவு!'' என்று தாராளமாய்ச் சொல்லிவிட்டு மறுபடியும் அசைபோட ஆரம்பித்து விட்டான்.

ரங்கன் "ராஜி, எல்லாங் கோணல். காலம் கலிகாலம். நமது நடவடிக்கை முறைகளை இந்த மாதிரிப் பற்றவைத்துக் கொண்டிருந்தால் ஒட்டை அடைபடாது; உருக்கித்தான் வார்த்தாகவேணும். அதற்கு, நெப்போலியனுவது முஸலோனியாவது இச்சமயம் இந்தியாவுக்கு வேண்டும். இந்தக் கட்டிகள் மந்திரத்தால் தீரா; ஆயுதம் போட்டுக் கீறி ஆற்ற வேண்டியதுதான். வேறு வழியில்லை. மந்திரத்தில் மாங்காய் விழுமா? வீண் பிரயாசைதான். அருமையான நம் காலம் வீணுகிறதைத் தவிரப் பலனொன்றுமில்லை." என்று பொருமினன்.

ராஜேச்வரி, "ரங்கா! நமக்கு ரயில் கிடைக்கட்டும்; பிறகு உன் வேதாந்தங்களை யெல்லாம் தெளிவாய் விசாரிப்போம். எங்கே போய்விட்டது? இன்னும் ஒரு நிமிஷந் தானிருக்கிறது; சீக்கிரம் போவோம். நமக்கு இன்று ரயில் கிடைக்கும் பாக்கியம் உண்டானல் அங்கே போய்ச் சாவகாசமாகப் பேசிக்கொள்வோம்!" என உடனே ரங்கன் வழியிலுள்ள கிழங்களையும் குழந்தைகளையுந் தள்ளிக்கொண்டு வெகு அவசரமாய் முன்னே சென்றான். தன் பிரசங்கத்தைத் தானே மறந்து விட்டான். ராஜேச்வரியும் தன் மூட்டைகளைத் தன் கையிலேயே எடுத்துக் கொண்டு யோசனையுடன் ரங்கனைப் பின்தொடர்ந்தாள்.

## அத்தியாயம்—5

### போட்மெயில்

I

இங்கே இவர்கள் நிலை இவ்வாறிருக்க, மெயில் வண்டித்தொடர், பள்ளியறையில் தன் புருஷனை எதிர்பார்க்கும் அரசிபோல் எஞ்சினையெதிர் பார்த்துக்கொண்டு ப்ளாட்பாரத்தில் நின்றது. வண்டித் தொடருக்கு ஐம்பது கெஜ தூரம் முன்னே எஞ்சினானது புகையைச் சுருள் சுருளாக விட்டுக்கொண்டும், ஆகாயத்தில் மின்னும் நக்ஷத்திரங்களுக்குத் தன்னிடத்திலும் அத்தகைய சக்தியிருப்பதாகக் காட்டுவது போல இடையிடையே தீப்பொறிகளை வெளிப்படுத்திக்கொண்டும் நீர்யானை போல் நின்று தண்ணீர் நிரப்பிக்கொண்டிருந்தது.

ஸிலோன் போட்மெயில் எப்பொழுதுமே அழகுள்ளது. ஏனெனில் தென்னிந்திய ரெயில்வே அதிகாரிகளுக்கு அதுதான் செல்வப்பிள்ளை. ஆயிரக் கணக்கான மைல்கள் ஓடும் நூற்றுக்கணக்கான அவர்களுடைய வண்டிகளுக்கு எல்லாம் போட்மெயில்தான் நேத்திர ஸ்தானம். இந்தக் கஷ்டமான தேசத்தில் பல வருஷம் பாடுபட்டுச் சீமைக்குத் திரும்பும் வெள்ளைச் சீமான்களின் சௌகரியத்திற்காகவே புது மாதிரியில் அமைக்கப்பட்ட முதல், இரண்டாவது வகுப்பு வண்டிகளும், அவற்றின் மூலம் கொஞ்சம் அதிர்ஷ்டம் பெற்றுப் புது வர்ணப்பூச்சுப் பெற்ற ஏழை மூன்றாம் வகுப்பு வண்டிகளும் பூட்டப்

பட்டு நின்றமையால் அன்று போட்மெயில் வண்டித் தொடர் முன்னிலும் பன்மடங்கு சோபையோடு பிரகா சித்தது. வண்டிகளின் தோற்றம் கண்ணுக்கினிமையா யும், கண்ணையும் மனத்தையும் ஒருங்கே கவரக்கூடியதாயு மிருந்தது. இந்த மூன்றும் வகுப்பு டிக்கெட்டு வாங்கும் கோலாகல சம்பவ மில்லாவிடின் ரங்கன் அன்று போட் மெயிலின் அழகையும் வெள்ளையரின் சாமர்த்தியத்தையும் பற்றி வியந்து ஒரு பிரசங்கமாரி பொழிந்திருப்பான்.

போட்மெயிலில் ஒருநாளும் கூட்டத்திற்குக் குறை வில்லை. போதாக் குறைக்கு அன்று ரங்கூன் கப்பல் வந்த தினம். சுமார் இரண்டாயிரம் ஜனங்கள் விரைவில் ஊர் போய்ச் சேரும் ஆவலால் வேகமாகப் போகக்கூடிய போட்மெயிலில் வந்து விழுந்தார்கள். ஆகையால் சுமை அளவு கடந்து ஒட்டிக் கிரட்டி யாய்விட்டது. ஒவ்வொரு வண்டியும் மூட்டை யடுக்கும் கிடங்கு போ விருந்தது. பிரயாணிகள் அதில் பதுங்கும் திருடர்போலக் காணப் பட்டனர்.

வண்டி புறப்படப் பத்து நிமிஷங்களுக்கு முன் ஸ்டேஷன் மாஸ்டர் அப்பொழுதுதான் விமானத்தில் வந் திறங்கினவர்போல் பிளாட்பாரத்தில் உல்லாசமாய் அடி மேலடிவைத்து ஒய்யார நடை நடந்து உலவிக்கொண்டி ருந்தார். ரயில்வே சிப்பந்திகள் கை கட்டி வாய் பொத்தி நின்றார்கள். ஸ்டேஷன் மாஸ்டர் மூன்றாவது வகுப்பி லுள்ள கூட்டத்தைக் கண்டு சகிக்கமுடியாமல் மயிர்க் கூச்செறிந்து, 'இந்தப் பாழும் தேசத்தில் எப்பொழுதும் இப்படித்தான். இந்த ஆட்டு மந்தைக் கூட்டங்களைத் தடுக்க முடியாது. என்ன கொள்ளை போய்விட்டது?

இக்கூட்டம், இன்னும் ஒருமணி நேரங் கழித்துப் புறப்படும் பாஸெஞ்சரில் போகக்கூடாதோ?' என்று முணுமுணுத்தார். பிரயாணிகளுடைய அவசரத்தையும், பாஸெஞ்சர் தள்ளாடிப் புள்ளாடிக்கொண்டுபோகும் அசௌகரியத்தையும் அவர் கண்டாரா! ஒருவரிடமும் ஒரு வார்த்தையும் பேசாமல், மானிடர் நடுவே தப்பித் தவறி வந்த ஒரு தேவன் போலச் சென்ற அவர், கூட்டத்தில் போலீஸ் பெரிய இன்ஸ்பெக்டரைக் கண்டதும், புன்சிரிப்புடன் தலையசைத்து, 'என்ன ஐயா! அபூர்வமாயிருக்கிறதே இன்றைக்கு இந்தக் கூட்டத்தில்! அவசரமான முக்கிய காரியம் ஏதாவது உண்டோ? அவசியமானல் நானும் ஒத்தாசைக்குத் தயாராயிருக்கிறேன்!' என்ருர்.

"ஆமாம்! போலீஸ் கமிஷனரே நேரில் டெலிபோன் மூலம் சொல்லியிருக்கிருர். இரண்டு பேர்வழிகள் இந்த ரயிலில் போகிருர்களாம். அவர்களைக் கவனிக்க வேண்டுமாம்!" என்ருர் இன்ஸ்பெக்டர்.

II

ரங்கன் ராஜேச்வரியின் வருகைக்காக எதிர்பார்த்து அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, எழும்பூர் ஸ்டேஷன் ரயில்வே போலீஸ் ஆபீஸில் பின்வருமாறு டெலிபோன் சமாசாரம் வந்தது:—

"ஹல்லோ! யாரங்கே! இன்ஸ்பெக்டரா? நான் தான் கமிஷனர் பேசுகிறது. நன்ருய்க் காது கொடுத்துக் கவனியும். ஸி. ஐ. டியி லிருந்தும் ஹோம் மெம்பரிட மிருந்தும் அவசரமான சமாசாரம் வந்திருக்கிறது. குண்டூரிலிருந்து தஞ்சைக்கு மாற்றலாகிச்

செல்லும் அஸிஸ்டென்ட் கலெக்டர் மிஸ்டர் R. S. ரங்கஸாமி இப்பொழுது போட்மெயிலில் போகிறாராம். அவருடன் கூட, இன்று பம்பாயிலிருந்து வந்தவளும், ஒத்துழையாமைக் கலகத்தில் சேர்ந்தவளுமான ராஜேச்வரி பாய் என்பவளும் போகிறாளாம். அவர்கள் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டும். இதற்காகத் தனியே ஓர் ஒற்றனையும் அனுப்பி யிருக்கிறேன். ஒரு வேளை அவன் அங்குவரக் கொஞ்சம் தாமதமானாலும், நீர் அவர்களிருக்கும் வண்டியை யறிந்து தயாராயிருக்கவும். தெரியக் கூடிய விஷயங்களையும் சேகரிக்கவும்.''

அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டரோ சமீபத்தில் வரப்போகும் பென்ஷன் காலத்தை யெதிர்பார்த்துக்கொண்டிருப்பவர். பாக்கியுள்ள ஆறு மாதத்தையும் தள்ள, ஸமுத்ர ஜலத்தை முட்டையா லளப்பதுபோல் நாளெண்ணிக்கொண் டிருந்தார். அவர் தம் தகுதிக்கு அந்த இலாகாவில் எவ்வளவு முன்னேற்ற மடைய முடியுமோ அவ்வளவும் பகவான் கிருபையால் அடைந்தவர். இம்மையில் இனி அவர் அடைய வேண்டிய லாபம் பென்ஷனைத் தவிர வேறொன்று மில்லை. ஆகவே மனத்தில் பென்ஷனையும் பரலோகத்திற்கு வேண்டிய நல்வழியையும் கருதி, மேலுக்குக் காக்கிச் சட்டையையும் சிவப்புத் தலைப்பாகையையும் அணிந்துகொண்டு காலந்தள்ளி வருகிறார். அவருக்குக் கொஞ்சம் நீர்ரோக உபத்திரவம் உண்டு. இந்தக் கொடிய வியாதிக்கு இடித்த விடத்தில் யமன் புகுவான் என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறார். ஆதலால் இந்த அபரவயதில், மூட்டை முடிச்சுக்கள் எங்கும் இறைந்து கிடப்பதும் ஆள் நடமாட்டம் அதிக

முள்ளதுமான பிளாட்பாரத்தில் நடந்து, ஒரு வேளை தடுமாறி விழுந்துவிட்டால் பென்ஷன் யமனுக்குப் போய் விடுமே யென்ற பயத்தால் அவர் எப்பொழுதும் தம் அறை யிலேயே சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருப்பது வழக்கம். ஆனாலும் இப்பொழுது கமிஷனர் துரையே நேரில் டெலிபோன் செய்திருப்பதனால் மெல்லப் போய் ஒரு தடவை ரயிலைப் பார்த்துவிட்டு வருவோமென்று நினைத்துக் கிளம்பினார். இந்த வேலை அவருக்கு நேரே சம்பந்தப்பட்ட தில்லையாயினும், பொதுவாகப் போலீஸ் என்ற பெயருக்காகவேனும் தாக்ஷிண்யத்திற்குச் செய்ய வேண்டியிருக்கிறது. பொலீஸ் புலி யென்றால் பல் போனாலும் வாயைத் திறந்து ஆடம்பரமாவது பண்ண வேண்டாமா?

இன்ஸ்பெக்டர், ரங்கனுடைய மூட்டைகள் ஏறின முதல் வகுப்பு வண்டியை, அங்கே கூடி நின்ற போர்ட்டர் கூட்டத்தால் மோப்பம் பிடித்துக் கண்டு களிப்புடன் அவ்விடம் வந்து நின்றார். அதே சமயந்தான் ஸ்டேஷன் மாஸ்டர் அவ்விடம் வந்ததும். அவரோ இன்ஸ்பெக்ட ருக்கு உபசாரமாக வார்த்தைமட்டும் சொல்லிவிட்டு, வாயிலுள்ள சுருட்டிலிருந்து எஞ்சினுக்குச் சளைக்காத புகையையும் நெருப்புப் பொறிகளையும் வெளிப்படுத்திக் கொண்டு எஞ்சின் நிற்கும் பக்கமாகப் போய்விட்டார்.

கூலிக்காகக் கொட்டாவி விட்டுக்கொண்டு மந்தை யாய்க் கூடிநின்ற போர்ட்டர்களைப் பார்த்து இன்ஸ்பெக் டர், 'அடே பயல்களா! எங்கேடா துரை? இன்னும் காணோம்! இவ்வளவு மூட்டையையும் ரயிலேற்றிவிட்டா வராம லிருப்பார்?'' என்று கேட்டார்!

"இல்லெ யஜமான்! அவரு வந்துட்டாரு; அவரு தானு தொரெ? எங்களுக்குத் தெரியாது! பாத்தா எதோ நாட்டுப்புறத்துப் பேர்வழி மாதிரி இருந்தாரு" என்று பதில் வந்தது.

"அல்லடா மடப்பயல்களா! உங்களுக்குப் புத்தி தான் இல்லே; கண்கூடவா போய்விட்டது. அவர் கலெக்டர் துரையடா! குண்டூர் கலெக்டர், தெரியுமா? ஒரு வேளை நீங்கள் பார்த்த பேர்வழி அவருடைய பட்லரோ அல்லது சோக்கராவோ! துரை வரவை எதிர்பார்த்து வெளியில் நின்றுகொண்டிருக்கலாம். ஓடிப்போய்ப் பாருங்களடா, சோம்பேறிகளா! கூலி வேண்டாமா உங்களுக்கு? வண்டி புறப்பட இன்னும் அஞ்சு நிமிஷந் தானே இருக்கிறது!" என்று சொல்லிவிட்டு, இன்ஸ்பெக்டர் ப்ளாட்பாரத்திலுள்ள பெரிய கடிகாரத்தை மனக் கலக்கத்துடன் பார்த்தார். ஏனெனில் இப்பொழுது இதைக் கண்டுபிடிக்காவிடில், பென்ஷன் வாங்கப் போகும் சமயத்தில் எதாவது புகார் செய்து வாயில் வயிற்றில் அடித்துவிட்டால் என்ன செய்வதென்று உள்ளூற அவருக்கு உதைப்பு.

இப்படி அவர் மனங்கலங்கி நிற்கும்போது நல்ல உடையும், தோற்றமும், சுறுசுறுப்பு முள்ள ஒருவாலிபன் அவரிடம் ஓடி வந்து அவர் காதோடு "ஐயா, தங்களுக்கு வந்தனம். தாங்கள் யோசிக்க வேண்டாம். பேர்வழிகள் வண்டி யேறிவிட்டார்கள். இடத்துக்குத் தவித்துக் கொண்டிருந்தார்கள். நானே இடங் காட்டி ஏற்றிவிட்டேன். ஏறினது மூன்றும் வகுப்பு ஐயா, ஆச்சரியம்! மூட்டைக்கு மெத்தையிட்ட முதல் வகுப்பு; அவர்களுக்கு

மூட்டையடைந்த மூன்றும் வகுப்பு! இந்தப் பிதிரை யார் அவிழ்ப்பது? யோசிப்பதற்கும் இப்பொழுது நேர மில்லை. ரயிலில் போய்த்தான் யோசிக்கவேணும். ராஜ தந்திரம் பெரிய சதுரங்க ஆட்டந்தானையா! அது மூளையைக் கலக்கிவிடும். வந்தனம்; நான் போய் வருகிறேன். என்னைப்பற்றி இன்னும் தங்களுக்கு ஞாபகம் வரவில்லையோ? உங்கள் அடிமை பொன்னனல்லவா நான்? ஆறு வருஷங்களுக்கு முன் விழுப்புரத்தில் முதல் முதல் என்னைக் கைதூக்கி விட்டது தாங்களல்லவா? ஏதோ தங்களாசீர்வாதத்தால் இப்பொழுது சௌக்கியமா யிருக்கிறேன். ஸி. ஐ. டியில் இருக்கிறேன். மேலதிகாரிகளும் தங்களைப்போலவே என்னிடம் பிரியமா யிருக்கிறார்கள். நமஸ்காரம் இந்த வேலை முடிந்ததும் மறுபடியும் தங்களைப் பார்க்கிறேன்." என்று இவ்வாறு பரபரப்புடன் கூறிவிட்டு வேட்டைநாய்போல் ஓடி மறைந்து விட்டான்.

கிழப் போலீஸ் புலியோ, முப்பது வருஷமாகச் சிவப்புத் தலைப்பாகை கட்டி வேலை பார்த்துவரும் தன்னைப்போன்ற தேர்ந்த கைகளுக்குக்கூட அசாத்தியமான விஷயங்களில், இந்தப் பால்ய ஒற்றர்களின் சாமர்த்தியத்தைக் குறித்து வியந்து சிறிது பிரமித்து நின்று, பிறகு தெளிந்து, அந்தப் பொன்னன் பயலை அவன் சாமர்த்தியத்துக்காகத் தட்டிக்கொடுக்க எண்ணினார்; திரும்பினால் பொன்னனைக் காணோம்! அதற்குள் போட்மெயிலும் மெல்ல ஊதிக்கொண்டு கிளம்பி, ஆகாயத்தில் தவழ்ந்து செல்லும் மேகம் போலச் சத்தமின்றிச் சென்றுவிட்டது.

## அத்தியாயம்—6

### வனவாசம்

I

அழகிய மாஞ்சோலை தென்னஞ் சோலைகளுக்கிடையே புதுமாதிரியில் பக்ஷியின் வடிவமாகக் கட்டப்பட்டு விளங்கிய ஆக்கூர் ஸ்டேஷன், அடர்ந்த மாமரத்தின் கிளையி லமர்ந்திருக்கும் ஓரழகிய குருவிபோலக் காணப்பட்டது. அந்தப் பாதையிலேயே ஆக்கூர்தான் அனைவருடைய மனத்தையும் கவரக்கூடிய சிறந்த ஸ்டேஷன்.

அவ்வூர் கடலுக் கருகி லிருந்தாலும் நிலவளத்தில் குறையாதது. அங்கே மரஞ் செடி கொடிகள் படுகை நிலத்திற் பயிராவது போலச் செழிப்புற்று வளர்ந்து வானளாவித் திகழ்ந்தன. தென்னைகள் கண்ணுக்கெட்டாத உயரம் ஓங்கி வளர்ந்து குலைகளுடன் தலை சாய்ந்து பெரியோர் போல் நின்றன. ஆலமரங்கள் விழுதுகளுடன் அழகுபெறப் படர்ந்து கூடம்போலக் குலவின. மாஞ்சோலைகள் பூமியெங்கும் நிழலாக்கிப் பசும் பந்தல்கள் போல் பரந்து விளங்கின.

இத்தகைய சிறப்புடைய ஆக்கூர், முனிவர்க் குரிய தவ வனம் போலவும், வேறொரு வகையில் நலம் நிறைந்த கன்னிகை போலவும் திகழ்ந்தது. அழகிய கன்னிக்கு மேகலாபரணம் போல அவ்வூருக்கு ரயில் பாதை மேன்மை தந்தது. அங்கே வளைந்து சென்ற அந்த ரயில் பாதை, பசும் புற்றரையில் வளைந்து நெளிந் தோடும் பாம்பு

போலக் கண்ணுக் கினிமை தரத்தக்கதா யிருந்தது. ரயில் ஸ்டேஷன், அத் தவவனத்திடையே யுள்ள தியானத்துக் கேற்ற ஆச்ரமந்தான்! அதனலேயே அங்கு ரயில்களுங் கூடக் கண்மூடித் தியானஞ் செய்துகொண்டும் கடற்காற்றின் ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டும் மெல்ல மெல்ல மணிக்கு ஆறுமைல் மாயமாய்ப் பறந்தன.

அன்று மாலை ஆக்கூரில் அமைதி நிலவியிருந்தது. வானத்தில மேகம் அதிகமில்லை. அங்குமிங்கும் சிதறியிருந்து விரைந்தோடும் மேகங்களினூடே விளங்கிய பாலசந்திரன், அவற்ரோடு போட்டிபோட்டு ஓடினற்போலிருந்தது. கடலிலிருந்து இளங்காற்றும் ஒத்து வீசியது. ஆக்கூர் மேட்டுப்பாங்கானதால் அது அக்காற்று முழுவதையும் அனுபவித்தது.

II

இரவு மணி எட்டு அடித்தது. நெ. 10 ரயில் வண்டி அப்பொழுதுதான் தரங்கம்பாடிக்குத் தள்ளாடித் தள்ளாடி நகர்ந்தது. ஸ்டேஷன்மாஸ்டர் சுந்தரம் பரபரவென்று சில்லறை வேலைகளை முடித்துக்கொண்டு, தீனியை நினைத்துச் செல்லுங் காளைபோல, ஸ்டேஷனை யடுத்துள்ள தன் வீட்டுக்குச் சென்ருன்.

"கல்யாணம் ஆனவுடனேயே தெரியுமே எனக்கு இதுதான் கதியென்று; தலைவிதியை என் மதியால் வெல்லமுடியுமோ!" என்றிப்படிப் புலம்பிக்கொண்டே ஸரஸ்வதி தன் கணவனை வரவேற்ருள். அவள் குரல் இனிமையாயிருந்தாலும், இடியோசை போன்ற கடுமையையும் உள்ளடக்கியதா யிருந்தது. சுறுசுறுப்பும் யௌவனமும் பொருந்திய சுந்தரம் இத்தகைய த்வனியிலுள்ள

அபாயத்தை அனுபவத்தி லறிந்தவன். ரயிலோசையி லடிபட்டவருக்கு ஓசையி னனுபவம் அதிகமில்லவா? 'இன்றிரவு ஏதோ கொலு நடக்கப்போகிறது; தூக்கம் தொலையப் போகிறது. இதை எப்படி நிவர்த்திப்பது!' என்று சுந்தரம் ஆலோசிக்கலானான்.

ஸரஸ்வதிக்கோ அன்று காலைமுதல் எல்லாம் தொல்லையாகவே யிருந்தது. வீடுகூட்டும் விளக்குமாறு முதல் தண்ணீரெடுக்கும் கிணறு வரை ஒன்றும் அவளிஷ்டப்படி அமையவில்லை. விளக்குமாறோ பெருக்குவதற்கின்றிப் புடைப்பதற் கேற்றதாகக் கோல்போல நீண்டிருந்தது. கிணறோ வீட்டோடு சேராமல் தனிக்காட்டு ராஜாவாகத் தாம்புக் கயிற்றுக்கும் கைக்கும் எட்டாததா யிருந்தது. ரெயில்வே கம்பெனியாரோ, வழக்கம்போல வழியெங்கும் காலைக் குத்தும் கப்பிக்கல்லைக் கொட்டி நிரப்பி யிருந்தார்கள். அது ஸரஸ்வதியின் மெல்லிய பாதங்களுக்கு முள் மேல் நடப்பதுபோ லாயிற்று. பூப்போன்ற தங்களுடைய பாதங்கள் வருந்த நேரின் மாதர்க்குண்டாகும் மனவருத்தம் சொல்ல முடியாது!

"என்ன ஸரஸு, இப்பொழுதே புகார் செய்ய ஆரம்பித்து விட்டையே! முதல் நாளாகையால் உனக்குக் கொஞ்சங் கஷ்டந்தான். பழகினல் எல்லாம் தானே சரியாய்ப் போய்விடும். சுற்றிலும் பார்! தோட்டமும் துரவும் நந்தவனமும் என்ன ஆனந்தம்! கிடைக்கக் கூடியதா இது நமக்கு?" என்று சுந்தரம் இதம் பேசிக் கொண்டு நெருங்கினான்.

"ஆமாம், கிடைக்கக்கூடியதில்லைத்தான், நம்முடைய அந்தஸ்துக்கு. எனக்கென்ன கஷ்டம் என்கிறீர்களோ?

உங்களைத் தேடி வாழ்க்கைப்பட்ட பிறகு எனக்கென்ன கஷ்டம்? ஒன்றுமில்லை. ஆனால், இந்தக் காட்டில் கரடி புலிதான் சஞ்சரிக்கலாம். மனுஷ்யர்கள் காலடி வைக்க யோக்கியமில்லை. கண்ணுக் கெட்டினவரையில் காடும், காதில் விழுவதெல்லாம் ஆந்தையின் அழுகையும், தவளையின் கத்தலும், பாம்பின் சீறலுந்தான். இனிமேல் ஒரு நிமிஷங்கூட என்னால் இங்கிருக்க முடியாது. நான் வேண்டுமென்று, உங்களுக் கிருந்தால், இப்போதே உங்கள் மேலதிகாரிகளுக்குத் தந்தி கொடுத்து வேறெங்கேயாவது மாற்றிக் கொள்ளுங்கள். பிறருக்காகத் தந்தி கொடுத்துக் கட்டைவிரல் தேய்ந்துவிட்டதென்று புலம்புவீர்களே! அந்த விரல் சொந்தக் காரியத்துக்குக் கொஞ்சம் பிரயோசனப்படட்டுமே. இல்லாவிட்டால் இப்பொழுதே நான் குண்டூர் போய்ச்சேருகிறேன். இதோ போட்மெயிலுக்குப் புறப்பட்டு விடுகிறேன். போதும் இந்த வனவாசம்!"

ஸரஸ்வதி இப்படித் தீர்மானமாயும் அழுத்தந்திருத்தமாகவும் பேசி முடித்துத் தன் பர்த்தாவின் சந்தியா வந்தனத்துக்காக வெள்ளிப் பஞ்சபாத்திரத்தை யெடுத்துக் 'கிட்டிப்புள்' அடிப்பது போல் மரியாதையாக விட்டெறிந்தாள். அந்தப் பஞ்சபாத்திரமும் சுந்தரத்தைப் போல் ஸரஸ்வதி யிடத்தில் பல தடவை இடிபட்டு நசுங்கித் தேறியிருந்தது. சுந்தரம் வழக்கம் போலக் குறி தவறாமல் பஞ்சபாத்திரத்தைப் பிடித்துக்கொண்டான். ரயிலில் அதிகம் பழகினவனாகையால் வேகமாய் வரும் பொருள்களில் அவனுக்குக் குறிப்பான பார்வை யுண்டு. மணிக்கு நாற்பது மைல் ஓடும் ரயிலாயிருந்தா லென்ன—கோணல் மாணலாய்ச் சுழன்று

விழும் கட்டை, முட்டை, கோல், விளக்குமாறு, பாத்திரம் முதலிய வீட்டுச் சாமானு யிருந்தாலென்ன?

சந்தியா வந்தனத்துக்காக அவ்வளவு சிரத்தையாய் அந்தப் பஞ்சபாத்திரத்தை விட்டெறிந்தாள் ஸரஸ்வதி. "ரயில்வேலையி லிருக்கும் பிராமணர்களுக்கு ஸந்தியாவந்தனந்தான் ஒரு பிராயச்சித்தம். சரியான காலத்தில் செய்ய ரயில்வே நேரம் இடங்கொடுக்காவிட்டாலும், அதற்காக அந்தக் கர்மாவை விட்டுவிடலாமா? இதற்குக் கூடச் சோம்பற் பட்டால் வேறு என்னதான் வேலை புருஷர்களுக்கு?" என்பது அவள் தீர்மானம்.

சுந்தரம் தான் தவறுது பிடித்த பஞ்சபாத்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டு கொஞ்சம் திகைத்து நின்முன். இந்தக் கோப வேளையில் ஜலம் வேண்டுமென்று வாயைத் திறந்து எப்படிக் கேட்பது? ஆகையால் பஞ்சபாத்திரத்தை முன்னும் பின்னுமாகக் கவிழ்த்து ஜாடையாலும் பார்வையாலும் ஜலம் வேண்டுமென்பதைக் காட்டினுன். ஸரஸ்வதியோ அலக்ஷ்யமாக அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு வெளியேயுள்ள கிணற்றைச் சுட்டிக் காட்டினுள். அந்தக் கிணறு, பாவம், இங்கு நடக்கும் இந்த நாடகத்தில் தானும் ஒரு பாத்திரமாகுமென்று கனவிலும் கருதவில்லை. பின்பு, சுந்தரத்தின் தீன ஸ்திதியைக் கண்டு ஸரஸ்வதியும் கொஞ்சம் மன மிளகி, தனக்குச் சமீபத்தில் பாதி நீர் நிரப்பியுள்ள ஒரு பாத்திரத்தைக் காட்டினுள். இவ்வளவாவது கிடைத்ததைக் கண்டு களித்துச் சுந்தரம் மெல்ல மெல்லப் பாலைக் குடிக்கப் போகும் பூனைபோலப் பாத்திரத்தி னருகே சென்முன். முதல்நாளே இவ்வளவு முற்ற விட்டால் பின்னே மிகவும் சங்கடமாகுமே யென்

ருலோசித்து, அதை முளையிலேயே களைய வெண்ணி அவன் தைரியமாய்ப் பேசத் தொடங்கினன்.

"ஸரஸு, இந்த இடமா கரடி புலி வசிக்குமிடம் என்கிருய்? இது உனக்கே நன்ருயிருக்கிறதா? யோசித்துப் பார்! இந்தக் கிளைப் பாதைக்கே கண் இந்த ஆக்கூர்தான். யாரும் 'எனக்கு எனக்கு' என்று ஆசைப்பட்டுப் போட்டி போடுகிற இடம் இது. கீழ் கடற்கரைக்கு அருகியான தரங்கம்பாடிக்குச் சமீபத்தி லுள்ளது. இங்கே ரயிலோ மிகக் குறைவு. ஆகையால் வேலையும் கஷ்டமில்லை. இராப் பகல் தூக்கங்கூட இல்லாமல் ஐந்து வருஷம் மாயவரம் ஜங்ஷனில் நான் வேலைசெய்தது போதாதா? இங்கே வேலையே இல்லையே. ஸரஸு, நாமிருவரும் மனமொத்துப் போனல் இதுதான் நமக்கு ஸ்வர்க்கம். இங்கே சம்பளம் நமக்குப் பென்ஷன் போலத்தான்."

"ஏன், போல் என்ன? பென்ஷன்தான். இருபது ரூபா! பென்ஷன் ரேட் தானே? எங்கள் அண்ணு இதைக் கேட்டால் என்ன நினைப்பன்? ஆனல் இரண்டு பேருக்கும் கொடி கட்டித்தான் பறக்கிறது! எங்கள் அண்ணுவுக்குச் சிங்கக் கொடி, உங்களுக்குக் கரியன் கொடி—அவ்வளவுதான் வித்தியாசம்."

இதைக் கேட்ட சுந்தரத்தின் முகம் வாடிவிட்டது. ஆயினும் அவன் சலிப்பைக் காட்டிக் கொள்ளாமல், "ஆமாம், உங்கள் அண்ணு இவ்வளவு அதிர்ஷ்டசாலி யென்று யார் எதிர்பார்த்தார்கள்? ரங்கன் ஐ. ஸி. எஸ். பாஸ் பண்ணிக் கலெக்டராய் வருவானென்று யாராவது சொப்பனத்திலேனும் நினைத்திருப்பார்களா? ஏதோ அவன் அதிர்ஷ்டம்! எல்லாரும் கலெக்டராய்விட முடி

யுமா? அப்படி முடியுமானால் ரயில்களெல்லாம் எப்படி ஓடுகிறது? ரங்கன் இப்பொழுது குன்னூரிலா இருக்கிறான்? சமாசாரமே தெரியவில்லையே! உனக்குக் கூட அவன் நெடுநாளாய்த் தபால் போடவில்லையே? அதிருக்கட்டும். ஏன் ஸரஸு! அவன் கல்யாண விஷயமும் ஒன்றும் தெரியவில்லையே? அவன் கல்யாணத்துக்கு நமக்கு லெட்டர் வந்தால், எஸ். ஐ. ஆரில் எங்கே நடந்தாலும் நாம் டிக்கெட் இல்லாமல் 'ப்ரீ'யாகப் போகலாம்!" என்று கொஞ்சம் சிரித்துக்கொண்டே பேசி, ஸரஸ்வதியின் இனிய முகத்தில் எழுந்து வரும் கோபத்தைத் தணிக்க முயன்றான்.

ஸரஸ்வதி அதற்கு நேர் பதில் ஒன்றும் சொல்லாமல், "ஏதுக்கு இவ்வளவு பெரிய இலையைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்கள், பிராம்மணார்த்தக்காரன் மாதிரி! இன்று ராத்திரி என்ன விருந்தா? உங்கள் மைத்துனன் கல்யாணமோ?" என்றாள்.

சுந்தரம் ஸரஸ்வதிக்கு வேலையைக் கொஞ்சம் இலகுவாக்கக் கருதியே மளமள வென்று ஒரு கை தண்ணீரை வாரி யிறைத்துவிட்டு (ஸந்தியாவந்தனம்) ஒரு பெரிய இலையாய்ப் பொறுக்கி யெடுத்துப் போட்டுக்கொண்டு தயாராய்ச் சாப்பாட்டுக்கு உட்கார்ந்தான். தண்ணீர் தெளித்து இலையைத் துடைத்தும், அடிக்கடி கனைத்தும் தான் தயாராயிருப்பதையும் காட்டிக்கொண்டான். இந்தச் சமயத்தில்தான் அவனுக்குப் பிராமணார்த்தக்காரப் பட்டம் கிடைத்தது. அவன் இனிமேல் நேரே பதில் சொல்ல வேண்டியது அவசியந்தான் என்று தீர்மானித்துத் தைரியமாய்ச் சொல்லலானான்:

"பகல் முழுவதும் உழைத்துவிட்டு இராத்திரி எட்டு மணிக்கு வந்து இலையில் உட்கார்ந்தால் பிராம்மணார்த்த மாய்ப் போய்விட்டதோ உனக்கு? நம் தோட்டத்திலோ வாழை காடாய் மண்டிக்கிடக்கிறது. இருக்கும்போது இந்த இலைக்குக்கூட ஏன் தரித்திரப்பட வேண்டும்?"

"சரி! அப்படியானால் தரித்திரப்படவேண்டாம்; இலையையே சாப்பிட்டுவிடலாமே? தோட்டத்தில் நெல் காடாய் மண்டி விளையவில்லையே?"

"அதுவும் வண்டி வண்டியாய் வரும் ஸரஸு. கொஞ்சம் பொறு; கோபித்துக்கொள்ளாதே! ஈசுவர கிருபையால் அதுவும் கூடிய சீக்கிரத்தில் வரும்."

"ஈசுவரன் என்ன? ரயில் அதிகாரிகளைக் கையில் போட்டுக்கொண்டால் எல்லாம் தானே வருகிறது!"

"ஈசுவர கிருபை யிருந்தால்தானே ரயிலதிகாரிகளுக்கும் மனத்தில் படும்? இவ்வூரில் கூடிய சீக்கிரம் கூட்ஸ் டிபார்ட்மெண்டும் வைக்கப்போகிறார்கள். அப்புறம் நமக்கென்ன குறைவு? கொள்ளை தானே! நினைத்தது கைக்குள்ளே. எங்களைப்போல் ரயிலில் அவஸ்தைப்படும் சிப்பந்திகளுக்கு இந்த மேல்வரும்படிதான் ஈசுவரன் இட்ட பிச்சை!"

## III

சுந்தரம் இவ்வாறு பேசிக்கொண்டே இலையைத் துடைத்துக்கொண்டிருக்கையில், பால் வடியும் அப் புதிய இலையில் தெளிக்கப்பட்ட நீர்த்துளிகள் முத்துப்போல மூலைக்கு மூலை உருண்டுகொண்டிருந்தன. ஸரஸ்வதியோ ஆவேசம் வந்தவள் போலக் கண் சிவக்க எதிரில் நின்றாள்.

சண்டையோ-சமாதானமோ-என்று இலையில் விழுந்த நீர்த் துளிகள் போலத் ததளித்துக்கொண் டிருந்த நிலைமை சமாதானமாகவே முடிந்தது.

ஸரஸ்வதி சற்று மனமிளகி, உட்சென்று சிப்பல் தட்டு நிறைய அன்னத்தை யெடுத்துவந்து கணவன் இலையில் அலட்சியமாய்ப் படைத்தாள். மாசுமறு வற்ற, முனை முறியாத அன்னக் குவியலின் அழகைக் கண்டதும், சுந்தரத்திற்குக் கோபமெல்லாம் எங்கேயோ பறந்துவிட்டது. ஸரஸ்வதியை இன்னும் சாந்தப்படுத்த வெண்ணித் தன் கதையைப் பின்னும் நன்கு அலங்கரித்துக் கண்ணும் மூக்கும் வைத்துச் சொல்லத் தொடங்கினன் :

"வந்து ஒருநாள்கூட முழுதாக ஆகவில்லை ; பெரிய பண்ணை முதலியார் அதற்குள் எனக்கு ஸ்நேகமாய் விட்டார். ஸ்டேஷன்மாஸ்டர் தயவு, ஸரஸூ, உன்னைத் தவிர எல்லாருக்கும் வேண்டித்தா னிருக்கிறது. குபேரனும் டிக்கெட்டு வாங்கித்தானே ரயிலேற வேண்டும்? பெரிய பண்ணை முதலியாருக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது தெரியுமா? முந்நூறு வேலி! வருஷம்ஒன்றுக்கு இருபதினயிரங் கலங் கண்டுமுதல். காரியஸ்தர்கள் ஒரு மந்தை. குமாஸ்தா என்ன, மோட்டார்கார் என்ன, எத்தனை வண்டிகள்! என்ன ஆட்படைகள்!! அடாடா, அவர் வீட்டு வைக்கோற்போரைப் பார்த்தாலே ஒரு நாள் முழுதும் பார்த்துக்கொண்டிருக்கலாம். மதயானைகள் போல எத்தனை போர்! நெற்சேர்களோ குன்றுகள் போல நிற்கின்றன. ஸ்டேஷனி லிருந்து பார்த்தாலே அவைகளெல்லாம் தெரியும். சொத்து என்றால் இதல்லவோ சொத்து! முந்நூறு வேலி முதல்தரமான நஞ்சை

யும், தோட்டந் துரவுகளும், அவற்றிற்கேற்றஆட்படை களும், முதலியார் மகாராஜாவுக்குச் சமானம் !”

சலித்துக் கோபங்கொண்ட ஸ்திரீகள் அக்கம் பக்கத் துச் சீமான்களின் பெருமையைக் கேட்டால் சலிப்பு மாறி ஆனந்தமடைவார்க ளென்று சுந்தரம் ஏதோ இங்கிலீஷ் நாவலில் வாசித்திருக்கிறு ஞகையால், அம்முறையை யனு சரித்து முதலியாரவர்கள் கதையைப் பூர்த்திசெய்து ஸரஸ்வதியின் கோபக் குழப்பத்தை மாற்றவெண்ணித் தன்னு லியன்றமட்டும் மூளையைச் செலுத்தி அக்கதையை வர்ணனைகளுடன் விஸ்தாரமாய்ப் பிரசங்கிக்கலாஞன் :

“ ஸரஸு, முதலியார் இல்லாவிட்டால் இந்தக் காட் டில் ரயிலேது ? இந்தப் பக்கம் ரயில் வந்ததே அவரால் தான். அதிலும் இந்த ஆக்கூர் ஸ்டேஷன் அவருக்காகவே ஏற்பட்டது. அவரில்லாவிட்டால் வேறு யாருக்கிங்கே அக்கறை? அவர் நினைத்தது சர்க்காரில் நடக்கிறது. அவ்வளவும் பணம் படுத்துகிற பாடு ! பணமென்ருல் பிண மும் வாய்திறக்கு மல்லவா? அவர் தாலூகாபோர்டு பிரஸி டெண்டு; ஜில்லா போர்டு மெம்பர்; சென்னைச் சட்டசபைக் குக்கூட நிற்கப்போகிருராம். பணக்காரர்கள் என்னதான் செய்யக்கூடாது ? நினைத்தால் பெண்ணை ஆணுக்கலாம், ஆணைப் பெண்ணுக்கலாம். அப்படிப்பட்ட பேர்வழி எனக்கு முழு ஸ்நேகமாய்விட்டார். இவ்வளவிருக்கிறதே ஸரஸு ! முதலியார்வாள் தமிழில் போடும் கையெழுத்தே தலையெழுத்துப் போலத்தா னிருக்கும். ஆனல் அது இங்கிலீஷில் போட்டாற்போ லிருக்கிற தென்று அவரே சொல்லி மெச்சிக்கொள்வார். பணக்காரர் வார்த்தைக்கு

'ஆமாம்' பாட்டுப் பாட ஆட்களுக்குச் சொல்லவும் வேண்டுமா?"

இந்தப் பிரசங்கத்தை ஸரஸ்வதி ஸ்வாரஸ்யமாய்க் காது கொடுத்துக் கேட்டதனால் சுந்தரம் மிகவும் சந்தோஷமடைந்து மேலும் கதையைத் தொடர்ந்து சொல்லுகிறான்:

"முதலியார் மாயவரம் போவதற்காக, தோகை விரித்தாடும் மயில்போல் தடபுடலாய் அலங்காரம் பண்ணிக்கொண்டு, புது 'ஆபர்ண்' ஸிடான் காரில் சாயங்காலம் 9-கெ. வண்டிக்கு வந்து சேர்ந்தார். வயதும் பாலியம். கலியாணமும் ஆகவில்லை. சரீரம் பால் தயிர் ஊட்டத்தினால் தளதளவென்று மெருகிட்டு விளங்கிற்று. அவர் பற்களோ கருமேகத்தில் மின்னல்போல மின்னின. பரம்பரைச் செல்வத்திற்கே ஒரு தொப்பையும் மேனியும் உண்டல்லவா?"

ஸரஸ்வதி இதைக்கேட்டு வர்ணனையைக் குறைத்துக் கதையை நேரே சொல்லும்படி ஜாடையால் தெரிவித்தாள்.

"மாயவரம் வண்டி தெய்வாதீனமாய் இன்று அரை மணி நேரம் தாமதித்து வந்தது. எஞ்சின் டிரைவர் ஒரு வேளை தரங்கம்பாடியில் தன் காதலியோடு பேசிக்கொண்டிருந்தானோ என்னவோ! எனக்கு அது நல்லதாயிற்று. அந்த அரை மணியும் முதலியார் என்னிடமே பேசிக்கொண்டிருந்தார். நான் என் நாற்காலியை அவருக்குக் கொடுத்துவிட்டு மரியாதையாய்ப் பக்கத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தேன். அந்த நாற்காலிக்கோ ஒரு காலில்லை. ஆனாலும் கரியன் ஒருநொடியில் அதைச் சரிப்படுத்திவிட்

டான். ஓர் ஆணியை வைத்து அடித்துவிட்டு ஒருதச்சுச் சம்பளத்தை மைனர் ரிபேர் கணக்கில் போட்டு எடுத்துக் கொண்டு கள்ளுக்கடைக்கும் போய்விட்டான். அந்தப் பயல் சாமர்த்தியமே சாமர்த்தியம்! பலே பேர்வழி கரியன்! புலிப்பால் வேண்டுமானாலும் இப்பொழுதே கொண்டுவந்து விடுவான். முதலியாருக்குக் கரியன் வலதுகை; மந்திரி ஸ்தானம். முதலியாரும் நல்லவர்தானென்று தோன்றுகிறது. என்னிடம் மிகவும் பிரியமாய்ப் பேசிக்கொண்டிருந்தார். மாயவரம் போய்த் திரும்பி வந்ததும் இரண்டு மூட்டை முதல்தரமான அரிக்காய்ச்சல் போட்ட ஈர்க்குச் சம்பா அரிசி அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார். ஸரஸா, நீ ஈர்க்குச் சம்பா அரிசி சாப்பிட்டதில்லையே? அடடா! கைக்குப் புஷ்பந்தான்—உன் மேனி மாதிரி. முதலியார் பண்ணைத் திட்டத்தில் ஆக்கூர் ஸ்டேஷன் மாஸ்டரும் சேர்ந்தவர்தானாம். அதுவும் நம் அதிர்ஷ்டந்தான். இனிமேல் என்ன குறைவு நமக்கு?"

சுந்தரம் இவ்வாறு வேண்டியமட்டும் தன் கதைக்குக் கண் மூக்கு எல்லாம் வைத்து ஆனந்தமாய்ச் சொல்லிக் கொண்டு வந்தான். ஆனால் இதில் பாதி உண்மைக் கலப்பும் உண்டு.

சுந்தரத்தின் இந்தத் தந்திரமும் பலிக்கும் போலத் தோன்றிற்று. ஸரஸ்வதியின் முகத்தில் கோபம் மாறித் தெளிவும் ஒரு உல்லாசமும் உண்டாயின. அவள் கொஞ்சம் புன்சிரிப்புக் கொண்டாள். சுந்தரத்துக்கு ஆனந்தம் அடக்க முடியவில்லை. கையைக் கூடக் கொட்டியிருப்பான். ஆனால் அவன் வலது கை இறைந்த அன்னத்தைப் பொறுக்கிச் சேர்த்து ஆராதிக்கும் வேலையி லிருந்ததனால்

அது முடியவில்லை. இரண்டு கையுங் கொட்டினால்தானே ஓசை! அவன் கதையை நிறுத்தவில்லை. பின்னும் அலங்காரங்களுடன் ரஸமாய்ப் பிரசங்கம் செய்யலானான் :

"ஸரஸா, இங்கே கூட்ஸ் ஸெக்ஷனும் அநேகமாய் ஸாங்க்ஷனானதுக்குச் சமானந்தான். இனிமேல் நீ கனவில் காண்பதுகூட வேண்டுமானால் உடனே கிடைக்கும். நாட்டுக் கீரை முதல் காபேஜ் (முட்டைகோஸ்) வரையிலும், அரிசி, பருப்பு, உளுந்து, பயறு, உப்பு, புளி, மிளகாய் எல்லாம் முதல்தரம்—பணமில்லாமலே! நம் கை மூலமாகத்தானே சகல மூட்டைகளும் ரயிலேறவேணும், இறங்கவேணும்! தேனெடுத்தவன் புறங்கையை நக்கமாட்டானா? கூடாதென்று எந்தச் சட்டத்தில் சொல்லியிருக்கிறது? ரயில்வே சட்டத்தில் நிச்சயம் சொல்லவில்லை. முதலியார் இருபதினாயிரங் கலம் நெல்லை ஏற்றுமதி செய்துவிட்டு, அதற்குப் பதிலாகக் கன்னியாகுமாரி முதல் காஷ்மீரம் வரையிலுண்டாகும் பலவகை உயர்ந்த பழ தினுசுகளையும் தின்பண்டங்களையும் வேறு பல ஆடம்பர சாமான்களையும் வரவழைக்கிறார். இதெல்லாம் நம் மூலமாகத்தானே அவர் கைக்குப் போகவேண்டும்?"

"இருபதினாயிரங் கலம் நெல்லா! பணம் வெள்ளக்காடாகுமே! அவ்வளவையும் என்ன செய்கிறது? அவர் பண்ணையாள்கள் வயலில் சேற்றிலும் வெய்யிலிலும் உழைத்துச் சேர்த்த நெல்குவியல் தானே. அதை அந்த மக்களுக்கே அல்லவோ திருப்பி யுதவவேணும்". என்று ஸரஸ்வதி ஆச்சரியத்துடன் சாந்தமாய்க் கேட்டாள். அவள் சாந்த வேளையில் அவளுடைய அருமையான குணங்களும் வசியசக்தியும் கொஞ்சம் புலப்பட்டன.

தன் கதையின் வெற்றியைக் கண்டு ஆனந்தங்கொண்ட சுந்தரம், கதையை இன்னும் மும்முரமாய் ஓட்டலானான்.

"இவர்களுக்குப் பரம்பரையாக அளவற்ற செல்வந்தான். ஆனால் இந்த மைனர் முதலியார் காலத்தில் அந்தச் செல்வம் சூரியன் முன் பனிபோலக் கரைந்து கொண்டு வருகிறது. முதலியாருக்குச் சரியான சகாக்கள். ஆக்கூர் ஸ்டேஷன் மாஸ்டர் கூட அதில் ஒரு மந்திரியாம். பணம் உண்டானால், நல்ல வேலைதான் அது. முதலியார் அநேகமாய்ப் பழைய முதலைத் தீர்த்து விட்டதாகக் கேள்வி. இப்பொழுது மாயவரம் போயிருப்பதுகூடக் கடன் வாங்கத்தானும். ஸரஸா, நானும் ராமேசுவரம் முதல் பெஷாவார் வரையில் எத்தனையோ இடம் அலைந்து திரிந்திருக்கிறேன். நம் தமிழ் நாட்டிலிருப்பது போல அற்ப புத்தியும் ஸ்வகார்ய நோக்கமுமே யுள்ள சீமான்களை எங்கும் பார்த்ததில்லை! நாம் சாப்பிடும் அரிசியும் புளியுந்தான் நம் வாழ்வைப் புளிக்கச் செய்துவிடுகின்றனவோ என்னவோ! உலகில் நாம் தலை நிமிர்ந்து நடமாடத் தகுதியில்லை."

ஸரஸ்வதி ஆநந்தமாய்க் கதையில் முழுகி, தன் பர்த்தாவிடத்திலும் கொஞ்சம் சமாசார மிருக்கிறதென்று அறிந்தாள். 'இது இடத்தின் மகிமையோ, அல்லது உப்புக் காற்றின் வேகமோ தெரியவில்லை'யென்று வியந்தாள்.

இதுதான் அவளை ஒரு வரங் கேட்கத் தகுந்த சமயமென்று கருதிச் சுந்தரம், 'ஸரஸா, இந்த ஊரைப்பார்த்தையோ? எவ்வளவு ஜில்லென் றிருக்கிறது! நீலகிரிதோற்றுப் போய்விடும் போலிருக்கிறது. இலையில் போட்ட அன்னம் இதற்குள் ஆறிப்போய்விட்டதே! சாம்பார்

பண்ணியிருக்கிறாயோ?' என்று பேச்சோடு பேச்சாக மெல்லக் கேட்டான்.

ஸரஸ்வதியோ, இலையில் சாதத்தைப் போட்டுவிட்டுக் கதையின் ஸ்வாரஸ்யத்தால் அவனெதிரிலேயே அம்பாள் விக்கிரகம்போல அசையாமல் உட்கார்ந்துவிட்டாள். இப்பொழுது சுந்தரம் சாம்பார் கேட்டவுடன் அவள் ஸ்வர்க்கத்திலிருந்து திடீரென்று விழுந்தவள்போல விழித்துக்கொண்டாள்.

"சாம்பாரா! என்ன விருந்து இன்றைக்கு? எனக்கு இப்படி அப்படித் திரும்பக் கூடச் சாவகாசமில்லையே! முகம் கூட அலம்ப ஒழியவில்லை. புது வீட்டுக்கு வந்து முதல் நாள். இந்தத் திண்டாட்டத்தில் கூடவா சாம்பார்? ஏன் இந்த ஸாம்பாரில் இவ்வளவு பைத்தியம்? இந்தப் புளியைத் தின்று தின்று தானே உங்கள் வாழ்வே புளித்துப் போய்விட்டது. இன்றைக்கு நான் சாதம் வடித்துப் போட்டால் போதாதா? புருஷர்களுக்கு அவர்கள் போனதே வழி! பெண்டாட்டி யென்றால் கூலிவேலை செய்யும் அடிமை; அல்லது விளையாட்டுப் பொம்மை! உங்களை நொந்து என்ன செய்வது? என் தலையி லெழுத்து?" என்று பொரிந்தாள் ஸரஸ்வதி. அவள் கண்கள் ஜ்வலித்தன. மேகம் சந்திரனை வந்து மறைப்பதுபோல முகத்தில் துக்கம் வந்து மூடிற்று. ஆனால், இந்தத் துக்கத்துக்குக் காரணம் சாம்பார் அன்று. குடும்ப வாழ்க்கையே அவள் நெஞ்சை அரம்போல் அராவியது. படமெடுத்தாடின சுந்தரம் பெட்டிப் பாம்பாய்விட்டான். கொஞ்ச நேரம் பேச்சே இல்லை. மரங்கூட அசையவில்லை. எங்கும் நிச்சப்தமாகக் கவலை தேங்கி நின்றது.

IV

ஸரஸ்வதி நிதானமான உயரமும், அதற்கேற்ற பருமனும், உருக்கிய பொன்போலத் தளதளவென்ற காந்தியுமுடைய சரீரமுள்ளவள். பூர்ண சந்திரன் போன்ற வட்ட முகமும், கூரிய மூக்கும், பரந்த நெற்றியும், நீண்டு வளைந்த புருவமும், விசால நேத்திரமும்,முகத்தில் கெடாத களையும் அவள் ஆற்றலைப் புலப்படுத்தின. உருவிலும் திருவிலும் அவள் தன் பெயருக் கேற்பவே விளங்கினுள். அவளைக் காண்போர் அவள் ஏதோ பெரிய ராஜகுடும்பத்திற் பிறந்தவளென்றே கருதுவர். ஆனுல் உண்மையில் அவள் பிறந்த இடமோ மிக எளியவிடம். நிகரற்ற அவளழகு இவ்வுலகில் ஈசுவர சிருஷ்டியின் காரணங் காணமுடியாத அற்புதங்களுள் ஒரு சிறந்த அற்புதமென்றே கூறலாம். கடையும் மோரில் திரண்டு மிதக்கும் வெண்ணெய் போல அவள் முகத்தில் தெய்வானுக்கிரகம் திரண்டு ததும்பியது.

அவள் தகப்பனர், பரம்பரைப் பெருஞ் செல்வம் படைத்த ஒரு மகர்ராஷ்டிரப் பிரபுவினிடம் காரியஸ்தராயிருந்து வந்தார். மாதம் பத்துக் கலம் நெல்லும் ஐந்து ரூபாயுந்தான் சம்பளம். ஆனுலும் யஜமான் வீட்டிற்கு அவரே ஸர்வாதிகாரியாய் விளங்கி வந்தார். ஸரஸ்வதியும் அவ்வீட்டுப் பெண்களுள் ஒருத்தியாகவே வளர்ந்து வந்தாள். ஆகவே ஒருவிதத்தில் அவள் ராஜசுகத்தி லிருந்தவள் தான்.

போதாத காலம்! அந்த மகாராஷ்டிரப் பிரபுவுக்கும் திடீரென்று கஷ்டம் நேரிட அவர் பரம தரித்திரராகிவிட்டார். ஏனெனில் அவர், வந்தவர்க்கு விருந்து செய்வதில் சலிப்பின்றி அளவுக்கு மீறிச் செய்து வந்ததனுலும், முக்

கியமான மூன்று வியாஜ்யங்களில் மூன்று கோர்ட்டிலும் அவருக்குத் தோல்வி யேற்பட்டதனுலும் அடியோடு கை சளைத்துக் கஷ்டத்திற்குள்ளாக நேர்ந்தது. அந்தச் சீமான் அப்படித் தாழ்வடைந்து மனமுடைந்து போனதைக் கண்டு ஸரஸ்வதியின் தந்தையும் மன மிடிந்து காலகதி யடைந்தார். அப்போது ஸரஸ்வதிக்கு வயது பத்து. அதன் பின் அவள் தாயாரும் அவளுக்குப் பதினன்காம் வயதில் கலியாணத்தை முடித்து வைத்து, மறுமாதமே இறந்துபோனுள். தானிருந்த தென்னைமரம் பெருங்காற்ருல் விழுந்துவிட, தனக்காதரவாகிய பொந்தை யிழந்து பரிதவிக்கும் பசுங் கிளிபோல் ஸரஸ்வதியும் நிலையிழந்து தத்தளித்து நின்ருள்.

கலியாணமாகியும் அவள் கஷ்டம் நீங்கினபாடில்லை. அவள் கணவன் சுந்தரம் விவாகமான மூன்ரும் மாதமே தேசயாத்திரை கிளம்பி, போனவிடந் தெரியாது போய் விட்டான். ஸரஸ்வதி சிதம்பரத்திலே தன் சிறிய தாயார் வீட்டில் வளர்ந்து வந்தாள்.

சுந்தரம் ஹைஸ்கூலில் வாசிக்கும்பொழுதே மிகவும் சமர்த்தன். பூகோளசாஸ்திரத்தில் அவனுக்கு விருப்ப மதிகம். அதுதான் ஒருவேளை அவன் மனத்தைக் கவர்ந்து ஊரெங்கும் திரியும் பித்தை யுண்டாக்கிவிட்டதோ என் னவோ! அவன் கையில் ஒரு காசுகூட இல்லாமல் ஒரு பால சந்நியாசிபோல இந்தியா முழுதும் சுற்றினுன். அப் பொழுதெல்லாம் அவன், உடம்பெங்கும் விபூதியைப் பூசிக் கையில் ருத்திராக்ஷ மாலையை வைத்துக்கொண்டு, டிக் கெட் பரிசோதகர் சமீபத்தில் வரும்பொழுது வாய்திற வாமல் ஏதோ ஜபம் செய்வதுபோல் பாவனை செய்வான்.

அவர்கள், தங்கள் காலத்தையும் வரும்படியையும் வீணுக்கிக்கொண்டு இந்தகையவர்களிடம் அதிகமாக வழக்காடுவதில்லை. இவ்விஷயத்தில் ரயில்வேக்காரர்களுக்கு அனைவரும் வந்தனமளிக்க வேண்டியதுதான்.

சுந்தரத்திற்கு இந்தச் சந்நியாச யோகம் திடீரென்று ஒருநாள் முடிவடைந்தது. புதிதாய் வேலைக்கு வந்த பால்யமும் சுறுசுறுப்புமுள்ள அஸிஸ்டெண்ட் டிராபிக் ஸூபரின்டெண்டென்டு ஒருவர் இந்தக் குட்டிச் சந்நியாசியை மதுரை ஸ்டேஷனில் பிடித்து, அவன் வரலாற்றைக் கேட்டு மனமிளகி, அவன் குடித்தன முறைக்குத் திரும்பித் தன் மனைவியோடு சேர்ந்து வாழ்வதாயின் அவனுக்கு மாயவரம் ஜங்ஷனில் டிக்கெட் கலெக்டர், ஸிக்னலர், வேலை போட்டுக் கொடுப்பதாய்ச் சொல்ல, சுந்தரமும் அதற்கிணங்கவே அவர் தாம் கூறியபடியே அவனுக்கு மாயவரம் ஜங்ஷனில் வேலை போட்டுக் கொடுத்தார்.

மாயவரத்தில் சுந்தரம் மிகவும் ஜாக்கிரதையாக வேலை பார்த்து வந்தான். தான் டிராபிக் ஸூபரின்டெண்டென்டுக்கு அளித்த வாக்கின்படி ஸரஸ்வதியைத் தேடி அழைத்துக்கொண்டு வந்து குடித்தனமும் வைக்கலானான். ஆனால் முதல் நாளே அவளுக்கும் தனக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமென் றுணர்ந்தான். அதாவது, தான் தகுதியற்றவ னென்ப தில்லை; அவள் இல்வாழ்க்கைக்கு மேம்பட்ட நிலையிலுள்ளவளென்று அவனுக்குத் தோன்றிற்று. இருகரையும் புரண் டோடும் ஆற்றின் கரையையடுத்து அதன் ஊறலால் அதனையொட்டியே கசிந்தோடும் சிறு நீரோடைபோல தான் அவளை யனுசரித்தேயிருக்கவேண்டியவனாகவும் தோன்றிற்று. பேராற்றின்

பெரு வெள்ளத்தோடு அச்சிற்றோடை எவ்வாறு கலக்க முடியும்? அவ்வாற்றின் மலைபோலுயர்ந்த கரையை எட்டிப்பார்க்கக்கூட அவ்வோடையால் இயலாதன்றோ?

மாயவரம் வந்தபின் சுந்தரத்திற்கு ஒரு விஷயம் சௌகரியம். என்னவெனில், அவன் பள்ளியில் பயின்ற படிப்பினிடத்து இப்பொழுது மீண்டும் அவாக்கொண்டான்; ஸரஸ்வதிக்கும் இந்த நோக்க மிருக்கக் கண்டு களிகூர்ந்தான். ஹிக்கின் பாதம்ஸ் கம்பெனியாரின் ரெயில்வே புஸ்தக விற்பனைச்சாலை இவ்விஷயத்தில் இவர்களுக்கு மிகவும் அனுகூலமா யிருந்தது. அதன் குமாஸ்தா இவர்களுக்கு உற்ற நண்பனுனன். ஆகவே புத்தகசாலையில் விற்பனைக்காக வந்துள்ள புத்தகங்களைத் தாராளமா யெடுத்து இருவரும் வாசித்துவந்தார்கள். "விலைக்கு வாங்குகிறவர்களோ புத்தகத்தைச் சரியாக வாசிப்பதில்லை. வாசிக்க ஊக்கமுள்ளவர்க்கோ விலை கொடுத்து வாங்கப் பணமிருப்பதில்லை. ஆதலால் ஊக்கமுள்ளவர்கள் புத்தகம் விற்பனையாகும் வரை அதனை யேன் இரவலாகப் பெற்று வாசித்தல் கூடாது?" என்பது அந்நண்பர்களின் கொள்கை.

சுந்தரம், ஐந்து வருஷ காலம் ஜங்ஷனில் வேலை பார்த்துச் சலித்துப்போனுன். தரங்கம்பாடிக் கிளைப் பாதை போடப்பட்டவுடன், அப்பாதைக்குக் கண் போன்ற ஆக்கூரிலேயே நோக்கமுள்ளவனு யிருந்தான். நகர வாழ்க்கையிற் பழகிய ஸரஸ்வதிக்கு ஆக்கூரின் தனிமை வாழ்க்கை பிடிக்காதென்று ஒருவாறு தெரிந்திருந்தும், அவ்வூரின் சிறப்பைக் கருதி அதிலேயே கண்ணு யிருந்து அங்கேயே வேலையையும் பெற்றுக்கொண்டான்.

ஆனால் அங்கே போன் முதல்நாளே இவ்வளவு கூத்துக்குத் தான் ஆளாகவேண்டி வருமென்று அவன் சொப்பனத்திலும் நினைக்கவில்லை.

ஒரு விஷயத்தில் சுந்தரம் மிகவும் சாமர்த்தியசாலி. அதாவது, நேர்வழியின்றிச் சுத்திச் சுழற்றிக் குறிப்பாய் விஷயத்தைத் தெரிவிக்கும் வழியிலாகும். கத்திவெட்டுப் போலக் காரியத்தை நேரே முடிக்காமல், ரம்ப அறுப்புப் போல நயமாய்ச் செய்து முடிப்பது அவன் வழக்கம். இது சிலருக்கு ஏற்றதுதான். ஸரஸ்வதியிடமும் இந்த நய வேலையை இரண்டு மடங்கு காட்டுவான்; ஆனால் அவளுக்கு அது பிடிப்பதில்லை. ஸ்திரீகளுக்கே பொதுவாக இந்தச் சுற்றல் வியாபாரம் பிடிக்காதென்று அவன் நாவல்களில் வாசித் தறிந்திருந்தும், அது அவனுடன் பிறந்து அவன் இரத்தத்திலேயே ஊறியிருப்பதால் அனுபவத்தில் அதை ஏற்றபடி மாற்றிக்கொள்ள அவனால் இயலவில்லை. அதன் பலன்தான் அன்று ஒரு மணிநேரம் காத்திருந்தும் சாம்பார் கிடைக்கவில்லை. கடைசியாக வாயைவிட்டுக் கேட்டும் அவன் பெற்ற மரியாதை நாமறிந்ததே!

இங்கிலீஷில் சுந்தரம் பிரமித்து மௌனமாயிருக்க, நிச்சப்தமாய்ச் சிறிதுநேரஞ் சென்றது. அச்சமயம், தரங்கம்பாடியிலிருந்து வரும் 13-ம் நம்பர் வண்டி கைகாட்டிக்குச்சமீபத்தில் வந்து அலறிக்கொண்டு நின்றது. எஞ்சினிலுள்ள 'ஸர்ச் லைட்'டின் ஒளி சந்திரகாந்திபோல் வீசிற்று. அங்குக் காத்திருப்பதில் தனக்குள்ள கோபத்தைக் காட்டுவதுபோல் எஞ்சின் அலறிற்று. எஞ்சினின் முதல் விஸிலைக் கேட்டவுடன் சுந்தரம் திடுக்கிட்டு, இலையில் ஒன்றுசேர்த்துக் குவித்துச் சாம்பாருக்காகச் சிற்றுணை

கட்டி வைத்திருந்த அன்னத்தைக் கோபத்துடன் அங்குமிங்கும் வாரி யிறைத்துவிட்டு, "இந்தப் பாழும்பாதையில் கேள்வி முறை கிடையாது; இஷ்டப்பட்டபோது போகலாம் வரலாம் போலிருக்கிறது. இருக்கட்டும்! இனிமேல் அப்படி நடக்கிறதைப் பார்ப்போம். எங்கே அந்தக் கழுதை—கரியன் பயல்!" என்று உறுமிக்கொண்டே ஸ்டேஷனுக்கோடினான்.

## அத்தியாயம் 7

### கரியன் சதாவதானம்

I

இங்கே சுந்தரம் இவ்வாறிருக்க, கரியன் செய்தியைக் கவனிப்போம். ஆக்கூரில் கரியனைத் தெரியாதவர்க ளில்லை யென்றே சொல்லலாம். அவன் தயவும் அநேகருக்கு வேண்டியிருக்கும். ஏனெனில், அவன், ஸ்டேஷனில் வேறு யார் மாறினாலும் தான் மாறாமல் ரெயில்வே லயன் போல, ஸ்டேஷன்தோன்றிய நாள்முதல் அங்கே ஸ்திரமாயிருப்பவன். அவன் பேர் 'போர்ட்டர்' என்று இருப்பினும், பல வேலைகள் அவன் கைக்குள்ளே அடக்கம். அவ்வேலைகளை அவன் திறமையாகவும் செய்து வந்தான். ஆகவே, நாகரிக வாழ்க்கைக்குத் தபாற்காரன் தயவுபோல இவன் தயவும் வேண்டியதுதானே?

கரியன் வெகு சவுடால் பேர்வழி. வாய் கிழிய வெற்றிலை புகையிலையை அடக்கிக்கொண்டு, பல சிறுவர்

சிறுமிகளுடன் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே அலட்சியமாய்ப் பாயின்டில் கைபோட்டு அயராமல் ரயிலையும் கவனித்துச் சமாளித்துவரும் சதாவதான சக்தியுடையவன். ஆக்கூரில் அவன் கொட்டத்திற்கு அளவில்லை. அவனுக்கு அந்த அழகான ரயில்வே காம்பவுண்டுக்குள்ளேயே கம்பெனியாரால் கொடுக்கப்பட்ட இடவசதி யுண்டு; ஆனால் அது குட்டையான ஒரே ஜன்னலோடு கூடிய மிகச் சிறிய தாழ்ந்த வீடு. முன்னமே கரியன் தகுதிக்குப் போர்ட்டர் வேலையே தாழ்ந்தது. அதிலும் சிறைபோன்ற இந்தச் சிறிய வீட்டில், கௌரவமான குடும்பத்தில் பிறந்த தன் மனைவியோடு வசிப்பது இன்னும் கேவலம். ரயில் பாதையின் ஓரத்தில் பலர் கண்ணில் படும்படியான இடத்தில் தன் மனைவி யிருப்பதும் உல்லாசமாக ஓடியாடித் திரியும் பறவையைக் கூட்டிலடைப்பதுபோல் தான் அங்கே அடைவதும் அவனுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. ஆதலால் அவன், ரெயில்வே விதிகளுக்கு விரோதமென்பதையும் பொருட்படுத்தாமல் ஆக்கூர் கிராமத்திற்குள் ஒரு மாந்தோப்பின் நடுவி லிருந்ததொரு பழைய வீட்டில் வாடகையின்றிக் குடியிருந்து வந்தான். அவ்வீடு மைனர் சொக்கலிங்க முதலியாருடைய முன்னோரால் தரும காரியங்களுக்கென்று வைக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது நடந்துவரும் தருமம் கரியன் குடியிருப்புத்தான்.

கரியன் மனைவி நல்ல கௌரவமான வம்சத்தில் பிறந்தவள். அவள் முன்னோர்கள் அரச மரியாதை பெற்ற பெரிய பிரபுக்கள். ஆனால் இப்பொழுது மிகவும் கைசளைத்துப் போய்விட்டார்கள். ஆயினும், இருப்பதைக் கொண்டு கஞ்சியோ கூழோ உண்டு, கௌரவமாய்ப் பிறருக்குச் சிறி

தும் துன்பமின்றிக் காலந்தள்ளி வருகிறார்கள். கரியன் தங்களுக்கு மாப்பிள்ளையாக வாய்த்ததுதான் அவர்களுக்குப் பெருந் துக்கம். பெரிய குடும்பத்தில் பிறந்தவளாகையால், கரியன் தன் மனைவியை வெகு ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வந்தான்.

மனைவியை இவ்வளவு ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வரினும், கரியன் தன்னளவில் அப் பாதுகாப் பில்லாதவனே. அவன் காமவேட்டையில் கைதேர்ந்தவன். ஆயினும், அவன் மனைவி கற்புறுதியுள்ள உத்தமியாதலின் இத்தகைய நிலையிலும் தன் கணவன் முகங்கோணாமல் நடந்து தன் நான்கு குழந்தைகளையும் அன்புடன் பரிபாலித்து வந்தாள். கரியன் இக்குழந்தைகள் ஏதோ தான் தட்டுக்கெட்ட காலத்தில் பிறந்தவைகளாக எண்ணி அவற்றினிடம் அலட்சியத்துட னிருந்துவந்தான்.

ஒருநாள் சிறந்த அழகு வாய்ந்த 'காமாட்சி' என்னும் பதினைந்து வயதுள்ள கன்னி கழியாத மங்கையொருத்தி மாலைக்காலத்தில் ஆக்கூர் ரெயிலடியில் வந்திறங்கினாள். அவள் அப்பொழுதுதான் செடியிலிருந் தெடுக்கப்பட்டு நாரினால் கட்டப்படாத புதிய ரோஜாப்பூவைப் போல இயற்கை யழகு மணத்தால் மாறுதவளாய் விளங்கினாள். கரியன் அவளைக் கண்டான். அதுமுதல் அவனுக்கு ஊணுறக்கம் சரியாய்க் கிடையாது. மன அமைதியு மில்லை. அதே நினைவு. அவன் அடிக்கடி "என் பேர் கரியனானால் நான் ஒரு நாளாவது அந்தக் காமாட்சிக் கிளியைக் கூட்டிலடைத்து என் இஷ்டப்படி அதனோடு விளையாடாம லிருப்பேனா? எது எக்கேடு கெட்டாலும், ரெயிலே மோதியுடைந்தாலும் சரி; இதை நிறைவேற்றாமல் விடேன்.

ஒன்றுக்கும் அவள் இசையாவிட்டால் அவளை இரண்டாம் மனைவியாகவாவது ஆக்கிக்கொள்வேன். இதற்குச் சந்தேக மில்லை. கரியன் பெண்டாட்டி யாகக் கொடுத்துவைக்க வேண்டாமா? சும்மா கிடக்கிறதோ'' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு தவிப்பான். அலைகடலில் அகப்பட்ட மரக்கலம்போல, கரியன், கள்ளுங் காமமு மாகிய இரு பெருங் கடலில் அகப்பட்டு நிலைகுலைந்து தத்தளித்துக் கொண்டு, ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காக அலட்சியமாய் ரயில் வேலையைப் பார்த்துவந்தான். நிற்க,

கந்தனால் ஞாபகமூட்டப்பட்டுக் கரியன் கள்ளுக் கடையிலிருந்து வீடு நோக்கி விரைந்து வந்துகொண் டிருக்கையில், அந்தச் சாலையில் வந்து சேருகிற மற்றொரு தெருவழியே தன் மனத்திற் குடிகொண்டுள்ள காமாட்சி வருவதைக் கண்டு அவன் அடங்காத ஆனந்தங் கொண் டான். அவள் கையில் நான்கு சீப்பு மொந்தன் வாழைக் காய், ஒரிலைக்கட்டு, அழகிய கம்பளி சுற்றிய ஒரு சிறு படுக்கை ஆகிய இவற்றுடன் ரெயில்வே ஸ்டேஷன் பக்க மாகத் திரும்பினாள். கரியன்பாடு கேட்க வேண்டுமா?

'ஏதடா, கிளி ஊர்விட்டூர் பறந்து போய்விடும்போ லிருக்கிறதே? என்ன செய்வது!' என்று குடிவெறியிலும் காதல் பொங்கக் காமாட்சியைக் கண்குளிர வெறித்துப் பார்த்தான். இளநிலாவின் சிற்றொளியில், அவளழகு ஒருவகையாகச் சிறந்து தோன்றிற்று. சந்திரனைக் கண்ட கடல்போலக் கரியன் காமக் களிப்புடன் அவளருகிற் சென்று தைரியமாய் அவளுடன் சம்பாஷிக்கலானான்:—

"கண்மணி காமாட்சி! இந்த இருட்டில் நீ தனியாய் எங்கே அம்மா போகிறாய்?"

"ஸ்டேஷனுக்குக் கரியா; மாயவரம் போகிறேன். வீடு வாச லற்ற நான் ஊரூராய்த்தானே இருந்து காலந் தள்ளவேணும். இங்கே மாமன் வீட்டுக்கு வந்து பத்து நாளாயிற்று. மாமி சலித்துப்போய்விட்டாள். இப் பொழுது மாயவரம் போகிறேன்."

"உன்னைப் போன்றவர்களைக் கண்டு சலிப்படைகிற வர்களும் உண்டோ? என்ன கேவலம்! காமாட்சி, ரயி லுக்கு இன்னும் அதிக நேரமிருக்கிறது. நீ என் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு ரயிலுக்குப் போகலாம் வா. நானே டிக்கெட்டு வாங்கிக் கொடுத்து உன்னைப் பத்திரமாய் ரயி லேற்றி விடுகிறேன்."

தம் கற்பை உயிரினும் மேலாகப் பாதுகாத்துக்கொள் வது பெண்பாலருக்கே உரியதாதலாலும், காமாட்சி இயற்கையிலேயே சிறிது மதிநுட்ப முடையவளாதலாலும் அவள் கரியனுடைய மனநிலையை அறிந்து, பின் வரக் கூடிய கேட்டையும் ஊகித்து, "என்ன கரியா என் விஷ யத்தில் உனக்கிவ்வளவு கவலை? அதிகப் பிரசங்கித்தனமா யிருக்கிறதே? உன் வேலையை ஒழுங்காய்க் கவனி. ரயி லுக்கு நேரமாகிவிட்டது. நீ வீடுபோய்ச் சாப்பிட்டுவிட்டு வா. எனக்கு வழி தெரியும். பாலுக்குப் பூனை துணையா வதுபோல நீயென்ன எனக்குத் துணை? நீ இப்படிப்பட்ட வனென்று எனக்குத் தெரியாதே!" என்று தூக்கி யெறிந்து பேசினாள்.

காமாட்சி இவ்வாறு பேசியதைக் கேட்டுக் கரியன் சற்றுப் பயந்தான். எனினும் 'இப்போது விட்டுவிட்டால் இதுபோல மறுசமயம் வாய்ப்பதரிது. இவள் போன்ற குறிப்பான சில பெண்கள் வெளிக்கு வாயடி அடித்தாலும்

காரியத்தில் குறியுடையவர்களா யிருப்பார்கள். இவ்விஷயங்களில் துணிவுண்டானால் ஜயமுண்டு; பயந்தால் ஏமாற்றந்தான். இப்பொழுது இவளுடைய ஒரு முத்தமாவது கிடைக்காவிட்டால் என்ன பிரயோசனம்?'' என்று மனத்தைத் திடப்படுத்திக்கொண்டான். அச்சமயத்தில் சற்றுத் தூரத்தில் மினுமினுவென்ற லாந்தர் வெளிச்சங் கண்ணிற் படவும், ஆடி அசைந்து வரும் வண்டிகளின் ஓசை காதில் விழவும் அவன் சிறிது அச்சங்கொண்டு, பேசாமல் வீடு போய்ச் சேர்வதே நலமென்றெண்ணிப் புறப்பட்டான். இங்கே நினைத்தது நிறைவேறாததனா லுண்டான கோபம் அவனுக்கு மனைவியிடம் இரட்டிப்பாயிற்று.

## II

ஆறுமாத காலமாய்க் கரியன் தன் சம்பளத்தையே சரியாய் வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதில்லை. எனவே மேல்வரும்படியைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? எல்லாம் கள்ளுக்கடைக்கே போய்ச் சேர்ந்தது. அவன் மனைவியோ கௌரவத்தை விடாமல், ஏதோ தன் கையிலிருந்த மஞ்சட்காணிப் பொருளைக்கொண்டு குடும்பத்தை நடத்திக் குழந்தைகளைப் பாதுகாத்து வந்தாள். இப்படி எவ்வளவு காலங் கடத்தமுடியும்? ஆகவே அன்று கையில் ஒன்றும் ஒருசிறிது மில்லாமல் தவித்துப் பக்கத்து வீட்டில் ஒருபடி அரிசியேனும் கடனாக வாங்கலாமென்று நினைத்தாள்; ஆனால் கேட்க மனந் துணியவில்லை. அதனால் புருஷன் வருகையை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருக்கையில் காலடிச் சத்தங் கேட்க, கதவைத் திறந்தாள். கந்தன் உள்ளே நுழைந்தான்.

"அண்ணி! பயப்படாதே. நான்தான் கந்தன். சாயந்திரம் அண்ணனைக் கண்டேன். இன்றுமுதல் இருவரும் ஒத்துப் போய்விட்டோம். உங்களை விட்டால் வேறு எனக்கு உற்றார் உறவினர் யாரிருக்கிறார்கள். உங்கள் குழந்தைகள்தான் எனக்குங் குழந்தைகள். அண்ணன் இந்நேரம் வந்திருப்பாரென்று நினைத்தேன். இன்னும் வரவில்லையோ? ஏன் அண்ணி! குழந்தைகள் எல்லாம் சௌக்கியந்தானே? என்ன வீட்டில் ஒன்றும் வெளிச்சத்தைக் காணோம். இன்னும் சமையல்கூடச் செய்யவில்லை போலிருக்கிறதே?" என்று கலகலப்பாய்ப் பேசினான் கந்தன். இதற்குள், இரண்டு வயது முதல் பத்து வயது வரை வரிசையாயுள்ள குழந்தைகள் நான்கும் ஓடிவந்து கந்தன் மேல் விழுந்து அவனைக் கட்டிக்கொண்டன. கடைக்குட்டி 'அப்பிச்சி அப்பிச்சி' என்றழுதது.

கந்தன், வீடிருக்கும் நிலையை யுற்றுநோக்கி, கரியன் சம்பாத்தியம் வீடுவந்து சேர்வதில்லை யென்பதைத் தெரிந்துகொண்டான். உடனே மனங் கசிந்து குழந்தைகளுக்குக் கொடுக்கும் பாவனையாக ஒரு ரூபாயை யெடுத்துக் கீழேபோட்டு "அண்ணி, குழந்தைகளுக்கு ஏதாவது வாங்கிக் கொடு. அவர்களுக் கில்லாத பணம் எதற்கு?" என்றான்.

இவன் இவ்வாறு சொல்லி வாய்மூடி, ரூபாயின் 'கிணீர்' சத்தமும் அடங்குவதற்குள், கரியன் ஆடிப் பாடிக்கொண்டு உள்ளே வந்து நுழைந்தான். நுழைந்ததும் கந்தனை உறுத்து ஒரு பார்வை பார்த்தான். "அடே கந்தா, இவளைக் கையெப்புடிச் சிழுக்கவாடா சாயங்காலம் எங்கிட்டே வலுவிலே வந்து ஒறவு கொண்

போடினே? தெரிஞ்சுது ஒந் தந்தரம். இந்த ரூபாயென்ன அதுக்குக் கூலியோ? லஞ்சமோ? சொல்லுடா'' என்று கர்ச்சித்தான். அவன் கண் கோபத்தால் ஜ்வலித்தது. கை படபடத்தது.

கந்தன் தைரியத்துடன் சாந்தமாய், "அண்ணு படபடக்காதே. குடியின் கோளாறு இதுதான். நீ நேரே இங்கே வந்திருப்பாயென்று நினைத்து வந்தேன்; நீ வரவில்லை. அண்ணியிடம் குழந்தைகளின் க்ஷேமத்தை விசாரித்துக்கொண்டிருந்தேன். அவள் உத்தமி; அவளை நீ பதட்டமாய்ப் பேசினல் உன் நாக்குப் புழுத்துப் போகும்'' என்ருன்.

கரியன் உறுமிக்கொண்டு கந்தனை விழித்துப் பார்த்தான். கந்தன் அதற்கஞ்சாமல் ஓங்கிப் பேசலானுன்:—"அண்ணு கள்ளுக்கடைக்குத் தவருமல் தினம் போகிருயே? குடும்பத்தின் கதியைப் பார்த்தாயா? குழந்தைகளைக் கவனித்தாயா? பரதேசிகள் போலக் கந்தலைக் கட்டிக்கொண்டு நிற்கின்றனவே? குழந்தைகள் கண்ணீர்விட்டுக் கதறுவதைக் காண உனக்குக் கண்ணில்லையா? நான் கவனித்த மட்டில் இந்தப் பதினைந்து நாட்களாக ஒரு பைசாகூட நீ வீட்டுக்குக் கொண்டுவந்ததாகத் தெரியவில்லையே!''

கந்தன் சொன்ன நல்ல வார்த்தைகள் கள்வெறியும் காமவெறியும் மேலிட்டுள்ள கரியன் காதில் ஏறுமா? அவன் கந்தனைக் கையைப் பிடித் திழுத்து வெளியே தள்ளினுன்.

குடிகாரனுக்கு, அவன் வீடு வந்ததும் ஒரு சட்டி சோறு கொட்டாவிட்டால் அன்று வீடு இரண்டுதான்.

மனைவி பாடு ஆபத்துத்தான். கரியன் அப்பங்கரையைப் பார்த்தான்; ஒன்றையுங் காணேம். கோபம் அளவு கடந்து மண்டியது. சுற்றுமுற்றும் பார்த்தான். குதிரிடுக்கில் ஒரு கோடாலிக்காம்பு கிடந்தது கண்ணிற் பட்டது. அதை யெடுத்துத் தன் மனைவிமீது வீசி யெறிந்தான். அவள் மண்டையுடைந்து கதறிக்கொண்டு மூர்ச்சையாய் விழுந்தாள். வெளியே பதுங்கி நின்ற கந்தன் இதைக் கேட்டுக் 'கொலை கொலை' என்று கத்தினன். ஊர்முழுதுங் கூடிவிட்டது.

இச்சமயந்தான் நெ. 13 வண்டி கைகாட்டிக்குச் சமீபத்தில் நின்று அலறியது. கரியனுக்குக் குடி வெறியிலும் ரெயில்வே சமாசாரம் மட்டும் மறப்பதில்லையாதலால், ரயில் விசிலைக் கேட்டவுடன் திடுக்கிட்டு, 'ஒருவேளை பாயின்ட் சரியாயிருக்கிறதோ இல்லையோ! இரண்டாவது லயனில் ஒரு பாலஸ்ட் வண்டி நிற்கிறதே' என்று யோசித்துக்கொண்டே மயக்கத்துடன் ரயிலடிக்கு ஓடினன்.

## அத்தியாயம்—8

### ரயிலோட்டத்தில் உரையாட்டம்

I

இங்கே கரியன் சுந்தரம் இவர்கள் நிலை இவ்வாறிருக்கையில் அங்கே போட்மெயிலில் வரும் ரங்கன் ராஜேச்வரி யிவர்கள் நிலையைக் கவனிப்போம். அவர்களும் சும்மா இருக்கவில்லை; இருக்கவும் முடியாதல்லவா? ராஜேச்வரிக்குக் கொஞ்சம் இடங் கிடைக்குமோவென்று ரங்கன்

தன்னு லானமட்டும் நெடுகப் பார்த்துப் பார்த்துத் தவித்தான். அவன் நிலை பரிதாபகரமாகவே யிருந்தது. இருப்பினும் அவரவர்கள் அரும் பாடுபட்டு அடைந்த இடத்தை இலகுவில் விட்டுவிடுவார்களா? ஒரு கோட்டையைப் பிடித்த சேனைகள்போல அவரவர் இடத்தை வெகு ஜாக்கிரதையாகப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். ரங்கன் சாமர்த்தியம் ஒன்றும் பலிக்கவில்லை.

மூன்றும் வகுப்பு வண்டிகள் உயிர்ப்பொருட்காட்சிச் சாலை உயிரில்லாப்பொருட் காட்சிச்சாலை ஆகிய இரண்டும் ஓரிடத்திற் சேர்ந்துள்ள ஒரு காட்சிச்சாலையாக விளங்கின. ஒருபுறம் குப்பல் குப்பலாய் மூட்டை முடிச்சுக்கள், பழைய கட்டுப்பெட்டி முதல் புது நாகரிகத்திற் கேற்ற முதலைத்தோலாற் செய்யப்பட்ட அழகிய சிறு கைப்பெட்டிகள் வரை பலவகைப் பெட்டிகள், வரிசை வாரியா யிருந்தன. மூட்டைகளின் வகைகள் இப்படியென்றால், பிரயாணிகளின் வகைக்குக் கேட்கவேண்டுமா? ஐம்பது வருஷமாய் எண்ணெயே கண்டிராத தாடியுடைய பைராகிகள் முதல் இக்கால மேல்நாட்டு நாகரிகத்தின் உச்சஸ்தானத்தி லுள்ள ரங்கன் ராஜேச்வரி வரை பிரயாணிகளும் பலதிறப் பட்டவர்களே. அவர்களில், ரயில் ஏறினால் பச்சை ஜலங்கூடப் பல்லில் படாத பரம வைதிகப் பிராம்மணர் சிலர். தண்ணீர் நிரம்பப் போட்டுத் தடுமாறிக்கொண்டு சுருட்டுப் பிடித்துப் புகையைப் பிராம்மணன் முகத்தில் ஊதிவிடுகிற நாட்டுத் துரைகளும் நாடோடிகளும் சிலர். பாவம்! பிராம்மணன் என்ன செய்வது? புகையை உட்கொண்டுதா னகவேண்டி வருகிறது. வாய் பேசாமல், புகையை மந்திரத்தாற் பரிசுத்

தப்படுத்தி உட்கொள்வதுபோல முணுமுணு வென்று நாமஸ்மரணம் பண்ணிக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

யாரா யிருந்தாலென்ன, எதுவா யிருந்தாலென்ன? ரயிலுக்குச் சுமைதானே? அந்தச் சுமையும் எவ்வளவிருந் தாலென்ன? நீராவியின் சக்திக்கு அளவுமுண்டோ? எல்லாவற்றையும் இழுத்துக்கொண்டு அலட்சியமாய்ப் போய்க் கொண்டிருந்தது.

கொஞ்சநேரம் சென்றபின் ராஜேச்வரிக்கு ஓரிடங் கிடைத்தது. அழகுக் கழகு செய்யும் அவளுடைய அதி சௌந்தரியத்தினலேயே அது கிடைத்ததென்னலாம். ஒருபுறம் புட்டிக்காட்டாசாமி ஒருவனும், மற்ருெருபுறம் பைராகியுமா யிருந்தாலும், என்ன செய்வது? இது கிடைத்ததே பெரிதன்ருே? ரயிலில் இதெல்லாம் பார்த் தால் முடியுமா? ரங்கனுக்கு நிற்கத்தான் இடங் கிடைத் தது. அவன் பரிதாபகரமான பார்வையால் பலரை வசப படுத்த முயன்றும் ஒருவரும் வசப்படவில்லை. மந்திரத்தில் மாங்காய் விழுமா? அவன் கால்கள் பலவானுன ஒரு மக மதியன் கால்களுக்கிடையே அகப்பட்டுக்கொண்டு எடுக்க வும் முடியாமல் இப்படி அப்படித் திரும்பவும் முடியாமல் அவன் தவிக்க, கால்கள் மரத்து நீண்டுவிட்டாற்போலத் தோன்றின. ரங்கன் ஒவ்வொருவராக அவர்கள் போகும் ஊரை விசாரித்து, சமீபத்தில் ஏதேனும் இடம் காலியாகு மோவென்று பார்த்தான். அதுவுமில்லை யென்று தெரிந் தது. பின்பு விதியினுல் நேரும் துன்பங்களைப் பொறுத் துக்கொள்வதன்ருே புருஷ லக்ஷணம் என்று மனந்தேறி விநோதமாகப் பேசியாவது தன் துக்கத்தை மாற்றிக் கொள்ள வெண்ணி ராஜேச்வரியிடம் பேசலானுன்:

"ராஜி! நான் ஒரு பெரிய மூடத்தனம் செய்து விட்டேன். எல்லாம் உன்னுலே—உன் அழகின் மாயை யினுலே தான்."

"ஆமாம்! முதல் வகுப்பு டிக்கெட்டைக் கையில் வைத்துக்கொண்டு கழுத்து மெருக, கால் கை ஒடிய அவஸ் தைப்பட்டு மூன்ரும் வகுப்பு டிக்கெட் வாங்கினதும், மூட் டைகளுக்கு முதல்வகுப்பும் நமக்கு மூட்டைக ளடுக்கிய மூன்ரும் வகுப்பு மானதும் என் மாயையினுலேதான்! கலெக்டர் உத்தியோகஸ்தர்களெல்லாம் தேவலோகத்தி லிருந்து வந்தவர்களல்லவா? அவர்களுக்கு நாட்டு வளப் பந் தெரியுமோ? கஷ்ட சமயங்களில் அவர்கள் புத்தி கொழுந்துவிட்டுத்தான் எரியும்."

"நிரம்பவும் முட்டாள்தனந்தான் ராஜி. ஆனுல் தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்! அந் தச் சமயம் என் நிலையில் நீ யிருந்தால் நீயும் அப்படித் தான் செய்திருப்பாய். அந்தக் குழப்பத்தில் தெளிவாய் என்ன தோன்றுகிறது? ரெயிலுக்கோ நாழிகையாய் விட்டது; நீயோ அந்த நிமிஷத்தில் வந்து நின்றுகொண்டு 'அப்படிச்செய்தால்தா னயிற்று' என்று ஒரே பிடியாய்ப் பிடிக்கிருய். போர்ட்டர்கள் கலகம் ஒரு பக்கம். என்ன தான் செய்வது? எதற்கென் றுளாவது? உண்மையில் தத்தளித்துத்தான் போய்விட்டேன்."

"வாஸ்தவந்தான். கலெக்டரா யிருக்கிறவர்கள் வெளியே புறப்பட்டால் குமாஸ்தாவுடனும் வில்லேச்சேவக னுடனும் புறப்படவேண்டும். இல்லாவிட்டால் அவஸ் தைதான்."

"பரிகாசம் பண்ணுதே ராஜி. எத்தனைநாளாய் இப்படி ஆரம்பித்திருக்கிறாய்? பம்பாயில் இந்தப் பரிகாசப் பேச்சு மலிவுபோலிருக்கிறது. நீ கோபித்துக்கொண்டால் எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை. பெரிய கலகக் கூட்டத்தைக்கூட நான் அஞ்சாமல் எதிர்த்து அடக்கியிருக்கிறேன். ஆனால் இன்று எழும்பூரில் உன்னைத் திருப்ப என்னால் சிறிதும் இயலவில்லை" என்று ரங்கன் சிறிது படபடப்புடன் பேசினான். ஏனெனில் அவன் கால்கள் மரத்துப் போய்விட்டதனால் அவனுக்குத் துன்பம் அதிகமாயிற்று. முகம் கொஞ்சஞ் சிவந்து அவன் அவஸ்தையை வெளிப்படுத்தியது.

ரங்கனுடைய நிலையைக் கண்ட ராஜேச்வரி "அந்த வித்தை—எழும்பூரில் மூன்றாவது வகுப்பு டிக்கெட்டு வாங்கும் வித்தை—கலெக்டராயினும் சரி—காங்கிரஸ் காரராயினும் சரி—எல்லாரும் தெரிந்துகொள்ள வேண்டியதே. அதனால் எனக்கொன்றும் மனத்தில் கஷ்டமில்லை. ரங்கா, இப்போது நீ நிற்குமிடம் சௌகரியமா யிருக்கிறதோ" என்றாள்.

"பாதகமில்லை, ராஜி! இது கிடைத்ததே பிரம்மப் பிரயத்தனமாயிற்றே! இது கிடக்கட்டும்; உனக்கு இடம் சௌகரியமாயிருக்கிறதா? நீ உட்கார்ந்தால் நான் உட்கார்ந்தது போலத்தான்."

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் ரங்கன் காற் கட்டைவிரல் முற்கூறிய முகம்மதியன் கால் கிறீச்சுச் சடாவினால் மிதிபட, துன்பம் பொறுக்க முடியாமல் ரங்கன் முகம் வாடிச் சிவந்தது. ஆனாலும் அவ்விடத்தில் அத்தனைபேர் முன்னிலையில் தன் நிலையைச் சொல்லிக்கொள்வது அவமானத்திற்குத்தானே இடமாகும். ஆதலால்

அவன் வாய் திறவாமல் தன் காலை முகம்மதியன் காலி லிருந்து மெல்ல விடுவித்துக்கொண்டு, ராஜேச்வரியிருக்கும் பக்கமாகச் சிறிது நகர்ந்துகொண்டான். இதுவே அவ னுக்குச் சர்வமானியம் விட்டாற்போலாயிற்று. சந்தோ ஷத்தால் அவன் நாவும் சுவேச்சையடைந்து தாராள மாய்ப் பேசத்தொடங்கிற்று.

"நான் சொல்லுகிறேன், கேள் ராஜி! இந்த ஒரு மணி நேரத்தில் நடந்த காரியங்களி லிருந்து நான் என் வாழ்வையே வெறுக்கத் தொடங்கிவிட்டேன். நம் நாடா வது-ஜனங்களாவது! பாழாய்ப் போன நாடு; ஜனங்கள் ஆட்டுமந்தைகள். இதை நினைக்கும்போது எனக்குத் துக் கம் பெருகுகிறது. உலகில் பலரும் மெச்சும்படியான நாக ரிக வாழ்க்கைக்கும் சௌக்கியத்திற்கும் உரிய சாதாரண வழிகளைக்கூட நாம் சரியாய் அறிந்துகொள்ளவில்லையே! ஐம்பது வருஷ காலமாக நம்நாட்டில் ரயில் போயும் என்ன பிரயோசனம்? பிரயாண முறைகளும் மரியாதைகளும் நம் மவருக்கு இன்னும் தெரியவில்லையே! நம்முடைய ஆபாஸ மான பழைய வழக்கங்களை விட்டபாடில்லையே! முதலில் நாமிருக்கும் வண்டியைப் பார்; மூட்டையடுக்கும் குட்ஸ் போலிருக்கிறது. ஜனங்கள் மூட்டை யிடுக்குக்களில் பதுங் கும் திருடர்கள் போலக் காணப்படுகிறார்கள். இந்த மூட் டைகளையெல்லாம் கார்டிடம் ஒப்புவித்து அதற்காக ஏற் பட்டுள்ள தனி வண்டியில் போடச்செய்தா லென்ன? எந்த வகையில் நாம் முன்னேற்ற மடைந்திருக்கின்றோம்? சொல்லு!" என்று பொழிந்துகொண்டிருந்தான் ரங்கன்.

இதற்குள் அம்முகம்மதியன் உறுமிக்கொண்டு, "நம் முடைய உயர்ந்த சாமான்களை யெல்லாம் கார்டிடம் ஒப்பு

விந்துவிட்டால் வேறு வினை வேண்டாம். பாலுக்குப் பூனை பைக் காவல் வைத்தாற்போலத்தான். சாமான்களை அப்படி ஒப்புவித்துவிட்டால், நாமிங்கே கவலையின்றிப் பிரயாணஞ் செய்ய முடியுமோ? அழுகிற குழந்தையும் தொந்தரவுதான்; அதையும் அப்படியே ஒப்புவித்துவிடலாமே? ஒரு நாளைக்குக் கண்விழித்துக் கொஞ்சம் கஷ்டப்பட்டால் என்ன குடி முழுகிப்போய் விட்டது? வருஷம் முழுதும் தூங்கவில்லையா? நிஜாரும் தொப்பியும் போட்டுவிட்டால் உடனே வெள்ளைக்காரத் துரையாகத்தான் நினைவு. அப்படிப்பட்டவர்கள் முதல் கிளாஸிலல்லவோ போகவேணும்" என்று ஓங்கியடித்தான்.

ரங்கன் வாய் திறக்கவில்லை. இத்தகையோர் பேச்சுக்குப் பதிலும் உண்டோ? ஆகஸ்போர்டில் போய்ப் படித்தாலுங் கிடையாது. ராஜேச்வரியோ இந்தப் பேச்சைக் காது கொடுத்துக் கேட்கவில்லை. அவள் கவனம் வேறோரிடத்தி லிருந்தது. அந்த வண்டியிலேயே இருந்த ஒருவனை உற்று நோக்கி வந்த அவள், ரங்கனைப் பார்த்துத் தாழ்ந்த குரலில் "அதோ பார் அந்த ஜன்னலுக்குப் பக்கத்தில் தூங்குவது போலப் பாசாங்கு செய்கிற அவனை—தெரிகிறதா?" என்றாள்.

"ஆமாம் ராஜி! அவர்தான் நம்மை வண்டியி லேற்றினவர்."

"ஆமாம். நம்மை உள்ளே தள்ளிக் கதவைச் சாத்தினவன்."

"நமக்குச் சமயத்தில் செய்த வுதவிக்காக அவருக்கு நாம் வந்தனமளிக்க வேண்டாமோ ராஜி!"

"ஆமாம், அவசியம் அளிக்கவேண்டியதுதான். அவனைக் கொஞ்சங் கவனி; என்ன செய்கிறுன் பார்! அவன் ஒரு தேர்ந்த ஒற்றனென்று எனக்குத் தோன்றுகிறது. நம் நடவடிக்கையைக் கவனிப்பதற்காக வந்திருக்கிறுன்; நிச்சயம்".

"இல்லவே யில்லை; அப்படியிருக்க முடியாது!"

"ஏன் முடியாது? நன்ருய் முடியும். நீதான் சர்க்காரில் என்னைக் கண்காணிக்க ஏற்பாடு செய்திருக்கிறுர்களென்று சாயங்காலம் அடையாற்றில் சொன்னையே! இதற்குள் மறந்துவிட்டாயோ? காலையில் இவனை நான் வேறு உடுப்போடு கண்டேன். அரசர் ஜலக்ரீடைக் கேணியிலுள்ள மீன்போல அடையாற்றில் குதித்து நீந்தி விளையாடிக்கொண்டிருந்தான். பிறகு கரையேறி உடம்பைத் துடைத்துக்கொண்டு தென்னந் தோப்பில் வந்து உல்லாசமாய்ப் பாடிக்கொண்டிருந்தான். நாட்டின் இந்தக் கஷ்ட நிலையில், இவன் போன்று கவலையற்று ஆடிப் பாடக்கூடியவர்கள் ஒற்றர்களைத் தவிர வேறு யாரிருப்பார்கள்?"

"அப்படியா?" என்று ரங்கன் ஆச்சரியத்துடன் அவனை நோக்கினுன். உள்ளூறத் தன்னையும் எங்கே ஒரு வேளை அவ்வொற்றன் உளவறிகிறுனே வென்று அவன் மனம் பதைத்தது.

"அவன் செய்கையைக் கவனித்தால், அவன் உன்னையும் அறிந்து கவனித்து வருகிறுனென்றே தோன்றுகிறது. மூன்ரும் வகுப்பில் நாம் பிரயாணம் செய்தாலும் அவன் நிம்மைத் தெரிந்துகொண்டுவிட்டான். உன்னைக் கவனித்து வருவதும் நிச்சயந்தான்."

"என்னையுமா ராஜி! ஒருநாளும் இருக்க முடியாது!"

"ஏன் முடியாது? கலெக்டரென்றால் அவர்களுடைய ராஜவிசுவாஸத்தைப் பற்றிச் சந்தேகிக்கவே இடமில்லையோ?

"ஆங்கிலக் கவி ஒருவர் சொன்னதுபோல, அரசாங்க உத்தியோகமென்றால் கஷ்டந்தான் ராஜி. உட்கார்ந்தாலும் கஷ்டம், நின்றாலும் கஷ்டம். என்னதான் செய்கிறது?"

"உன்னைப் போன்று உத்தியோகத்திலும் தேச நன்மையிலும் சம திருஷ்டி உடையவர்களுக்குத்தான் வரும் உபத்திரவமெல்லாம். அவர்களை அரசாங்கத்தாரும் நம்புவதில்லை; ஜனங்களும் நம்புவதில்லை. அவர்கள் பாடு இரண்டாட்டில் ஊட்டின குட்டிதான்! இந்த ஒற்றனுடைய ரிபோர்ட்டின் மேல்தான் உனக்குத் தஞ்சாவூர் வேலை காயமாகும்போலத் தோன்றுகிறது. அவன் ரிபோர்ட் சரியாயில்லாவிட்டால் உனக்குப் பழனியாண்டவர் சன்னிதியை யடுத்த மலைச்சரிவு போன்ற விடங்களில் சங்கிலி பிடித் தளக்கும் செட்டில்மெண்டு ஆபீஸர் உத்தியோகந்தான். ஆனால் எப்படியும் சம்பளமுண்டு; வயிறு வளர்த்துவிடலாம்; கவலையில்லை!" என்று பொழிந்தாள் ராஜி. அவள் வாக்கில் ஒருவித ஆவேசத் தொனி இருந்தது. போட்மெயில் சக்கரங்களின் 'குடு குடு' சத்தமும் அவள் வாக்கிற்கு உடுக்கடிக்கும் குடுகுடுப் பாண்டியின் 'குடு குடு' ஓசை போலிருந்தது. இருவரும் நிமிஷநேரம் இமை கொட்டாமல் ஒருவரை யொருவர் பார்த்தனர்.

பிறகு ரங்கன், "ராஜி! உன் வார்த்தை குடுகுடுப்பாண்டி குறி சொல்லுவது போலிருக்கிறது; ஒருவேளை பலித்தாலும் பலிக்கலாம். ஆனாலும், என் வார்த்தையும் வீண் போகாது. நாடு இப்பொழுது இருக்கும் நிலையில், நான் சங்கிலி பிடித் தளக்கும் வீரனாக மாற்றப்பட்டால் அதை யொப்புக்கொண்டு ஒரு மூலையில் போய் மறைந்து கிடப்பேனா? அவ்வளவு கேவலமா நான்? இந்த மூன்றாம் வகுப்பு வண்டியின் அனுபவமே என் மனத்தை இதற்குள் மிகவும் மாற்றிவிட்டது. உண்மையை உன்னிடம் சொல்வதற் கென்ன? இந்த ரயிலில் நடக்கும் கேவலத்திற்கே பிரிட்டிஷ் அரசாட்சி மாறவேண்டியதுதான். மூன்றாம் வகுப்புப் பிரயாணிக ளென்ன—ஆடுமாடுகளா! ஆடுமாடடைக்கும் பௌண்டில் கூட இதைவிட வசதியிருக்குமே!" என்று படபடப்புடன் கூறினான். அவன் வார்த்தையில் கோபத்தொனி கலந்திருந்தது.

ரங்கன் பேச்சில் தேர்ந்தவனாதலால், பேச்சழகுக்காகவே அவன் கோபம் முதலியவற்றைச் சமயத்துக் கேற்ப மேற்கொண்டு நடிப்பதுண்டு. ஆனால் அன்று அவன் உண்மையான கோபத்தோடேயே பேசினான். தேசபக்தித் தீயை உள்ளடக்கிய இந்த ரங்கனென்னும் எரிமலை அணைந்தே போய்விட்டதாக எண்ணின ராஜேச்வரி, மறுபடியும் இப்போது அதன் சிகரத்தில் புகையைக் கண்டு களிகூர்ந்தாள்.

"ராஜி, நான் பேச்சுத் தவறமாட்டேன். சில சமயம் அற்ப காரியங்கள்தான் நம் மனத்தை மிகவும் மாற்றி விடுகின்றன. கண்ணில் சிறு நிலக்கரித் தூள் விழுந்துவிட்டால் என்ன பாடு படுத்துகிறது பார்த்தாயா? அப்பொ

ழுது ரயிலின் வேகமும் அதனு லுண்டாகும் ஆனந்தமும் மனத்துக்குப் பிடிக்கிறதா? எப்படியாவது வீடுபோய்ச் சேர்ந்தாற் போதுமென்றாய்விடுகிறதல்லவா?'' என்று ஒருவகை வேகத்துடன் கூறினன் ரங்கன்.

ராஜேசுவரி: ரங்கா, இந்தப் பேச்சைக் கேட்ட எனக்கு ஆனந்தம் பொங்குகிறது. உனக்குப் பழைய வாசனை திரும்பிவிட்டாற்போலத் தோன்றுகிறது. இந்த நிலையில் நோக்கின், கூடிய சீக்கிரம் நீ உண்மையான தேச பக்த னுகிவிடுவாய் போலிருக்றகிது! அப்படியாயின் நாட்டுக்கு நலந்தான். அஃதிருக்கட்டும். இப்பொழுது அந்தப் பாசாங்குத் தூக்கக்காரனைக் கூப்பிட்டு அவனுக்கு வந்தன மளித்துஅவன் வாயைக் கிண்டுவோம். அவன் வார்த்தை களையும் செயல்களையும் நன்கு கவனித்தால் விஷயம் வெளிப்படலாம். ஒற்றனையே நாம் ஏன் உளவறியக் கூடாது? ஆனலும் அவன் திருட்டுக் கண்ணின் புரட்சி யைப் பார்த்தால் அது எல்லாரையும் ஏய்த்துவிடும் போலிருக்கிறது!''

ரங்கன்: "ஆமாம் ராஜி! நாம் அவனைக் கூவி வந் தன மளிப்போம்.''

ராஜேசுவரி: "நாம் சந்தேகப்படுவதற்கேற்ப அவன் ஒற்றனயின், அவன், சௌகரியமாய்க் காற்று வீசும் அந்த ஜன்னலண்டையை விட்டு இங்கே இந்தக் கக்கூஸ் நாற்றத்துக்கு வந்துவிடுவான். அதுவே அவன் தொழிலுக்கு அடையாளமாகும். வயிற்றுப் பிழைப்புக்கு அவன் கடமையைச் செய்துதானே தீரவேண்டும்? அதற்குச் சமயோசிதமாகப் போகவேண்டுமல்லவா? பார்ப்போம்!''

ரங்கன் : "நல்ல வயிற்றுப் பிழைப்பு ! நாய்கூடத் தான் வயிறு வளர்க்கிறது" என்று அச்சமில்லாத கடுங் குரலில் விடையிறுத்தான். அப்பொழுது அவனிடத்தில் ஒரு மாறுபா டுண்டாகியது. அவன் நெற்றியில் வேர்வை யெழுந்தது. அவன் கண்களில் கோபம் அலைமோதி யெழுந்தது. போட்மெயிலும், பளபளவென்று பிரகாசிக் கும் தண்டவாளத்தின்மேற் படிந்ததும் படியாததுமாகத் தன் முழுவேகத்தோடு, அலறிக்கொண்டு ஓரேரிகரையின் சரிவிற் போய்க்கொண்டிருந்தது.

II

ராஜேச்வரி மறுபடி பேசத் தொடங்கினுள் : "தரங் கம்பாடி என்ற பேரைக் கேட்டதுமுதல், ரங்கா, துறவி போன்ற நம் கந்தன் ஞாபகமே எனக்கு வந்துகொண்டி ருக்கிறது. அவன் நேட்டாலில் பிறந்தவனுனாலும், அவ னுடைய் பூர்விக ஊர் தரங்கம்பாடியல்லவா ?"

திடீரென்று ராஜேச்வரிக்குக் கந்தன்ஞாபகம் வந்தது பற்றி ரங்கன் திடுக்கிட்டான். முன்னமே அவனுள்ளம், தேள் கொட்டப்பட்டவன் மனம் போலத் துடித்துத் தவித்துக் கொண்டிருந்தது ; ராஜேச்வரியின் வார்த்தை அதை மிகச்செய்தது. அவளுக்கும் கந்தன் பேரைக் கேட் டால் ரங்கன் துடிப்பா னென்பது முன்னமே தெரியும்.

ராஜேசுவரி : "ரங்கா ! சாந்தம் குடிகொண்ட அவன் வழியே வழி ! அவன் இவ்வுலகிற் பிறந்த மானிடனுகத் தோன்றவில்லை. அவன் நடைமுறையே இவ்வுலகின் வேருன, தேவலோகத்திலிருந்து வந்தவனுடைய நடை முறை போன்று இருந்தது. நாம் ஆக்ஸ்போர்டி லிருந்த காலத்தில் நமக்கு உலக அனுபவம் அதிக மின்மையால்

அவனுடைய குணத்தின் சிறப்பு அப்பொழுது புலப்படவில்லை. அவனைப்போல யாருக்கேனும் இந்த ஐ. ஸி. எஸ். என்னும் அருஞ்செல்வத்தை விட்டுவிட மனந் துணியுமா! உன்னை யொப்ப வன்றே அவனும் இப்பொழு திருக்க வேண்டும்? அவனைப் பற்றிய விஷயமேதேனும் உனக்குத் தெரியுமோ? அவன் எங்கிருக்கிறன், என்னசெய்கிறன்— ஒன்றுந் தெரியவில்லையே!"

ரங்கன் விடையொன்றுங் கூருது ஆலோசனையிலாழ்ந்திருந்தான். அவனுக்குத் தலைச்சுற்ற லுண்டாகி, போட்மெயிலைவிட வேகமா யெதிர்நோக்கி யோட ஆரம்பித்து விட்டது. ஆதலால் ராஜேச்வரி கந்தனைப்பற்றிக் கூறியவை அவன் காதில் ஏறவில்லை. ஆனல் அவனுக்கு அவற்றைக் கேட்கவேண்டாமென்ற வெறுப்புமில்லை.

ராஜேச்வரி அதைக் கவனியாமலே தன் பேச்சை மேலும் தொடர்ந்து "கொஞ்சநாள் முன் கந்தன் எனக்கு பம்பாய்க்கு ஒரு கடிதமெழுதினன். அது, காதல்பொங்கி மீறித்திரும்பவும் மனமாறிச் சாந்தமடைந்த ஒருண்மைத் தோழனுடைய கடிதம்போன்றிருந்தது. விஷயம் நாலுவரி தானிருக்கும்! ஆயினும் அதில் அருள் கலந்த சோகரஸம் ததும்பிக்கொண்டிருந்தது. அதுவே எவர் மனத்தையும் கவரக் கூடியது. தான் தன்னுடைய நாட்டின் நலத்துக்காக உழைக்கும் உண்மைத் தொண்டனுகப்போவதாகவும், அதன் பொருட்டுத் தமிழ்நாட்டுக்குக் கூடிய சீக்கிரம் வருவதாகவும் எழுதியிருந்தான். அக்கடிதத்தைக் கண்டதும் குன்றுத சாந்தத்துடன் விளங்கும் அவன் முகம் என்னெதிரில் நின்றது. அவனுடைய அகன்ற நெற்றியும், அருளொழுகு கண்ணும், ஒளிபொருந்திய முகமும்

ஆகிய இவற்றைக் காண்போர்க்கு, அவன் ஐம்புலன்களை யும் அடக்கியாளும் ஒரு துறவி யெனவே தோன்றும். அவன் பம்பாய் வந்து என்னை ஒருமுறையேனும் பார்ப்பா னென் றெண்ணினேன்; வரவில்லை. ஒருவேளை மனந்தான் மாறிவிட்டதோ, அல்லது ஊருக்கே வரவில்லையோ தெரியவில்லை. ரங்கா நான் சொல்வது காதில் விழு கிறதா? ரயிலோட்டம் தொட்டிலாட்டம்போ லிருப்பத னால் தூக்கம் வருகிறதோ? எழும்பூரில் மூன்றும் வகுப் புச் சீட்டு வாங்க நீ பட்ட பாட்டுக்கு, உனக்கு மெத்தை போட்ட முதல் வகுப்பு வெகுமானங் கொடுக்கவேண்டி யதுதான். ஆயினும் நாமென்ன செய்வது? எதுவும் ஈசன் செயல்!'' என்று முடித்தாள்.

ரங்கன்: "மறுபடியும் அந்தப் பேச்சை ஆரம்பித்து விட்டையே? ஓயாமல் உழுது உழைக்கும் மாட்டுக்குத் தாற்றுக்கோல்தானா? எழும்பூர்ப் பேச்சைக் கொஞ்சம் மறந்துவிடு! ஏற்கெனவே என் மனம் புண்ணுயிருக்கிறது. நீ இன்னுங்கொஞ்சம் அதில் கோலிடாதே. கந்தன் பேரைக் கேட்டதும் பழைய நினைவு வர நான் மெய்மறந்துவிட்டேன். அவனல்லவோ பாக்கியசாலி! ஆனால் இப்போது அவனைப் பற்றி இவ்வளவு சிறப்பித்துப் பேசுகிற நீ, நாமெல்லாம் ஆக்ஸ்போர்டில் இருந்தபொழுது இப்படிப் பேசக் காணேமே?"

ராஜேச்வரி: "அதுவும் உன்னுலேதான்."

ரங்கன்: "வாஸ்தவந்தான்; இருந்தாலும் நீ இன்னுங் கொஞ்சம் மனமிரங்கியிருக்கலாம்; அதுவும் என்னதிர்ஷ் டந்தான். நீ சொல்லுவதுபோலக் கந்தன் பிறப்பு அப் பழுக்கற்ற உயர்ந்த பிறப்பே. சிறந்த குணமும், கெடாத

சாந்தமும்! அற்ப புத்தியென்பதே அவனிடம் கிடையாது. சொன்ன சொல் தவறான். எதையும் காரியத்தில் காட்டுவான். சுவட்டை விட்டு விலகாத சண்டிக் காளைபோலப் பழைய் குருட்டு வழிகளிலேயே போவதென்பதில்லாமல், புதியவழிகளிலும் பலருக்கு நன்மையான காரியங்களைத் தன் காரியம்போலப் பாவித்துக் கருத்துடன் நடத்துவான். எப்பொழுதும் பொது நன்மைகளிலேயே நோக்கமுள்ளவன். அகம்பாவம் சிறிதும் இல்லாதவன். வஞ்சனையின்றி, பருவ மழைபோலப் பலர்க்கும் பயன்படுபவன். அவனைப் போன்றவர் ஆயிரத்திலொருவர்கூடக் கிடைப்பதரிது!"

ராஜேச்வரி: "ரங்கா! நீகூடக் கந்தனைப்பற்றி இவ்வளவு கூறுவது எனக்கு மிகவும் சந்தோஷம். இந்த அசூயையில்லாத உயர்ந்த குணமே உத்தம குணம். அதுதான் புருஷலக்ஷணம். பசுவுண்ணும் புல்லும் பால்மய மாவதுபோல, இக்குணமுடையவரிடத்து எவரும் வசமாய் மேன்மையடைந்து விடுவர்."

ராஜேச்வரியின் இந்த நன்மதிப்பி லிருந்து ரங்கனுக்கு அடங்கா மகிழ்ச்சி யுண்டாயிற்று! ராஜேச்வரியின் பரந்து நீண்ட பங்கய விழிகளும் சிறிது கூச்சத்துடன் புரண்டு மான் விழியின் தன்மையை யடைந்தன.

ரங்கன்: "ராஜி! நீ நல்லதென்று அங்கீகரித்தால் அதுவே என்க்குப் பெரும் பாக்கியம்; ஸ்வர்க்க பதவிக்கு மேலாகும். கந்தனைப்பற்றி உனக்குத் தெரியாத இன்னுஞ் சில விஷயங்களைச் சொல்லுகிறேன் கேள். அவன் பரம்பரைப் பிரபுக்களின் வம்சத்தில் பிறந்தவன். அவ்வம்சத்தாரைப்போல வாழ்ந்தவர்கள் முன்னே தஞ்சாவூர் ஜில்லா

யிலேயே கிடையாது..ஆனால் இப்பொழுது அவர்கள் தாழ்வடைந்துவிட்டரர்கள். டேனிஷ் ராஜாங்க மிருந்தபோது, கந்தன் முன்னோர்கள் தான் அவர்கள் ஊருக்கு நாட்டாண்மைக்காரர்கள். அவ்வூரில் அவர்களிட்டது சட்டம். பிரிட்டிஷ் ராஜாங்கம் வந்தபிறகு அவர்களுடைய செல்வமும் செல்வாக்கும் குறைந்துவிட்டன."

ராஜேச்வரி : "நான் கேட்டதற்கு ஒன்றும் நேர் பதிலைக் காணோம்; ஏதேதோ விஷயங்கள் நிரம்பப் பேசுகிறாயே! கந்தனிருக்குமிடந் தெரியுமா?"

ரங்கன் : "தெரிந்தால் அப்பொழுதே சொல்லியிருக்கமாட்டேனோ ராஜி? தெரியாததனாலேதான் அலங்காரமாக இந்த ஊர்க்கதை வளர்த்ததெல்லாம்."

ராஜேச்வரி : "கந்தனுடைய தகப்பன் மகாத்மாவின் கீழிருந்து நல்ல தேசத்தொண்டு செய்தானாமே? 'தகப்பன் குணம் பிள்ளைக்கு' என்பதுபோல அந்த வாசனை தான் கந்தனுக்கும்!"

ரங்கன் கொஞ்சம் புன்சிரிப்புக்கொண்டு, "அப்படியன்று ராஜி; அவன் உன்மீது கொண்ட அளவிறந்த காதல் பயன்படாது போகவே, அக்காதல் முழுதும் அப்படியே தேசபக்தியாக மாறிவிட்டதென்று நான் நினைக்கிறேன். அதுவும் இயற்கைதானே! அதேபோல என்னையும் இப்பொழுது நீ கைவிட்டால், நானும் அவ்வாறே மாறி நாட்டின் சுதந்தரத்துக்காக என் தலையையும் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்" என்றான்.

ராஜேச்வரி : "அப்படியானால், நாட்டின் நலத்தைக் கருதியாவது உன்னைக் கைவிட எனக்குத் துணிவு கொடுக்கும்படி ஈசுவரனைப் பிரார்த்திக்கிறேன். (இவ்வார்த்தையை

ராஜேச்வரி கொஞ்சந் தடுமாற்றத்துடனேயே கூறினாள். அவள் முகமும் சிறிது வேறுபட்டது.) அஃதிருக்கட்டும். கந்தனுடைய தொண்டுக்குக் காரணம் அவன் பரம்பரைதான். பல தலைமுறையாக இரத்தத்தில் ஊறியிருந்தால்தான் அது காரியத்தில் வெளிப்படும். ஒருவன் குணங்கள் அவன் வமிசத்தைப் பொறுத்தே யிருக்கும். பல தலைமுறையாகப் பெரிய நாட்டாண்மையாயிருந்த கௌரவமான குடும்பத்திற் பிறந்தவனன்றோ கந்தன்? அதுதான் காரணம்."

ரங்கன் கையைப் பிசைந்துகொண்டு ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள் ராஜேச்வரி "கந்தன் அயல்நாட்டில் பிறந்தாலும், தன் தாய்நாட்டுக்குப் பாடுபடவேண்டியதும் கடமைதானே? அதற்கு இதுதான் ஏற்ற தருணம்" என்றாள்.

ரங்கன்: "கந்தன் அயல்நாட்டில் பிறந்தவனில்லை ராஜி! இந்தத் தமிழ்நாட்டிலேயே பிறந்து, விவரந் தெரியாத சிறுவயது முதல் அயல்நாட்டில் வளர்ந்தவன். அந்தக் கதையை—அவன் தகப்பன் நாகப்பன் ஓடின கதையை எடுத்தால் பெருங் கதையாகும். நாகப்பன் நேட்டாலுக்கு ஓடினபொழுது கந்தனுக்கு வயது மூன்று. அவன் தாய் அவனைப் பிரசவித்தது முதல் உடம்பு தேறாமலேயிருந்து, ஆறுவது மாதத்தில் அவனை விட்டுவிட்டுத் தன் தாய்வீட்டிலேயே இறந்துவிட்டாள். பின்பு குழந்தைக்கு மூன்று வயதானபொழுது, அதற்கு மாமன் வீட்டிலும் தக்க ஆதரவின்மையாலும், அதைவிட்டுப் பிரிய மனந்துணியாமையாலும் நாகப்பன் அந்த மூன்று வயதுக் குழந்தையையும் தோளில் தூக்கிக்கொண்டு இரவோ

டிரவாய் ஒருவருக்குந் தெரியாமல் நாகபட்டணம் போய்க் கப்பலேறி நேட்டாலுக்குப் போய்விட்டான்.''

இவற்றைக் கவனத்துடன் கேட்டுவந்த ராஜேச்வரி, "ஆஹா! என்ன ஆச்சரியம்! என்ன துணிவு! மூன்று வயதுக் குழந்தையுடன் நேட்டாலுக்கு ஓடுவது! கடவுள் இதையெல்லாம் ஏதோ காரணங் கருதித்தானே நடப்பிக்கிருர்! கந்தனைப்போலத் தியாகம் செய்தவர்கள் யார்? ஆக்ஸ்போர்டி லிருந்தபொழுது அவனையும் அவன் குண விசேஷங்களையும் பற்றி இவ்வளவு நான் அறியாமற் போனேனே!'' என்று வருத்தத்துடன் கூறினுள்.

அவள் இவ்வாறு வருந்தியதைக் கண்ட ரங்கன் முகமும் வாடியது. தன்னை மறந்து உதட்டைச் சிறிது கடித்துக்கொண்டான். அதைக் கண்ட ராஜேச்வரி, "ஏன் கஷ்டப்படுகிறுய் ரங்கா? பாவம், இடம் வசதியாயில்லை போலிருக்கிறது; அல்லது பழைய ஞாபகம் வருகிறதோ?'' என்று முதலில் சற்று விளையாட்டாகத் தொடங்கினவள், ரங்கனுடைய மன நிலையைத் தன் கூரிய கண்களால் அளந்தறிந்து, பின்பு உண்மை யுணர்ச்சியுடனும் பெருந்தன்மையுடனும் பேசலாஞள். அப்பொழுது அவள் பேச்சில், ஏதோ தத்துவ விசாரம் செய்து ஒரு முடிவுக்கு வந்தவள்போலச் சாந்தம் குடிகொண்டிருந்தது.

"என்னைக் குறித்து நீ கவலைப்படாதே, ரங்கா! பிறர் வாழ்க்கையென்னும் மரக்கலத்துக் கொரு புயலாகி, அவ் வாழ்க்கையைக் கலக்கும் என் காதல் விளையாட்டை இனியும் வளர்க்க எனக் கெண்ணமில்லை. இனி என் கலக்கமெல்லாம் தாய்நாட்டு வாழ்வு கருதியதே. தேசாபிமானம் என் சரீராபிமானத்தை அடியோடு துறக்கச்

செய்துவிட்டது. தேசபக்தி யாகிய பேரின்பக் கடல், சிற்றின்பக் குட்டையைச் சிதைத்துவிட்டது. நாட்டுக்குச் சுவேச்சை கிடையாதவரை என் மணமும் இல்லை. ஆதலால் என் கலியாணத்தைப்பற்றி இப்பொழுது நினைப்பதிற் பயனில்லை. அது கிடக்கிறது வெகு தூரத்தில். நம் முன்னோராகிய ரிஷிகள், 'பிரம்மசரியமின்றிப் பெருங் காரியங்கள் சாதிக்க முடியாது' என்று கூறியதன் உண்மை இப்பொழுதுதான் எனக்குக் கொஞ்சம் புலப்படுகிறது. அவர்கள் தீர்க்காலோசனை செய்தே அவ்வாறு தீர்மானித்திருக்கிறார்கள். நாட்டுத் தொண்டை நன்கு செய்யவோ, அல்லது பரலோக சாதனத்துக்குப் பாடுபடவோ பிரம்மசரிய மென்னும் சிறந்த உறுதியையுடைய சந்நியாசிகளே தகுதியுடையவர்கள். அவ்விரத பலமே மக்களுக்கு அவர்களிடம் பெருமதிப்பை உண்டாக்குகின்றது. விஷய சுகங்களிற் செல்லும் மனத்தைத் திருப்பி ஞானமார்க்கத்திற் செலுத்தினால்தான் நாட்டுக்கு நலஞ் செய்ய நாட்டமுண்டாகும். ஏதோ ஈசுவர கிருபையால் எனக்கிந்த ஞானம் இப்பொழுதுண்டாகி என் மனத்தைப் பரிசுத்தஞ்செய்து, எடுத்த காரியத்தை முடிக்கத் துணிவு கொடுத்திருக்கிறது. அற்ப ஜீவன்களிடத்தும் எப்பொழுதும் சொல்லிலும்செயலிலும் அன்பும் அடக்கமும் காட்ட வேண்டுமென்ற விருப்பம் உண்டாகியிருக்கிறது. எல்லாம் ஈசன் செயல்தான் !"

ராஜேச்வரி இவ்வாறு தன் வசமிழந்து கூறிய வார்த்தைகளைக் கேட்ட ரங்கனுக்கு, ஏதோவொரு புத்தொளி தோன்றி இவ்வுலகின் இருண்ட விடங்களில் தடையின்றிச் செல்வதற்கு ஒரு வழி காட்டுவதுபோலத் தோன்றிற்று.

அப்பொழுதே தன் காதற்கோரிக்கைக்கு ராஜேச்வரியின் முடிவான விடை அதுதானென்பதையும் அவன் தெரிந்து கொண்டான். மங்கைப் பருவத்து மங்காத அழகுடன் விளங்கிய ராஜேச்வரியின் முகப்பொலிவோ ரங்கன் மனத்தை நன்கு பிணித்தது. அதனால், ரஸவாதியினிடம் அகப்பட்ட செம்பும் பொன்னாவதுபோல ரங்கனும் மனம் மாறினான்.

அப்போது மணிக்கு நாற்பது மைல் வீதம் போய்க் கொண்டிருந்த போட்மெயிலின் உல்லாசமான ஓட்டத்தில், ராஜேச்வரியின் பேச்சிலுள்ள புத்துணர்ச்சியும் கவிதா சாதுரியமும் நக்ஷத்திரமண்டலம் நோக்கிச் செல்லும் எஞ்சினின் தீப்பொறிகள்போல மேல் நோக்கிப் போய்க்கொண்டிருந்தன.

ரங்கனுக்கோ கால் மிகவும் வலியெடுத்துவிட்டது. பாவம்! டிக்கெட்டுக்கு இருமுறை பணமுங் கொடுத்துவிட்டு, அவ்விஷயமும் பலர் முன்னிலையில் வெளியாய்விட, அவமானகரமாய் ஒருமணி நேரத்துக் கதிகமாக நின்று வருகிறான். அந்த ஒருமணியும் அவனுக்கு ஒரு யுகமாயிருந்தது. அவன் கலக்கமடைந்ததனால், ரயில் எதிர் முகமாய்த் திரும்பவும் எழும்பூரை நோக்கி ஓடுவதுபோல அவனுக்குத் தோன்றியது. மூன்றும் வகுப்பு டிக்கெட்டு மறுபடியும் வாங்கவேண்டியிருக்குமோ என்று திகிலடைந்தான். ஆனால் ராஜேச்வரியின் மாசற்ற பொலிவுடன் விளங்கும் முகத்தை மீண்டும் பார்த்து அவன் கலக்கமும் சோர்வும் நீங்கிக் கிளர்ச்சியுற்றான். அவன் முகத்தில் நகையும் திரும்பியது.

ஆமாம்! குடும்ப வாழ்க்கையே இப்படித்தான்! அலுத்துச் சலுத்துத் தேறிப் பிழைக்கும். திரும்பவும் அலுக்கும்; மீளவும் கிளைக்கும். புயற்காற்றினால் அடியோடு அழிந்துபோய்விட்டதாகக் கருதிய ஒரு பாரிஜாதம், சிலநாட் சென்றபின் வேரிலிருந்து தளிர்த்துக் கிளைத்துக் கூடை கூடையாய்ப் பூக்களைச் சொரிவது முண்டல்லவா?

"ரங்கா! ஏதோ பெருத்த ஆலோசனையி லிருக்கிறாயே! என்ன? அதோ அந்த ஒற்றனுடைய பார்வையைக் கவனி! உன்னைத்தான் பரிதாபத்தோடு பார்க்கிறான்போலத் தோன்றுகிறது. ஒருவேளை உன் வாயால் ஒரு வார்த்தை வருமாயின், தன் இடத்தைக்கூட உனக்குக் கொடுத்துவிட்டுத் தான் நிற்பான்போலிருக்கிறது!"

"அப்படியன்று ராஜி! அவன் உன்னழகைப் பார்த்து மயங்கிக் கண் சோருகிறானென்று நான் நினைக்கிறேன்! உன்னழகு உனக்குத் தெரியுமோ?"

"என்ன ரங்கா! என்னை அவ்வளவு மூடமாக்கி விட்டாய்? ஒளிபோலக் கையிலகப்படாததாகிய அழகைக் கண்டு வியந்து கண் கொட்டாது ஏமாந்து பார்க்கும் பேதைப் பார்வைக்கும், இவ்வொற்றனுடைய ஆழ்ந்த கருத்துள்ள திருட்டுப் பார்வைக்கும் வித்தியாசமா தெரியாது? 'கலெக்டர்' என்று பேர் வைத்துக்கொண்டு இதுகூடக் கையாலாகாவிட்டால், தப்பு சால்ஜாப்புச் சொல்லுவானேன்? அவனை இழுத்துவைத்து மெல்லப் பேசி அவனுள்ளவை யறிய உன்னால் முடியுமா முடியாதா? முடியாதென்றால் அப்படி ஒப்புக்கொள்; பிறகு நான் பார்த்துக்கொள்ளுகிறேன்."

இவ்வாறு அதிகாரத் தொனியுடன் முடித்த ராஜேச்வரியின் பேச்சைக் கேட்டு ரங்கனும் சிறிது அஞ்சினன். அவள் வார்த்தைகள் கூரிய முட்போல அவன் மனத்தில் தைத்தன. உடனே வேறு வழியின்றி அவன் காரியத்தை முடிக்க முயன்றான்.

## III

ரங்கன், தேகப் பயிற்சி செய்யும் பிள்ளைகள்போல இருந்தவிடத்துக்குள்ளேயே திரும்பி நின்றான். இன்னமும் அவன் நின்றவண்ணமே இந்த ரெயில் நாடகம் நடந்துவருகின்றது. அவன் அவ்வொற்றனை நோக்கி இனிய சொற்களால் பேசத் தொடங்கினன் :

"என்ன ஸார்! நீங்களும் எங்களோடேயே வருகிறாப்போலிருக்கிறதே? இந்தக் கூட்டக் கலவரத்தில் இவ்வளவு நேரம் உங்களைப் பார்க்கவில்லை ஸார்! நாங்கள் இடத்திற்குத் திண்டாடிக்கொண் டிருந்தபொழுது உமது ஒத்தாசை யில்லாவிட்டால் இன்று எங்களுக்கு போட்மெயில் கிடைத்திருக்காது. நல்ல சமயத்தில் உதவினீர்; மிகவும் வந்தனம். இப்பொழுது எங்களோடேயே வருவது தெரிந்து மிக்க சந்தோஷம்."

பொன்னன், இவ்வளவுகாலந் தாமதித்து வந்த ரங்கனுடைய வந்தனத்தையும் மரியாதையாய் வணங்கி ஏற்றுக்கொண்டு, இடம் விட்டுப் பேராமலே, "தங்களைப் போன்ற முதல்வகுப்பிற் போகவேண்டிய கனவான்கள் ஏதோ வேடிக்கையாக மூன்றாம்வகுப்பிற் போகும்பொழுது நான் செய்தது என்ன அதிசயம்? அற்ப விஷயந்தானே?" என்றான்.

இதைக் கேட்டதும் ரங்கனுக்குத் திடுக்கிட்டது. 'ஏது! எல்லாந் தெரிந்த ஒற்றன் தான் போலிருக்கிறது! ராஜி சொன்னது சரிதான்!' என்றெண்ணிக்கொண்டான். அதை அவன் முகம் காட்டிற்று.

பொன்னன் ரங்கனுடைய மாறுபாட்டை அறிந்தும், அறியாதவன்போல அவனுக் கேற்ற வார்த்தைகளைப் பேசத் தொடங்கினான்: "எஸ் ஐ. ஆரில் மூன்றாம் வகுப் பென்றால் குட்ஸ் வண்டிக்குச் சமானந்தான்! அக்கிரமம்! எப்பொழுதும் தாங்காத கூட்டந்தான். இதைத் தாமதமின்றிக் கவனித்துத் திருத்தவேண்டியது சர்க்காரல்லவோ? இல்லாவிட்டால் இந்த ஊழல்கள் எப்படித் திருந்தும்? நாம் பெட்டிஷன் போட்டுப் பலனென்ன? கடுதாசி நஷ்டம்; எழுத்துக்கூலி நஷ்டம்; சர்க்காருக்குத் தபால் தலைகள் விற்பனை லாபம். நம் கௌன்ஸில் மெம்பர்களான ராவ்பகதூர்களும் திவான்பகதூர்களும், தங்கள் மக்களுக்கும் மருமக்களுக்கும் ஸர்க்காரிலும் ரெயில்வேயிலும் உத்தியோகத்திற்காக முயலுவது போலப் பொது நன்மையிலும் முயன்றால் பலனுண்டாகும். ஆனால் அவர்களுக்கென்ன? மூன்றாவது வகுப்பின் கஷ்டம் தெரிந்தால்லவோ? அவர்கள் நம்முடைய பொருட்செலவில் மெத்தையிட்ட முதல் வகுப்பில் சேஷசயனம் போல உல்லாசமாய்ச் சயனித்துக்கொண்டு போகிறார்கள். அவர்கள் கண் மூன்றாம் வகுப்புப் பக்கம் திரும்பிக்கூடப் பாராது!"

"ஐயா, நீர் சொல்வன முழுதும் உண்மை. மிக அழகாயும் நயமாயும் பேசுகிறீர். இதோ பாரும்; உம்முடைய பேச்சுக்கு இதுவே சாக்ஷி!" என்று சொல்லி, ரங்கன் தன் மெருகின கழுத்தை முடிந்தவரையில் திருப்

பித் காட்டிப் பின்னும், "எழும்பூரில் மூன்றும் வகுப்பு டிக்கெட் இரண்டு வாங்கின தன் பலன் இது; கையும் மெருகிக் கொண்டது; கால் கட்டைவிரல் மிதிபட்டு இரத்தங் கட்டியிருக்கிறது; நாங்கள் ரயிலேறினதோ உம்முடைய புண்ணியம்" என்று ரயிலின் ஓசையையும் விஞ்சும்படி உரக்கப் பேசினன். தலையையும் கிரீடத்திற்குக் காத்திருக்கும் அரசன்போல நிமிர்த்திப் பார்த்தான். சரியாய் நிமிர்த்த முடியவில்லை.

பொன்னன், "ஆனல், தங்களைப் போன்றவர்கள் வேடிக்கையாக மூன்றும் வகுப்பிற் பிரயாணம் செய்தாலும், ரயிலுக்கு ஒரு அரைமணி நேரம் முந்தியாவது வந்தால் கொஞ்சம் சௌகரியமாயிருக்கும். அந்தச் சமயத்துக்கு வந்தால் யார்தான் என்ன செய்வது?" என்றுன்.

ரங்கன் தன் நிலையை மறந்து பொன்னனிடம் தன் கதை முழுவதுமே சொல்ல எண்ணினன். ஆனல் அதற்குள் ராஜேச்வரி கண் காடை செய்ய, ரங்கன் விழித்துக் கொண்டான். தனக்கு எவ்வளவு கஷ்டங்களிருப்பினும், அவற்றை வெளிப்படையாகச் சொல்லி ஆற்றிக்கொள்ள ஆவலிருப்பினும், முன்பின் தெரியாத ஒருவனிடம்—அதிலும் ஒற்றனைக் கருதப்படும் ஒருவனிடம் வெளிப்படுத்தலாமா? ஆதலால் அவன் தலையை யசைத்துக்கொண்டு சாதாரணமாய், "இந்த ரயில் கொடுமையாலேயே இந்த அரசியல் மாறவேண்டுவது அவசியமென்த் தோன்றுகிறது. வேறுவினை வேண்டியதில்லை. இந்த மூன்றும்வகுப்பி லுள்ள ஏழை மக்களின் சாபத்தாலேயே இது நிச்சயம் அழிந்து போகும்" என்றுன்.

இவ்வாறு ரங்கன் கூறிவருகையில், பொன்னன் மரியாதையாய்க் குறுக்கிட்டுச் சொல்லுகிறான்:—"ஆமாம் ஸார்; சர்க்காரின் இந்தஅசிரத்தை ரயிலில் போகும்போது தான் நம் மனத்தை யுறுத்துகிறது. எஞ்சினிலிருந்து கிளம்பும் தீப்பொறி ஒரு தந்திமரந் தாண்டுவதற்குள் அணைந்துவிடுவதுபோல, ரயிலைவிட் டிறங்கினால் நாமும் இதை மறந்துவிடுகிறோம். இந்தக் கஷ்டமெல்லாம் மனத்தை விட்டு எங்கேயோ மறைந்து போய்விடுகின்றன. ஆனால், என்றும் மறக்கத்தகாத கொடுமை ஒன்றுண்டு. தம் கஷ்ட நிஷ்டூரங்களை வாய்விட்டுச் சொல்லக்கூடத் தெரியாத—முடியாத—இந்தப் பரம ஏழைகளின் உணவற்ற தீனமான தினசரி வாழ்வை எப்பொழுதாவது அவர்கள் குடிசைக்குட் சென்று தாங்கள் பார்த்ததுண்டோ? அவர்களுக்கு நாளைக் கஞ்சிக்குக் கடவுள் எங்கே கட்டளையிட்டிருக்கிறாரோ தெரியாது. இவ்வுலகிலேயே இப்படிப்பட்ட கஷ்ட ஜீவனம் எங்குங் கிடையாது. அதுவும் இப்படிக் கஷ்டப்படும் ஜனங்கள் கொஞ்ச நஞ்சமா! முப்பத்தைந்து கோடியில் முப்பத்துநாலு கோடி! இந்த நாகரிகம் எப்படியோ செலாவணி யாகிவருகிறது. அச்சில்லாமலே தேர் ஓடுகிறது! இவ்வேழைகள் சாபத்தாலேதான் இந்த அரசியல் நிச்சயம் அழியும்."

ரங்கனும் ராஜேச்வரியும் ஊக்கத்துடன் கேட்க, பொன்னன் பின்னுங் கொஞ்சம் தைரியமாய்ப் பேசலானான்: "பாவம்! நாள் முழுதும் சேற்றிலும் சகதியிலும் உழைத்தால் இரண்டுபடி நெல்லுக் கிடைக்குமோ கிடைக்காதோ சந்தேகம். அன்றைப் பசிக்குக் காய்ச்சிக் குடிக்கக்கூடக் காணாது. மறுநாள் பொழுதுவிடிந்தால்

மறுபடி இதே கதைதான். காட்டில் திரியும் மிருகங்களுக்குக்கூட இவர்களைவிட உணவு தாராளமாய்க் கிடைக்கும்; சுவேச்சையும் உண்டு. இவர்களுக்கு வெளியே சென்றால் நெற்றிவேர்வை நிலத்திற் பொழிய வேலைதான். வெயிலுமில்லை கானலுமில்லை; மழையுமில்லை பனியுமில்லை; சதா வேலைதான்! வீட்டுக்கு வந்தால் பசி மீறிக் குழந்தைகள் முதலியோர் அழும் அழுகை! என்ன செய்வார்கள், பாவம்! 'ஏழை யழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்' என்றபடி இந்த ஏழை மக்களின் அழுகையும் சாபமும் ஈசுவரன் காதுக்கெட்ட, இந்தக் கலியிலுங்கூட அவர் அவதாரம் பண்ணி இந்த அரசியல் நிர்வாகத்தை மாற்றுவாரென்பதற்கு ஐயமில்லை."

பொன்னன் ராஜேச்வரியின் இளகிய மனத்தை அவள் முகத்திலிருந்தே தெரிந்துகொண்டானாதலால், தன் உபந்நியாச முழுதும் அவன் ராஜேச்வரியை நோக்கியே செய்தான். ராஜேச்வரியும் ரங்கனும் பொன்னனுடைய புத்திக் கூர்மையான பேச்சைக் கேட்டு வியந்து களித்தார்கள். ஏழைகளிடத்துப் பொன்னனுக்குள்ள இரக்கத்தைக் கண்டு, இயற்கையில் எப்பொழுதும் அருளுடன் கூடிய ராஜேச்வரியின் மனம் பின்னும் இளகிற்று. அவள் மகிழ்ச்சி தாங்காமல் பொன்னனை நோக்கி, "தாங்கள் யாரையா? தங்கள் பெயரென்னவோ? நம் நாட்டின் ஏழைமை நிலையை இவ்வளவு ஆழ்ந்து சிந்தித்துத் தெரிந்து கொண்டிருக்கிறீர்களே! அதை எவ்வளவு அழகாய் எடுத்தும் சொல்லுகிறீர்கள்!" என்றாள்.

பொன்னன்: "இதென்ன அதிசயம் தாயே; நானும் அவர்களில் ஒருவன்தானே! வீடற்று, வாசலற்று, உண்டி-

உடை அற்றுத் தவிக்கும் எத்தனையோ கோடியில் நானும் ஓர் அற்பப் பிராணி!"

ராஜேச்வரி: "உமது பெயரென்ன?"

பொன்னன்: "என் பெயர் பொன்னுசாமி; பெரியோரும் சிநேகிதர்களும் பொன்னன் என்றழைப்பார்கள். நான் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்தவன். ஒரு காலத்தில் நாங்களும் நல்ல ஸ்திதியில், பரம்பரைச் செல்வத்திலிருந்தோம். இப்பொழுது எல்லாம் போய்விட்டது. இருபது வருஷங்களுக்கு முன், தாய் தந்தையரையும் இழந்து நான் சென்னைப்பட்டணத்திற்கு ஓடி வந்துவிட்டேன். படித்து முன்னுக்கு வரவேண்டிய என் இளம் பிராயத்தையெல்லாம் பட்டணத்தில் பலவித கேவலமான ஊழியத் தொழில்களில் கழித்துக் கெடுத்துக்கொண்டேன். இப்போது இந்தக் காந்திக் கிளர்ச்சி எனக்கு நல்லதாயிற்று. அவர் கொள்கைப்படி, கேவலமான இந்த நகர வாழ்க்கையை விட்டுக் கிராமத்திற்குப் போக எண்ணிப் புறப்பட்டுவிட்டேன். இப்பொழுது தரங்கம் பாடி போகிறேன். பட்டணத்து வாழ்வை இன்றோடு விட்டேன்!"

"தரங்கம்பாடியா!" என்று ரங்கனும் ராஜேச்வரியும் ஒருங்கே ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

"ஆமாம்; தரங்கம்பாடிக்குத்தான். இனிப் பட்டணத்துக்குத் திரும்பப்போவதில்லை!" என்றான் பொன்னன்.

ராஜேச்வரி: அப்படியா! ஆனால் உம்மை ஒன்று கேட்கிறேன்; மன்னிக்கவேணும். இன்று காலையில் உம்மை நான் அடையாற்றில் கண்டேன். அடையாற்றில் மீன் போல நீந்தித் திளைத்து விளையாடிவிட்டுப் பிறகு ஆலமரத்

சூடியிலும் தென்னந்தோப்பிலும் உல்லாசமாய்க் குயில் போற் பாடிக்கொண்டிருக்கவில்லையா நீர்?

பொன்னன்: "ஆமாம் தாயே! அப்பொழுது நீங்கள் அங்கே சமீபத்திலிருந்தீர்களோ? காலையில் நான் என்னைப் படைத்த ஆண்டவனருளை நினைத்து, அதில் மூழ்கி என்னை மறந்திருந்தேன்! தோப்பும், துரவும், ஆறும் கடலும்—அடடா என்ன காட்சி! அதைக் கண்டு அதனழகில் ஈடுபட்டு மெய் மறந்திருந்தேன். அடையாற்றை நினைத்தால் எனக்கு, நான் சிறு வயதில் நிகரற்ற காவேரியில் குதித்து விளையாடினதெல்லாம் நினைவுக்கு வரும். அதனால் நான் அவ்வப்போது அடையாறு போய்க் குதித்து விளையாடிக் குளித்துக் களித்து வருவதுண்டு. இந்த இருபதுவருஷ காலமாக அடையாற்றினால்தான் எனக்குக் கொஞ்சம் மன அமைதி. நானோ குக்கிராமத்துக் கிளி. பட்டணமென்ற இரும்புக் கூட்டில் இத்தனை நாளாய் அடைபட்டுக் கிடந்தேன்! அதிலிருந்து விடுபடும் நாளில் அடையாற்று நினைவு வர அங்கேபோய் மனவமைதிக்காகத் தெய்வத்தைக் குறித்து ஏதோ பாடிக்கொண்டிருந்தேன். தாங்கள் எங்கிருந்தீர்களென்பதுகூட எனக்குத் தெரியாது தாயே!"

ராஜேச்வரி: "இப்பொழுது தரங்கம்பாடியா?"

பொன்னன்: "ஆமாம், தரங்கம்பாடிதான். மகாத்மாவின் வார்த்தைகள் என் மனத்தில் பதிந்துவிட்டன. தரங்கம்பாடியில் என் உறவினர்களிருக்கிறார்கள். என் ஒன்றுவிட்ட சிற்றப்பன் மகன் ஒருவன் நேட்டாலிலிருந்து வந்திருக்கிறான். அவன் நாட்டின் சுதந்திரத்திற்கும் கிராமச் சீர்திருத்தத்திற்கும் பாடுபடுகிறான். தரங்கம்பாடிப்

பக்கத்தில்தான் தன்னுடைய தொண்டைச் செய்து வரு கிறுனும். இப்பொழுது எங்கள் வமிசத்திற்கு அவனொரு வனே சிறந்திருப்பவன். இந்தத் தமிழ்நாட்டிலே பிறந்து, நேடாலில் வளர்ந்து, சீமையில் போய்ப் படித்து ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் தேறி, கைக்கு வந்த கலெக்டர் உத்தியோகத்தையும் உதறித் தள்ளிவிட்டு, நாட்டுத் தொண்டில் நாட்டங்கொண்டு இங்கே வந்து உழைத்து வருகிறுன். அவனல்லவோ உண்மையான தேசபக்தன்!"

'அவன் பேர்!' என்று ராஜேச்வரி ஆவலுடன் கேட்க, 'கந்தன்' என்று மூவர் வாயிலும் ஒரே காலத்தில் எழுந்தது.

பொன்னன்: "ஆமாம்; கந்தன்தான். அவன் பேர் உங்களுக்கெப்படித் தெரியும்? நான் அவனை இதுவரை நேரில் பார்த்ததில்லை. ஆனுலும் எங்கள் வமிசத்திற்கு அவனே மணிவிளக்கு என்பதிற் சந்தேகமில்லை."

ராஜேச்வரி: "ஆமாம்; அவன் உங்கள் வமிசத்துக்கு மட்டுமன்று; பாரத நாட்டுக்கே மணிவிளக்கு எனலாம். எங்களுக்கு அவனை நன்றுய்த் தெரியும். நாங்கள் ஆக்ஸ் போர்டில் சேர்ந்திருந்தோம். நாங்கள் பிரிந்தபின் அவ னிருப்பிடந் தெரியவில்லை. இப்பொழுது அவன் தரங்கம் பாடியி லிருந்தால் எங்கள் பாக்கியந்தான். அவனைப்பார்க் கக் கிடைக்கவேணும். நாங்களும் தரங்கம்பாடிதான் வருகிறோம். தயவுசெய்து எங்களை அவனிடம் அழைத் துச் செல்லவேண்டும்!"

"நீங்களும் தரங்கம்பாடியா போகிறீர்கள். என்ன ஆச்சரியம்! எல்லாம் ஒத்துக்கொண்டது. எனக்கு இன் றைத் தினமே சுதினம்; நரி முகத்தில் விழித்தேன். நானே

முதல் பொன்னன் பழைய பொன்னனில்லை !'' என்றிவ்வாறு ஆச்சரியங் கலந்து அபிநயித்துப் பொன்னன் தன் ஒற்று நாடகத்தை நன்கு நடத்தினன்.

ராஜேச்வரி தான் பொன்னனை ஒற்றனென் றெண்ணியது தவறெனக் கருதி, அதற்குத் தண்டனையாக அவனைப் பழைய சிநேகன்போலக் கொண்டாடி அவனிடம் தாராளமாகப் பேசத் தொடங்க, ரங்கனும் சேர்ந்துகொண்டான், இரவு முழுவதும் பேச்சுத்தான் ; தூக்கமே கிடையாது. ஸி. ஐ. டி. யிலிருந்து ஸி. ஐ. இ. பட்டம் பெறப்போகிற பொன்னனிடம் இருவரும் தங்கள் மனத்திலுள்ள எல்லாவற்றையும்—பழைய விஷயங்களையும் இனிச் செய்ய வேண்டியவைகளையும்—ஒன்றும் ஒளியாது சொல்லிவிட்டனர். ராஜேச்வரி உண்மையாகவே பேசிவந்தாள். ரங்கன் தலையசைத்து அவள் பேச்சை ஆமோதித்து, 'ததாஸ்து' சொல்லிக்கொண்டு வந்தான். அவன் தலையசைப்பு அவனுடைய மாறுதலடைந்த மனத்துக்கோ ரடையாளமா யிருந்தது. கலெக்டராயினும் அவர்களும் மனிதர்கள் தானே ! ஆதலால், மிகவும் கஷ்டத்திலும் அவமானத்திலுங் கூட மனம் மாறுபடாம லிருக்குமா ?

போட்மெயில், மேகக்கூட்டம்போற் புகையை விட்டுப் பொறிகளைச் சிதறிக்கொண்டு, இந்தச் சின்ன ரயில் பாதையிலும் தன் திறமையைக் காட்டுவதுபோல, அடங்காத வேகத்துடன் மாயமாய்ப் பறந்தது. அந்த ஓட்டமும் அவர்கள் பேச்சுக்கோர் அழகு கொடுத்தது. அவ்வாறு செல்லுகையில் ஒரு நிலக்கரித் தூள் பறந்து வந்து ராஜேச்வரியின் தாமரைக் கண்ணிற் படிந்து, முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகளைக் கண்ணாடிபோன்ற அவள்

கன்னத்தில் உதிரச் செய்தது. அதுவும் அவளுடைய இணையற்ற அழகுக்கோ ரழகு கொடுத்தது. ரங்கனும்பொன்னனும் இமை கொட்டாமல் அதனைப் பார்த்து மகிழ்ந்தனர். ராஜேச்வரி தன்பேச்சை நிறுத்திக்கொள்ளும்படி ஈசனிடமிருந்து வந்த எச்சரிக்கையாகும் அது என்று நினைத்துக் கண்ணைக்கூடக் கசக்காமல் பொறுத்துக்கொண்டு, பேச்சையும் குறைத்துக்கொண்டாள்.

## அத்தியாயம்—9

### ஆக்கூர் ரயில் விபத்து

I

நாம் நெ. 13 ரயில்வண்டித் தொடரை ஆக்கூர் ஸ்டேஷன் கைகாட்டியண்டை அலற விட்டு வந்தோமல்லவா? அதைக் கவனிப்போம்.

சுந்தரம் தன் சட்டையை அணிந்து கொண்டு, பச்சை சிவப்பு விளக்கை யெடுத்து வருவதற்காக ஒரே பாய்ச்சலாய்த் தாண்டிக் குதித்து ஆபீஸ் அறைக்கு ஓடினான். அதற்குள் எஞ்சினோ சோதனை விளக்கின் ஒளியை எட்டினமட்டும் வீசிக்கொண்டு அடிக்கடி கூவிக்கொண்டே யிருந்தது. சுந்தரம் கோபம் பொங்க, முதலில் கையை யிறக்கித் தொலைப்போமென்றெண்ணிக் கைகாட்டி மேடையருகே சென்றான். அப்பொழுது கரியனும் இவனைப்போலவே பரபரப்புடனும் கொஞ்சம் ஆச்சரியத்துடனும் அங்கே வந்துகொண்டிருந்தான். சுந்தரம் அடங்காக் கோபங்கொண்டு, “கழுதைப் பயலே, எங்கடா போய்த் தூங்கிக்கொண்டிருந்தாய்?

கள்ளுக்கடையில் இன்றைக்கு ரொம்ப மும்முரமோ?" என்றான்.

"தூக்கமா, கள்ளுக்கடையா, கழுதைப் பயலா வாணு இருக்கலாம். தூக்கமேது? வீட்டிலே காலா காலத்திலே சோறே கிடைக்கிறதில்லெ! தூக்கம் எங்கே வரப்போறது? வயத்துக்குச் சோறில்லெ; சண்டெ மண்டிச்சு; வாப்பேச்சு முத்திக் கைப்பேச்சாச்சு; அவ மண்டெயெ ஒடெச்சேன். இதெல்லாம் முடியக் கொஞ்சம் நேரமாயிடிச்சு. கடசிலே சோறு திண்ணுட்டு வரக்கூட நேரமில்லெ! இந்தக் கழுதெப்பயமகன் வண்டியோ அவளாட்டம் அலறிப் பொடெக்கறது. அலறட்டம்! நிலக்கரிபோலே கறுத்த இந்தக் குடிகார டிரைவர்களெ நம்பவே கூடாது! ரயில் புகையோடெ வரும் தீப் பொறியெ நம்பினு அது நெருப்பாகுமோ? இந்தப் பயகளுக்கு ஒரு சூடு போடணும். இல்லாட்டி ஒணக்கெ வராது. இப்படித்தான் கண்டபடி ரயிலெ ஓட்டி டயத்துக்கு முன்னே பின்னே இஷ்டம்போலெ வருவாங்க" என்று கரியன் அலங்காரமாகப் புலம்பினன். அவனுக்கு இயற்கையிலேயே வர்ணனைகளில் கொஞ்சம் பிரியம் உண்டு. கள்ளுக்கடை அந்தப் பெட்டிப் பாம்பைப் படமெடுத்தாடப் பண்ணிவிட்டது. மேலும் அன்று மாலை முதல் நடந்த மற்றச் சம்பவங்களும் அதற்கனுகூலமாயின. கேட்பானேன்!

சுந்தரத்திற்கோ கரியன் வார்த்தை ஆச்சரியமாயிருந்தது. 'சாதம் வேணுமென்றால் பெண்டாட்டியை அடித்தால் கிடைக்குமாமே! என்ன அதிசயம்! இந்தச் செப்பிடுவித்தை நமக்குத் தெரியவில்லையே!' என்றுலோ

சிக்கலானான். மறுபடி 'இந்த ஆலோசனைக்கு இதுவா காலம்? ரயிலோ அலறுகிறது! எவனோ புதுப்பேர்வழி— சிறு பிள்ளை ஓட்டுகிறான் போலிருக்கிறது! விசிலிலேயே கைபோட்டுக் கொள்ளை போவதுபோல் ஓயாமல் கூவுகிறான். இப்பொழுதா நம் சாம்பார் விஷயத்தை ஆலோசிப்பது!' என்று தேறி, "கரியா! உன் வீட்டுக் கதையைக் கட்டு; கையை யிறக்கு; பாயிண்டைப் பாரு. அடுத்த லயனில் பாலஸ்டு வண்டி நிற்கிறதே! சரியாய்க் கவனி பாயிண்டை" என்றான்.

"பாயிண்டு! பெரிய ஜங்ஷனோ?" என்று உறுமிக்கொண்டே கரியன் கைகாட்டி மேடைக்குப் போனான்.

"கரியா, கரியா என்னடா தள்ளாடுகிறாயே? பூராக் குடிபோலிருக்கிறது! கீழே விழுந்து ரயிலில் அரைபட்டுப் போய்விடாதே! கையிறக்குமுன் பாயிண்டைப்பாரப்பா" என்று சொல்லிவிட்டு ஆபீஸ் அறையை நோக்கிப் போனான் சுந்தரம்.

"ஆ! பொல்லாப்பாயிண்டு, இந்தப் பெரிய ஜங்ஷனில்! யார் குடித்திருக்கிறது, கரியனா? ஒருகாலுமில்லை! எஞ்சின் டிரைவர்தான் பூராக் குடி! இல்லாவிட்டால் இப்படி ஓயாமல் அலறுவானா?" என்று முணுமுணுத்து, "வாவா மொட்டச்சி ரயிலே! வா இண்ணக்கி, அவ மண்டெயெ ஒடெச்சாப்லே ஒம்மண்டெயெம் ஒடெச்சுடறேன். இந்தப் பாழாப்போன ரயில்வேலெக்கி ஒரு நிமிஷங்கூட ஓச்சலுமில்லெ ஒழிவுமில்லெ" என்று திட்டிக்கொண்டே கையை இறக்கினான். இறக்கினானோ இல்லையோ! நெ. 13 வண்டி ஒரு பெரிய, காதைக் குடையும்படியான விசில் கொடுத்துத் தடபுடலாய்க் கர்ச்சித்துக்கொண்டு புறப்

பூட்டு வந்துவிட்டது. கூட்டி லடைந்த பறவைகள்கூட அதைக் கண்டு பயந்து கூச்சலிட் டோடத்தொடங்கின.

சுந்தரம் விளக்கும் சட்டையும் எடுப்பதற்காக ஆபீஸ் அறைக்குப் போய்ப் பூட்டைக்கூடச் சரியாய்த் திறக்க வில்லை. அதற்குள் நெ. 13 வண்டி வந்து வழிக்காகச் சண்டை போடுவதுபோல, அங்கே தூங்கிக்கொண்டிருந்த பாலஸ்டு வண்டியுடன் மோதிற்று. எஞ்சினேடு எஞ்சின் தாக்கித் தகர்ந்தன. வண்டிகள் சில நொறுங்கி விழுந்தன. நல்ல வேளையாக ஒருவருக்கும் உயிர்ச்சேதமில்லை; பல மான காயமு மில்லை. சுந்தரம் பிரமித்து மரம்போல அசை வற்று நின்றுவிட்டான். அப்போது வானத்தில் இளநிலா ஒரு மேகத்தினிடையே அகப்பட்டு வெளியேவர முயன்று கொண்டிருந்தது.

அன்று ரயிலில் அதிக ஜனக்கூட்டமில்லை. மைனர் முதலியாரும் அவருடைய உல்லாஸ கோஷ்டியினர் சில ருமே வண்டியில் இருந்தனர். ஆனல் முதலியார், அவர்க ளுடன் சாதாரணப் பிரயாணியாய் அதில் வரவில்லை. அவ ருக்கு அன்று எஞ்சின் டிரைவரா யிருக்கவேண்டுமென்று ஓர் அவா எழுந்தது. அதனுல் அவர் தன் செங்கோல் பிடிக்கும் கையால் எஞ்சினையே ஓட்டி வந்தார். எஞ்சின் டிரைவரும் ஆபத்துச் சம்பத்திற்குப் பக்கத்தில் மரியாதை யாய் உட்கார்ந்திருந்தான். தன்னுலேயே போடப்பட்ட ரயில் பாதையில் தானே ஒருமுறை ரயிலை ஓட்டவேண்டு மென்று முதலியார் ஆசைகொண்டதும் இயற்கைதானே! அதிலும், அந்தத் தென்றலும் இளநிலாவும் கடற்காற்றும் கூடிய அந்த மனேகரமான வேளையில் யௌவனத் திமி ருள்ள யாருக்கும் அவ்வெண்ணந் தோன்றுமன்ருே?

அந்த ஆபத்து வேளையில் ஸரஸ்வதியும் பெண்களுக்குரிய கட்டுப்பாட்டைத் துறந்து ரயிலடிக் கோடிவந்து, சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்ட மான்போல நடுங்கி அச்சமும் கவலையும் தோன்றத் தன் கணவனருகே நின்ருள். ஒன்றுக்கும் அஞ்சாத அவள் அன்று அந்தச் சம்பவத்தைக் கண்டு கதிகலங்கிவிட்டாள்.

'சாயங்காலம் முதல் சண்டை சச்சரவுகளே எங்கும் சூழ்ந்திருக்கின்றன! நல்ல யௌவன காலத்தில் இன்பமயமாக இருக்கவேண்டிய இல்லற வாழ்க்கையைச் சிதறடிக்கும்படி வீட்டில் கிளம்பின புயற்காற்று, நல்லவேளையாக அங்கே தாக்காமல் வெளிக்கிளம்பி வந்து கட்டையையும் இரும்பையும் மோதிச் சிதைத்ததே பெரும்பாக்கியம்' என்று ஏழுமலையானை மனமாரத் துதித்தான் சுந்தரம். ஸரஸ்வதியும் அவனுடன் சேர்ந்து கைகூப்பி வேங்கடேசனை வேண்டினுள். அவர்கள் வாழ்க்கையில் இருவரும் மனமொத்து ஒருகாரியம் செய்தது இதுவே முதல் தடவை! இது ஸரஸ்வதியின் பிற்கால வாழ்வில் ஒரு மாறுதலுக் கறிகுறியாகத் தோன்றியது.

## II

மாயவரம்-தரங்கம்பாடி கிளைப்பாதையில் இதுவே முதன் முறையாக நேர்ந்த விபத்தாகும். சுந்தரத்திற்கும், அவன் வேலைக்கு வந்தது முதல் இம்மாதிரியான விபத்து நேர்ந்தது இதுவே முதல் தடவை. இந்தக் கஷ்டத்திலிருந்து ஸரஸ்வதிக்கு ஒரு புதிய வாழ்வு உதயமாகிவிட்டது. முட்டை உடைந்து குஞ்சு வெளிப்படுவது போலஅவள் வாழ்க்கைமுறை அறவேமாறிப் புதிய தன்மை

பெற்றது. இதுவரை ஒன்றிலும் அதிகம் மனம் பற்றுத அவளுக்கு இல்லற வாழ்க்கையிலும், உலக நிகழ்ச்சிகளிலும், பொது நன்மைக்குரிய காரியங்களிலும் மனம் பதியலாயிற்று. குவிந்துள்ள அரும்பு கதிரவன் கிரணங்களைக் கண்டு மலர்வது போல அவள் மனமும் மலர்ந்தது. அவள் கண்களும் அக்கம் பக்கத்து நிகழ்ச்சிகளை நாடலாயின. மலைச் சரிவுகளில் ஊறி வரும் நீரானது பருவ காலத்து மழையாலும் புயலாலும் ஓரிடத்தில் தங்கி நிற்கும் பரிசுத்தத் தன்மையை யிழந்து, கல், மண் முதலியவற்றுடன் வரம்பின்றிப் புரண்டோடிவரும் கலங்கலான வெள்ளத்தோடு கலந்து, தானும் தங்குதடைகளைத் தாவிச் செல்வது போல அவள் மனமும் பல வழிகளைப் பற்றிச் செல்லத் தொடங்கிற்று.

மைனர் சொக்கலிங்க முதலியாரோ ஸரஸ்வதியின் மாசற்ற அழகைக் கண்டு வியந்து அதிலீடுபட்டு, இளநிலாவொளியில் அவளுடைய முழுமதி முகத்தை உற்று நோக்கிய வண்ணமா யிருந்தார்.

கரியன் பயத்தால் படபடக்கும் தன் மனத்துக்கு, தான் ஆக்கூர் ஸ்டேஷன் போர்ட்டர் அல்ல அல்ல என்று ஆறுதல் சொல்லிக்கொண்டு, பைத்தியக்காரன் போல அங்கு மிங்கும் திரிந்தான். 'ரயிலில் எது தவறினும் அது போர்ட்டர் தலையில்தான் வந்து விடியும்' என்று அடிக்கடி தன் மேலதிகாரிகளும் பிறரும் சொல்ல அவன் கேட்டிருக்கிறானகையால், ஒருவேளை தன்னைக் கைதியாக்கிச் சிறைப்படுத்திவிட்டால் என்ன செய்வது! என்று பயந்து, இங்கிலையில் தன் பெரியப்பனைப் போலத் தானும் நேட்டாலுக்கு ஓடிவிடுவதே நலமென்று நினைத்தான்.

இச்சமயம் கந்தனும், கரியன் மனைவியை ரயிலடிக்குக் கொண்டுவந்த கூட்டத்துடன் அவ்விடம் வந்து சேர்ந்தான். அவன் எப்பொழுதுமே இரவில், ஸ்டேஷனுக்கருகில் ஒரோடையின் கரையிலுள்ள, தென்னை மரங்கள் அடர்ந்த ஒரு மண்மேட்டில் வெளியிலேதான் படுத்துறங்குவது வழக்கம். பகல் முழுதும் உழைக்கும் அவனுக்குக் கவலையற்ற இந்தத் தூக்கந்தான் ஆறுதலளித்து வந்தது. ரயிலின் கடகட சப்தம் அவனுக்குத் தாலாட்டுப் போலிருக்கும்.

கரியன் தனக்குச் செய்த தீச்செயலை நினைத்தும் வண்டி மோதுண்ட விபத்தைக் கண்டும் திடுக்கிட்டு மனங் கலங்கிய காமாட்சியும், பயத்தால் வேர்வை பொழிய நடு நடுங்கி ஸரஸ்வதியின் பக்கத்தில் வந்து அவள் துணையை நாடினவள்போல நின்றாள். சொக்கலிங்க முதலியாரும் ஆஜானுபாகுவாய் ஆகாயமளாவக் கருமேகம் போன்ற நிறத்துடன் எல்லோரையும் காக்கும் பிரபுப்போல இருளில் ஒருபுறத்தே நின்றார்.

ரயில் மோதின விபத்தின் அதிசயக் காட்சியைக் காணக் கிராமம் முழுதும் கொல்லென்று வந்து கூடிற்று. முன்னமே, காயமடைந்து மூர்ச்சித்துள்ள கரியன் மனைவியைத் தரங்கம்பாடி ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சை செய்வதற்காகக் கொண்டுபோகும் பொருட்டு அவளுடன் வந்துள்ள கூட்டத்தோடு இதுவும் சேர, ஸ்டேஷனில் கூட்டந் தாங்கவில்லை. ஸ்டேஷனுக்குக் கொண்டுவரப்பட்ட கரியன் மனைவிக்கு, உடனே செய்யவேண்டிய ஆபத்துக்காலச் சிகிச்சையை ஆஸ்பத்திரியில் பழகின ஒருதாதிபோல ஸரஸ்வதி கவனித்துச் செய்தாள். எங்கும் ஒரே குழப்பமாயிருந்தது.

இந்தக் குழப்பத்திலிருந்து தெளிந்து முதலில் விழித்துக்கொண்டவன் சுந்தரந்தான். அவன் மைனர் முதலியாரை அந்த வண்டியில் கண்டதும் மிக்க ஆச்சரியமடைந்து, அவரை நோக்கி மெல்ல, "என்ன முதலியார்வாள்! தாங்கள் மாயவரம் போகவில்லையோ? இப்போது இப்படித் தரங்கம்பாடியிலிருந்து வருகிறாப்போலிருக்கிறதே!" என்று விசாரித்தான்.

"ஆமாம் ஸ்டேஷன்மாஸ்டர்! மாயவரத்தில் நான் பார்க்கப்போன பேர்வழி அகப்படவில்லை. அவன் காரைக்கால் போய்விட்டானும். உடனே நானும் என் காரைப் போட்டுக்கொண்டு ஒரு நொடியில் காரைக்கால் போய்ச் சேர்ந்தேன். இம்மாதிரியான சந்தர்ப்பங்களை யுத்தேசித்துத்தான் நான் ரயிலில் எங்கேயாவது போனாலும் என் காரையுங் கூட ஓட்டிவரச் சொல்லுவது வழக்கம். காரைக்காலில் பேர்வழி அகப்பட்டான்; காரியமும் முடிந்தது. அங்கே ஒருமணி நேரம் ஆனந்தமாய் ஒரு நிமிஷம் போலக் கழித்தேன். என்ன ஜோர்! பிரஞ்சு ராஜ்யமே ராஜ்யம்! வீதிகளின் ஒழுங்கும், நகரத்தின் ஏற்பாடுகளும், குடிகளின் சௌக்கியமும், சுயேச்சையும் என்ன அழகு! ஊர்கள் இருந்தால் அப்படி யிருக்கவேண்டும்! பிறகு அங்கிருந்து தரங்கம்பாடி வந்தேன். இந்த வண்டியும் புறப்படத் தயாராயிருந்தது—"

"வண்டியைக் கூடத் தாங்கள்தான் ஓட்டிவந்தாற் போலிருக்கிறது!"

"ஆமாம் சார்! ரூலுக்கு அது விரோதந்தான்! ஆனாலும் நான் போட்ட லயன்தானே இது? ஒரு முறை ரயிலையும் நம் கையால் ஓட்டிப் பார்ப்போமென்று ஆசையுண்

டாயிற்று; ஓட்டினேன். டிரைவரும் பக்கத்திலேதா னிருந்தார். இந்த அற்பக் கிளைப்பாதையிலும் இப்படிப் பட்ட கஷ்டம் நேருமென்று யார் நினைத்தார்கள்? ஒரு வேளை ஏதேனும் ஆணிகள் கழன்று லயனே சரியாயில்லை யோ, அல்லது பாயிண்டு தப்போ! எதற்கும் இந்தக் கரியன் பயல்தான் பொறுப்பாளி. அவனை உதைக்கவேண்டும். இதனால் நமக்கு ஏதேனும் சங்கடம் வருமோ ஸார்? இதில் கம்பெனிக்கு என்ன நஷ்டம்? எஞ்சினில் ஏறியிருந்த வெகு காலத்துத் துருவெல்லாம் பைசா செலவில்லாமல் இனமாய் எடுபட்டுவிட்டது; அது ஒரு லாபந்தானே? எதைத் தொட்டாலும் எஸ். ஐ ஆருக்கு லாபந்தானையா! என்ன அதிர்ஷ்டம் இவர்களுக்கு! இந்த விஷயத்தை நீரே கவனித்துச் சங்கடமொன்றும் நேராமல் சரிப்படுத்தி விடும்.''

"நான் பார்த்துக்கொள்ளுகிறேன் முதலியார்வாள்! தங்களுக்குக் கவலை வேண்டாம்! தங்கள் மனத்தை இதில் செலுத்தி வீணே கஷ்டப்படவேண்டாம்! சக்கர மிருக்கு மிடங்களில் மோதலும் கூடப்பிறந்ததுதானே! இந்தத் தெய்வாதீனமான காரியங்களுக்கு யாரென்ன செய்ய முடியும்?" என்று சுந்தரம் முதலியாருக்குத் தேறுதல் கூறினன். முதலியாரும் மனமகிழ்ந்து, தன் கோஷ்டி யின் நடுவிலே வலைப்பைகளில் முடிப்பிட்டுக் கிடக்கும் பணக்குவியலைச் சாடையாய்ச் சுந்தரத்திற்குக் காட்டினர்.

வெள்ளி ரூபாய்களைக் கண்ணிற் கண்டதும் சுந்தரத் திற்கு அடங்காத மகிழ்ச்சி பொங்க ஆனந்தக் கண்ணீர் பெருகியது. "ஆலோசனையே வேண்டியதில்லை, முதலியார் வாள். நானிருக்கும்போது தங்களுக் கென்ன கவலை?

நான் எல்லாவற்றையும் சரிப்படுத்திவிடுகிறேன். தாங்கள் நிச்சிந்தையாய்த் தூங்கப்போகலாம்", என்றான்.

சுந்தரம் அந்தப் பணம் முழுதும் தன்னுடையதாகவே எண்ணி மகிழ்ந்தான். தோண்டாமலே ஊறிவரும் ஊற்றுப்போல, உழைப்பின்றி ஒருவனுக்குப் பிறர் பணத்தில் பங்கு கிடைக்குமானால் அதில் உண்டாகும் மகிழ்ச்சிக்கு அளவுண்டோ?

சுந்தரம் இவ்வாறு மனப்பால் குடித்துக்கொண்டு பெருமிதத்துடன் ஸரஸ்வதியை ஒருமுறை பார்த்தான். 'இனி நமக்கென்ன குறை?' என்று அவன் கண்கள் பேசின.

சொக்கலிங்க முதலியாரோ ஸரஸ்வதியின் இணையிலாத அழகில் மயங்கிக் கண்சுழல மிரண்டு விழித்தார். காமவெள்ளத்தி லாழ்ந்து திளைத்த அவருக்குத் தான் எங்கேயோ ஆகாயத்திற் பறப்பதுபோலத் தோன்றிற்று. ஸரஸ்வதியின் அழகு அமானுஷ்யமா யிருந்தாலும் தன் நீண்ட கைக்கு அது எட்டாததன்றே என்றெண்ணித் தைரியங் கொண்டார். இந்த எண்ணம் தவறானதென்றும் அது கடவுளுக் கொவ்வாத காரியமென்றும் இடையே அவர் மனச்சாட்சிக்குத் தோன்றியபோதிலும், 'காமத்திற்குக்கண்ணில்லை' என்றபடி மனச்சாட்சியின் கொள்கை நிலைபெறவில்லை.

ஸரஸ்வதி, முதலியாரின் அவஸ்தையைக் கண்டு அவர் மனநிலையை யுணர்ந்து, மிகவும் வெறுப்படைந்தவளாய், ஆபத்து வேளையில் சீறித் தலையெடுக்கும் சர்ப்பம் போலத் தலைநிமிர்ந்து பொறுமையுடன் கம்பீரமாய் நின்றாள். அச்சமயத்திலும் அவள் பெருமிதமும் அழகும்

சோபிக்கத் தெய்வமங்கை போலவே விளங்கினாள். அரிசி, உப்பு, புளி முதலியன தின்று ஜீவிக்கும் மானுடவர்க்கத்தினள் அல்லள் என்றே தோற்றிற்று.

சுந்தரமும் இவற்றைக் கண்டு, 'இதேதடா தொல்லை' என்றெண்ணிச் சொக்கலிங்க முதலியாரை நோக்கி, "முதலியார்வாள்! இன்றைக்குத் தங்களுக்கு நிரம்பவும் சிரமம்; அகாலமாய்விட்டது; குளிராகவும் இருக்கிறது; ஆகையால் வாருங்கள் என் அறைக்குப் போகலாம். என் ஆபீஸ் மேஜை விசாலமாயிருக்கிறது. தாங்கள் அதன் மேலேயே சௌகரியமாய்ப் படுத்துத் தூங்கலாம். அதற்குள் நான் மாயவரத்துக்கு டெலிபோன் பண்ணி வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன்" என்று கூறி, கரியனைக் கூப்பிட்டு, "கரியா, இந்தப் பணப்பையை எடுத்துவா! ஆபீஸ் இரும்புப் பெட்டியைத் திறந்து அதில் ஜாக்கிரதையாக வை" என்றான்.

முதலியாருக்குத் தூக்கக் கலக்கந்தான்; கொட்டாவி விட்டுக்கொண்டேயிருந்தார். மாலை நாலு மணி முதல் ஒரே அலைச்சல். மேலும், காரைக்காலில் குடி விருந்து பலம். ஆகையால் அவருக்குப் படுத்தாற்போதும் என்றாய் விட்டது. தம்மவர் கண்ணிற் காணாத இடத்தில் என்ன செய்தால்தான் யார் கேட்கப்போகிறார்கள்? அதிலும் சீமானாயிருந்தால் சொல்லவும் வேண்டுமா? அவர் தேடிப் போன வியாபாரியும், அவர் மூவாயிரம் கடன் கேட்டதற்கு ஐயாயிரமாகக் கொடுத்து, ரூபாய் பதினாயிரத்துக்குப் பிராமிஸரி நோட்டு எழுதி வாங்கிவிட்டான்.

முதலியார் சுந்தரம் குறிப்பிட்டபடி போய்ப் படுத்தார். மறுநிமிஷமே குறட்டைவிட ஆரம்பித்து விட்டார்!

இத்தகைய பிரபுக்கள் குறட்டையின்றித் தூங்க முடியுமா? சுந்தரம், பணத்தையும் முதலியாரையும் பத்திரப்படுத்தி அறைக்கதவைப் பூட்டித் திறவுகோலையெடுத்துக்கொண்டு வெளியே வந்து, அங்கே கூடியிருந்த ஜனங்களையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு ஸரஸ்வதி காமாட்சி முதலியோர் இருக்குமிடம் போய்ச்சேர்ந்து, அன்றைய விபத்தைக் குறித்து மேலே யென்ன செய்வதென்று ஆலோசிக்கலானான்.

## அத்தியாயம்—10

### தீக்கொளுத்தல்

I

ஸரஸ்வதி, எப்பொழுதுமில்லாத ஒரு புன்சிரிப்புடன் இனிய குரலில், "நீங்கள் இன்னும் சாப்பிடவில்லையே? மறந்துவிட்டாற் போலிருக்கிறது! சாப்பிட வாருங்கள்" என்று தன் கணவனை வருந்தி அழைத்தாள்.

"மறக்கவில்லை ஸரஸு; இன்றிரவு நமக்கு ஏகாதசி. இம்மாதிரியான ஆபத்து எனக்கு இதுவரை நேர்ந்ததில்லை. நான் பதரிகாச்ரமம் முதல் ராமேச்வரம் வரையில் அலைந்து திரிந்த காலங்களில்கூட இன்றிரவுபோல ஒரு நாளும் அநுபவித்ததில்லை" என்றான் சுந்தரம்.

"ஆமாம்; என் மனமும் அவ்வாறே உணர்கிறது. சட்டையுரித்த நல்லபாம்புபோல என்னிடம் ஒருவித மாறுபாடுண்டாக, நான் மறுபிறப்படைந்தாற்போல எனக்குத் தோற்றுகிறது" என்று தாழ்ந்த குரலில் வணக்கத்துடன்

ஸரஸ்வதி விடை கூறினள். அவள் கண்கள் அவளிடத்துண்டான புதிய வுணர்ச்சியையும் மாறுபாட்டையும் காட்டிக்கொண்டு மிளிர்ந்தன. கந்தர்வ கன்னிகையோ! வித்தியாதர மங்கையோ! என்று கண்டோர் வியக்கும்வண்ணம் அவள் நின்றாள். இது நிற்க,

கந்தன் இந்த விபத்திலும் மனஞ்சலிக்காமல், சாந்தத்துடனும் சிறிது ஆலோசனையுடனும் பிளாட்பாரத்தின் ஓரமாக அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தான். இடையிடையே கரியன் மனைவியின் நிலையையும் கவனித்து வந்தான். பூக்களின் மணம் காற்றோடு கலந்து, சுவாசிப்போர் மனத்தை மகிழ்விக்குமாறுபோல, ஸரஸ்வதியின் அணிமையால் கந்தனுக்கொரு புதிய வுணர்ச்சியும் சக்தியும் தோன்றின.

"இதோ இப்படிப்பட்ட வேளையிலும் தைரியமாகவும் சாந்தமாகவும் உலாவிக்கொண்டிருக்கும் அவர் யார்? கரியன் மனைவியை அடிக்கடி கவனிக்கிறார். அவனுக்கு உறவினராயிருக்கவும் முடியாது போலிருக்கிறதே!" என்று ஸரஸ்வதி ஊக்கமாய்க் கேட்டாள்.

"ஆமாம். அவன் கரியனுக் குறவுதான். அவன் பெயர் கந்தன். கரியன் இப்பொழுது போர்ட்டராயிருந்தாலும், உயர்ந்த வம்சத்திற் பிறந்தவன். கந்தன் கதையே கதை! நாவலில் நீ வாசித்துள்ள கதைகளெல்லாவற்றையும் விட விசித்திரமானது. நேட்டாலில் பிறந்து, பாலியலில் வாசித்து—"

"பாலியல்! ஆக்ஸ்போர்டிலா?"

"ஆம்! ஆக்ஸ்போர்டில்தான். ஐ. ஸி. எஸ். பரீக்ஷையும் தேறி உத்தியோகம் வேண்டாமென்று உதறித் தள்ளி

விட்டுத் தாய்நாட்டைக் குழைப்பதற்காக வந்துவிட்டான். அவனல்லவோ உண்மைத் தொண்டன்! நீ அடிக்கடி இந்துவையும் தேசமித்திரனையும் படித்துவிட்டு, 'இதென்ன வேலை; தேசத்துக்கல்லவோ உடலைச் செருப்பாகத் தைத்து உழைக்க வேணும் இச்சமயம்' என்று சொல்வதில்லையா? அதுபோலவே கந்தன் உத்தியோகத்தையும் சிற்றின்பத்தையும் படாடோபத்தையும் விட்டுவிட்டுத் தன் நாட்டு முன்னேற்றத்திற்கே உழைக்க வந்திருக்கிறான்."

"அது வல்லவோ உயர்குடிப் பிறப்பின் லக்ஷணம்!"

"ஆம்; அவன் பிறப்பும் சரி, உழைப்பும் சரி. எல்லாம் உத்தமமானவையே. ஆனால் அவன் உழைப்பெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போல வீணாகிறது. எவ்வளவுதான் தேய்த்துக் குளிப்பாட்டினாலும் கழுதை குதிரையாய்விடுமா?"

"கழுதை குதிரையாகாவிட்டாலும் சுத்தமாயாவது இருக்குமல்லவா?"

"ஆனாலும் கழுதை மறுபடியும் புழுதிக்குத்தான் போகும்?"

"அது அப்படிப் போனாலும் நாம் செய்யவேண்டிய கடமையைச் செய்யவேண்டியதுதான். அதுதான் பலனை யெதிர்பாராத உத்தம கர்மாவென்று சொல்லப்படுவது. கந்தனைப் பாருங்கள்! அவர் முகத்தில் சாந்தகளை எவ்வளவு நிரம்பியிருக்கிறது! அவரல்லவோ நாட்டின் உண்மையான தொண்டர்!"

"ஆம்! ஏழைக் கிராமவாசிகளின் நன்மைக்காகப் பாடுபடுகிறான். அதன் பொருட்டுத் தன் பொருளையும் தண்ணீர்போலச் செலவிடுகிறான். ஆக்கூர்க் கள்ளுக் கடையை

ஒழித்துக் குடிப் பழக்கத்தையும் நிறுத்துவதற்காக ஒருமாத காலமாய்க் கள்ளுக்கடை மறியல் செய்து வருகிருன். சேற்றிலும் சகதியிலும் விழாதே யென்று பன்றிக்குபதேசம் செய்வதுபோல இந்தக் குடிகாரப் பண்ணையாட்களுக்கு நல்வாழ்வின் தன்மையை எடுத்துப் புகட்டுகிருன். இவன் இப்படியிருக்க, அதோ ஆபீஸ் அறையில் குறட்டை விடும் மைனர் முதலியாரோ இவனை ஒழிக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிருர். கந்தனுலேதான் நம் நாட்டுப் பழைய வரன்முறையான பழக்க வழக்கங்களுக்குக் கேடு வந்ததென்று சொல்லுகிருர். அவன் ஊரையே கெடுக்கவந்த கோடாலிக்காம்பு என்கிருர். அவரோ முந்நூறுவேலி மிராசுதார். அரசனுக்குச் சமானம். இந்தப் பிரதேசத்தில் அவரிட்டது சட்டம். அவர் சொன்னபடி கலெக்டருள்பட எல்லாச் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ஆடுகிருர்கள். ஸரஸா! இன்னும் ஒரு வாரத்திற்குள் எத்தனையோ அதிசயங்களை நம் கண்ணுலே காண்போம். கந்தன் சிறை யடைவான்! முதலியார் பெரு மகிழ்வடைவார்! பட்டம் பெறுவார்! அவர் இன்றைக்கு மாயவரம் போனதன் முக்கிய நோக்கங்கூட, கடன் வாங்கினதும் கந்தனை யெப்படியாவது தொலைத்துவிட வேண்டுமென்பதுதான். அவருக்கிப்போது கடன் கிடைத்தது கோடாலிக்குக் காம்பு போட்டது போலத்தான். டிப்டி கலெக்டரை நேரில் பார்த்து இவ் விஷயமாகப் பேசியிருக்கிருராம். இந்தக் கலிகாலத்தில் பணப் பெருமையே பெருமை! குணத்திற்கும் குலத்திற்கும் மதிப்பேது? பணம் பந்தியிலே; குணம் குப்பையிலே; குலம் சந்தியிலே. காசின் வேலையே வேலை!".

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், முதலியாரோ ஆபீஸ் அறையில் ஆனந்தமாய்க் குறட்டை விட்டுத் தூங்கினார். அவர் குறட்டையின் ஓசை, மலைச் சரிவில் குட்ஸ் வண்டிகளை யிழுத்துக்கொண்டு கஷ்டப்பட்டு மேலேறும் ஒரு கிழட்டு எஞ்சினுடைய ஓசை போல, சாவி போடும் துவாரத்தின் வழியாகக் காதுக் கெட்டியது. அந்த ஆழ்ந்த விலையற்ற தூக்கத்தின் அறிகுறியான குறட்டை முந்நூறு வேலிச் சீமானுடைய குறட்டையாகையால் சுந்தரம் அதைச் சங்கீதம் போல் இனிமையாகக் கேட்டான்.

கந்தனைப் பார்த்ததுமுதல் ஸரஸ்வதிக்கு, அவன் இந்த அஹிம்ஸா யுத்தத்தில் சிறந்த வீரனாயிருப்பானென்று புலப்பட்டது. அவள் அடுப்பங்கரையி லிருப்பவளாயினும் தேசபக்தியில் எப்பொழுதும் ஈடுபட்டவளாதலால், அத் தேசபக்தி விஷயத்தில் தன் உயிரையே தியாகம் செய்யக்கூடியவன் கந்தன் என்று மிக விரைவில் உணர்ந்தாள். சுந்தரத்தை நோக்கி "உங்களுக்கு அவரை நேரில் தெரியுமோ?" என்று கேட்டாள்.

சுந்தரம்: "கொஞ்சம் தெரியும். நாம் இன்றுதானே இங்கு வந்திருக்கிறோம். காலையில் அவன் ஒரு பார்சல் எடுத்துப்போக வந்திருந்தான். ஏழை ஜனங்களுக்குக் கதர்த் துணியும், அவர்கள் சாகுபடிக் காலம் போக மீதிக் காலத்தை வீண் போக்காதபடி அவர்களுக்குத் தொழில் கற்றுக்கொடுக்கப் புதுமாதிரிச் சர்க்காவும் வரவழைத் திருக்கிறான். பாவம்! அவன் உண்மையாகத்தான் பாடு படுகிறான். உடலாலும் பொருளாலும் உழைக்கிறான். ஆனாலும் இந்த முதலியார் பண்ணையாட்களைத் திருத்த

முடியுமா? ஆக்கூர்ப் பண்ணையாட்களென்று எங்கும் பிரசித்தம். எல்லாப் பண்ணையிலும் இதுதான் அடங்காப் பண்ணை. ஆட்கள் எஜமானெருவருக்குந்தான் கூழைக் கும்பிடு போடுவார்கள். அதுவும் அளந்துதான். ஒரு குறுணிக்கு ஒரு கும்பிடு! அவர்களையா சீர்திருத்த முடியும்!"

ஸரஸ்வதி: "'எறும்பூரக் கல்லுந் தேயும்' என்றபடி கந்தனை ஒரெறும்புக்குச் சமானமாக வைத்தாலும், ஏதாவது கொஞ்சமேனும் பிரயோசனப்படாதா? இவ்விஷயத்தில் நாமெல்லோரும் சேர்ந்து பாடுபட்டால்தான் நாடு முன்னேற்றமடையும். காற்று இசைவாய் அடிக்கும் போதுகூட நாம் பாய் விரிக்காமல் உறங்கினுல், பின்பு காற்று நின்றபிறகு அலைமிகுந்த கடலில் இப்பழைய மரக் கலத்தைத் துடுப்புப் போட்டுத் தள்ளியா கரைகொண்டு போய்ச் சேர்க்கப்போகிறோம்?"

சுந்தரம்: "ஸரஸூ! உன் உபமான உபமேயங்கள் எவ்வளவு அழகாயும் பொருத்தமாயும் இருக்கின்றன, பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல!"

ஸரஸ்வதி, "அந்த அலங்காரங் கிடக்கட்டும். கிராம வாழ்க்கையைச் சீர்திருத்தாவிட்டால் வேறு எவ்விதத்தில் இவ்வேழைகளுக்கு நன்மை செய்யமுடியும்? நகரங்களில், மைலுக்கு அரை லட்சம் செலவழித்துத் தார் ரோடு போட்டாலென்ன? தண்ணீர்க் குழாய் வைத்தாலென்ன? மின்சார விசை வண்டிகளும் விளக்குகளும் பிற செளகரியங்களும் அமைத்தாலென்ன? இவர்களுக்கென்ன லாபம்? கந்தனை இங்கே கூப்பிடுங்களேன்! அவருடைய வேலை முறைகளையும் வழிகளையும் நாமு மறிந்துகொண்டு நம்மாலியன்றமட்டில் அவரோடு கலந்துழைப்போம். அப்

பொழுதுதான் இந்தஆக்கூர்க் காட்டில் நமக்கும் பொழுது போகும். ஏன், உங்களுக்கு வேண்டியமட்டும் சாம்பார் செய்யவும் அடுப்பெரியும்!'' என்று கூறிச் சிறிது புன்னகை கொண்டாள்.

சுந்தரம், கந்த னுலாவும் பக்கமாகச் சென்று அவனுடன் ஸரஸமாய்ப் பேசத் தொடங்கினன். ஸ்டேஷன் மாஸ்டருக்குத் தன் வளைவிற்குள் வந்தவர்களை அதிகாரத்துடன் வெருட்டவோ அல்லது அவர்களுடன் சிநேகபாவமாகப் பேசவோ உரிமையுண்டல்லவா ?

"என்ன கந்தா! இரவு மணி பதினொன்றாயிற்று; இன்னும் படுக்கவில்லைபோலிருக்கிறதே? ஆம்! எனக்கொரு தொல்லை ; உனக்கொரு தொல்லை. எனக்கு ரயில்மோதல்; உனக்குக் கரியன் மனைவி மண்டையுடைதல். நாம் என்ன செய்வது! அவனைத் தரங்கம்பாடிக்குக் கொண்டுபோகிறது தானே!''

ஸரஸ்வதி: "ஆமாம்! அதுதான் சரியான காரியம். இந்தப் பாழுங் கள்ளுக்கடைதான் நம் குடியைக் கெடுக்கிறது. அஃதில்லாவிட்டால் இதெல்லாம் ஏது? குழந்தைகள், பாவம்! வீட்டில் சோற்றுக் கழுது தடுமாறுகின்றன. இவர்கள் கள்ளுக்கடையில் பண்ணும் அட்டகாசம் அளவில்லை. இதையல்லவோ ஒழிக்கவேண்டும்! உம்முடைய தொண்டைப் பற்றி நாங்கள் நன்கு தெரிந்து கொண்டோம். இராமபிரான் சேது கட்டும்போது அணில்களும் ஏதோ தம்மால் இயன்றது செய்தாற்போல, நாங்களும் எங்களால் இயன்றது செய்கிறோம். இச்சமயந் தப்பினால் வேறு எச்சமயம் வாய்க்கப் போகிறது!

நான் முதலில் சேருகிறேன். இவ்வூர்க் கள்ளுக்கடை ஒழிவதுடன், முதலியாருடைய நிலையும் அடியோடு மாற வேண்டும். பணமிருந்தென்ன ? யாருக்குதவி? அவர் நெல்லுப் பொதியில் நெருப்பு விழ! ஏழைகள் பட்டினி கிடந்து வாடும்பொழுது அவர்களிடம் சாபமெல்லாம் எங்கே போகும்?''

ஸரஸ்வதி சாந்தமாகவே இவற்றைக் கூறினும், வன்னிக்கட்டையில் நெருப்புப்போல அவள் வார்த்தைகளில் ஒரு சக்தி யிருந்தது. அவள் குரலில் அசரீரியின் தன்மை பொருந்தியிருந்தது. அவள் முகம் பளபளவென்று ஜ்வலித்தது. உண்மையான தேசபக்தி அவள் கண்களில் விளங்கிற்று. தாமரை யிதழ்போன்ற அவள் கன்னங்கள் இன்னுங் கொஞ்சம் சிவந்துகாட்டின. கந்தன் அவளுடைய தோற்றத்தைக் கண்டு பிரமித்து நின்றான். காற்றும் சலியாமல் எங்கும் அமைதி நிலவியிருந்தது.

## II

ஸரஸ்வதி தன் மனத்தில் எழுந்த உணர்ச்சியின் வேகத்தால் முகத்திலுண்டான மாறுபாட்டை மறைத்துக் கொள்ளும் பொருட்டு ஒருபுறமாகத் திரும்பினாள். அவ்வாறு திரும்பி அவள் கிழக்கே நோக்கியபொழுது அருணோதய மாண்டுபோல ஒரொளி தோன்றிற்று. ஆனால் அவ்வொளி சிவந்து காட்டிற்று. 'ஆ! இதென்னவெளிச்சம்! பொழுதுவிடிந்துவிட்டதா என்ன! இதற்குள்ளேயா! இப்பொழுதுதானே மணி பதினொன்று!' என்று அவள் தனக்குள்ளே சொல்லிக்கொண்டு சற்று நிதானித்தாள்; உண்மை புலப்பட்டது.

அவள் கை கூப்பி, "அதோ கிழக்கே நோக்குங்கள்! மிகுதியாக எழுந்து வரும் அச் சிவந்த ஒளி என்ன வென்று பாருங்கள்! என் கண்ணுக்குத்தான் அப் படித் தோன்றுகிறதா—அல்லது உண்மைதானு! ஏழை களின் சாபம் இதற்குள்ளேயே பலித்துவிட்டதா!" என்று ஆச்சரியத்துடன் இரைந்து கூறினுள்.

சந்தரமும் கந்தனும் அடங்காத ஆச்சரியத்துடன் அவ்வொளியை நோக்கினர். புகை சுழலிட்டுத் திரள் திரளாக வானமேறியது; தீப்பொறிகளும் பறக்க ஆரம் பித்தன. இனியும் ஐயமுண்டோ! மைனருடைய வைக் கோற்போரும் நெற்களஞ்சியமும் சொக்கப்பனையாய் விட்டன!

கந்தன் திகிலடைந்து, "ஐயையோ! நந்தா, மூக்கா, காட்டேரி! என்ன வேலையடா செய்துவிட்டீர்கள்! இது வென்ன குடிவெறியா? ஆருக்கடா லாபம்? என் ஒரு வருஷத்து உழைப்பும் விழலுக்கிறைத்த நீராயிற்றே! 'குய வனுக்குப் பலநாளை வேலை—தடியடிகாரனுக்கு ஒரு நிமிஷ வேலை' என்பதுபோல ஒரு வருஷத்து உழைப்பின் பயனை ஒரு நிமிஷத்தில் கரியாக்கிவிட்டீர்களே! அடா பாவிப் பயல்களே! என்ன கொடுமை! இதெல்லாம் என் தலையி லல்லவோ வந்து விடியும். நான் தூண்டிவிட்டேனென் றல்லவோ சொல்லுவார்கள். என் தலைவிதி; யாரை நோவது!" என்று பரிதவித்தான்.

"அதோ பாரும் கள்ளுக்கடையும் பற்றி யெரிகிறது!" என்று ஸரஸ்வதி கந்தனைக் கூப்பிட்டுக் காட்டினுள்.

"நான் ஓடிப்போய் இனிமேலாயினும் ஏதாவது தடுக்க முடியுமோவென்று பார்க்கிறேன். ஒருவேளை முத

லியாருடைய பங்களாவுக்கும் நெருப்பு வைத்துவிட்டா லென்ன செய்வது? எதிர் மனையில் புது மாதிரியாகச் சவுக்கண்டியும் பங்களாவும் கட்டுவதற்காக இருநூறுடன் தேக்கமரம் வாங்கி அடுக்கியிருக்கிறது. அதில் தீப்பரவி னால் அது முதலியாருடைய பழைய வீட்டுக்கு மல்லவோ எட்டும்! பொற்கொடியாச்சி என் தலையை வாங்கிவிடு வளே! ஸ்டேஷன் மாஸ்டர்வாள்! தூங்கும் முதலியாரைக் கொஞ்சம் எழுப்புங்கள். வீடுபற்றி யெரியும்போது குறட் டைவிட்டுத் தூங்குவாரு முண்டோ? வார்த்தைக்குச் சோம்பேறிகளின் கதை சொல்வதுண்டு. ஆனால் இப் பொழுதுதான் நேரில் பார்க்கிறேன்!" என்றிப்படிப் புலம்பிக்கொண்டே கந்தன் முதலியார் வீட்டை நோக்கி விரைவாக ஓடினன்.

சுந்தரம், தீயினுலுண்டாகும் பெருங் கஷ்டத்தை யாலோசிக்காமல், 'மதயானை போன்ற இருபது வைக் கோற்போர்கள், இருபதினுயிரங் கலம் நெல்—அரைலட் சம் ரூபாய் பெறும்! எல்லாம் நாசம். என்ன அதிசயம்! முதலியார் அடியோடு தொலைந்தார்! இனிமேல் கிளம்ப முடியாது. இந்தப் புயற்காற்றுத் தவிர, கடனென் னும் வேர்க்கறையானும் அவரை வெகுநாளாய்ப் பற்றி யிருக்கிறது. ஆகையால் இனி முதலியார் பாடு அதோ கதிதான்!' என்று முதலியாரின் லாபநஷ்டத்தை இன் கம்டாக்ஸ் ஆபீஸர்போல மனத்தால் அளந்து மதிப்பிட் டுக்கொண்டிருந்தான்.

கொஞ்ச நேரத்தில் ஆக்கூர் ஸ்டேஷன் முழுதும் மறுபடியும் கொல்லென்று ஜனத்திரள் கூடிவிட்டது. ஸ்டேஷன் மேட்டுப்பாங்கான ஓரிடத்தில் அமைந்திருந்

தமையால், அங்கிருந்து எவரும் தமக்கபாயமின்றித் தீப் பற்றி யெரியுங் காட்சியை நன்கு காணச் சௌகரியமா யிருந்தது. ஆதலால் எல்லோரும் அங்கு வந்து கூடிவிட் டனர். முதலில் சுருள் சுருளாக வான்நோக்கி யெழும் புகையையும், அதனை யடுத்துத் திருவிழாக்களில் வாண வேடிக்கை போலப் பொறிகளுடன் கிளம்பும் தீத்தொகு திகளையும், இறுதியில் பாம்பின் நாவைப்போலப் பிளவு பட்டுக் கொழுந்துவிட்டு நின்றெரியும் ஜ்வாலையின் வேகத்தையும் அவர்கள் படிப்படியாகப் பார்த்தனர்.

தீப்பற்றி யெரியுங் காட்சியில் பயங்கரத்தோடு, ஒரு வகை அழகுமுண்டல்லவா? அதனால்தான் எவரும் அத னைப் பார்க்க முன்வருகின்றனர். எங்கேனும் தீப்பற்றி னால், தூங்கும் குழந்தைகள் முதல் இருமல், முக்கல், முனகல்களுடன் இடைகழியிற் படுத்திருக்கும் கிழங்கள் வரை எல்லோரும் வெளி வந்து 'தீ தீ!' யென்று வாயால் மட்டும் கத்திவிட்டுக் கையைப் பின்னே சேர்த்துக் கட் டிக்கொண்டு நின்று வேடிக்கை பார்ப்பதுதான் வழக்கம். ஊன்றிநோக்கின், தீப்பற்றி யெரியுங் காட்சி மிகவும் ஆச் சரியகரமானதே. தன் யோகசக்தியால் ஜடமாகிய வஸ்து அழிய, ஸூக்ஷ்மமான ஆத்மஸ்வரூபத்தை நாடிச் செல் லும் யோகியின் தன்மையைக் காட்டுவது அக் காட்சி. ஆதலால் அது பார்க்கத்தக்கதேயன்றோ?

III

சுந்தரமும், மனத்தினால் முதலியார் நிலையை மதிப் பிட்டுக்கொண்டிருந்தாலும், தீ விபத்தின் தோற்றத்தைக் கண்கொட்டாமற் பார்த்துக்கொண்டுதா னிருந்தான்.

அதற்குள் மாயவரத்திலிருந்து ஒரு டெலிபோன் செய்தி வந்ததனால் தன் அறைக்குப்போய் அதனைக் கவனித்தான். டெலிபோனில் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது:—

"ஹல்லோ! ஆக்கூரா, சுந்தரமா? தஞ்சாவூர்ப் புதுக் கலெக்டர் போட்மெயிலில் வருகிறாராம். அவர் தரங்கம் பாடிக் கோட்டையில் ஒரு வாரம் தங்கப்போகிறாராம். அவருக்குக் காலைக் குடிக்கு—காப்பிக்கு ஆக்கூரில் ஏற்பாடு செய்யும்படி உத்தரவு."

"யார் உத்தரவு!"

"யார் உத்தரவா? டிப்டி கலெக்டர் உத்தரவு ஸ்டேஷன்மாஸ்டருக்கு; அவர் உத்தரவு எனக்கு; என்உத்தரவு உனக்கு. போதுமா? என்ன சுந்தரம், ரயில் மோதலால் மிகவும் மனக்குழப்பமோ? கேள்வி பலமாயிருக்கிறதே?"

"ஆமாம். அது மாத்திரமா? பொழுது விடிவதற்குள் ஆக்கூர்ப் பேரே எங்கும் பிரசித்தமாய்விடும்போலிருக்கிறது!"

"ஆமாம். அதற்கென்ன சந்தேகம்? உனக்கு இங்கிருந்து ஆக்கூருக்கு மாற்றலானவுடனேயே எனக்குத் தெரியுமே! அது கிடக்கட்டும். ஆத்திலெல்லாரும் சௌக்கியமா சுந்தரம்?"

"எல்லாம் சௌக்கியந்தான்; ரயில் மோதலுக்காக ஒருவேளை எனக்கேதேனும் தண்டனை கிடைக்குமோ? நீ கொஞ்சம் பக்குவமாகச் சொல்லிச் சரிப்படுத்திவிடேன்,"

"இரண்டு எஞ்சின்கள் அடியோடு தொலைந்தன. கம்பெனிக்கு ஐம்பதினாயிரம் நஷ்டம். என்னத்தைச்

சரிப்படுத்துகிறது? உன் வேலை தொலைந்ததாக வைத்துக் கொள்ள வேண்டியதுதான். அதற்குச் சந்தேகமில்லை. இன்னும் ஒருநாளோ இரண்டுநாளோ! அவ்வளவுதான். ரயிலில் பொறுக்கித் தின்னும் நம்மைப்போன்ற நாய்களுக்கு ஒருநாளில்லாவிட்டால் ஒருநாள் கால் நொண்டிக் கால் தானே!''

சுந்தரத்திற்குத் துக்கம் தொண்டையை யடைத்தது. ஆயினும் அவன் அதை அடக்கி மனத்தைத் தேற்றிக் கொண்டு ஆலோசிக்கலானான். கொஞ்சம் திரும்பிப் பார்த்தான். முதலியாரின் குறட்டை கொஞ்சந் தணிந்து, அதுவும் தூங்குவதுபோலிருந்தது. வீடுபற்றி யெரியும்பொழுது முதலியார் ஸ்வப்னாவஸ்தையில் ஸ்வர்க்கபோக மனுபவிப்பவராயிருந்தார். சுந்தரம், தன் சிவப்புக் கொடியின் கைபிடிக் கட்டையால் முதலியார் காலில் மெல்லத் தட்டி அவரை யெழுப்பினான்.

## அத்தியாயம்—11

### சூறை

### I

ஆக்கூர்ப் பெரியபண்ணையாகிய மைனர் சொக்கலிங்கத்தின் பண்ணை பதினொரு தலைமுறையாக அந்த நாட்டுக்கே பெரிய பண்ணையாய் விளங்கிவருவது. மைனரின் முன்னோர்களில் ஒருவர் தஞ்சை நாயக்க அரசர் காலத்தில் கொள்ளிடக்கரைக் காட்டுப்பற்றுக்குக் காவலாக நியமிக்கப்பட்டிருந்த இராணுவப் படைத் தலைவரா

யிருந்து மிகவும் பேர் பெற்றவர். அந்தப் பண்ணைக்கு, சொக்கலிங்கம் தலைப்படுகிற வரையில், லக்ஷ்மீகடாக்ஷம் இடையே ஏற்றத்தாழ்வின்றி நிரந்தரமாக இருந்துவந்தது. தம்பி பிறந்து தலையெடுத்து மைனர் தர்பாருக்கு ஆரம்பித்தபின் அப்பண்ணைக்கு அழிவுகாலந் தொடங்கியது. இக்கால நாகரிக வாழ்க்கையில் பெருஞ்செல்வமும் இளமையும் சேர்ந்தால் பின் கேட்கவும் வேண்டுமோ? பஞ்சுப் பொதியில் தீயுறவாடியது போலத்தானே!

சொக்கலிங்க முதலியாருடைய பண்ணையின் இடைவிடாத நீண்டகாலச் செல்வத்துக்குக் காரணம், அப்பண்ணையில் முன்னோர்கள் தம் காரியங்களைத் தவிரப் பிறருடைய கஷ்ட நிஷ்டுரங்களைக் கவனிப்பதில்லை. அன்னியருடைய வியவகாரங்களில் அவை நல்லனவாயினும் தீயனவாயினும் தலையிடுவதில்லை. தங்கள் பண்ணையுண்டு தாங்களுண்டு. தங்களால் ஒருவருக்கும் உபகாரமும் அபகாரமும் இன்றி வாழ்ந்துவந்தனர். ஆனால், அரசனாயினும் சரி; அவன் அனுவசியமாய்த் தம் காலைச் சிறிது மிதித்துவிட்டாலும் அவன் தலையை அச்சமின்றி மிதித்துவிடுவார்கள்.

இவ்வாறு ஏகபோகமாய்ப் பத்துத் தலைமுறையாக ஆண்டு விளங்கிவந்த அந்தப் பண்ணையின் அழிவுக்கே பிறந்த அவதார புருஷராய்ச் சொக்கலிங்க முதலியார் விளங்கினார். தன் முன்னோர்கள் எவ்வளவுக்கெவ்வளவு பிறர் விஷயங்களிலும் பொதுவிஷயங்களிலும் தலையிடாதிருந்தார்களோ அவ்வளவுக்கவ்வளவு இவர் அவற்றில் தலையிட ஆரம்பித்தார். எலெக்ஷன் பேச்சு எங்கே கேட்டாலும், அங்கே, முதலியார் தன் புதுமை மாறாத

'ஆபர்ணி' காருடனும், அதற்கென்று சென்னையிலிருந்து ஒரு தாசில்தாருக்குரிய சம்பளத்துடன் ஸ்பெஷலாய்த் தருவிக்கப்பட்ட 'டிரைவ'ருடனும் ஆஜராயிருப்பார். கக்ஷி இரண்டுபடும். வேண்டாத கக்ஷியை வீம்புக்கென்று ஆதரிப்பார். இதுகூட இல்லாவிடின், பெருஞ் சிமானென்ற பெய ரெதற்காக? அச்செல்வந்தானெதற்காக! மேலும் பத்துத் தலைமுறையாகச் சுவகாரியத்தையே கவனித்துவந்த முன்னோர்களின் பிழையைத் தீர்க்கப் பதினோராந் தலைமுறையில் பிறர் காரியத்தையே பாராட்டி நடத்தும் ஒரு சீமந்த புத்திரன் தோன்றியதும் நியாயந்தானே? திருமகளும் எவ்வளவு காலந்தான் ஓரிடத்தில் சிக்குண்டு கிடப்பாள்!

## II

ஆக்கூர் ஸ்டேஷன் ரயில் விபத்து முதலியாருடைய தாயார் காதுக் கெட்டிற்று. அப்பொழுதுதான் தன்னுடைய கோரைப் பாயை விரித்துப் படுத்துறங்கப் போன அவள், இதைக்கேட்டதும் திடுக்கிட்டுப் பாயைச் சுருட்டி வைத்துவிட்டுத் தன் தம்பியைக் கூப்பிட்டு, "ராமலிங்கம், ரயிலடிக்கு ஓடிப்போய்ப் பார்; கொஞ்சம் சிரமத்தைப் பாராதே! குழந்தை சொக்கன்—" என்றாள்.

"இல்லை இல்லை, பொற்கொடி; பயப்படாதே! குழந்தை சொக்கலிங்கம் ரயிலில் எதற்காக வரப்போகிறான்? அவன் மோட்டாரில் நேரே மாயவரம் போயிருக்கிறான். அப்படியே திரும்பிவிடுவான். இன்னும் அரைமணியில் எங்கிருந்தாலும் வந்து குதித்துவிடுவேன் பார். பயப்படாதே!"

"ரயிலாம், அது மோதிக்கொள்ளுவதாம்! என்ன அதிசயம்! நினைத்தாலே உடம்பு நடுங்குகிறது! இந்த வம்புகளுக்காகத்தான் 'இந்த ரயில் போடவாவது, நம்முடைய மண் சாலைகளுக்குக் கப்பி யடிக்கவாவது, பாடுபடாதே; பண்ணையைக் கவனி' என்று பலதடவை சொன்னேன். நம் அழகிய கிராமங்களுக்கு ரயிலும் மோட்டாரும் எதற்காக? நம் காளைகளோ தீனியைத் தின்றுவிட்டுக் கொழுத்து மதயானைகள் போல வேலையின்றிக் கிடக்கின்றன. மோட்டாரும் ரயிலும் பண்ணைப் பணத்தைப் பாழாக்கத்தான் வந்திருக்கின்றன. ராமலிங்கம்! கொஞ்சம் சோம்பற்படாமல் போய்ப் பார். ஒருவேளை அவன் ரயிலிலும் வரலாம். அவனுக்குக் கணக்கேது! ரயிலிலும் மோட்டாரிலும் மாறி மாறி விளையாட்டுத்தானே! சற்றே ஓடிப்போய்ப் பார்! வண்டியை வேண்டுமானாலும் கட்டிக்கொண்டு போ."

ராமலிங்கம் இயற்கையில் கொஞ்சம் சோம்பேறியாயிருந்தாலும், தன் தமக்கையின் வார்த்தையைத் தட்டாமல் போயிருப்பான். ஆனால், படுக்கையை விரித்துப் பாவி உடம்பைப் பாட்டிலே போட்டுவிட்டான். ஒரு நாளைக் கணக்கை யோட்டின அச்சமயத்தில் மறுபடியெழுந்து வேலை செய்வதென்றால் யாருக்கும் சிரமந்தானே! அதனால் அவன் "பொற்கொடி, ஏன் இந்த அகாரணமான பயம் உனக்கு? சொக்கன் வேறெங்கும் போகவில்லை. நேரே மாயவரம் போய் டிப்டி கலெக்டரைப் பார்த்துவிட்டு உடனே திரும்பிவிடுவன். வேறு ஒன்றும் இன்றைக்கு வேலையில்லை" என்றான்.

"ராமலிங்கம்! குழந்தை சொக்கனுக்கு நீயும் ஒரு வார்த்தை சொல்லப்படாதா? பண்ணையைக் கொஞ்சங் கூடக் கவனிக்காமல் ஊரார் வேலைக்காக இரவுமில்லை பகலுமில்லை, ஊருராய்த் திரிகிறானே! அப்படியாவது இதில் என்ன பேரும் பெருமையும் வந்துவிட்டது? இந்த நாளை வழிகளை எல்லாம் புது வழியா யிருக்கிறது. நமது பண்ணையோ கேட்பா ரில்லாமல் கலகம் மிஞ்சி, பழைய சீர் கெட்டுக் கேவலமாய்க் கிடக்கிறது. காய்கறி முதற் கொண்டு கடையில் காசு கொடுத்து வாங்கிக் காலக்ஷேபம் நடக்கிறது. பெரியமுதலியார் இப்பொழு திருந்து இதைப் பார்த்தால் அவருக் கெப்படி யிருக்கும்? நாகபட்டணத் தில் எவனுக்கோ எலெக்ஷனுக்காக மைனர்வாள் வீம் புக்கு உழைத்ததன் பலன் இவ்வருஷம் முப்பது வேலி தரிசு. தசுகூலிக்கு நெல் கிடையாது. எலெக்ஷன் செலவுக் காக நெல் விற்றுப்விட்டது. இந்த வருஷமாவது கலியா ணத்தை முடித்து, வீட்டுக்கு மருமகள் வந்து, என் குழந் தை குடியுங் குடித்தனமுமா யிருப்பதைக் கண்ணாலே பார்த்து ஒரு வருஷ காலமாவது அனுபவித்துவிட்டு நான் கண்மூடினால்தான் என் நெஞ்சுக்கல் வேகும்."

"ஆமாம் பொற்கொடி! நீ சொல்வது சரியான வார்த்தை! தகுந்த ஒரு பெண்ணைப் பார்த்துச் சொக்க லிங்கத்திற்குக் கட்டிவிட்டால், ஊருராய் ஓடும் அவனு டைய அந்த ஓட்டம் தானே நின்றுவிடும். பண்ணையும் நிமிர்ந்துவிடும். எல்லாம் வழிக்கு வந்துவிடும். பெண் மாத்திரம் சரியான பெண்ணாகப் பொறுக்கியெடு."

ராமலிங்கம் சொக்கலிங்கத்தின் கல்யாண விஷயத் தைப் பற்றி மட்டும் மிகவும் ஆவலுடன் பேசினான். பொற்

கொடியின் அபிப்பிராயத்தை மிகவும் பாராட்டினன். ஏனெனில் அவன் பெண்ணொன்று கலியாணம் பண்ணத் தக்க வயதுடையதாயிருந்தது. அந்தப் பெண்ணையெப் படியாவது தன் மருமகன் சொக்கலிங்கத்திற்கு மணஞ் செய்விக்க வேண்டுமென்பது அவன் நெடுநாளைய விருப் பம். அவ்விஷயத்தைப் பற்றிப் பேசி முடிக்கத் தக்க சம யத்தை எதிர்பார்த்தே அவன் தன் தமக்கை வீட்டுக்கு வந்து ஒருவருஷ காலமாக மாமன் முறையில் சீராடிக் கொண்டிருக்கிறுன். அது பொற்கொடியாச்சிக்கும் மனத் தில் பட்டதனுல், அவள் சொக்கலிங்கத்தின் கலியாண விஷயமாக ராமலிங்கத்தினிடம் பேச்செடுக்காமல் ஜாக்கி ரதையாகவே யிருந்து வந்தாள். இப்பொழுது இந்த நெருக்கடியில் அவள் தன்னையும் மறந்து இதைப் பற்றிப் பேச நேர்ந்தது.

"ராமலிங்கம்! ஆறு வருஷத்தில் நமது பண்ணை போன போக்கைப் பார்! பெரிய முதலியார் நாளில் இந் தச் சோழநாட்டுக்கே நாயகமாயிருந்த நமது பண்ணை இப் போது வழியிலே போகிறவன்கூடக் காறியுமிழும் நிலை மைக்கு வந்திருக்கிறதே! பண்ணையாள்கள் இனிமேல் கட் டுக் கடங்கமாட்டார்கள் போலிருக்கிறது. அந்தநாளில் பறையர் பெருங்குரல் உன் காதில் விழுந்திருக்குமா! இப்பொழுது தினசரி சாயந்திரமானுல் கூலிக்குப் போராட் டந்தான். தசுகூலி நெல்லை விற்று மோட்டாருக்கு எண் ணெய் வாங்கினுல் பண்ணையெப்படி நடக்கும்? ஆள்க ளுக்கு மூன்றுவாரத்துக் கூலி பாக்கி நிற்கிறதாம். இந்த ஏழைகளுக்கு வயிறு நிரம்பினுல்தானே கை வேலை செய் யும்? பாவம் சேற்றிலும் சகதியிலும் வெயிலிலும் மழை

யிலும் இராப் பகல் உழைக்கிறவர்கள்! பெரிய முதலியார் இவர்களுக்கு வயிறாரக் கொடுத்துக் காப்பாற்றினர். அடித்து வேலையும் வாங்கினர். அப்பொழுது களஞ்சியத்தில் நெல் குறைவதே கிடையாது. வயற்கரை வழி நடப்புகளிலெல்லாம் பரங்கிக்காயும் பூசணிக்காயும் இறைந்து கிடக்கும். தேங்காய் முட்டு முட்டாய்க் குவிந்து கிடந்தது. இப்பொழுது கள்ளுக்கடை வந்தது; பிடித்தது சனியன். பிள்ளையாருக்கு உடைக்க ஒரு தேங்காய் வேணுமென்றாலும் கடைக்குப் போய்க் காசு கொடுத்துத் தான் வாங்கியாகவேணும். முப்பதினாயிரம் தென்னையிருந் தென்ன? எல்லாம் கள்ளுக் குத்தகை! மகா கேவலம்.''

"ஆமாம் பொற்கொடி; நீ சொல்வது மிகவும் சரியான வார்த்தை. இந்தக் கள்ளுக்கடைதான் நமக்குக் கேடாக வந்து சேர்ந்திருக்கிறது. ஆள்களுடைய வேலை, வணக்கம், ஒடுக்கம் எல்லாம் எங்கேயோ போய்விட்டது. அவர்கள் குடித்துவிட்டுத் தள்ளாடிப் பிதற்றிக்கொண்டு வருகிறபோதல்லவோ நீ பார்க்கவேணும் அந்தக் கூத்தை! உன் நல்லானும் அம்மாவாசையும் நல்ல மணியம், நல்ல தலையாரி!''

ராமலிங்கத்திற்கு வயது சுமார் அறுபது. அவன் தன் பாலியத்தில் மிகவும் துஷ்டனானாலும், சநாதன தர்ம பரிபாலன விஷயங்களில் வாயால் தாராளமாய்ப் பேசுவான். பொதுவாக அவற்றில் நம்பிக்கையும் உண்டு; ஆனால் காரியத்தில் மட்டும் ஒன்றுமிராது. ஆக்கூரில் கள்ளுக்கடை ஏற்பட்டதில் அவனுக்கு உண்மையாகவே மிகவும் அதிருப்திதான்.

"ராமலிங்கா, நானும் கலியாணமாகி இந்த வீட்டுக்கு வந்ததுமுதல் ஒரு வருஷமாவது பஞ்சமென்ற பேச்சே கிடையாது. அக்கம்பக்கமெல்லாம் பாழ்த்துப்போனாலும் நமது பண்ணையில் நெல் முட்டாடித்தான் கிடக்கும். இப்பொழுதோ குழந்தை சொக்கன் கிழவி பேச்சைக் கேட்க மாட்டேனென்கிறான். உன்னிடம் கொஞ்சம் மரியாதை வைத்திருக்கிறான். நீ சொன்னால் கொஞ்சம் ஏறும். நீ ஏன் சொல்லக்கூடாது? எப்படியாவது அவனைச் சீர்திருத்தாவிட்டால் செம்பரம்பாக்கம் பண்ணை போல நமது பண்ணையும் சீக்கிரத்தில் அழிந்துபோகும். அதற்குச் சந்தேகமில்லை. பத்துத் தலைமுறையாகப் பரம்பரையாய்ச் சிற்றரசர்போல ஆண்டனுபவித்து வந்த நமக்கு ஏதோ கஷ்டகாலந்தான் இப்பொழுது. சொக்கன் திருந்தினலொழிய நமக்கு நல்லகாலமில்லை. எப்படியாவது அவனைத் திருத்தவேண்டியது உன் பொறுப்பு. உன் வார்த்தையில் அவனுக்கு மதிப்புண்டு; எனக்குத் தெரியும்."

"நான் புத்திமதி சொல்லப் போனால், பொற்கொடி, இருக்கிற கொஞ்சம் மதிப்பும் தொலைந்து போம். மணியம் நல்லானல்லவோ உள்ளூர் மந்திரி. மேலும் பொற்கொடி, இந்த விஷயங்களெல்லாம் பிறர் சொல்லித் தெரிந்துகொள்ளக் கூடியவை யில்லை. கொஞ்சம் அடிபட்டுத் தேர்ந்து, தானே அனுபவத்தில் தெரிந்துகொள்ள வேண்டியவை. நீ சொன்னதுதான் சரியான வழி. சரியான இடத்தில், சரியான பெண்ணைப் பார்த்துக் கல்யாணத்தை முதலில் முடி. பிறகு சொக்கன் தானே வழிக்கு வந்துவிடுவான். எல்லாம் நீ பொறுக்கியெடுக்கும் குட்டியைப் பொறுத்திருக்கிறது."

"நான் பொறுக்கி யெடுக்கும் குட்டி! ராமலிங்கா, நீ அப்பொழுது என்ன செய்யப்போகிறாய்? மருமகன் கலியாணத்தின்போது மாமன் நீ காசி ராமேச்வரம் யாத்திரை போகப்போகிறாயோ? நீதான் உன் மருமகனுக்குப் பெண் தேடிப் பொறுக்கவேணும்!"

இவ்வாறு சொன்ன பொற்கொடியாச்சி ஏதோ சிறிது யோசித்துப் பின்னும் சொல்லுகிறாள்: "ராமலிங்கா, என்னிஷ்டப்படி போவதானால் குழந்தை சொக்கனுக்கு நம்ம குட்டி நீலாவையே கட்டிவிடலாம். ஆனால் அவள் சிறு வயது; கொஞ்சம் வளர்த்தி போதாது."

"வளர்த்தி போதாதா! என்ன பொற்கொடி, புதிது போலப் பேசுகிறாயே! அந்த வயது வந்தால் அவளும் தானே அவள் தாயார் மாதிரி, ஆடிவெள்ளத்தைக் கிடங்கிலே கண்ட வாழைமுதல் போலக் கிளம்பிவிடுவாள். சந்தேகமில்லை. உன்யோசனைக்கு அதுவன்று காரணம். பொற்கொடி! உன்மனத்தில் நாங்களெல்லாம் கேவலம் எங்கிருந்தோ வந்த ஏழைகளென்று எண்ணம். ஆனால் பிறந்த பெண்ணுக்குப் புருஷன் இனிமேல் பிறக்கப்போவதில்லை! ஒரு பெண்ணுக்கு ஒரு புருஷன் எங்கேயோ தயாராகப் பிறந்துதானிருக்கிறான்!" என்றிவ்வாறு ஏதோ தகாத வார்த்தையைக் கேட்டு மனஞ் சலித்து வெறுத்தவன்போலப் பாவனை பண்ணித் தந்திரமாகப் பேசினான் ராமலிங்கம்.

"அப்படியல்ல, ராமலிங்கா! அனுவசியமாய்ச் சொல்லாததைச் சொன்னதாக வைத்துக்கொண்டு, எண்ணாததை எண்ணினதாக ஒட்டி மனஸ்தாபப் படுவதில் பிர

யோசனமில்லே. உள்ளதைச் சொன்னேன். குழந்தை நீலா எனக்கும் பாத்தியந்தான். ஆனாலும் நம் சொக்கன், நீயும், நானும் நினைக்கிறதற்குச் சம்மதிக்கவேணுமே? அவன் இந்த நாளேப் பையனுச்சே! காலத்தின் கோளாறு, கல்யாணமென்ருல் சிறுவர்கள் ஏதேதோ சொல்லுகிருர்களே! ரம்பையை அல்லவோ தேடுகிருர்கள்! நீ கையைக் கட்டிக்கொண்டு மரியாதையாய் ஒதுங்கி நின்றுவிடாமல் மனம் வைத்துத் தைரியமாய்ப் புகுந்து செய்தால் காரியம் நிறைவேறிவிடும். சொக்கனுடைய நவீனமான மன முடிச்சை நீ அவிழ்த்துவிட்டால் பிறகு மணமுடிச்சை நான் போட்டு முடித்துவிடுகிறேன். நிச்சயம் அடுத்த மாசம் கலியாணம். குட்டி நீலா மருமகளாக இங்கே வந்துவிடுவாள்!" என்று பொற்கொடியாச்சி திடமாய்க் கூறினுள்.

"ஆமாம் பொற்கொடி! நீ சொல்வதும் சரிதான். சொக்கன் மனம் போனவழி போய்த்தான் அவனைத் திருப்பவேணும். அவன் பலவிதமாகப் பேசினுலும், கடைசியில் காரியத்தில் உன் வார்த்தைக்கு மாருக ஒன்றும் செய்யக்கூடியவனில்லே. பாலியம், அப்படித்தான் பலவகையாகப் பேசச்சொல்லும். மனம் ஒரு நிலேப்படாது. கலியாணமானுல் பிறகு கடிவாளம் போட்ட குதிரைபோல் எல்லாம் அடங்கி வழிக்கு வந்துவிடும். இப்பொழுது கொஞ்சம் இஷ்டப்படி ஒடியாடட்டுமே? என்ன பெரிய நஷ்டம்? அப்படித் திரிந்து அடிபட்டால்தான் உலகத்திலுள்ள கஷ்ட நிஷ்டூரங்கள் தெரியும். உலக அனுபவம் வரும். புஸ்தகம் படிப்பதாலும் புராணங்கள் கேட்பதாலும் அது வந்துவிடாது."

"ஆமாம் ராமலிங்கா! நீ சொல்வது ஒரு விதத்தில் சரிதான். ஆனால் அவன் நகர வாழ்க்கையின் பயனான கெட்ட வழிகளிலேயே ஆழ்ந்துபோய்விட்டால், பிறகு என்ன செய்வது? மாற்ற முடியுமோ? செம்பரம்பாக்கம் கதியாய்விடுமே!" என்று பெற்ற தாய்க்குரிய அளவற்ற அன்புடனும் கவலையுடனும் பொற்கொடி பேசினாள். ராமலிங்கத்திற்கோ, கைப்பொருள் கொஞ்சம் இறங்கிக் கஷ்டப்பட்டாலொழியச் செருக்குடைய பொற்கொடி தன்னுடன் சம்பந்தத்திற் கிணங்க மாட்டாளென்பது கருத்து. அதனால் அவன் தந்திரமாய்க் காரியவாதியாகவே பேசினான்.

"பொற்கொடி! என்னவோ விகடமாய்ப் பேசுகிறுயே! செம்பரம்பாக்கம் பண்ணை யெங்கே—நமது பண்ணை யெங்கே? எதையும் எதையும் ஈடு கட்டுவது? அவர்கள் நிலமோ எல்லாம் உப்புத்திடல்; ஒன்றும் விளையாது. அப்படித் தப்பித்தவறி ஒரு வருஷம் விளைந்தால் ஆறு வருஷம் பாழ். அவர்களுக்கு நெல்லேது பேரேது? பட்டாவில்தான் ஏக்கரும் தீர்வையும் அச்சுப்போட்டிருக்கிறது. ஆக்கூர் முந்நூறு வேலியையும் இந்திரன் சந்திரன் வந்தாலும் அழிக்க முடியாதே! நம் சொக்கனைப்போல இன்னும் ஆறு சொக்கர் செலவை ஆறு தலைமுறை தாங்கும்; பயப்படாதே! நீ சொக்கனிடம் இதை மாத்திரம் கண்டிப்பாய்ச் சொல்லவேணும். அதாவது, என் வார்த்தையை அவன் கொஞ்சம் கேட்கவேணும். எனக்கும் இந்தப் பண்ணையில் ஸ்வாதீனமுண்டென்பதை மறக்கக்கூடாது. பண்ணையாட்கள் தலைகொழுத்துப் போயிருக்கிறார்கள்; அதை முதலில் சரிப்படுத்த வேணும்."

"ராமலிங்கா! சொக்கனு உனக்கு அதிகாரங் கொடுக்க வேண்டும்? என்ன அதிசய வார்த்தை! என் தம்பியாகிய உனக்கு இந்தப் பண்ணையில் அதிகாரத்துக்கு உரிமையில்லையோ? நம் நாட்டில் மாமனைவிட இன்னும் எந்த உறவு மேல்? உன் வார்த்தையை மீறி நடப்பவனைச் சொல்லு; நான் சுட்டுவிடுகிறேன்!"

"அப்படியானல் சரி. இந்த நல்லான், அமாவாசை யிருவரையும் வழிக்குக் கொண்டுவந்தால்தான் பண்ணையே திருந்தும். அந்தக் களஞ்சியப் பெருச்சாளிகளை நன்றாய் நசுக்கவேண்டும். அவர்களாலேதான் நம்முடைய பண்ணை மூன்று வருஷத்தில் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது. சொக்கன் அவர்களுடைய தந்திர வார்த்தைகளைக் கேட்டுக் கெட்டுப்போகிறான்."

"ராமலிங்கா! நான் சொல்லுகிறேன் கேள். மூன்று வருஷத்திற்குள் மூன்று லட்ச ரூபாய் இந்த எலெக்ஷன் கூத்தில் இறைத்துவிட்டான். அதுவும் யாருக்காக! யாரோ வழியிலே போகும் மருதப்பன். நாகபட்டணம் சிநேகிதனும்! அவனுக்காக வீம்புக்கு! இப்படி எங்கேயாவது கேட்டதுண்டா? முதலியார் காலத்தில் நீயே உன் கண்ணுலே பார்த்திருக்கிறாயே! எங்கேயாகிலும் நாலு நெல் இறைந்து கிடந்தால் அவர் தன் கையாலேயே பொறுக்கிச் சேர்ப்பரே! தானியம் என்றால் அவருக்கு உயிராயிற்றே! அதற்கு இது அபராதம்போலிருக்கிறது. ராமலிங்கா! இரண்டு வருஷமாய் என் மனம் ஒரு நிலையிலில்லை. உன்னிடங்கூட இவ்விஷயத்தை இத்தனை நாளாய் வாய்விட்டுச் சொல்லப் பிடிக்கவில்லை. இன்னும் ஒருமாதத்தில் குழந்தை

சொக்கனுக்குக் கலியாணமாகி என் கண்ணுலே பாரா விட்டால் என் உயிர் நிலையில் நிற்காது. இந்த வீட்டில் கலியாணக் கொட்டுமேளங் கேட்டு முப்பது வருஷம் ஆய்விட்டது! இந்த வருஷம் சொக்கன் கலியாணத்தை முடித்துவிட்டுத்தான் மறுகாரியம்."

சுமார் இருபது நாளாய் நள்ளிரவில் இரண்டு கோட்டான்கள் இவர்களுடைய பங்களாவுக்குச் சமீபத்திலே பாழடைந்து கிடந்த ஒரு சிவன்கோவிலி லிருந்து கத்திக்கொண்டிருந்தன. இப்பொழுதும் அவை, சொக்கலிங்கத்தின் விவாகப் பேச்சைப் பற்றிப் பொற்கொடியாச்சி பேசி நிறுத்தியதும் அந்த நிச்சப்தமான நேரத்தில் எங்கும் கேட்கும்படி கத்தின.

அதைக் கேட்ட பொற்கொடி திகிலடைந்து நடுங்கினாள். அவள் அதற்கு முன்னும் இருபது நாளாகவே அந்தக் கோட்டான் கத்தலைக் கவனித்து மனத்தில் கவலை கொண்டிருந்தாள். இச்சமயம் அதனை ஏதோ பேராபத்தைக் காட்டும் அபசகுனமென்றே கருதினாள். அவள் மார்பு படபடவென்று துடித்தது. கைகள் நடுங்கின. சிறிதுநேரம் ஒன்றுந் தோன்றாமல் அப்படியே பிரமித்து நின்றாள். ராமலிங்கமோ அதைச் சிறிதும் கவனிக்காமல், தன்னுடையவும், தன் மகன் சொக்கலிங்கத்தின் மனைவியால் அப்பொழுது வரக்கூடியவுமான சொத்துக்களின் கணக்கை மனக்கண்ணாற் பார்த்து மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தான்.

பொற்கொடி மறுபடியும் பேச ஆரம்பித்தாள்: "ராமலிங்கம்! சென்ற இருபது நாளாக இந்தக் கோட்டான்

கத்தலைக் கவனித்தாயா? கவனிக்கவில்லையே? இதுபெரிய அபசகுனமப்பா! ஏதேனும் பெரிய கொள்ளைக்கு முன்னேதா னிப்படிக் கத்துமாம்! சுரைக்காய்த்தேவன் நமது பண்ணையைச் சூறையாடப் போகிருனே என்னவோ! ஐம்பது வருஷமாய்க் கறுவிக்கொண்டிருக்கிருனே. ஏதோ ஆபத்து நிச்சயம் வரப்போகிறது. கோட்டான் கூவல் வீண் போகாது என்று சொல்லுவார்கள். எனக்கு விவரம் தெரிந்து நமது பங்களாப்பக்கம் இப்படிக் கோட்டான் குரல் கேட்டதேயில்லை. இந்தச் சிவன்கோவிலைப் பாழாகப் போடக்கூடாதென்று பலரும் சொல்லியிருக்கிருர்கள். ஆனல் பெரிய முதலியார் நாள் முதற்கொண்டே நமது பண்ணையில் ஒருநாளும் தரும பாகத்தைச் சரிவரக் கவனிப்பதில்லை. என்ன விதியோ, எப்படி நேரப் போகிறதோ! குழந்தை சொக்கனை இன்னும் காணேமே! ராமலிங்கம்! சற்றே நீ போய்ப் பார்க்கமாட்டாயா? நான் வேறு யாரையாவது அனுப்பட்டுமா?”

ராமலிங்கம் தேர்ந்த சோம்பேறியாதலால் அதற்கேற்ற விடை சொல்ல வாயெடுத்தான். அதற்குள் கொட்டாவி வரவே கையால் வாயைப் பொத்திக்கொண்டான். அவன் வாய்மூடிக் கையை யெடுக்கு முன்னமே எதிர் மனையில் திடீரென்று நூற்றுக்கணக்கான ஆட்களின் நடமாட்டமும் பேச்சுக்குரலும் கேட்டன.

## III

பொற்கொடி திடுக்கிட்டுப் போய்விட்டாள். ஆனலும் தைரியத்தைக் கைவிடாமல், “யாரடா அங்கே குடிகாரப் பயல்கள், பாதிராத்திரியில் போரடியிலே! கொண்டாடா இங்கே! கட்டடா! அமாவாசையும் நல்லானும்

ஏங்கடா! இன்னும் கள்ளுக்கடையிலிருந்து வரவில் லேயோ? ராமலிங்கம், நீ போய்ப் பார்! இந்தப்பயல் களுக்குத் தலைக்கு நாலு அடி செம்மையாய்க் கொடு. நெடுநாளாய் அடியில்லாமல் கொழுத்துக் கிடந்து அலை கிறுப்போலிருக்கிறது!'' என்றாள்.

ராமலிங்கம் தன் புதிய அதிகாரத்தைக் காட்ட இதுதான் சமயமென் றெண்ணிப் படுக்கையை விட்டுச் சோம்பல் முறித்துக்கொண்டு கிளம்பினன். விவசாயத் தில் மிகவும் தேர்ச்சியுள்ளவன்போலத் தலையை ஆட்டிக் கொண்டு பொற்கொடியை நோக்கி, "பொற்கொடி! நம்ம பண்ணை சீராகவேண்டுமானல் இரண்டுமூன் று புழும்பெருச் சாளிகளைச் சரியானபடி தீட்டவேண்டும். முதலில் இந்த நல்லாளேயும் அமாவாசையையுந்தான். இதோ பார்! அவர் களுக்கு முதலில் பாடம் கற்பிக்கிறேன்!'' என்று சொல் லிக் கொண்டே, சரத்தில் சொருகியிருந்த ஒரு சாட்டை யைக் கையி லெடுத்தான்.

பொற்கொடியோ கோட்டான் குரலிலும் தன் மகன் சொக்கனிடத்திலுமே நினைவாயிருந்தாள். சேரடியில் சத் தம் வரவர அதிகரித்தது. திடீரென்று மறுபடி யும் பொற்கொடிக்குப் பழைய பயம் தோன்றிற்று. அதா வது ஐம்பது வருஷத்திற்கு முன், தன் புருஷன் பக்கத் துக் கிராமமாகிய சுரைக்காய்த்தேவன் கிராமத்தைச் சூறையாடச்செய்ததும், அதுமுதல் அவன் பழிக்குப் பழி வாங்கச் சமயம் பார்த்திருப்பதும் நினைவுக்கு வந்தன. அந்தச் சூறையிலிருந்துதான் நந்தன், மூக்கன், காட்டேரி இவர்களுக்கு வருஷாவருஷம் பென்ஷன் கிடைக்கத் தொடங்கியது.

பொற்கொடி இவ்வாறு ஆலோசித்துக்கொண்டிருக்கையில் சேரடியில் கலவரம் முற்றிவிட்டது. அவள் தன் தம்பியை நோக்கி, "ராமலிங்கா! கோட்டான் சும்மா கூவுமா, ஒருநாளைப் போல இருபது நாள் இரவு! ஒருநாளில்லாவிட்டால் ஒருநாள் இந்தக் கொள்ளை வந்தே தீருமென்று எனக்குத் தெரியும். மரத்தில் எறிந்த கல் கீழே வந்து விழவேண்டியதுதானே! இந்தக் கூட்டம் சுரைக்காய்த்தேவன் பிசாசுகள்தான். பேச்சைப் பார்த்தால் பூராக் குடிபோலத் தோன்றுகிறது. இந்தக் கழுதைகள் நம் சொக்கன் ஊரிலில்லாத சமயம் பார்த்தல்லவோ வந்திருக்கின்றன. இருந்தாலும், பொற்கொடி இன்னும் சாகவில்லையே! ராமலிங்கா, இந்தக் கலகத்திலும் உனக்கின்னந் தூக்கக் கலக்கந் தெளியவில்லையோ? கொல்லைப் பக்கம் ஓடிப்போய் நம் ஆட்களைப் கூப்பிட்டுத் திரட்டிவா. நம் நந்தன், மூக்கன், காட்டேரிகள் இன்னும் செத்துப் போய்விடவில்லையே! அவர்கள் முன்னே கொடுத்த உதையை மறக்க இந்த ஐம்பது வருஷம் ஆச்சுதுபோலிருக்கிறது. மறுபடியும் இப்பொழுது பார்க்கட்டும்! படுக்கையைச் சுருட்டேன் ராமலிங்கம்! சாட்டையென்னத்துக்கு? அதைக் கொண்டுபோனால் அதாலேயே உனக்குத்தான் விழும் பூசை. ஓடிப்போய் நம் ஆட்களைக் கூப்பிட்டுச் சேரு. பள்ளி படையாட்சி எல்லாரையுங் கிளப்பு. இந்தப் பயல்களைத் தென்னைமரத்துக் கொருத்தனைக் கட்டிவைத்து வீறிவிடலாம். நல்லானும் அமாவாசையும் குடித்துவிட்டு இங்கேதான் எங்கேயாவது நிற்பார்கள்; கூப்பிடு அவர்களை!" என்று மிகவும் படபடப்புடன் சொன்னாள்.

பொற்கொடிக்கு வயது எழுபத்தைந்தாயினும், அவளுடைய சுறுசுறுப்புக்கும் சாமர்த்தியத்திற்கும் குறைவில்லை! அவள் சாமானிய இடத்தில் பிறந்து, தன் பெயருக் கேற்ப விளங்கும் பேரழகினால் இந்த அழியாப் பெருஞ் செல்வம் படைத்த ஆக்கூர்ப் பண்ணையில் வாழ்க்கைப்பட்டவள். மிதமான முறையும், சீலமும்; கற்பும் பிறழாத நல் வாழ்க்கையை நடத்திவந்தவளாதலால், இந்த வயதிலுங்கூட அவ்வளவு மனவேகமும் நிச்சய புத்தியும் அவளுக் கிருந்தன.

அன்னியருடைய சூறையோ என்ற பயம் பொற்கொடிக்குச் சிறிது நேரத்தில் நீங்கிவிட்டது. ஏனெனில் நல்லானும் அமாவாசையும் எதிர் மனையில் நின்றுகொண்டு வழக்கம்போல் மரியாதையாய்க் கூவிப் பின் வருமாறு பேசலானார்கள்:— "தாயே! வேறொத்தரும் இல்லெ. நாங்கதான் நல்லானும் அமாவாசையும். எங்களுக்கெல்லாம் ஒரு மாசமாக் கூலி போடல்லெ! எங்க வயறு காயுது. கண்ணுலே உசிரு கடகடன்னு துடிக்குது. இப்பவே போயிடும் போலேருக்குது. எல்லாருமாக் கூடி எசமானிடத்திலே மொறையிட வந்திருக்கம். எங்களுக்கு ஒடனே கஞ்சிவாக்க உத்தரவாகவேணுந் தாயே! பெரிய எசமான் நாள்ளே ஒரு வாரங்கூடக் கூலி தங்காதே! இப்போ ஆளுவளுக் கிருக்கற திண்டாட்டத்திலே, நாங்க சொன்னாக்கூட அவனுக கேக்கமாட்டானுவ. இண்ணக்கி எப்படியாச்சிங் கூலி வாங்கிட்டுத்தான் போறதுன்னு தீர்மானத்தோடே வந்திருக்கானுக."

ராமலிங்கம் நல்லான் குரலைக் கேட்டதும் தைரியங் கொண்டு, "கூலியா, கழுதைகளா! இவர்கள் தூங்குவார்

கள்; கொள்ளையடிக்கலாமென்று வந்தீர்களோ? கூலி தருகி றேன் கையைப் பிடியுங்கள். பாதிராத்திரியில் கூலியா? நல்ல மணியம்! நல்ல தலையாரி! சொக்க னிருந்தால் இப் பொழுது உங்கள் உயிரை வாங்கிவிடுவானே!'' என்று உறுமிச் சாட்டையை உருவிச் சொடுக்கிக்கொண்டு பாய்ந் தான்.

அவ்வாறு பாய்ந்தவன், புது அதிகாரம் பெற்ற ஆண வத்தால் அமாவாசையை அடிக்கப்போனான். அமாவா சையோ கருங்கல்லில் அமைத்த யவன விக்கிரகம்போல, வேலையால் உறுதிபெற்று அழகாக விளங்கும் தன் அங் கங்களுடன் அசையாமல் நின்றான். அவனை யடிக்கும் பொருட்டு ராமலிங்கம் சுழற்றின சாட்டையைப் பின்புறம் நின்ற காட்டேரி சரியான சமயத்தில் பிடித்துக்கொண்டு விசையுடன் இழுத்தான். அந்த வேகத்தால் ராமலிங்கம் காட்டேரியின் காலில் சரணமடைபவன்போல விழுந் தான். அவன் தலை ஒரு தென்னையின் அடிமரத்தில் அடி பட அவன் மூர்ச்சையானான். இந்தக் கலியிலுங்கூட, கிராமங்களில் இதுபோன்ற அக்கிரமத்தை—பண்ணை யாட்கள் யஜமானனைத் தொட்டு இழுத்துத் தள்ளும் அநி யாயத்தை—அதுவரை கண்டதுமில்லை, கேட்டதுமில்லை! அதனால் பொற்கொடிக்கு அடங்காக் கோபமுண்டாக, அவள் ஆட்களை அதட்டவும், அந்த அமளியில் அவளு டைய பழுத்த குரல் ஒருவர் காதுக்கும் எட்டவில்லை.

காட்டேரியோ நூறிடங்களில் சூறை வேட்டை யாடின மகாவீரன்! பிறர் பொருளைச் சூறையாடுவதற்கும் தன் யஜமானனையே சூறையாடுவதற்கும் யாதொரு

பேதமு மில்லை யென்று அன்றிரவு அவன் கண்டுகொண்டான். அவனுக்கு எங்கும் ஒரே தைரியம்; ஒரே வேலை! சொக்கலிங்கத்தின் தந்தை யிட்ட சோற்றுக்கு இதுவரை ஐம்பதுவருஷகாலமாக நன்றியறிவுட னிருந்ததே மேலல்லவா? கேவலம் பண்ணையாட்களுக்கு ஓயாத உழைப்பும் நாய்போன்ற நன்றியறிவுமே கடமையாயினும், எதற்கும் ஓரளவுண்டன்றோ?

காட்டேரியின் தீரம் வழக்கம்போல வெளிப்பட்டது. அவன் சிங்கம்போலக் கர்ஜித்தான். எப்பொழுதுமே காட்டேரிக்குச் சூறையின் முதல் அங்கம் சிங்கம்போன்ற கர்ஜனைதான். பிறகு அவன் கைத்திறமை வெளிப்படும். அவன் கர்ஜனையைக் கேட்டாலே அவனைச் சேர்ந்தவர்களெல்லாரும் அடங்கி அவனுக்குக் கீழ்ப்படிந்து அவனுத்தரவுப்படி நடப்பார்கள். ஈசுவரன் உலகத்தில் சிலரைக் கொள்ளைக்கென்றே பிறப்பித்திருப்பான் போலும்!

"அண்ணே, நடுராத்திரி! நமக்கு இதுதான் சரியான வேளை! இந்த மாதிரி நமக்கு அறுபது வருஷத்துக்கு அரைமணி நேரந்தான் கிடைக்கும். இந்த நெல்லுச் சேரெல்லாம் எங்கேருந்து வந்தது? நம்ம பாடுபட்டது தானே? ஏன் அதை மறக்கணும்? நமக்கோ ஒரு மாசமாக் கூலி பாக்கி! அதெக் கேப்பம்னு யசமான் வீட்டுக்கு வந்து ஆச்சிகிட்டே மொறையிட்டா, நம்மெப்போலெ பண்ணைக்கி வந்த இந்த ராமலிங்கம் சாட்டெயெ எடுத்துக்கிட்டு பாயுறான்! நம்ம வூட்லே பொண்டாட்டியுங் கொழந்தெகளும் சோறில்லாமெத் திண்டாடறது நமக்கில்லே தெரியும். பயலுகளா! அடியுங்க கொள்ளே கைகொண்ட

மட்டும்! நாம் பாத்துக்கறேன்! அரெ மணிலே இந்த இருவது சேரும் இருந்திடம் தெரியாமெப் போகணும்! கறுப்பா! நீ இந்தப் பொறுக்கித்தின்னி ராமலிங்கத்தெப் பாத்துக்கோ! நாம் போயி சுத்திப் பாக்கறேன்" என்று கூவினான் காட்டேரி.

நந்தனும் மூக்கனும் அவனோடு சேர்ந்துகொண்டு, "பயலுகளா! காட்டேரி பேச்சே பேச்சு! அப்படியே செய்யுங்க! நம்ம பிடாரிக்கும் காட்டேரிக்கும் நாளெ கொள்ளெக் கள்ளு வார்ப்பம்!" என்று உத்தரவிட்டார்கள். கொள்ளை யடிக்க உத்தரவு தங்கள் நாட்டாண்மைக்காரர் வாயிலிருந்தே வந்துவிட்டால் ஆட்களுடைய அட்டகாசத்துக்குக் கேட்கவும் வேண்டுமா?

வாலிபர்களின் தலைவர்களான இருளன், கறுப்பன், இருளப்பன் ஆகிய இவர்களும் குடிமயக்கத்துடன் பின் வருமாறு கூவினர்:—"வைக்கப் போரெச் சொக்கப்பானையாக்குங்கடா! இருட்டு, வழி தெரியல்லெ; கொஞ்சம் வெளிச்சம் உண்டாகட்டும்! ஏழைகள் இடற சாபமெல்லாம் இந்த நெருப்பு மூலமாத்தாம் பலிக்கணும்! இந்தப் பாழாப் போற பண்ணேலே இடி விழ! எத்தினி நாள் தான் பொறுத்துக்கிட்டுப் பட்டினி கிடக்கிறது? எசமான் உல்லாசத்துக்குக் குறைவேயில்லே! மோட்டாரென்ன, ரயிலென்ன! எல்லாங் காசெ அள்ளிக்கிட்டுப் போவுது! கோட்டுக் கச்சேரி சேவகனுக்கும், போலீசு ஆள்களுக்கும் வாய்க்கரிசி போட்டா அவுங்க கைகட்டி கும்பிடு போடறாங்க. நமக்கென்ன? நம்ம பசி தீருதா? இந்த சாண் வயத்துக்கு தினம் ஒருழக்கு அரிசியானும் வாண்டாமா?"

கொள்ளை வெறி கொண்டு இவ்வாறு கூடிய பல ருடைய குரலும், கேட்க மிகவும் பயங்கரமாய், எரிமலை யானது தன்னுள்ளிருக்கும் நெருப்புமயமான கற்குழம்பு முதலியவற்றை வெளிப்படுத்துவதுபோலப் பலநாள் வெறுப்பை வெளியிடுவதா யிருந்தது. பேதைகளாகிய பண்ணையாட்கள் பசியின் கொடுமை தாங்காமல் கலக மூட்டிக் கொள்ளைக்குக் கிளம்பிவிட்டால் அணைகடந்த வெள்ளம்போலத்தானே ?

நல்லான், தனக்குச் சிறிதும் அடங்காமல் மீறிக் கொள்ளையிடுங் கூட்டத்தைக் கண்டு, சிறிது நேரம் திகைத்து நின்றான். பின்பு மணியத்திற்குரிய முழு அதி காரத்தோடும், "இருளா! என்ன பைத்தியமா ? கொள்ளை யடியுங்கள் ; வேறு எதை வேண்டுமானாலும் செய்யுங்கள்; நெருப்பு மாத்திரம் வேண்டாம் ! குடி வெறியில் பைத்திய மும் கலந்துவிட்டதோ ! வாயில்லாச் சீவன்கள் தின்று பிழைக்கும் வைக்கோலிலும், நாம் சாப்பிடும் நெல்லிலும் தீ வைக்கும் பைத்தியம் எங்கேனும் உண்டா ? காட்டேரி சொற்படி கொள்ளையடியுங்கள். இருளன் பேச்சைக் கேட் டுத் தீ வைக்காதேயுங்கள். தீ வைப்பதில் யாருக்கு லாபம் ?" என்று உரக்கக் கத்தினான். ஆனாலும் அவன் பேச்சை அங்கே கேட்பாரார் ? அவன் பேசி முடிக்கு முன் சுருள்சுருளாய்ப் புகையுடன் ஜ்வாலையும் விட்டுக் கொண்டு தீ பரவ ஆரம்பித்துவிட்டது. காற்றும் அதற் கனுகுணமாக அடித்தது.

ராமலிங்கம் இவற்றையெல்லாம் தன் கண்ணாரப் பார்த்துக்கொண்டிருந்தான். ஆயினும் அவனால் ஒருபுருஷ

னைப்போல் நிமிர்ந்து நின்று பார்க்கமுடியவில்லை. கறுப்பன் அவனைக் கீழே தள்ளி அமுக்கிப் பிடித்துக்கொண்டிருந்தபடியால், அவன் தரையில் கிடந்தபடியேதான் எல்லாவற்றையும் பார்த்தான். கறுப்பன் அவனை நோக்கி, "நீயும் இங்கே பொறுக்கித் திங்க வந்தவன் தானே? அப்படியிருக்கச்சே இந்த அதிகாரம் என்ன—பொட்டை மிரட்டல்!" என்று உறுமினன்.

சொக்கலிங்க முதலியார் பண்ணை யாதரவில் பரம்பரையாகப் பிழைப்பவர்கள் சுமார் ஐந்நூறு குடும்பத்தினர் உண்டு. ஆனால் சொக்கலிங்கம் காலத்தில் அவருடைய எலெக்ஷன் வியவகாரங்கள், தமாஷா, கார்சவாரி முதலிய விஷயங்களுக்குச் செல்லுங் காலம் போக, ஊருக்கு வந்து தங்கும் சொற்ப காலங்களில் மேற்படி செலவுகளுக்குக் கண்டு நெல் மிஞ்சினுல்தான் பண்ணையாட்களுக்குக் கூலியும் படியும் கிடைக்கும். அதிலும் இப்போது சேர்ந்தாற்போல மூன்று வாரங்களுக்குக் கூலி கிடையாமையால் பசி மீறவே, அவர்கள் மனம் வெறுத்துத் துணிந்து கொள்ளையில் இறங்கிவிட்டார்கள்.

கொள்ளையின் கோலத்தை என்னவென்பது! குழந்தைகள் முதல் கிழவர்கள் வரை சிறு கோரைப்பெட்டியிலும், கூடையிலும், தட்டிலும், முறத்திலுமாகச் சேரிலிருந்து நெல்லை வாரிக்கொண்டு போனார்கள். தீயின் வேகத்திலும் தைரியமாய்ச் சென்று கீழே கிடைக்கும் நெல்லைக் கூட்டிச் சேர்த்து எடுத்துக்கொண்டு போனார்கள். பசியல்லவோ அவர்களை அந்தப்பாடு படுத்துகிறது!

நல்லான் செயலற்றுப் பரிதவித்து அங்குமிங்கும் பார்த்தான். அவனுக்கொரு யோசனை தோன்றிற்று.

உடனே அவன், "இவ்வளவு தீயில் கள்ளுக்கடை மாத்திரம் தப்புவானேன்? அதுதானே இவ்வளவுக்குங் காரணம்? இதுவரை போனது போகட்டும்; நாளை முதலேனும் நல்ல வழியில் நடப்போமே!" என்றான். அதைக் கேட்ட பாவாடை உடனே சிலரைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு கள்ளுக்கடை போய் அதற்குத் தீ வைத்துவிட்டான்; அதுவும் மூண்டெரியத் தொடங்கிற்று.

இந்த நிலையில்தான் கந்தன் ஓடிவந்து சேர்ந்தான். வந்தும் என்ன செய்வது? எல்லாம் முடிந்துபோய்விட்டன. அவன் நாலாபக்கமும் சுற்றிப் பார்த்தான். தீயின் ஜ்வாலை அவனைப் பொசுக்கியதைத் தவிர வேறு பயனில்லை சாந்தமாய ஓரிடத்தில் சற்று அமர்ந்தான். மறுபடி எழுந்து நின்றான். இவ்வாறு கவலையுடன் இன்னது செய்வதென்றறியாது தடுமாறினான். நல்லான் ஓடிவந்து கந்தன் காலில் விழுந்து, 'கந்தா, இது நாங்கள் வேண்டுமென்று செய்த வேலை யில்லை. வெகுநாளைக் கூலி பாக்கியைக் கேட்கத்தான் வந்தோம். ஒரு நிமிஷத்தில் நான் ஆச்சியிடம் பேசிக்கொண்டிருக்கும்போதே எப்படியோ காரியம் நடந்துவிட்டது! இது கடவுள் செயலே யொழிய எங்கள் காரியமில்லை!" என்று கூறிப் பரிதவித்தான். கந்தன் அக் கொள்ளையையும் தீயையும் சிறிது நேரம் கண் கொட்டாமற் பார்த்துத் திகைத்து நின்று, பின்பு அதைப் பார்க்கச் சகியாமல் ரயிலடிக்கே திரும்பிவிட நினைத்துப் புறப்பட்டான். இதெல்லாம் தன் தலையிலேயே வந்து விடியுமென்று நன்கறிந்தவனாய் ஆலோசனையுடன் செல்லலானான். நல்லானும் அவனுடன் சிறிதுதூரஞ் சென்றான்.

தீயுங் கொள்ளையும் ஒன்றுக் கொன்று சளைக்காமல் மூன்றுமணி நேரம் நடந்தேறின. இப் பேதைப் பண்ணையாட்களுக்கு இவ்வளவு மனோ பலமும், ஆவேசமும் எப்படி யுண்டாயின வென்பது ஈசனுக்குத்தான் தெரியும்! அல்லது அவர்களுடைய சாண் வயிறு பசியால் படும் பாட்டைக் கேட்டால் தெரியும்!

நல்லானும் அமாவாசையும் புயலி லகப்பட்ட கப்பல் போல ஒரு வழியும் போகமுடியாமல் விழித்துக்கொண்டு நின்றார்கள். ஆனால் நந்தன் மூக்கன் காட்டேரி, இருளன் கறுப்பன் இருளப்பன் ஆகிய இவர்களுக்குக் கொஞ்சமும் கவலையில்லை ; சந்தேகமுமில்லை. அவர்கள், தயங்கி நிற்பவர்களையும் தைரியப்படுத்திச் சேர்த்துப் பாட்டுப் பாடிக் கொண்டு தீயோடு மல்லுக்கு நின்று கொள்ளையின் குதூகலத்தை நன்கு அனுபவித்தார்கள்.

---

## அத்தியாயம்—12

### உதயம்

### I

சூறை நடந்த இரவின் பயங்கரமான இருள் நீங்கும்படி கதிரவன் கீழ்த்திசையில் தன் கிரணங்களைப் பரப்பிக்கொண் டெழலானான். அருணோதய மெனப்படும் வெள்ளொளி கீழ் வானத்தைக் கீறிக்கொண்டு பரவிற்று. பின்பு ஆதவனும் மெல்லெனத் தன் அழகிய பிம்பத்தை அணி பெறக் காட்டினான். அவன், கடந்த இரவில் ஆக்கூரில் நடந்த சம்பவங்களைச் சிறிதும் அறியாதவன்போலக் கவலை

யுற்றுக் காணப்பட்டான். வழக்கம்போல் எங்குந் தன் கிரணங்களைப் பரப்பி மேலெழுந்து போய்க்கொண்டிருந்தானே யன்றி, சொக்கலிங்க முதலியார் பண்ணைக் கேற்பட்ட கஷ்டநஷ்டங்களைக் கண்டு சற்றேனும் இரங்கி ஓரிடத்தில் நின்றதாகத் தெரியவில்லை. அன்று வானம் மேக சஞ்சாரமின்றித் தெளிவா யிருந்தமையின், பகலவன் கிரணங்கள் தடையின்றி யெங்கும் பரவின. முதலியார் பண்ணை வைக்கோற் போர்கள் பதினொரு தலைமுறையாகப் பெரிய மதயானைகள்போற் கிடந்து, காற்றில் தலையசைத்துப் புன்சிரிப்புடன் தினந்தோறும் ஆதவனை வரவேற்பதும், அவனும் அவ்வரவேற்பை அங்கீகரித்து மகிழ்பூப்பதும் வழக்கம். ஆனால் அன்று அவ்வரவேற்பு நிகழவில்லை; அதன்பொருட்டு அவன் சிறிதும் வருந்தினதாகவும் காணவில்லை.

முதலியாருடைய உல்லாசத்துக்கும் அவரிடத்துப் பிறர்க்குள்ள பெரு மதிப்புக்குங் காரணம் அவருக்கிருந்த தானிய சம்பத்தே யல்லவா? அதற் கங்கமான, மலைபோன்ற இருபது வைக்கோற் போர்களும் இருபதினாயிரங் கலம் மாசுமறு வற்ற சம்பா நெல்லடங்கிய சேர்களும் அன்று அக்கினிபகவானுடைய அன்புக் கிலக்காகி வெந்து ஒரு பிடி கரியாய்விட, விளையாட்டுத்தனமுள்ள வாயு பகவான் அக் கரியையும் அங்குமிங்கும் வாரி யிறைத்துவிட்டான்.

முதலியார் பண்ணை இந்த நிலையி லிருக்க, அவருடைய பண்ணையாட்களின் வீடுக ளுள்ள சேரியின் நிலையைச் சற்றுக் கவனிப்போம். அச்சேரியில் ஒவ்வொரு குடிசையி

லும் குடிசை தாங்காதபடி அவ்வளவு நெல் குவியல்குவியலாக நிரம்பிவிட்டது. பதினெரு தலைமுறையாக முதலியார் வீட்டில் தங்கியிருந்த தான்யலக்ஷ்மி இப்பொழுது இவ்வாறு புரண்டுவிட்டாள். சூறையாடின கொள்ளை நெல்லால் குடிகளின் குடிசைகளிலெல்லாம் அளவு கடந்த குதூகலம் நிரம்பித் தாமரையிலையில் தண்ணீர்போலத் தத்தளித்துக்கொண்டிருந்தது.

திருட்டுத் தொழிலை வயிற்றின் கொடுமையால் செய்தாலும் குற்றங் குற்றந்தானே? மிருகப் பிறப்புக்குத் திருட்டுத்தொழிலே ஜீவனோபாய மெனினும், மானிடப் பிறப்புக்கு அது மிகக் கேவலமும் பாபகரமு மானதன்றோ? ஒருவேளைச் சோற்றுக்காக உழக்கரிசி திருடினாலும் திருட்டுக் குற்றம் குற்றமே! அது சட்டத்திற்கும் புறம்பான பெருங் குற்றம்; தர்மத்திற்கும் மிக விரோதமான பிராயச்சித்த மில்லாத பெரும் பாவமாகும்.

## II

கிழக்கு வெளுத்ததும் ஆக்கூர் ஸ்டேஷனில் ஒரே கூட்டம்! இரவில் நடந்த விபத்துக்கள் எல்லோர் முகத்தாலும் நன்கு விளங்கின. ஒரு கிராமத்தில் கொள்ளை, களவு முதலிய சங்கடங்கள் நேரிட்டால், ரயிலடியே தகுந்த பாதுகாப்பிடமாக ஜனங்களுக்குத் தோன்றுகிறது. அதனாலேயே அங்கே அவ்வளவு கூட்டம்.

இன்னும் நிலந்தெளியவில்லை! குளிர்ந்த காலைக்காற்றானது, இரவில் இமைகொட்டாத அவ்வூரார் கண்களுக்குக் குளிர்ச்சியாகப் பனிநீர் தெளிப்பதுபோலச் சில்லென்று

வீசிக்கொண்டிருந்தது. அப்பொழுது ரயில் பாதையில் மேற்கிலிருந்து வரும் வண்டியின் 'பரபர' சத்தம் காதுக் கெட்டியது.

5-நெ. வண்டி ஒரு புதிய எஞ்சினுடன் அதிக ஓசையின்றிக் குறித்த காலந் தவறாது ஸ்டேஷனுக்கு வந்து, இரவில் நடந்த எல்லாவற்றையும் தெரிந்துகொண்டது போல நின்றது. அதிலேதான் ஸிலோன் போட்மெயில் பிரயாணிகளும், மாயவரம் டிப்டி கலெக்டரும் வருகிறார்கள். டிப்டி கலெக்டரானவர் புதுக் கலெக்டரை முதன் முதல் வரும்பொழுதே கைக்குள்ளே போட்டுக்கொண்டு விட்டால் தனக்கு அடுத்த மாதம் கிடைக்கவேண்டிய பிரமோஷனுக்கு யாதொரு தடையும் ஏற்படாமல் சௌகரியமாயிருக்கு மென்றெண்ணி, பனியையுங் குளிரையும் பாராமல் இரவே மாயவரம் ஸ்டேஷனுக்கு வந்து இரண்டாம் வகுப்புப் பிரயாணிகள் தங்குமிடத்திற் படுத்திருந்து இரவு முழுதும் மூட்டைப்பூச்சிகளுக் கிரையானார். கலெக்டருடைய இரத்தம் மூட்டைப் பூச்சிகளுக்குச் சிறந்த ஆகாரமல்லவா? பிறந்தாலும் ரயிலடி மூட்டைப் பூச்சியாகப் பிறக்கவேண்டும்; கவலையற்ற பிறப்பு! ஆற்று நொச்சிக்குக்கூட வருஷத்தில் ஆறு மாதம் ஆற்றில் நீரில்லாமல் வறண்டுபோகும். ஆனால் இந்த ரயிலடி மூட்டைப்பூச்சிகளுக்கு அந்தக் குறைவே யில்லை. பாவம்! அந்த மூட்டைப்பூச்சிக் கடியையும் டிப்டி கலெக்டர் மிகவும் அமைதியுடன் பொறுத்தார். 'பொறுத்தவர் பூமியாள்வார்' என்பதற் கேற்ப இதைக் கூடப் பொறுக்காவிட்டால், புதுக் கலெக்டருடைய ஸ்நேகமும் பிரமோஷனும் எப்படிக் கிடைக்கும்?

புதுக் கலெக்டர் ரங்கனும், ராஜேச்வரியும் இந்த வண்டியிலேதான் வந்தார்களென்பது நாம் சொல்லவேண்டுவதில்லை. புதுக் கலெக்டர், மாயவரம் டிப்டி கலெக்டரின் ஆதரவில், வில்லைச் சேவகன் முதலிய அங்கங்களுடன் வந்திருக்கிறார். ஆக்கூருக்கே அஃதொரு பெரிய விசேஷமல்லவா? பின்னர் அங்கே அவருக்கு நடக்கப்போகும் உபசாரங்களுக்கும் அளவில்லை. ரங்கன் எழும்பூரில் கேவலமாய் ஏனென்று கேட்பாரற்றிருந்தாலும், இங்கே அப்படியாகுமா? மேலும் அவன் சிறிது முன்யோசனையுடன் மாயவரம் டிப்டிக்குத் தன் வருகையைக் குறித்துத் தந்தியுங் கொடுத்திருந்தான்.

## III

"என்ன முதலியார்வாள்? என்ன விசேஷம், இவ்வளவு அதிகாலையில் இங்கே வந்தது? இராத்திரி நடந்த ரயில் விபத்துத் தங்களுக்கும் எட்டிவிட்டது போலிருக்கிறது!" என்று மாயவரம் டிப்டி கலெக்டர் சொக்கலிங்க முதலியாரைப் பார்த்துக் கேட்டார். முதலியாராலேயே ரயில் மோதினதென்பது அவருக் கெப்படித் தெரியும்? அவர் பின்னும் முதலியாரை நோக்கி, "தங்களுக்கு இராத்திரி முழுதும் தூக்கமில்லைபோ லிருக்கிறது! கண்கள் கலங்கிச் சிவந்திருக்கின்றன! தாங்களும் சோர்ந்திருக்கிறீர்கள். இதேன் இங்கே இவ்வளவு கூட்டம்? ரயில் மோதியதைப் பார்க்கவா?" என்று விசாரித்தார்.

"ஒன்றுமில்லை ஸார்! வரவர ஊர் அக்கிரமத்தை என்னவென்று சொல்லுவது! நேற்றிரவு என் ஆட்களே என் நெற் சேர்களுக்கும் வைக்கோற் போர்களுக்கும்

நெருப்பு வைத்துக் கொள்ளையும் அடித்துவிட்டார்கள்! நான் வெகுநாளாய்ப் பயந்து இவ்விஷயத்தைப் பற்றித் தங்களிடம் தெரிவித்துக்கொண்டிருக்கிறேன். எல்லாம் கந்தன் செய்த வேலைதான்! என் கையாலேயே என் கண்ணைக் குத்துவதுபோல என் ஆட்களையே கிளப்பிவிட்டு வேலை செய்திருக்கிறான். அவன் இருக்கும் வரை இந்தப் பக்கத்தில் கலகந்தான். நான் தங்களுக்குத் தந்தி கொடுக்க வெண்ணி ஸ்டேஷன்மாஸ்டரோடு பேசிக்கொண்டிருந்தேன்; எதிர்பாராதபடி ஈசனே தங்களை இப்பொழுது இங்கே கொண்டுவந்து விட்டார்! இருபதினாயிரங் கலம் நெல்லும் மலைமலையாக நின்ற வைக்கோற் போர்களும் இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டன! எல்லாம் அக்கினிபகவானுக்கு அர்ப்பணமாயிருந்தாலும் பாதகமில்லை. நெல்முழுதும் என் ஆட்களல்லவோ கொண்டுபோய்விட்டார்கள்? தலைமுறை தலைமுறையாக என் சோற்றைத் தின்ற என் அடிமைகளே என்னிடங் கொள்ளை யடிப்பதா! அதுதான் எனக்குச் சகிக்க முடியவில்லை. இப்படி இதுவரை எங்கேனுங் கண்டதுண்டா? இப்பொழுது தங்கள் ஆதரவால், அவர்கள் கொண்டுபோன நெல்முழுதும் கக்கி வெளிப்படுத்தும் வரை அவர்களை நான் கட்டிவைத்து நன்றாக உதைக்கப்போகிறேன்!" என்று முதலியார் வாய்கொண்டமட்டும் வேகமாகப் பொழிந்தார்.

"தீ விபத்திற்காகவா இந்தக் கூட்டம்? ஓஹோ, ரயிலடி மேட்டிலிருந்து வேடிக்கை பார்க்கவோ? இ. பி. கோ. வில் இந்தத் தீக்கொளுத்துதல் பெருங் குற்றமாயிற்றே. யார் இதைத் தூண்டியிருக்கக் கூடும்? கந்தனாயிருக்கு

மென்று நான் நினைக்கவில்லை. அவன் படித்தவன்; சாத்விகன். தீக்கொளுத்தும் கொடுமைக்குத் துணிபவனில்லை. அவன் சர்க்காருக்கு விரோதமாகப் பேசுகிறவனானாலும் இப்படிப்பட்ட காரியங்கள் செய்யக்கூடியவனில்லை. குடிவெறியினாலோ, வேறு காரணத்தாலோ உங்கள் ஆட்களே தான் செய்திருக்கவேண்டும்.'' என்று டிப்டி கலெக்டர் விடை கூறினார்.

முதலியார் மிகவும் அவசரமாய், "கந்தன் வன்னிக் கட்டை போன்றவன். வன்னிமரம் நெருப்புடையதென்பது கைக்கும் கண்ணுக்கும் புலப்படாவிட்டாலும் உரைத்தால் உடனே அதினின்றும் நெருப்புண்டாவது போலக் கந்தனும் பார்வைக்கு மிகவும் நல்லவன்போலிருந்தாலும் உள்ளே அத்தனையும் நெருப்பு. சிறிது உரைத்தாற் போதும்!'' என்றார்.

டிப்டி: "என்னவோ முதலியார்வாள், இப்படிப்பட்ட கொடுந்தொழிலில் அவன் கலந்திருப்பானென்று நான் சிறிதும் நம்பவில்லை. நானும் வேலைக்கு வந்து வருஷம் இருபதாகப்போகிறது. இதுவரை இப்படிப்பட்ட தீயையும் சூறையையும் நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை!''

முதலியார்: "இல்லை இல்லை, கலெக்டர்வாள்! கந்தன் விஷயம் தாங்கள் முழுதும் தெரிந்துகொள்ளவில்லை. செல்வ விஷயத்தில் பழைய வரன்முறையை மாற்றி, ஏழை பணக்காரன் என்ற வேறுபாடில்லாமற் செய்ய வேண்டுமென்பது அவன் கொள்கை. ருஷியா தேசத்தில் நடப்பதாகக் கேள்விப்படுகிறோமே; அதென்ன—போல்

ஷிவிஸமா—அதுபோல. நேற்றுச் சாயந்திரங்கூடக் கள்ளுக்கடையில் இதுதானும் பேச்சு!''

டிப்டி: "அப்படியானால், முதலியார்வாள்! புதுக் கலெக்டர் இந்த ரயிலில் வந்திருக்கிறார்; தரங்கம்பாடி போகிறார். அவரை இங்கே யிறக்கி விருந்தளித்து உபசரித்து, தீயினாலுண்டான சேதத்தையும், சூறையின் கோலாகலத்தையும் அவர் நேரே காணும்படி செய்வது நல்லது. அதைப்போல் நல்ல சாட்சி வேறு நமக்குக் கிடையாது. அப்பொழுது நானும் தைரியமாய்க் கந்தன் விஷயத்தி லிறங்கிக் காரியங்களை நடத்தலாம்."

முதலியார் விடைசொல்ல வாயெடுத்தார். அதற்குள் டிப்டி கலெக்டர் மறுபடியும் "ஆனால் முதலியார்வாளுக்கு இது மட்டும் ஞாபக மிருக்கட்டும்! கந்தன் மிகவும் செல்வாக் குடையவன். அவனுக்குச் சிநேகிதர்களும் அவனை ஆதரிப்பவர்களும் எங்கும் இருக்கிறார்கள். மதராஸ், டெல்லி, பம்பாய், கல்கத்தா, லண்டனில்கூட அவனுக்கு ஆட்க ளிருக்கிறார்கள்! ஆகையால் அவன் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். ஸரியான ருஜூ இல்லாமல் எக்கச்சக்கமாக ஏதேனும் செய்துவிட்டால் நமக்கே ஆபத்துத்தான். பார்லிமெண்டில்கூட அதைப் பற்றிக் கேள்வி வந்தாலும் வரும்! இருந்தாலும் நாம் புதுக் கலெக்டர் துரையை அழைக்கிறபடி அழைப்போம்; பின்பு அவர் நோக்கந் தெரிந்து நடப்போம்'' என்றார்.

முதலியார்: "மிகவும் சந்தோஷம்! அதுநல்ல ஏற்பாடு தான். அவரே நேரில் வந்து பார்க்கட்டுமே! உண்மையை யார்தான் மறைக்க முடியும்? மேலும் கலெக்டர் துரை

நமது பங்களாவில் காலடி வைத்தால் அதுவே நமக்கொரு கௌரவமல்லவோ ? ஒருவேளை விருந்தென்ன ! ஒரு மாத மிருக்கட்டுமே."

டிப்டி : " தங்கள் கார் இப்பொழுது இங்கே வந்திருக்கிறதோ ?"

முதலியார் : " அதோ தயாராய் நிற்கிறது."

ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் ஒரு தென்னைமரத்தடியில் முதலியாருடைய ஆபர்ண் கார் அழகுபெற நின்றது. அது மாசற்ற காலையொளியால் மிகவும் சோபையுடன் விளங்கிற்று. அவ்வழியே சென்ற சிறுவனொருவன் இவர்கள் சம்பாஷணையைக் காது கொடுத்துக் கேட்டவன் போல மோட்டாரின் தாரையை(ஹாரனை)இரண்டு மூன்று முறை அமுக்கி ஒலிக்கச்செய்தான். குக்கிராமத்துப் பிள்ளைகளுக்கு மோட்டாரென்றால் வேடிக்கைதானே !

டிப்டிகலெக்டர் எந்நாளு மில்லாமல் அன்று நிஜார் பூட்ஸுகளுடன் வந்திருந்தார். பெரிய அதிகாரிகள் முதன்முதல் வரும்பொழுது அவர்களைப் பார்ப்பதற்காக அவர் வைத்திருந்த உடுப்பு அது. அவர் வைதிக சிரத்தையுள்ளவராதலால் சாதாரணமாகப் பஞ்சகச்ச வேஷ்டிதான் கட்டுவது வழக்கம். அன்று புதுக் கலெக்டரைப் பார்ப்பதற்காகத் தமது விசேஷ உடுப்புடன் வந்தார். அந்த நிஜாரோ பன்னிரண்டு வருஷங்களுக்குமுன் முதன் முதல் அவருக்கு டிப்டிகலெக்டர் வேலை யானபோது தைக்கப்பட்டது. இப்பொழுது அவர் உடம்பு மிகவும் பருத்து, அந்த நிஜார் போதாமல் மிகவும் அவஸ்தைப் பட்டார். க்ஷயம், மதுமேகம் முதலிய கொடிய வியாதிகள்

ஏதேனும் வந்தாலன்றி, பன்னிரண்டுவருஷம் டிப்டி கலெக்டர் ஹோதாவிலிருந்து உடல் பருக்காதவரும் உண்டோ! டிப்டிகலெக்டர் ஸர்க்கஸ் யானைபோலத் தவித்துக்கொண்டு, மெல்ல, ரங்கனும் ராஜேச்வரியும் இருக்கும் வண்டியருகிற்போய், அவர்களிடம் 'புரோகிராம்' மாறியதைப்பற்றி வணக்கமாய்த் தெரிவிக்கலானார்:—

"தரங்கம்பாடியில் தங்களைத் தக்கபடி வரவேற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இன்னும் சரிவர ஆகவில்லையாம். ஆதலால், இங்கே இறங்கி மத்தியான்னம் தங்கிவிட்டு மாலையில் தரங்கம்பாடி போகலாமென்று தோன்றுகிறது. இதோ இவர்தான் சொக்கலிங்க முதலியார். மாயவரம் தாலுகா போர்டு பிரஸிடெண்டு; டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர்; நமது தாலுகாவில் அதிக நில வரி செலுத்தும் முதல்மிராசுதார். ஸ்டேஷனுக்குச் சமீபத்திலேயே இவருடைய பங்களா இருக்கிறது. இவருக்குக் காரும் உண்டு. மத்தியான்னம் அந்தப் பங்களாவில் தங்கிச் சிரமபரிகாரம் பண்ணிக்கொண்டு மாலையில் புறப்பட்டு இவருடைய ஆபர்ன் காரிலேயே தரங்கம்பாடி போய்விடலாம். இராத்திரி ரயிலில் கண்விழிப்பும் மிகவும் சிரமமா யிருந்திருக்குமே?"

"எங்களுக் கிங்கே என்ன தெரியும்? எது சௌகரியமோ அப்படி நீர் ஏற்பாடு செய்யும்" என்று ரங்கன் கூடியவரை கம்பீரமாய்க் கொட்டாவி விட்டுக்கொண்டே சொன்னான். சுந்தரம் மரியாதையாய்ச் சற்று எட்டி நின்றுகொண்டிருந்தான்.

"ஸ்டேஷன் மாஸ்டர்! துரை இங்கே இறங்குகிறார்; இறங்கினவுடன் நீர் வண்டியை விடலாம்!" என்றார் டிப்டி

கலெக்டர். ரங்கனும் ராஜேச்வரியும் கீழே யிறங்கினார்கள்; வண்டியும் புறப்பட்டது. வில்லை போட்ட சேவகன் புதுக் கலெக்டருக்கு முன்னே அமுல் செய்து கூட்டத்தை விலக்கிக்கொண்டு சென்றான். புதுக் கலெக்டராகிய தன்னைப் பார்ப்பதற்கே அந்தக் கூட்டம் வந்திருப்பதாகவும், டிப்டி கலெக்டர் தன்னைப்போலவே பார்வைக்கு ஒரு மாதிரியாயிருந்தாலும் காரியத்தில் கைகாரர் என்றும் ரங்கன் தீர்மானித்துக்கொண்டான்.

## IV

ராஜேச்வரி நுண்ணறிவும் கூர்த்த பார்வையுமுடையவள். அந்தக் கூட்டத்தில் அவள் கந்தனைக் கண்டுவிட்டாள். உடனே அவள், சந்தோஷந் தாங்காமல், என்ன இது, கந்தனா! என்ன ஆச்சரியம்! உன் ஊரில் காலடி வைத்ததும் உன்னைக் கண்டது என்ன பாக்கியம் கந்தா! உன்னைப்பற்றித்தான் நானும் ரங்கனும் வழிநெடுகப் பேசிக்கொண்டே வந்தோம்! என்று கந்தனைக் கூப்பிட்டுப் பேசத் தொடங்கினாள்.

'நான் காண்பவள் ராஜேச்வரிதானா! என் கண்களை நம்ப முடியவில்லையே!' என்று கந்தன் மிகவும் ஆச்சரியத்தால் சற்றுத் திகைத்துப் பின் தெளிந்து, அந்தக் கூட்டத்தை விலக்கி வழி செய்துகொண்டு ராஜேச்வரியை நோக்கி வந்தான். அவன் முகத்தில் அருணோதயம்போல ஒளி ததும்பிற்று. பருவகாலத்துப் புது மழை கண்ட பயிர் போலக் கந்தனைக் கண்ட ராஜேச்வரி தழைத்து நின்றாள்.

கந்தன் அருகில் வந்ததும், ரங்கனும் அவனைப் பார்த்துப் பழைய நட்பினால் மிகவும் அன்பும் உவகையுங்

கொண்டு, "என்ன சிந்தா! எல்லாம் ஆச்சரியமாயிருக்கிறதே! உன்னை இப்பொழுது கண்டதும் எனக்குண்டாகும் ஆநந்தத்தை யென்னவென்று சொல்வேன்!" என்று கலகலப்பாய்ப் பேசலானன். தானும் கந்தனுமாக ஆக்ஸ்போர்டில் பல வருஷங்கள் சேர்ந்து படித்ததும், அக்காலத்து ஒருநாள் ஒரு கூட்டத்தில் ராஜேச்வரி பேசியபொழுது முதன்முதலாக இருவரும் அவளைக்கண்டு அவள் பேச்சிலும் வடிவழகிலும் ஈடுபட்டு அவளைக் காதலித்ததும் முதலாகிய பழைய நிகழ்ச்சிகள் அவன் நினைவுக்கு வந்தன.

கந்தனும் ரங்கனும் ஒருவரையொருவர் கைகுலுக்கிப் பழைய நட்பின் பயனை நன்கு அனுபவித்தனர். கந்தனுடைய சாந்தத்தையும் அடக்கத்தையுங் காணக் காண ரங்கன் பரவச மடைந்தான்.

கந்தனிடம் அவ்வளவு சாந்தங் குடிகொள்ளக் காரணம் அவனுடைய சத்திய வொழுக்கமேயாகும். அதுவன்றே இம்மை மறுமை யிரண்டிலும் அளவற்ற பயனை யளிப்பது! ஜீவன் முக்தனாவதற்கு முதற்படியா யிருப்பதும் இந்தச் சத்தியமே யன்றே!

ரங்கன் முதலியோர் பேசிக்கொண்டிருக்கையில், சுந்தரம் ரங்கன் மேலேயே கண்ணாயிருந்தான். அவனுக்கு ரங்கனை எங்கேயோ பார்த்த ஞாபகமாகவு மிருந்தது; இன்னானென்று முழுதும் அறியவும் முடியவில்லை! நெடு நேரம் ஆலோசித்து ஒருவாறு துணிந்து, தன் வீட்டினுள் ஓடி, "ஸரஸா, இங்கே வா! தஞ்சாவூர்ப் புதுக்கலெக்டராம்! ஒருவர் இப்பொழுது இங்கே வந்து இறங்கியிருக்கிறார்.

அவரைப் பார்த்தால் நம் ரங்கன்போ லிருக்கிறது! ஒரு வேளை அவனுக்குத்தான் குண்டூரிலிருந்து தஞ்சாவூருக்கு மாற்றலாய்விட்டதோ என்னவோ? வந்து பார்!" என்ருன்.

ஸரஸ்வதி பரபரப்புடன் வெளியே ஓடிவந்து பார்த்தாள். தன் தமைய னென்பதை அறிந்துகொண்டாள். அவளும் தமையனைப் பார்த்து ஐந்து வருஷங்கள் ஆகி விட்டன. அவனிடமிருந்து கடிதம் வந்துகூட மூன்று வருஷமாய்விட்டது! ஆதலால் அவள் அடங்காத உவகையுடன் மான்போலத் துள்ளிக் குதித்துப் பிளாட் பாரத்திற் கோடினுள். எல்லோர் கண்ணும் அவளிடம் சென்றன. ரங்கனும் அவளைப் பார்த்து இன்னுளென் றறிந்துகொண்டான். தன் கலெக்டர் பதவி ஒருபுறம் சிறிது பாதித்தாலும், உடன்பிறப்பை ஒளித்தல் கூடுமோ? உடனே அவன் அன்புடன் அவளை விளித்து அவளுடன் பேசத் தொடங்கினுன் :—

"ஸரஸூ! நான் இத்தனை வருஷமாக உனக்குக் கடிதங்கூட எழுதாமல் பெருந் தவறு செய்துவிட்டேன். நம் தாய் தந்தையர் இல்லாத குறையால் வீட்டையே மறந்துவிட்டேன்!"

"நீ லெட்டர் போட்டால்தானு அண்ணு! ஞாபகம் இருந்தால் போதாதா? உன்னை நான் நினைக்காத நாளில்லை! நம் தாய் தந்தையர் இருந்து உன்னுடைய மேல் நிலையைக் கண்டு களிக்கக் கொடுத்துவைக்கவில்லையே யென்பதுதான் பெரிய குறை."

"அவ்விஷயத்தில் நான் கொடுத்துவைத்தது அவ்வளவுதான் ஸரஸூ. அதிருக்கட்டும்! நீ இங்கே எதற்

காகக் காத்துக்கொண்டிருக்கிறாய்? எந்த வண்டிக்கு? எங்கே போக?''

"ஒவ்வொரு நாளும் இங்கே வரும் எல்லா ரயிலுக்குந்தான் காத்துக்கொண்டிருக்கிறேன்!'' என்று ஸரஸ்வதி இனியகுரலில் விடையளித்தாள்.

"நீ சொல்வது எனக்குப் புரியவில்லையே!'' என்றான் ரங்கன்.

"புரியும்படி சொல்லட்டுமா? உன் தங்கை அகமுடையானுக்கு ஆக்கூர் ஸ்டேஷன்மாஸ்டர் வேலை; தெரிந்ததா? என்று முகத்தைச் சிறிதும் சுளிக்காமல் தாராளமாய்க் கலெக்டர் பதவியிலுள்ள தன் தமையனுடன் பேசினாள் ஸரஸ்வதி.

ரங்கன் மனங் கலங்கிச் சிறிது நேரம் இன்னது சொல்வதென் றறியாமல் திகைத்து நின்றான். பிறகு, "ஸரஸ்வதி! இன்றோடு உன் கஷ்டம் தொலைந்தது! இந்த மூன்று வருஷ காலமாய் நான் உன் விஷயத்தில் கவனக் குறைவா யிருந்தது என் மனத்தை மிகவும் வருத்துகிறது. சேறடைந்த குட்டையில் செந்தாமரை மலர்ந்தது போலுளது இந்த ஆக்கூரில் நீ யிருப்பது! உன்னை உடன்பிறப்பாகப் பெற்ற எனக்கென்ன குறைவு? நம் தாயார் இப்பொழுது இருந்து உன்னைப் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லையே!'' என்றான்.

ஸரஸ்வதியும் ரங்கனும் இவ்வாறு பேசிக்கொண்டே மெல்ல முன்னே நடந்தார்கள். கந்தனும் ராஜேச்வரியும் மௌனமாய் அவர்களைப் பின்தொடர்ந்தனர். எல்லோருமாக முதலியாருடைய ஆபர்ண் காரை அடைந்தனர். அதற்குள் எதிர்பாராத வண்ணம் பொன்னன் வந்து

ராஜேச்வரியின்பின் மரியாதையாய்க் கைகட்டி நின்றான். முன்பின் அறியாத காமாக்ஷியும் ஸரஸ்வதியின் பின்னே வந்து நின்றாள். ஓரிரவிற்குள்ளே இவர்களுக்குள் இவ்வளவு நட்புண்டாய்விட்டது!

ராஜேச்வரி பொன்னனைப் பார்த்து, "என்ன பொன்னு நீயும் இங்கே இறங்கிவிட்டாய்! தரங்கம்பாடி போகவில்லையோ?" என்றாள். அவன், "தாயே நான் உங்க ளடிமை. வேறு எங்கே போய் நான் என்ன வேலை செய்யப்போகிறேன். இனிமேல் என் ஆயுள்வரை தங்கள் காலடியிலேதான்!" என்று வெகு நயமாக நடித்தான்.

இவ்வளவு நல்லவனான பொன்னனைக் கண்டு ராஜேச்வரி மகிழ்ச்சிகொண்டு, அவனையும் தன்னுடனழைத்துக் கொண்டாள். ஸரஸ்வதி காமாக்ஷியைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டாள். அறுவருமாக முதலியார் காரி லேறி அவருடைய பங்களாவுக்குச் சென்றனர்.

கார் மணிக்கு நாற்பது மைல் வேகத்தில் காற்றாய்ப் பறந்தது. அதற்கேற்பச் சாலையும் நன்றாயிருந்தது. முதலியார் தாலுகா போர்டு தலைவரா யிருக்கும்போது தன்னூர்ச் சாலையின் சௌகரியத்திற்குக் கேட்கவும் வேண்டுமா? சாலைகளுக்குக் கப்பி போடுவதற்காக வருஷத்திற்கு இரண்டு லக்ஷம் ரூபாய் அனுமதி யுண்டு. அப்படியிருக்கத் தன் ஊரில்கூடக் கப்பிபோட்டுச் சாலையைக் கண்ணாடி போல வைத்துக்கொள்ளாவிட்டால். பின்பு 'பிரஸிடெண்ட்' வேலைதான் எதற்கு?

டிப்டிகலெக்டரும் முதலியாரும் ரங்கன் முதலியவர்களுடன் மரியாதையாகக் கார் வரை வந்து அவர்களைக்

காரிலேற்றி யனுப்பினார்கள். போகும்போதே முதலி யார், கந்தனுடைய அதிருஷ்டத்தில் தன் மனத்தையும், ஸரஸ்வதியின் அழகில் தன் கண்ணையும் செலுத்திக் கொண்டே போனார். காரைத் திரும்ப ஒரு முறை கொண்டுவந்து தம்மை யழைத்துப்போகும்படி டிரைவ ருக்கு உத்தரவு செய்துவிட்டு முதலியாரும் டிப்டிகலெக் டரும் ஸ்டேஷனண்டையே தங்கினார்கள். அப்படி அவர் கள் நின்ற நேரத்தில், கந்தனுக்கு வந்த யோகத்தைப் பற்றிப் பேசலானார்கள்.

சுந்தரமும் அவர்களுடன் கலந்துகொண்டு, ரங்கன் தன் மைத்துன னென்ற முறையால் இவ்விஷயத்தில் மிக வும் தெரிந்தவன்போலப் பாவித்துப் பேசினான். ரங்கன் தனக்கு மைத்துன னென்று அவன் சொல்லியும் அதை அவ்விருவரும் நம்பவில்லை. கந்தன் விஷயத்தைத் தானே ஒருவாறு யூகித்து, சீமையில் அவன் ரங்கனுடன் வாசித்த தாகக் கேள்வியென்று தைரியமாய்ச் சொன்னான். ஒன் றும் முதலியார் காதில் ஏறவில்லை.

முதலியார் புதுக் கலெக்டருக்கும் கந்தனுக்கு முள்ள சிநேகப் பான்மையை நோக்கு மிடத்துத் தன் எண்ணம் வீணென்ற கருத்துடனேயே வார்த்தையாடினார். டிப்டி கலெக்டர், கொள்ளை, தீக்கொளுத்தல் முதலிய இது போன்ற விஷயங்களில் தாமே நேராக வழக்கை நடத்தத் தமக்கு அதிகார முண்டென்றும், சட்டமென்றால் எவ ருக்கும் ஒன்றுதானே யென்றும், அதனால் முதலியாரவர் கள் கவலைப்பட வேண்டுவதில்லை யெனவும் தேறுதல் கூறி னார். பின்னும் அவர் "முதலியார்வாள்! தங்களுக்கு

இவ்விஷயத்தில் சந்தேகமே வேண்டாம். கொஞ்சநஞ்சமன்று; இருபதினாயிரங் கலம் நெல் பறிகொடுத்திருக்கிறீர்கள்; தீ விஷயமும் எல்லோருக்கும் தெரியும். ஆதலால் எப்படியும் தங்கள் பக்கமே ஜயமாகும்!'' என்று முதலியாரைத் தைரியப்படுத்தினர். ஆனால் அவருக்கும் உள்ளூறக் கவலைதான்.

டிப்டி கலெக்டருக்கு ஒரே பெண். அப்பெண்ணுக்குப் பல வருஷங்களாகப் பாடுபட்டு மாப்பிள்ளை தேடி, அவ்வருஷம் தீர்மானம்செய்து, அடுத்த மாதத்தில் விவாக முகூர்த்தமும் வைத்திருந்தார். அதற்குப் பந்தற்கால் நடுவது முதல் விவாக நாலாநாள் ஊர்வலம் வரையில் முதலியாரவர்களுடைய உதவியின்றிச் செம்மையாய் நடைபெறுமா? இதுபோன்ற விஷயங்களில்தானே பிரபுக்களுடைய தன்மை நன்கு வெளிப்படுகின்றது! அதிலும் பெரிய ஜமீன்தார்போன்ற ஏகபோக ஆட்சியும், அதிகாரமும், பரம்பரைக் கௌரவமும் உடைய முதலியாருடைய சிநேகத்தை யார்தான் விரும்புமாட்டார்கள்?

முதலியாருடைய ஊதாரித்தனத்திற்கோ அளவில்லை. தன் மனம் பற்றின விஷயத்தில் பணத்தைப் பணமென்று பார்க்கமாட்டார். ஓட்டாஞ் சல்லியாகத்தான் வாரி யிறைப்பார். எல்லாம் அவருக்குப் பிச்சைக் காசுதான். அந்தக் காசு ஆயிரக் கணக்கான ஏழை மக்கள் வெய்யிலிலும் மழையிலும் சேற்றிலும் புழுதியிலும் வருந்தி யுழைத்ததனால் வருவதாயினும் அவருக்கென்ன?

ஆண்டவனும் உணரமுடியாத ஏதோ ஒரு ரகசிய வழியால் பூக்கள் தம்மிடத்துத் தேனைச் சேகரிக்கின்றன,

அத்தேனைத் தேனீக்கள் ஆயிரக் கணக்கான மைல்கள் அலைந்து திரிந்து சிறிது சிறிதாகச் சேகரித்துத் தேன் கூடு கட்டுகின்றன. அவை அக்கூட்டை, மானிட சஞ்சாரமில்லாததும், மானிடர் கைக்கெட்டாததும், ஏகாந்தமானதும், உலவும் வாயு உவந்து முத்தமிடக் கூடியதும், சிற்ருறுகளின் மழலைச்சொற் போன்ற இனிய ஒலியுடன் கூடியது மான உயர்ந்த மலைப் பிரதேசங்களில் கட்டுகின்றன. அக்கூடுகளோ அழகிய பல சிறு கண்களுடன் ஆதித்தனுக்கே அர்ப்பணமாகத் தக்கனவாய் மிக உயரத்தில் விளங்குகின்றன. அவ்வாறிருந்தும், என்ருே ஒருநாள், எதையும் திருடித் தின்னும் இக்கேவல மானிட ஜாதியின் கையி லகப்பட்டு அவை அழிவை யடைகின்றன வல்லவா?

---

## அத்தியாயம்—13

### தரங்கம்பாடி

#### I

ஒரு காலத்தில் கீழ்கடற்கரைக்கு அரசி யெனும்படி விளங்கிய தரங்கம்பாடி இப்பொழுது எருக்கும் நெருஞ்சியும் எங்கும் நிறைந்து, பழைய சிறந்த கட்டிடங்களும் இடிந்து பாழடைந்து கிடக்கின்றது. ஆயினும் அங்கே நில்வளத்துக்குக் குறைவில்லை. தரங்கம்பாடியின் இயற்கையமைப்பு மிக அழகானது. வீரசோழன் ஆற்றின் சங்கமுகத்தில், கடலுக்கு மிகவும் அருகே மேட்டுப்பாங்கான

விடத்தில் கடலின் அலைகள் கோட்டை மதிலின்மீது மோதித் தவழும்படியாக அமைந்துள்ளது. தென்னந்தோப்புக்களும் மாஞ்சோலைகளும் நிறைந்து எங்கும் பச்சென்ற தோற்றத்துடன் விளங்குவது. இவையன்றித் தரங்கம்பாடிக்குப் புராதனமான வேருெரு பெருமையு முண்டு. அதாவது, அஃது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே செழித்தோங்கியிருந்த சோழ ராஜதானியாகிய புகாரின் தெற்கெல்லையாக விருந்ததாகும். இத்தகைய தரங்கம்பாடிக்கு இப்பொழு துள்ள பெருமையெல்லாம் அதன் கடற்காற்று விசேஷத்தினுலேதான்.

முந்நூறு வருஷத்திற்கு முன் டேனிஷ் அரசாங்கத்தார் கையில் அவ்வூர் அகப்பட்டபொழுது, அவர்களால் அலைவாயில் அக்கோட்டை கட்டப்பட்டது. அஃது இப்பொழுது பார்வைக்கு மிகப் பழைய காலத்தது போலக் காணப்படும். இப்பொழுது அதைப் பழுது பார்த்து அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வந்தால் தங்குமிடமாகச் செய்திருக்கிருர்கள். அதனுல், புதுக் கலெக்டராகிய ரங்கனுக்கும் ஒருவார காலத்திற்கு அதுதான் விடுதியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ரங்கின் முதலியோர் தரங்கம்பாடிக் கோட்டைக்கு வந்து நாட்கள் ஐந்தாயின. ரங்கன் தஞ்சாவூர் போய் வேலை யொப்புக்கொள்ளவேண்டிய காலமும் சமீபித்து விட்டது. ஆனுல் ரங்கனுக் கிருந்த மனக்குழப்பம் இவ்வள வவ்வள வன்று. அவன் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் அதைப் பொருட்படுத்தாமல் ராஜேச்வரி தேச பக்தியிலேயே மனத்தைச் செலுத்தி மேன்மேலும்

திட்டங்கள் போட்டுக்கொண்டு, அவ்வழியே ரங்கனைத் திருப்ப முயற்சி செய்துவந்தாள். அவள், தேசம் பெரிதா சம்பளம் பெரிதா? என்பது போன்ற பல கேள்விகளைப் பலவகையாக அடிக்கடி ரங்கனைக் கேட்டுவந்தாள். பெண் மணியிலும் கண்மணியான அவள் வார்த்தையை எப்படி ரங்கன் மீறுவது! அவனுக்குக் கலெக்டர் வேலையை விடவும் மனம் வரவில்லை. அவன் 'இதற்கொப்பாக ராஜபோக முள்ள வேலை இந்தியாவில் வேறுண்டோ? ஒரு ஜில்லா முழுதுக்கும் முடி சூடா மன்னனல்லவா? இப்படிப் பட்ட சுகமான வேலையைத் தன் காதலியின்பொருட்டு இழந்து விடுவதென்றால் யாருக்குத்தான் மனம்வரும்? அப்படி யிழந்தாலும் கருதிய பயனாவது கைகூடுமா— அதுவுமில்லை! கடைசியாகச் சிறைவாசந்தான் மிச்ச மாகும்!' என்றிவ்வாறு தன் மனத்தோடு போராடிக் கொண்டிருந்தான். அப்பொழுதும் ராஜேச்வரியின் இணை யற்ற அழகும், மனோ தைரியமும், மாசற்ற தேசாபிமான மும் அவன் உள்ளத்தை உருக்கின. மேலும் அவன் தங்கை ஸரஸ்வதியும் ராஜேச்வரியும் இந்த ஐந்து நாளுக் குள் ஐந்து வருஷத்திய நேசத்தை யடைந்துவிட்டனர்!

## II

அன்று பிற்பகல் இரண்டு மணிக்கே கடற்காற்று வீசத் தொடங்கிவிட்டது. கடலலைகள் மெல்ல மெல்லக் கரையின்மேல் அதிகமாக மோதத் தொடங்கின. நடுப் பகலில் கடலுக் குரிய அமைதி தீர்ந்துவிட்டது. இனி மாலை முழுவதும் ஓயாத அலையின் கீதமே எங்கும் நிரம்பி யிருக்கும். அந்தப் பழைய டேனிஷ் கோட்டை அந்தப்

பாட்டை ஆழ்ந்து கேட்டுச் சற்றுத் தலை வணங்கி நிற்பது போலத் தோன்றிற்று. மேலும் அது, தான் கருதி வந்த ஏதோவொரு காரியம் முடியாததனால், அதைக்குறித்துக் கதிர்வனையும் வானத்தையும் வேண்டிக் காலம் நோக்கியிருப்பது போலவும் தோன்றிற்று.

கடற்கரையில் எங்கும் மணல் முட்டுமுட்டாய்க் குவிந்து கிடந்தது. அலையில் அநாயாசமாய்ச் செல்லுங் கட்டுமரங்கள், அன்று ஏதோ விடுமுறைநாள் போல வேலையின்றி அம் மணல்முட்டுக்களிற் கிடந்தன. நண்டுகள் தம் வளையிலிருந்து அலைக்கும் அலையிலிருந்து திரும்ப வளைக்குமாகச் சிறுவர்கள் 'பலீன் சடுகுடு' விளையாடுவதுபோல் ஓடிக்கொண்டிருந்தன. அலைகள் பூமாதேவிக்குச் சதா அபிஷேகம் செய்வதுபோல ஓயாமல் கரையில் நீரை வீசிக்கொண்டிருந்தன. கரையோரத்தில் தரையானது தேய்கல் போட்டுத் தேய்த்தாற்போலச் சமனும் அழகாயும் இருந்தது. இடையிடையே நண்டு வளைகளில் நீர் குமிழியிட்டது.

மழைக்காலங்களில் வீரசோழ னாற்றுச் சங்கமுகத் துறை ஒரு மைல் அகலமுள்ளதா யிருக்கும். ஆனல் இப்பொழுது அது தூர்ந்து குறுகிப் பத்து கஜ அகலங்கூட இல்லை. கடல்நீர்தான் எதிர்த்து ஆற்றினுள் வெகுதூரம் சென்றது. அத்தோற்றம் விழற் காட்டில் பாம்பு சரசர வென் றோடுவதுபோ லிருந்தது.

வாயுபகவான் வேகமாய் வீசிக்கொண்டிருந்தார். அதனல் கோட்டைச் சாளரக் கதவுகளெல்லாம் படீர் படீரென் றடித்துக்கொண்டிருந்தன. அக்கோட்டை

யில் அறைகளெல்லாம் தாழ்வானவை; மேற்றளம், போவோர் தலையி லிடிக்கும். அதனால் உள்ளே நட மாடுவோர் சிறிது தலைவணங்கித்தான் நடமாடவேண்டும். கோட்டையின் தென்புறத்தில் ஆகாய மளாவிய விமான மொன்றுண்டு. அதிலேறிப் பார்த்தால் சுற்றுப்புறங்களி லுள்ள விசேஷங்கள் நன்கு புலனாகும். வீரசோழன் கடலோடு கலக்குமிடத்தின் இயற்கை யழகும், சிறப்பும் அவ்விமானத்தி லிருந்து பார்ப்பவர்க்குப் பேரானந்தம் விளைக்கும்.

## III

மாலைக்காலம்; மணி சுமார் ஐந்திருக்கும். கதிரவன் மேற்கே நன்றாய்ச் சாய்ந்துவிட்டான். ரங்கனும் ஸரஸ்வதியும் மேற்கூறிய விமானத்தின்மீதேறி வெளிக்காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தனர். கந்தனும் ராஜேச்வரியும் கடற்கரையில் நின்று அலையுடன் பேசிக்கொண்டும் மணலில் விளையாடிக்கொண்டு மிருந்தனர்.

ராஜேச்வரி கடலின் மழலையொலியை அனுபவித்துக் கொண்டிருக்கும்பொழுது கந்தன் குறுக்கிட்டு அவளுடன் பேசலானான்: "ராஜி! ஈசன் செயலென்பதொன்று தனியே யிருப்பது நிச்சயம். இன்றைக்குத் துன்பமென்று நினைப்பவையே நாளை யின்பமாக முடிகின்றன. அவ்வாறே இன்பமென்று தோன்றுபவை துன்பமாக முடிகின்றன. நம்கைக்குள் ஒன்றுமில்லை! என்னுடைய உழைப்பெல்லாம் வீணாகித் தொலைந்ததென்று நினைத்த சமயத்தில், திடீரென்று எல்லாம் மாறி மறுபடி நம்முடைய கருத்துக் கிசையக் காரியங்கள் நடைபெறுமென்று தோன்றுகிறது!

ரங்கனும் நீயும் இப்பொழுது வந்து என்னை மீட்பீர்களென்று யாருக்குத் தெரியும்!"

ராஜேச்வரி : "இப்பொழுதுங் கூட எதிர்பாராத வண்ணம் உனக்குத் தீங்கு நேரலாம்! டிப்டி கலெக்டர் ஆக்கூர்ச் சூறை விஷயத்தில் மும்முரமா யிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் முதலியார் மனம் இந்த ஐந்து நாளில் மிகவும் மாறியிருப்பதாகவும் தெரிகிறது. அவர் கடந்து போன காரியத்தைப் பற்றி இனி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதனால் கரியாய்ப் போன இருபதினாயிரங் கல நெல்லும் திரும்பி வருமாவென்றும், அப்படியே வியவகாரத்தை நடத்தித் தன் பண்ணையாட்களெல்லோரையும் சிறைப்படுத்தினால் அடுத்த வருஷச் சாகுபடிக்கென்ன செய்வதென்றும், அதனால் விவகாரத்தை நிறுத்திவிடலாமாவென்றும் ஆலோசிக்கிறாராம். ஆனாலும், ரங்கன் ராஜிநாமாக் கொடுத்தால்—"

கந்தன் : "ரங்கன் ராஜிநாமாவா! என்ன இது! உண்மைதானா—விளையாட்டுக்குச் சொல்லுகிறாயா?"

ராஜேச்வரி : "ஆமாம் கந்தா, விளையாட்டில்லை; உண்மையே. தன் வேலையை விட்டுவிட்டு நம்முடன் சேர்ந்து நாட்டுக் குழைக்கும்படி அவனை நான் வற்புறுத்துகிறேன்; அரைமனதா யிருக்கிறான். கந்தா, நாட்டுக்கு உழைத்தாலும் உன்னைப்போலல்லவோ உழைக்கவேண்டும்! உன்னைப் போன்றவர்களாலல்லவோ நம் நாடு மேன்மையடையும்! ஆக்ஸ்போர்டில் உனது சிறப்பை நான் நன்கு அறிந்துகொள்ளவில்லை."

கந்தன் : "நான் அப்படி என்ன செய்துவிட்டேன் ராஜி! என்னைப்போன்ற தொண்டர்கள் ஆயிரக்கணக்காக

இருக்கிறார்கள். என்னிலும் மேலாகத் தம் சுயநலத்தையும் உயிரையுமே தியாகஞ்செய்த தொண்டர்கள் எத்தனையோ பேர். அவ்வாறிருக்க, என் வேலை எவ்வகையிலுயர்ந்தது? 'கும்பலில் கோவிந்தம் போடுவது' தான். உன்னைப் போன்ற செல்வச் சீமாட்டிகள் தம் இன்பங்களை யெல்லாம் துறந்து, பல துன்பங்களுக் காளாகி நாட்டுக்குழைப்பதல்லவோ சிறப்பு! உண்மைத் தொண்டென்பது அதுதான். அதுவே நம் நாட்டுக்கு வரவிருக்கும் மேன்மைக்கொரு சிறந்த அடையாளமாகும்."

ராஜேச்வரி : "கந்தா, நீ சொல்வது சரியன்று. நாங்கள் செய்வதுதான் கும்பலில் கோவிந்தம் போடுவது. ஏனெனில், நகரங்களில் ஆயிரக் கணக்கான மக்களிடையே எங்கேயோ ஒரு மூலையில் ஏதோ செய்கிறோம். அதற்குப் பரிசாக உடனே எங்கள் மனங்களிக்கப் பத்திரிகைகளில் புகழுரைகளும், வாழ்த்துக்களும், தனியே தந்திகளும் கிடைத்துவிடுகின்றன. பேருக்காகப் பாடுபடும் எங்களை விட, நீ செய்துவருவதன்றோ உண்மைத்தொண்டு! கிராமத்தார் பைத்தியக்காரன் என்று சொன்னாலும் கலக்கமின்றிக் கிராமச் சீர்திருத்தத்திற்காக உழைப்பது எவ்வளவு மேல்? நகரங்களில் உழைக்கும் தொண்டர்கள் வேலை பேருக்காக என்பது மட்டுமன்று; அது நாட்டுக்கும் அவ்வளவாகச் சிறந்த நன்மை தரத்தக்கதில்லை. ஆதலால், கந்தா, என்னையும் உன்னுடன் சேர்த்துக்கொள். அதைவிடச் சிறந்த வெகுமதி எனக்கு வேறில்லை."

ராஜி இவ்வாறு உண்மையிலேயே பரவசத்துடன் பேசிய பேச்சைக் கேட்டுக் கந்தன் அளவிலா ஆனந்த

மடைந்து, "இச்சமயம் என் மனதில் விருப்பதை வெளி யிட்டுச் சொல்லாவிடின் எப்பொழுதுதான் சொல்லப் போகிறேன் ராஜி! நீ பம்பாயில் நடத்திவந்ததையெல்லாம் பத்திரிகைகளில் பார்த்தேன். உன்னுடன் சேர்ந் துழைக்க வேண்டுமென்பதே என் நோக்கம். அதற்குச் சமயத்தை யெதிர்பார்த்திருந்தேன். நீ இப்பொழுது இங்கே வரப் போகிறுயென்று யாருக்குத் தெரியும்! இப்பொழுது உன் னைக் கண்டதும் எனக்குண்டாகும் ஆனந்தம் ஈசுவரனுக் கே தெரியும்! இப்பொழுது நான் ஒரு சாண் உயர்ந்திருக் கிறேன்! ராஜி, நான் செய்யும் தேசத்தொண்டும் நீ அளித்த வரந்தானே?"

"நான் அளித்த வரமா? அதெப்படியாகும் கந்தா? எனக்குப் புரியவில்லையே!"

"ஆமாம் ராஜி! தேசபக்தியும் தேசத் தொண்டும் சாமானியமாக வந்துவிடுமா? ஏதாவது ஒரு பெரும் மனக் குழப்பமும் கிளர்ச்சியும் உண்டானல்தான் தேசபக்தி ஒருவர் மனத்தில் ஆழ்ந்து பதியும். ஆக்ஸ்போர்டில் நான் காதல்கொண்டு வருந்திய காலம் உனக்கு ஞாபக மிருக்குமே?"

இதைக் கேட்டதும் ராஜேச்வரியின் முகம் சிறிது வேறுபாடடைந்து மாலை வெயிலில் ஜ்வலித்தது. கடலலை யொன்று குதூகலமாய்க் கொந்தளித் தெழுந்து சுருண்டு விழுந்து அவள் காலில் மோதி அதை முத்தமிட்டு, கோல மிடுவதுபோல அழகாக நுரையைச் சிதறிவிட்டுச் சென் றது. அவள் வாய் பேசாமல் மௌனமாய் நின்ருள்.

"ராஜி! உன்னைத் திருப்புவது கடினமென் றறிந் தும், உன் காதலில் முழுகிக் கரைகாணுது நான்

தவித்தபொழுது, என் குணத்தைப் புகழ்ந்து என் நிலைமைக்கு வருந்தி நீ அன்று சொன்ன வார்த்தைகள் இன்னும் என் காதில் நிற்கின்றன! அவ்வார்த்தைகளே என்னை முழுவதும் மாற்றிவிட்டன. ரங்கன் தன் சொற் சாதுரியத்தால் உன்னை வசப்படுத்திவிட்டான்; ஆனால் அதற்காக நான் வருந்தவில்லை. அன்றைத்தினம் மட்டும் நான் பைத்தியம் பிடித்தவன் போலத்தான் பிரமித்து நின்றேன்!"

கந்தனுடைய அந்தரங்கமான இந்த வார்த்தைகளை ராஜேச்வரி ஆழ்ந்து கேட்டுக்கொண்டு நின்றாள். ஓர் அலை வந்து தன் ஆடையைச் சிறிது நனைத்துவிட்டுச் சென்றதையும் அவள் கவனிக்கவில்லை. கந்தன் பின்னும் தொடர்ந்து பேசலானான்:

"ராஜி! அதுவும் கடைசியில் எனக்கு நன்மையாகவே முடிந்தது. உன்மீது வைத்த காதல் முழுதும் அன்றிரவே தேசபக்தியாக மாறிவிட்டது! அதுவும் ஈசன் செயலே! உடனே ஐ. ஸி. எஸ். வேலையை விட்டுத் தாய் நாட்டிற் குழைப்பதென்று தீர்மானம் செய்துகொண்டேன். பெரிய சீமாட்டியான உன்னை மணம்புரியவே நாங்கள் ஐ. ஸி. எஸ். பரீக்ஷைக்குப் போனோம். அது கைகூடாதபொழுது ஐ. ஸி. எஸ். எதற்காக? ரங்கனும் நீயில்லாவிட்டால் ஐ. ஸி. எஸ்ஸை லட்சியம் செய்திருக்க மாட்டான்; பாரிஸ்டர் பரீக்ஷையோடு நிறுத்தியிருப்பான். ஆனால் அவன் புகழெல்லாம் பேச்சினால்தானே? உண்மையான தேசபக்தியையும் தொண்டையும் பற்றி நினைக்கும்போதெல்லாம் உன் நினைவின்றியிருக்க முடி

யாது! அதனுல்தான் நீ கொடுத்த வரன் என்றேன். இந்த இரண்டுவருஷ காலமாக எப்பொழுதும் உன் நினைவுடனேயே உழைத்துவருகிறேன். ஆக்கூர் ரயிலடி மணல் மேட்டில் இராத்திரித் தூங்கும்பொழுதுகூட உன் நினைவு தான்!"

இவ்வாறு கந்தன் பழைய காதலின் நினைவால் மனமுருகிப் பேசிக்கொண்டே கடற்கரை யீரமணலில் உட்கார்ந்தான். ராஜேச்வரியும் அவன் சமீபத்தி லுட்கார்ந்து பேசலானுள்:

"கந்தா, சிலசமயம் எதை நாம் அலட்சியம் செய்கிறேமோ அதுவே ஒரு சமயம் மிக அருமையானதாகி விடுகிறது! மனேசக்தி யென்பது மிகவும் பலமுடையது. உன் ஞாபகந்தான் நாம் எதிர்பாராமலே என்னைப் பம்பாயிலிருந்து இங்கே கொண்டுவந்து சேர்த்தது! தேசபக்தி என்னை முழுதும் அடிமைகொண்டுவிட்டது. நாட்டின் நலத்துக்குப் பாடுபடாத உடம்பு எதற்காக? இச்சமயம் நாம் அதைச் செய்யாவிடின் இதுபோன்ற சமயம் வேறு எப்பொழுது கிடைக்கும்?"

"நானும் அவ்வாறே யெண்ணி யுழைத்துவருகிறேன். ராஜி! என் வாழ்நாள் முழுதும் தேசத்தொண்டிலேயே செலவிடப்போகிறேன்; இது நிச்சயம்."

பின்பு கந்தன் ஏதோ தியானம் செய்பவன் போலக் கடலலைகளைப் பார்த்தவண்ணம் சிறிது நேரம் மௌனமாய் நின்ருன். அவன் சற்றுத் திரும்பியபொழுது, கோட்டையின் மேன்மாடியில் நின்ற ரங்கனையும் ஸரஸ்வதியையும் கண்டு ராஜேச்வரியை நோக்கி, "ராஜி! அதோ பார்,

கோட்டையின் மேன்மாடியி லுள்ள விமானத்தில்! ரங்க னும் ஸரஸ்வதியும் நிற்பதைப் பார்த்தாயா? இங்கிருந்து பார்ப்பதற் கெவ்வள வழகாயிருக்கிறது? ஸரஸ்வதியின் தோற்றத்தைப் பார்; அந்தி வானத்தில் வெள்ளி முளைத் தாற்போல!" என்றான்.

"ஆமாம் கந்தா! அவள் பூர்ண சந்திரன் உதித்தாற் போலிருக்கிறாள்! பக்கத்தில் ரங்கன் மழை மேகம்போ லிருக்கிறான்!"

"ஒரு வயிற்றிற் பிறந்த உடன்பிறப்புக்குள் எவ் வளவு வேறுபாடு ராஜி! ஆச்சரியமாயிருக்கிறது!"

"வேறுபாடா! ஒருவருக்கொருவர் சம்பந்தமே யில்லை!" என்று கூறிய ராஜேச்வரி சற்று ஏதோ ஆலோ சித்து, மறுபடியும் கூறலானாள்: "கந்தா, ஸரஸ்வதியைப் பற்றி நினைக்க நினைக்க ஆச்சரியமாகவே யிருக்கிறது. பெண்ணென்றால் அவளல்லவோ பெண்! அவள் அழகை யும், அன்பு, அடக்கம், காரியத்தில் உறுதி முதலிய குணங்களையும் பார்க்கையில் ஏதோ தெய்வாம்சமாகத் தோன்றுகிறதேயன்றி வேறில்லை. அவள் கண்களில் அரு ளும், குரலில் ஓர் அற்புத சக்தியும் பாலாற்றில் ஊறி வரும் ஒரு பாலூற்றுப்போலச் சுரந்து ததும்புகின்றன. பரிசுத்த வாழ்வென்னும் பாற்கடலைக் கடைந் தெடுத்த அமுதம் போன்றவள் அவள்! அவளே லக்ஷ்மி! அவள் செல்லுமிடமெல்லாம் செல்வமும் புகழும் செழித்தோங் கும். அவள் போன்ற புண்ணியாத்மாக்கள் நம் சுதந்திரக் கிளர்ச்சியில் கலந்துழைத்தால் நம் நாட்டுக்கு விரைவில் நல்லகாலம் நிச்சயம்."

இவ்வாறு பேசிவந்த கந்தனும் ராஜேச்வரியும் சிற்றின்பக் காதலால் பெறும் நட்பினும் பதின்மடங்கு அதிகமான நட்பை இத்தேசபக்திக் காதலால் பெற்றனர். இருவருள்ளமும் பொது நன்மைக்குப் பாடுபடும் துறவியின் உள்ளம்போல விகற்பமின்றி ஒன்றுபட்டிருந்தன.

ராஜேச்வரி பின்னும் கூறுகின்றாள்:—"ஸரஸ்வதியை நீ கூர்ந்து கவனித்திருக்கிறாயா கந்தா? அவளுக்கு இவ்வளவு சிறப்பும் இருந்தாலும், ஏதோ வெளியிடமுடியாத ஒரு துன்பமும் அவள் மனத்தி லிருப்பதாகத் தோற்றுகிறது. அவள் அதனை வெளிக்காட்டாமலே யிருக்கின்றாள். பல வருஷங்கள் தனிமையாக வாழ்ந்தோருக்கு இத்தகைய துக்க முண்டாவ தியற்கை யென்று நம்முடைய மனத்தில் தோன்றும் ஒரு மாயத் தோற்றந்தான் போலும் அது!"

கந்தன்: "சந்ததியில்லாக் குறையோ?"

ராஜேச்வரி: "ஏதோ குறை; குறையு மில்லை! இவ்விஷயங்கள் இன்னவிதமென்று விவரிக்க இயலா. இல்வாழ்க்கையில் அடிபடாத, கோமளங்குன்றாத ஒரு சிறந்த தோற்றமும் அவளிடம் விளங்குகின்றது! அது இந்திரிய நிக்கிரகத்தாலும் தெய்வானுக்கிரகத்தாலுமே யுண்டாகக் கூடியது! இந்திரியநிக்கிரகத்திற் கீடான சக்தி வேறெது?"

கந்தன்: "ராஜி! நீ சொல்லுவது முற்றிலும் உண்மை. நான் எவ்வளவு ஆலோசித்தும், ஸரஸ்வதியின் அமானுஷ்யமான சக்திக்குக் காரணம் நீ சொல்லும்வரையில் எனக்குப் புலப்படவில்லை. நீ அதனை நன்கு கண்டறிந்திருக்கிறாய்!"

ராஜேச்வரி: "கந்தா! அந்தச் சக்திக்கு நீயே உதாரணமல்லவோ? வேறு தேடவேண்டுமோ?"

கந்தன் அவ்வார்த்தையை அங்கீகரிக்காதவன்போலப் பாவனை செய்தாலும், அவன் மனம் பூரித்தது. அவன் ராஜேச்வரியை நோக்கி, "ராஜி! நீயும் ஸரஸ்வதியும் சேர்ந்து உழைப்பீர்களாயின் நம் நாடு கூடிய விரைவில் சுதந்திரம் பெறுவதற்குத் தடையேயில்லை" என்றான்.

ராஜேச்வரி புன்சிரிப்புடன் "ஆமாம், தடையில்லை; நீயும் எங்களுடன் சேர்ந்து வழிகாட்டினால்!" என்றாள். அப்பொழுது அவளழகின் மேன்மை நேரே கண்டோர்க்குப் புலனாகுமன்றி இங்கே யெழுத முடியாது! கந்தன் மனங்கூட அப்பொழுது கடலில் பெரும் புயலிடை யகப்பட்ட கலம்போலச் சிறிது தவித்தது; ஆயினும் அது தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் திறமையையும் காட்டியது.

## IV

இங்கிலையில் அவர்களிருந்த விடத்திற்குப் பொன்னன் விரைவாக ஓடி வந்தான். அவன் ரங்கனுக்கும் ராஜேச்வரிக்கும் உண்மைத் தொண்டனாக நடித்துவந்ததனாலும், கந்தனைக் குறவினனென்று கூறியதும் உண்மையாய்விட்டபடியாலும், ராஜேச்வரிக்கும் ரங்கனுக்கும் அவனைப்பற்றிய சந்தேகம் முற்றிலும் நீங்கிவிட, அவர்கள் அவனை முழுதும் நம்பிவிட்டனர்.

ஓடிவந்த பொன்னன் தன் சட்டைப்பையி லிருந்து ஒரு தந்தியை யெடுத்துக் கையில் வைத்துக்கொண்டு பரபரப்புடன், "கலெக்டர் துரை எங்கே அம்மா? ஒரு தந்தி வந்திருக்கிறது" என்றான்.

"கலெக்டர் துரையா பொன்னா? அதோ பார், ஆகாயத்தில்! மேகமாய் விளங்குகிறார்" என்று கூறிக்கொண்டே

ராஜேச்வரி பொன்னன் கையிலிருந்து தந்தியை வாங்கிப் பிரித்து வாசிக்கலானாள். அப்போது கந்தன் ஓயாது சலிக்கும் அலையைப் பார்த்துக்கொண்டே "நம் உள்ளத்தைப் போல இதுவும் ஓயாது சலிக்கின்றது! பூமியில் பிறந்து பாடுபடும் உயிர்களின் அமைதியில்லா நிலையைக் கருதித்தான் கடலும் இவ்வாறு வருந்திச் சலிக்கின்றது போலும்!" என்று ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

ராஜேச்வரி தந்தியை வாசித்தாள். அது பின் வருமாறு:—

ரங்கஸாமி, ஐ. ஸி. எஸ்.,

தரங்கம்பாடி.

"பழநிக்கு ஸெட்டில்மெண்டு ஆபீஸராக மாற்றப் பட்டிருக்கிறீர். உடனே போய் வேலையை ஒப்புக்கொள்ளவும்."

ராஜேச்வரி இதைக் கண்டதும் சந்தோஷத்தால் துள்ளிக் குதித்து, "கந்தா! எனக்குக்கூட ஈசனருள் கிட்டிவிட்டது! என் வாக்கும் பலிக்கும்போலிருக்கிறது. நான் சென்னையிலிருந்து வரும்போது ரயிலில் விளையாட்டாக ஏதோ சொன்னேன்; அப்படியே ஆகிவிட்டது! ஆனாலும் ரங்கன் காட்டையும் மேட்டையும் சங்கிலி பிடித் தளக்கும் ஸெட்டில்மெண்டாபீஸராகப் பழநிக்குப் போகமாட்டான். அவன் சிநேக விஷயத்தில் மிகவும் தணிந்து போவானானாலும், வழக்கென்று வந்துவிட்டால் சிறிதும் அஞ்சான்! கவணிலிருந்து புறப்படும் கூழாங்கற்கள் போல வார்த்தைகளை வாரி யிறைப்பான்." என்று சொல்லிக்கொண்டே கந்தனிடம் தந்தியைக் காட்டினாள்.

கந்தன் தந்தியைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு அதை நம்பாமல், " ராஜி! என்ன ஆச்சரியம் இது! இதை நம்பமுடியுமோ? ரங்கனை ஒரு காரணமுமின்றித் திடீரென்று ஸெட்டில்மெண்ட் ஆபீஸராக மாற்றுவதா! இது சாதாரணமாக நடக்கக்கூடியதில்லை; இதில் ஏதோ விசேஷமிருக்கிறது! இங்கு நடக்கும் விஷயங்கள் முழுதும் தினந்தோறும் தந்தி மூலம் பட்டணத்திற் கெட்டுகின்றன வென்று நினைக்கிறேன்!" என்றான்.

பொன்னன் அரைகுறையாக அதைக் கேட்டுச் சிறிது மனக்கலக்க முற்றுக் காற் கட்டைவிரலால் மணலைக் கிண்டிக்கொண்டு நின்றான். பிறகு, விரைவில் எஜமானனிடம் தந்தியைக் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டுபவன் போல நடித்து, 'துரை எங்கே தாயே?' என்றான்.

ராஜேச்வரி: "துரையா பொன்னு, அதோ பார், ஆகாயத்தில் பறக்கிறார்! இந்தா! ஓடிப்போய் இந்தத் தந்தியைக் கொடு அவரிடம். செய்தி நல்ல செய்திதான்; ஆனால் இனிமேல் அவர் 'கலெக்டர்' துரை அல்ல!" என்றாள். பொன்னன் தந்தியைப் பெற்றுக்கொண்டு ரங்கனிடம் ஓடினான்.

ராஜேச்வரி அடைந்த சந்தோஷத்தில் கந்தனும் சிறிது கலந்துகொண்டான். ஆனால் மறுபடியும் கவலையுடன், "ராஜி! பொன்னன் சமாசாரம்—அவன் ஒற்றனல்லன் என்று நிச்சயமாய்த் தெரியுமா?" என்று கேட்டான்.

"இன்னும் என்ன சந்தேகம் கந்தா? அவன்தான் உனக்கு உறவு என்பது நிச்சயமாய்விட்டதே. என்ன உறவு—ஒன்று விட்ட அத்தான் அம்மான்சேயன்?"

"என்ன இருந்தாலும் எனக்கு அவனிடம் சந்தேகந் தான் ராஜி! அவன் பார்வை எனக்குப் பிடிக்கவில்லை. அதில் ஏதோ 'சூட்டு' இருக்கிறது. இன்னும் அவனை நன்கு கவனிக்கவேண்டும்."

"அவன் முன்னே இன்னும் மோசமா யிருந்தான் கந்தா! ஸரஸ்வதியின் பழக்கத்தாலும் கண்டிப்பாலும் அவன் இப்பொழுது வரவர ஒழுங்குபட்டுக்கொண்டு வருகிறான்."

"இருந்தாலும் நாமும் கொஞ்சம் ஜாக்கிரதையாய்த் தான் இருக்கவேண்டும்!"

V

இவர்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில் பொன்னன் கடற்கரை மணலைக் கடந்து கோட்டையைச் சமீபித்தான். அவன் சட்டைப் பையில் குழூஉக்குறியால் (Code words) எழுதப்பட்ட சர்க்கார்த் தந்தி யொன்றிருந்தது. அது அவனுக்கு வந்ததாகும். அதை ஒருமுறை அவன் வாசித்திருந்தாலும், மகிழ்ச்சியால் மற்றொரு முறை அதனை நன்கு வாசிக்க விரும்பினான். மேலும் அதனைத் தன்னிடம் வைத்திருப்பது அபாயத்திற் கிடமாகுமென்பதும் வாசித்துவிட்டு உடனே கிழித்தெறிந்துவிட வேண்டுமென்பதும் அவன் நோக்கம். ஆதலால் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு மெல்ல அதனையெடுத்துப் படிக்கலானான். அதிலிருந்த விஷயம் பின்வருமாறு:—

"நீ செய்துள்ள மிகவும் சாமர்த்தியமான வேலைக்காக ஸர்க்காரில் ரூ. 50 உனக்குப் பிரமோஷன் செய்

இருக்கிறார்கள். நீ இன்னும் ஜாக்கிரதையுட னிருந்து அங்கு நடக்கும் விஷயங்களை அவ்வப்போது தந்திமூலம் தெரிவிக்கவும். நீ முன் தெரிவித்துள்ளபடி முதலியாரும் இந்தக்கலகத்தில் சேருவதாயிருந்தாலும், ரங்கஸாமி புதிய மாறுதலை ஒத்துக்கொள்ளாமல் வேலையை ராஜிநாமாச் செய்வதாயிருந்தாலும் உடனே தெரிவிக்கவும்.''

மேற்காட்டிய தந்தியானது சர்க்கார்க் குழூஉக்குறியி லிருந்தாலும், அதைத் தன்னிடம் வைத்துக்கொள்வது அவ்வளவு உசிதமில்லை யென்று நினைத்த பொன்னன் தான் போகும் வழியில் அக்கோட்டை முழுவதுக்கும் குடிதண்ணீர் கொடுக்கும் ஒரு கிணற்றைக் கண்டான். அப்பொழுது அங்கே ஜனப்பழக்க மில்லை. அதனால் அவன் அத் தந்தியைச் சுக்குச் சுக்காய்க் கிழித்து அக்கிணற்றி னுள் எறிந்துவிட்டுத் திரும்பி, மேலே நிமிர்ந்து பார்த் தான். ரங்கனும் ஸரஸ்வதியும் நிற்பதைக் கண்டான். தான் செய்ததை ஒருவேளை அவர்கள் பார்த்திருப்பார்க ளோவென்று சிறிது தயங்கினான். பயத்தினால் நெற்றியில் கொஞ்சம் வியர்வை யரும்பிற்று. உடனே அதைத் துடைத்துக்கொண்டு விரைந்து போய்க் கோட்டையை அடைந்து, வளைந்து வளைந்து செல்லும் படிக்கட்டுக்களை இரண்டிரண்டாகத் தாண்டிக் கடந்து மேலேறினான். அப் படி ஏறும்பொழுது அவன் மனத்தில் அவனறியாம லேயே ஓரெண்ணந் தோன்ற, அவன் தத்துவ விசாரஞ் செய்யலானான்:

"உப்புநீர்க் கடலுக்கு மிகவும் அணிமையிலுள்ள இக்கிணற்று நீர் இவ்வளவு நன்றாய்க் குடிப்பதற்குத் தகுதி

யுடையதா யிருப்பானேன்? எத்தனையோ ஆறுகளைத் தன்னுட் கொண்டாலும் கடல் உப்பாயிருப்பானேன்? 'தீயோரைச் சார்ந்திருப்பினும் நல்லோர் நல்லோரே; நல்லோருடைய கூட்டுறவு மிகுதியும் உடையவராயினும் தீயோர் திருந்தார்!' என்னும் நீதிகள் இவற்றாற் புலனாகின்றனவல்லவா? நம் நிலை இக் கடல்போன்றதுதானே!"

இவ்வாறு ஆலோசனையுடன் சென்ற பொன்னன் காதில் திடீரென்று காமாக்ஷியின் குரல் விழ அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். ஆங்கொரு மண்டபத்தின் மறைவிலிருந்து காமாக்ஷி வெளிப்பட்டுப் பொன்னன் முன் வந்து, "நீர் அந்த நன்னீர்க் கிணற்றில் எதையோ கிழித்தெறிந்தீரே? அஃது ஏதோவொரு ரகசியக் கடிதம் போலிருக்கிறது! அதைக் கிழித்துக் கிணற்றி லெறிவானேன்? குடி தண்ணீர் கெட்டுப்போய்விடாதா? அது போகட்டும்; அது என்ன அவ்வளவு ரகசியமான கடிதம்? உண்மையைச் சொல்லும்" என்றாள்.

காமாக்ஷியும் பொன்னனும் ஒருவரையொருவர் ஆக்கூர் ஸ்டேஷனில் சந்தித்ததுமுதல் இருவரும் ஒரு பான்மையான நேசத்தை உடையவர்களானார்கள். ஆதலால் பொன்னன் காமாக்ஷியிடத்து இப்பொழுது இன்னது சொல்வதென்றறியாமல் முதலில் சற்றுத் தயங்கிப் பிறகு விஷயத்தை மிகவும் சாமர்த்தியமாய் மாற்றிக்கொண்டு பேசலானான்:

"ஆமாம் கமாக்ஷீ! கிணற்றில் நீரைக்கெடுக்கக்கூடிய தொன்றையும் நான் எறியவில்லையே! கடிதத்தைக் கிழித்தெறிந்தேன், வாஸ்தவந்தான். நீ கோபித்துக்கொள்

னாம விருப்பாயானால் உண்மையைச் சொல்லுகிறேன்; சொல்லட்டுமா? ஒரு காதற் கடிதம் எழுதினேன்; எழுதியபின் அதை அக்காதலி கையில் நேரே கொடுக்கத் துணியாமல், அக்கிணற்றில் எறிந்தால், அதன் நன்னீரைக் குடிக்கும் அவள் ஒருவேளை என் காதற் சுவையை அறியக்கூடுமென்றெண்ணி அதில் எறிந்தேன். இதுதான் உண்மை. எல்லாம் தெரிந்த உனக்கு வேறு நான் என்ன சொல்லப் போகிறேன் காமாக்ஷி!''

இவ்வாறு தன் முழுச் சாமர்த்தியத்தால் பொன்னன் விஷயத்தை இலகுவாய் மாற்றிக்கொண்டு திறம்படப் பேசினாலும், அவனுள்ளம் சிறிது படபடத்தது. அவன் மாற்றிய கதையில் குறித்தகடிதம் உண்மையாகக் காதற் கடிதமில்லாவிடினும், அவன் பேச்சுக் கேவலம் வெறுங் கதையின்றிக் காமாட்சியிடம் அவனுக்குள்ள காதலை நன்கு புலப்படுத்துகின்றதல்லவா? காமாக்ஷியும் அவனிடம் உண்மை நேசங் கொண்டவளாதலின் அவனுடைய அவ்வினிய மொழிகளைக் கேட்டு நாணத்தாற் சற்றுத் தலை குனிந்து நின்றாள். அப்பொழுது அவளழகு முன்னிலும் பன்மடங்கு சோபித்தது. பின்பு அவள் அப்பேச்சை மாற்ற வெண்ணிப் பொன்னனை நோக்கி, "இப்போது கையிலிருக்கும் தந்தி என்ன? கலெக்டருக்கா, உமக்கா" என்றாள்.

"கலெக்டருக்குத்தான் காமாக்ஷி! என்னைப்போன்ற அற்பர்களுக்குத் தந்தி எங்கிருந்து வரப்போகிறது? இதோ ஒரு நிமிஷத்தில் மேலே போய்க் கலெக்டரிடம் தந்தியைக் கொடுத்துவிட்டு ஓடி வந்துவிடுகிறேன்; சற்றிரு" என்று சொல்லிப் பொன்னன் மேலே ஓடினான்.

இங் கிவ்வா றிருக்க, அங்கே கடற்கரையில் கந்தனும் ராஜேச்வரியும் ரங்கனுடைய வேலை மாற்றத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

கந்தன்: "ரங்கன், கையிலிருக்கும் இந்த வேலையைத் திடீரென விட்டுவிடுவானென்று எனக்குத் தோன்ற வில்லை ராஜி! கலெக்டரென்றா லென்ன, சாமானியமா? ராஜாதானே! அந்த ராஜபோகத்தை விட்டுவிட மனம் வருமோ? அந்த வேலையில் பழகினவர்களுக்கு நம்மைப் போல எண்ணம் தோன்றுவதில்லை."

ராஜேச்வரி: "ஆகையால் கந்தா, நீ சொல்வது, "ரங்கன் நம்மை விட்டுவிடுவான்; கலெக்டர்வேலையையோ, ஸெட்டில்மெண்ட் ஆபீஸர் வேலையையோ விடமாட்டா னென்பதுதானே? ரங்கன் அவ்வளவு கேவலமென்று நான் நினைக்கவில்லை. மேலும் எஸ். ஐ. ஆர். ரயில் சம்பவமும் அவன் மனத்தில் ஆணிபோலத் தைத்திருக்கிறது. ரயில் பாதையில் கிடக்கும் சிறு கற்கள் சிலசமயம் பெரிய எஞ்சினையும் கவிழ்த்துவிடுவதுபோலச் சிறுவிஷயங்களே சிலசமயம் வாழ்க்கையிற் பெரிய மாறுபாடுகளை யுண் டாக்கிவிடக் கூடும். அந்த நிலையிலேயே ரங்கன் இப் பொழு திருக்கிறான். மேலும் நீ சொல்லும் அபிப்பிரா யத்திற்கு ஸரஸ்வதியும் இணங்கமாட்டாள். அவள் பேச் சையும் நோக்கத்தையும் மீறி யார் நடக்கமுடியும்! நான் தானென்ன, ரங்கன் நம்மைவிட்டுப் போகச் சம்மதிப் பேனோ?"

கந்தன்: "ஆமாம் ராஜி, நான் மறந்துவிட்டேன். உன் பேச்சுக்கு மறு பேச்சுண்டோ? நீ தீர்மானமாகச்

சொல்லிவிட்டால் ரங்கன் வேலையை யொப்புக்கொள்ள மாட்டான். அதோ பார்! அவர்களிருவரும் குதூகலத்துடன் அவசரமாய் இறங்கி வருகிறார்கள். பொன்னன் முன்னே ஓட்டமாய் ஓடி வருகிறான்! ஏதோ விசேஷமிருக்கிறது; பார்ப்போம். பொன்னன் கையில் ஏதோ காகிதத்துடன் தபாலாபீஸ் பக்கம் ஓடுகிறான்!"

ராஜேச்வரி: "கந்தா, ரங்கன் ராஜிநாமாவைத் தந்தி மூலமே அனுப்பப் போகிறாப்போ லிருக்கிறது!"

இச்சமயம் ரங்கன், பொம்மையைக் கண்டு கை மிட்டாயை விட்டெறிந் தோடும் குழந்தை போலக் கடற்கரைக்கு இவர்களை நோக்கி ஓடி வந்து, ராஜி! உன் வாக்குப் பலித்துவிட்டது! இந்தக் கலெக்டர் வேலையை உதறி எறிந்து பதில் தந்தி கொடுத்துவிட்டேன். பொன்னனையல்லவோ நீ ஒற்றனென்று சொன்னாய்; நீ தான் பெரிய ஒற்றென்று எனக்குத் தோன்றுகிறது!" என்றான்.

ராஜேச்வரி கலகலவென்று சிரித்துக்கொண்டு, "ஆம்! கலெக்டர்களைத் தேசபக்த ராக்கும் வேவுகாரிதான் நான்!" என்றாள்.

அவள் அவ்வாறு கூறி வாய்மூடுமுன், சொக்கலிங்க முதலியாருடைய ஆபர்ண் கார் மணலை வாரி யிறைத்துக்கொண்டு ஒரு விமானம்போல அவர்களருகே வந்து நின்றது. முதலியார் வண்டியிலிருந் திறங்கினார்; அவருடன் சுந்தரமும் கரியனு மிறங்கினார்கள். முதலியார் ரங்கனிடம் போய்ப் பரபரப்புடன் பேசலானார்.

"கலெக்டர்வாள், ஒரு விண்ணப்பம்! சமீபத்தில் நடந்த ரயில் விபத்துக்கு நான்தான் காரணம். அதில், பாவம், தங்கள் மைத்துனரும் கரியனும் வேலையினின்று

நீக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் தாங்கள் கொஞ்சம் பெரியமனது பண்ணி ரயில்வே ஏஜண்டுக்குச் சிபார்சு செய்து அவர்கள் வேலையை ஸ்திரப்படுத்த வேண்டும்.''

"முதலியார்வாள்! நீங்கள் சொல்வது சரிதான்; ஆனால் நான் இந்தநிமிஷம் முதற்கொண்டு கலெக்டரில்லை; ஒரு தேசத்தொண்டனாகிவிட்டேன். இனித் தாங்கள் தான் எனக் குதவி செய்யவேண்டும்!''

"தாங்களும் அவசியம் தேச கைங்கரியத்திற் சேர வேண்டும்'' என்று ராஜேச்வரியும் முதலியாரை மிகவும் வற்புறுத்தினாள். ஸரஸ்வதி ஒன்றும் வாய் திறவாமல், அன்பும் அருளும் கூடிய பார்வையால் முதலியாரை ஒருமுறை பார்த்தாள். தாய்நாட்டுக் குழைத்தல் அவசியமென்று அவள் கண்கள் பேசின. அதைக் கண்ட முதலியாரும் தரிசன வேதியால் இரும்பு பொன்னாவதுபோலத் தன் மனம் மாறிவிட்டார்.

கடலலைகள் அழகாகக் கரையில் மோதித் திவலைகளை வீசிக்கொண்டிருந்தன. அத்திவலைகளினூடே முதலியார் தம்மையறியாமலே உண்டான தம்முடைய மாறுபாட்டைக் குறித்து மனத்தினுள் மகிழ்ந்து நின்றார். அக்காட்சி தேசபக்தியென்னும் நீரால் அவருக்கு அப்போதே அபிஷேகம் செய்வித்தது போலிருந்தது. அலைகளும் அவர் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்பதுபோல அவர் பாதங்களிற் படிந்து சென்றன. ஸரஸ்வதியின் கண்களிலிருந்து வந்த ஒளியலைகளும் முதலியாருடைய புதிய மாறுதலுக்கு மேன்மேலும் ஊக்கத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தன.

---

## அத்தியாயம்—14

### சொல்லும் செயலும்

I

கடற் காற்றுச் சில்லென்று தாராளமாய் வீசிக் கொண்டிருந்தது. அஸ்தமன சூரியனுனவன் பொன்னை யுருக்கிப் பரப்பினுற்போலத் தன் கிரணங்களைத் தரையிலும், கடல்மீதும் பரப்பிக்கொண்டிருந்தான். அப்பொன்னைக் கடலானது தன் திரைக்கரங்களால் வாரியெடுக்க முயற்சி செய்துகொண்டிருந்தது. ரங்கன், ராஜேச்வரி, கந்தன், ஸரஸ்வதியாகிய நால்வரும் கோட்டையின் மேன்மாடியை யடைந்து வட்டமாக அமர்ந்து பேசத் தொடங்கினர். முதலியாரும் அவர்களுட னிருந்தார்.

"வாய்ப் பேச்சிலேயே நீ இன்னும் மகிழ்ந்து நிற்கிறுயே ரங்கா! 'வாய்ப் பேச்சுக்காரனுக்குக் கையால் ஒன்றும் ஆகாது' என்பது பழமொழி. இதை நீ நன்கறிந்திருந்தும் வாய்ப்பேச்சளவிலேயே நிற்கிறுய். ஆனுல் நீ யென்ன செய்வாய்? அது உன்னுடன் பிறந்த இயற்கை; உன்னுடலிலேயே ஊறிவிட்டது!" என்று மிக்க வுணர்ச்சியுடன் கந்தன் ரங்கனை நோக்கிக் கூறினுன். ரங்கனை விரைவிற் செயல்வீரனுக்க வேண்டுமென்பது கந்தன் கருத்து.

ரங்கன்: "கந்தா! நீ முன்னே ஆக்ஸ்போர்டில் பேசியது போலவேதான் இப்பொழுதும் பேசுகிறுய். உன் அனுபவம் சிறிதும் மாறவில்லை. அல்லது, சொல்லின்

சிறப்பை நீ உள்ளூற உணர்ந்திருந்தும் வெளிக்காட்டாது பேசுகிறாய் போலும்! பேச்சினழகையும் சிறப்பையும் பல முறை உன்னிடமே நான் கண்டு களித்திருக்கிறேன். சொல்லென்பது எப்பொழுதும் பொருளுடன் கூடியதாகையால் அதற்குச் சக்தி நிச்சயம் உண்டு. காற்றின்றி நெருப்பில்லாதது போலச் சொல்லின்றிச் செயலில்லை. பல விஷயங்களில் செயலினும் சொல்லே பயனுடையதாவதை நாம் காணலாம். மரம் வெட்டக் கோடாலி வேண்டும்; இரண்டு துணிகளை ஒன்று சேர்க்க ஊசிதானே வந்தாகவேண்டும்? கோடாலியென்ன செய்யமுடியும்? அது போலச் சில காரியங்கள் சொல்லாலேதான் முடியும். அதனால் முடியாத காரியங்களைத்தான் சிரமப்பட்டுச் செயலால் முடிக்கவேண்டும். சொல்லின் மேன்மையால் தானே நாம் இந்த நவநாகரிகத்தைப் பாதுகாத்து வருகிறோம் கந்தா! அஃதில்லாவிடின் நம் வேலைகளெல்லாம் சுடப்படாத மட்பாண்டம் போலல்லவோ ஆகிவிடும்? நமது வாழ்க்கையென்னும் வனாந்தரத்தில் நாம் போடும் வாய்ப்பந்தலே நந்தவனமாகும். வரிய்ச் சொல்லால் ஆக்கவுங் கூடும்; அழிக்கவுங் கூடும்! அது நெருப்பினும் இருமடங்கு திறனுடையது. மக்களின் சிறந்த கொள்கைகளை வாய்மொழியாலன்றி எவ்வாறு வெளியிடுவது? வாய்ச்சொல் இல்லையேல் விலங்குகளுக்கும் நமக்கும் என்ன வேறுபாடு?"

கந்தன்: "ஆமாம். வாய் குளிரப் பேசிவிட்டாற் போதும்; காரியங்களில் மிருகத்தைப் போலிருக்கலாம். அதுதான் மானிடப் பிறப்பின் சிறப்பு! நன்றாய்ச் சொன்னாய் ரங்கா! நீ இன்னும் எவ்வளவுதான் அழகாகப்

பேசினாலும், பேச்சினால் மட்டும் பயனுண்டாய்விடாது! தேச சரித்திரங்களில் வாய்ப் பேச்சினாலேயே எந்த நாடேனும் சுதந்திர மடைந்ததாக நாம் அறிந்த துண்டோ? அடிமைப் புத்தியைச் சொல்லால் மட்டும் மாற்ற முடியுமா? யோகமென்பதென்ன, வாய்ப் பேச்சா? ஐம்புலன்களையும் மனத்தையும் அடக்கி ஒரு வழிப்படுத்தி, அவரவர் வரன்முறைக்கேற்ற தருமங்களிற் செலுத்தித் தவறாது அனுபவத்தில் நடத்தலன்றோ யோகம்? சொல்லளவுக்குச் செய்கையில்லாக் குறையாலேயே நம்நாட்டின் மேன்மை குறைய, நம் வாழ்நாட்களில் மேடு பள்ளங்கள் மிக, நம் செயல்களின் பயன் குட்டைகள் போல அங்கங்கே தங்கி நின்றுவிடுகின்றது. தடையற்ற பெரு வெள்ளமாக அது பரவ முடிவதில்லை.''

ரங்கன்: "கந்தா! உன்னுடைய இந்தப் பேச்சினழகே என் கொள்கைக்குச் சிறந்த சான்றாகுமே! இதைவிடச் சிறந்த பிரமாணம் எனக்கு வேண்டுமோ?''

கந்தன்: "ஆமாம் ரங்கா! என்ன தான் சொன்னாலும், செய்கையில்லாத, வாய்ப்பேச்சு மட்டுமுள்ள வாழ்வு நீரில்லாத நதி போன்றதுதான்! வரம்பின்றிச் செல்லும் வாய்ப் பேச்சாகிய வெள்ளத்தை வரம்புக் குட்படுத்தி வாழ்க்கையிற் பயனளிப்பது செயலேயாகும். சொற்கள் ஆகாயத்திலே காற்றினாற் பறக்கும் தீப்பொறிகளைப் போன்றன. அப் பொறிகள் அறிவிப்ப தென்னவெனில், பூமியில் எங்கேயோ ஓரிடத்தில் நெருப்பு மூண்டு நின்றெரிகின்ற தென்பது தான். அப்பொறிகளால் இருளைப் போக்குதல் கூடுமோ? பொறிகள் தீ யிருப்பதைக் காட்டினால், அத்தீ அணைந்து விடாமல் பாதுகாப்பதன்றோ நம் கடமை? செயலென்னுந்

தீயே நம் வாழ்க்கை யந்திரத்தின் உயிர்நிலையாகும். அத்தீ நன்கு பற்றிக்கொண்டால் மொழிகளென்னும் பொறிகள் தாமே அடங்கிவிடும். ஆதலால், ரங்கா, நாம் செயலையே நாடவேண்டும். மனத்தில் நாம் காணும் கனவெல்லாம் நனவாகும்படி செய்யவேண்டும். புண்பட்ட நம் தாய் நாட்டுக்குச் செயலே சஞ்சீவியாகும். சாந்தம் குடி கொண்ட நமது தாய்நாட்டிற்குச் செயலற்ற நம்வாழ்வு ஒரு சுமையே!''

ரங்கன்: "கந்தா, உன் சொல்லழகே அழகு! சொற்கள் தீப்பொறிகளென்றாலும், தெய்வாம்சம் பொருந்திய பொறிகள். அப்பொறிகள்போன்ற நக்ஷத்திரங்களிடமிருந்து ஒளி வரவில்லையா? மொழிகள் செயலின் உயிர் நிலையே யன்றி வேறல்ல. உன் கொள்கைப்படி மொழிகள் கேவலமென்றாலும் அவை செயலின் முதற்படியே யாகும். ஒரு மலையின்மீது படிக்கட்டின்றி யேற முடியாததுபோல, சொற்களென்னும் படிக்கட்டின்றித் தேசத் தொண்டென்னும் மலைமீது ஏற முடியாது. எல்லோரையும் ஒன்றுபடுத்துவதற்கு அன்பு நிறைந்த சாந்தமான மொழிகளினும் சிறந்த மின்சார சக்தி வேறுண்டோ? சொல்லென்னுந் தூற்றுக்கோ லில்லாவிடின் மானிடக் காளையானது வண்டியிழுக்குமா? தாம்பின்றிக் கிணற்றிலிருந்து வாளியால் நீரிறைக்க முடியுமா? ஆகவே சொல்லின்றிச் செயல் நிகழாது.''

கந்தன்: "ரங்கா, இந்த அலங்கார வார்த்தைகளே உன்னைப் பாழ்படுத்துகின்றன. இனி அவற்றைக் குறைத்து உன்னை நீ திருத்திக்கொள்ளவும் முடியாது போலிருக்கிறது. அவை பொருள்களின் உண்மையி

லிருந்து வெகுதூரம் உன்னை அடித்துக்கொண்டு போய் விடுகின்றன !''

ரங்கன் : "அலங்காரச் சொற்களென்றால் உனக்குப் பிடிக்காது கந்தா ! ஏன், அலங்காரமென்றாலே உனக்குப் பிடிக்காதுதான் ! ஆனால், எனக்கோவெனின், அவை தான் இருள்நிறைந்த இல்வாழ்க்கைக்குப் பெரு விளக்கு! செயலின் பயன் நம் வாழ்க்கையை உடைந்துச் சில்லறையாகச் சிதறச் செய்துவிடுகின்றது. சொற்களோவெனில் நமது வாழ்வையும் தோற்றத்தையும் பெருக்கி, தேங்கித் தயங்கி நிற்கும் நம் வாழ்வை ஜீவநதி போலாக்குகின்றன. சொற்பெருக்கானது பள்ளத்தாக்கிற் செல்லும் நீர்ப் பெருக்கே போன்றது. நம் காங்கிரஸை எடுத்துக்கொள்! கடந்த முப்பது வருஷங்களாகச் சொற்களால் கட்டப் பெற்றதொரு கோபுரந்தானே அது? அதன் சக்தியைக் குறித்து வியவாதவர் யார்? நம் நாட்டுக் கிளர்ச்சியில் தோட்டி முதல் தொண்டைமான் வரை ஒன்றுசேர்ந்து ஒத்துழையாமையில் ஒத்துழைப்பதற்குச் சிறந்த கருவி சொல்லையன்றி வேறுள்ளதோ ? நாம் நாடெங்கும் கூட்டங்கள் கூட்டிச் சொற்பொழிவு செய்தால்தான் நம்மவர்க்குள் ஒற்றுமை யுண்டாக்குதல் கூடும். ஒற்றுமையின்றிக் காரிய நிர்வாகம் இயலாதன்றோ ? ஆதலால், கந்தா, முதன் முதலாக நாம் இந்த ஜில்லாவில் செய்யவேண்டிய தொண்டை, இத்தரங்கம்பாடிக் கடற்கரையிலேயே ஒரு பெரிய கூட்டங் கூட்டித் தொடங்குவோம்.''

கந்தன் : "அப்படிக் கூட்டங் கூட்டுவதனால் கஷ்டமுண்டாகுமே யன்றி லாபமொன்று மிராது ; இக்காலத்தில் வாய்ப்பேச்சை யார் மதிக்கிறார்கள் ? காரியத்திற்

கல்லவோ மதிப்பு? கையா லுழைத்தலே உத்தம தேச பக்தனுக்கு லக்ஷணம்.''

ரங்கன்: "கந்தா, தேசத்தொண்டென்பது ஒரு ஆராய்ச்சிச்சாலையில் சிலர் பலகாலம் ஆழ்ந்து பரிசோதித்துப் பலருக்கும் பயன்படும்படி புத்தகங்களாலும் பத்திரிகைகளாலும் வெளியிடும் ஒரு விஷயமன்று. தேசத்தொண்டு செய்பவனுடைய வேலை ஊரூராய்த் தெருத்தெருவாய் எங்குந் திரிந்து உழைக்கவேண்டிய வேலையாகும். அவ்வேலைக்குச் சொற்கள்தான் ஏற்ற ஆயுதம். ஆகையால், நமது ஜில்லாவாகிய குட்டையைக்குழப்பிச் செப்பஞ் செய்வதற்குரிய வழி நான் சொல்லும் வண்ணம் இங்கேயே ஜில்லா முழுதுங் கூடும்படி ஒரு பெரிய கூட்டங்கூட்டி இக்கோட்டையும் எதிரொலி செய்யும்படி பீரங்கிமுழக்கம் போலப் பேசி விஷயங்களை வெளியிட்டு மக்கள் மனத்திற் பதியச் செய்வதுதான். குட்டையில் கிடக்கும் தவளை போல ஒரு கிராமத்திலேயே இருந்துகொண்டு வேலைசெய்வதில் பயனில்லை. கிளர்ச்சி யெங்கும் வெள்ளம் போலப் பெருகச் செய்யின், பழைய வண்டல் தானகவே அவ்வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டுப் புதிய கொள்கைகள் எங்கும் தோன்றிப் பரவும். நான் சொல்லுகிறபடி இங்கேயே பெரிய கூட்டத்தைக் கூட்டிக் கடலோசையும் அடங்க முழங்குவோம். அதன் பயன் நாட்டின் பல பாகங்களிலும் பரவாவிடின் என்பெயர் ரங்கனில்லை.''

"ஆமாம், ரங்கனில்லை; ரங்கஸாமி'' என்றாள் ராஜேச்வரி.

ரங்கன்: "சென்னைப் பத்திரிகைகளுக்குத் தந்தி கொடுப்போம். இரண்டு வாரத்துக்கு நம் விஷயங்களே

பத்திரிகைகளில் தலையெடுத்து நிற்கும். பலநாள் முயன்று பெற்ற பத்திராதிபர்களின் சிநேகம், தேச நன்மைக்கான இவ் விஷயத்திற்கூடப் பயன்படாவிடின் வேறெதற்குத் தான் பயன்படப்போகிறது?"

ராஜேச்வரி: "சரி சரி, கூட்டங் கூட்டமென்று வற்புறுத்தியது இதற்குத்தானு ரங்கா! தெரிந்துகொண்டேன். கலெக்டர் வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டுத் தேச கைங்கரியத்துக்கு மாறின சிங்கக்குட்டி ரங்கனைப் பற்றிப் பத்திரிகைகளில் இரண்டு பத்தியாவது தலையங்கம் வரவேண்டாமா? அதுகூட இல்லாவிடின் தியாகத்திற்குத் தான் என்ன மதிப்பு?"

ரங்கன்: "ராஜி, உனக்கு எப்போதும் என்னைப் பரிகசிப்பதுதான் வேலை. இந்தக் கூட்டத்தினுல் வரும் நன்மையைப் பின்னர் நீயே அறிவாய். கரிகால் வளவன் காலத்தி லிருந்த சிறப்பும் வளமும் நமது ஜில்லாவிற்கு இனி வரப்போகிறது. ஆனுல் இப்போது இந்த ஏழை சொல் அம்பலமேறுது. இதன் பயன் பின்னேதான் பிரத்தியக்ஷமாகத் தெரியும்."

ராஜேச்வரி: "ரங்கன் பேச்சினழகே அழகு! இந்தப் பாரத நாட்டில் எல்லாம் பேச்சளவிலே யிருந்தாற் போதும்; வருந்தி யுழைக்க வேண்டுவதில்லை. அது தானே உன் சித்தாந்தம் ரங்கா?"

ரங்கன்: "ராஜி, உண்மையாகவே நமது அத்வைத சித்தாந்தத்தில் மொழிக்கும் செயலுக்கும் பேதமில்லை. வீண் அஞ்ஞானந்தான் இந்தப்பேதத்துக்குக் காரணம்."

ராஜேச்வரி: "இதுதான் சோம்பலுக்கேற்ற சித்தாந்தம். வாஸ்தவந்தான்."

ரங்கன் : "கந்தா, வீண் வார்த்தைகளில் பயனில்லை. பாமரர் மனத்தில் விஷயங்கள் பதிவதற்கு, அவர்கள் செய்யவேண்டியவற்றைப் பேச்சின் மூலம் தெரிவித்தாலன்றிக் காரியம் நடவாது. நமக்கும் இன்னது செய்வதென்ற தெளிவான கொள்கை யேற்படாது; அவர்களுக்கும் கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டாற்போலத்தா னிருக்கும்."

ஸரஸ்வதி : "சரி, இருக்கட்டும். உன் கூட்டத்தை அரசாங்கத்தார் தடை செய்துவிட்டால்?"

கந்தன் : "பேஷ், ஸரஸ்வதி, உன் நாக்கில் ஸரஸ்வதி யிருக்கிறாள். இப்பொழுதிருக்கும் நிலையைப் பார்த்தால் நீ சொல்லுகிறபடிதான் ஆகும்போலிருக்கிறது."

ரங்கன் : "கந்தா, நீயும் அப்படியா நினைக்கிறாய்? நான் பந்தயம் கட்டுகிறேன். கலெக்டர் லான்ஸ் மடையனில்லை; என் விஷயத்தில் ஒருநாளும் அப்படிச் செய்யமாட்டான். அஸிஸ்டெண்ட் கலெக்டரோ நம்முடன் ஐ. ஸி. எஸ். படித்துப் பாஸ்பண்ணின நடராஜன். அவனைப்பற்றியும் கவலையில்லை. ஆகையால் என் விஷயத்தில் நீங்கள் நினைக்கிறபடி ஆகாது. அவ்வாறுவதாயினும், இதைப் பரீக்ஷிப்பதற்காகவாவது இங்கே கூட்டங்கூட்டித் தானாகவேண்டும்."

சொக்கலிங்க முதலியாரும் இதை ஆமோதித்தார். ஏனெனில் அவர் தரங்கம்பாடியைத் தம் ஆதிக்கத்துக்குட்பட்டதாகக் கருதிவந்தார். பல தலைமுறைகளாக எந்த அரசர் காலத்தும் அது முதலியாரின் முன்னோருடைய செல்வாக்குக் குட்பட்டதாகவே யிருந்துவந்தது.

ஆதலால் அவர் "கலெக்டர்வாள்! மீட்டிங்கை நடத்துங்கள்; நான் பார்த்துக்கொள்ளுகிறேன். போலீஸ் புலிகள் என்னிடம் வாலை ஆட்டமாட்டா; பல்லையுங் காட்டமாட்டா. இந்தத் தாலுகா முழுதும் தரங்கம்பாடியில் கூடும்படி செய்கிறேன். திருவாரூர்த் தேர் ஓட்டி வைத்தவனுக்கு இதென்ன பிரமாதம்! என்னுடைய நந்தன், மூக்கன் வகையறுக்களுக்குச் சிறிது கண்ணைக் காட்டிவிட்டாற் போதும். போலீஸ் புலிகள் இருந்த விடம் தெரியாமல் பூனைகள்போலப் பதுங்கிவிடும். இன்று முதல் நானும் உங்கள் கட்டளைக் குட்பட்ட ஒரு தொண்டனென்பதை மறவாதீர்கள்" என்றார்.

ரங்கன் ஒரு காகிதத்தை யெடுத்து அதில் ஏதோ எழுதி, அருகே ஒரு பக்கத்தில் வழக்கம்போல மரியாதையுடன் நின்றுகொண்டிருந்த பொன்னனைக் கூப்பிட்டு அவனிடம் கொடுத்து "இதை உடனே தபாலாபீசுக்குக் கொண்டுபோய்த் தந்தி கொடுத்துவிட்டு வா" என்றான்.

கந்தன்: "என்ன ரங்கா, பட்டணம் பத்திரிகைகளுக்குத் தந்தியோ?"

ரங்கன்: "ஆமாம், இந்தியா முழுவதுக்கும் தந்தி! தரங்கம் பாடியில் கூட்டம் வெள்ளிக்கிழமை மாலை."

ரங்கன் இதனோடு பேச்சை நிறுத்திவிட்டு யோசனையில் ஆழ்ந்தான். பிரசங்கம் வாய்ப்பேச்சாயினும், கூட்டங் கூட்டுவதென்பது செயலின் கூறுதானே. ஆகவே வார்த்தையைக் குறுக்கிக் காரியத்தில் மனத்தைச் செலுத்தலானான். பேச்சைக் குறைப்பதுதான் காரியசித்திக்கு வலிமை யளிக்குமென்று அவனுக்கும் மனத்திற் பட்டது.

'தீர யோசிப்பின் சொல் சொல்தான்; செயல் செயல்தான். ஒன்று அழிந்துவிடுகிறது, மற்றொன்று நிலைக்கிறது' என்று தனக்குத் தானே யெண்ணிக்கொண்டான்.

II

இங்கே தரங்கம்பாடியில் இவர்கள் நிலை இவ்வாறிருக்க, தஞ்சைக் கலெக்டரின் இருப்பிடமாகிய வல்லத்தில் நடந்த சர்க்கார் நாடகத்தைச் சற்றுக் கவனிப்போம். வல்லம் ஓர் அழகான கிராமம். அது தஞ்சாவூருக்கு மேற்கே ஏழு மைல் தூரத்தில் மேட்டுப் பாங்கான பிரதேசத்தில் அமைந்துள்ளது. காவிரியின் வளம் பெற்று, குறைவில்லாத நல்ல காற்று முதலியவற்றுடன் கூடிய ஆரோக்கியமான இடமாகும். தஞ்சை ஜில்லாவானது மற்ற ஜில்லாக்களைவிட நீர் நில வளத்திலும், செல்வத்திலும், நாகரிகத்திலும், ஜனத்தொகையிலும் மேம்பட்டு நிற்பதனால், ஐ. ஸி. எஸ். வர்க்கத்தைச் சேர்ந்தவர் ஒவ்வொருவரும் தஞ்சை ஜில்லா கலெக்டர் வேலையை விரும்புவது வழக்கம். அது முற்காலத்துச் சோழ மன்னருடைய பெருமைக் கீடான பெருமையுடைய தென்னலாம். முடியொன்றுதான் குறை.

அப்பொழுது தஞ்சைக் கலெக்டராகிய லான்ஸ் துரை தம் வேலையில் சுமார் இருபத்துமூன்று வருஷ அனுபவமானவர். அவர் காரியத்தில் நல்ல சமர்த்தர். ஆனால் மொழியின் சுவையைத் தானனுபவித்தவருமல்லர்; பிறருக்குப் புகட்டினவரு மல்லர். எப்பொழுதும் செயலிலேயே கண்ணுயிருப்பவர். அவர் தம்முடைய திறமைக்கும் குணதிசயங்களுக்கும் இந்தக் கலெக்டர் உத்தியோ

கம் ஏற்றதன்றென்றும், கர்ஸன் துரையைப் போலத் தாமும் ராஜப்பிரதிநிதியா யிருக்க வேண்டியவரென்றும் அடிக்கடி நினைப்பார். தம்முடைய அதிர்ஷ்ட ஹீனத்தைப் பற்றிப் பிறரிடம் வெளியிடாமல், மாலை வேளைகளில் தாம் வேட்டைக்குச் செல்லும்போது நன்றியறிவுடன் தம்மைப் பின்தொடர்ந்து வரும் 'டெரியர்' ஜாதி நாயுடன் ஏகாந்தத்தில் புலம்பி ஆற்றிக்கொள்வார். இங்கிலையில் அவர் தம்மைத் தாமே சிறிது வெறுத்து நொந்துகொள்வாரானார். ஆதலால் அவர் பிறரிடம் அன்பு பாராட்டுவதெப்படி?

தஞ்சை ஜில்லாவிலும் ஒத்துழையாமைக் குழப்பம் தொடங்குகிறதென்று லான்ஸ் துரை கேள்வியுற்றதும், அதனை முளையிலேயே களைந்துவிட வேண்டுமென்று தீர்மானித்து, ஜில்லா போலீஸ் ஸூபரின்டெண்டென்டையும் தமக்கு மந்திரிபோன்ற அஸிஸ்டெண்டு கலெக்டரையும் அழைத்து அவர்களுடன் ஆலோசிக்கலானார்.

"மிஸ்டர் லான்ஸ், தாங்கள் அநாவசியமாய் இவ்வளவு கவலைப் படுகிறீர்கள். தஞ்சாவூர் நான் பிறந்த ஜில்லா. இந்த ஜில்லா ஜனங்களின் சுபாவம் எனக்கு நன்ருய்த் தெரியும். காந்தி தம் ஆச்ரமத்தையே சபர்மதியிலிருந்து இங்கே மாற்றினாலும் இந்த ஜில்லாவின் அமைதியைக் கெடுக்க வியலாது. இந்த ஜில்லா ஜனங்கள் தமக்கு நேரே ஏதேனும் காரியக்கேடு நேர்ந்தாலன்றி வீண் ஆரவாரங்களுக்காக ஒருநாளும் மனந்துணிந்து தியாகம் செய்யமாட்டார்கள். அவர்களை நேரில் வயிற்றிலடித்தால் ஒருவேளை யென்னவோ! ஆனால் நம்முடைய ஆளுகை

முறையில் அந்தக் காரியம் நாம் ஒருநாளும் செய்யப்போவ தில்லை. அநாவசியமாய், இருண்டதை யெல்லாம் கண்டு நாம் மருளுவது தவறு. இப்படி நாம் சில்லறைத் தொந் தரவுகள் செய்து வந்தால், அது ஜனங்களை நாமே கிளப்பி விடுவதாவதோடு, நம்முடைய பயம் வெளியாவதற்கும் இடமாகும். இந்த ஜில்லாவில் முன்காலத்தில் ஏதோ நல்ல புத்திமான்கள் பலர் பிறந்தனரென்று கேள்வி. இப் பொழுது உற்பத்தியாவதெல்லாம் குமாஸ்தாக்களும் லா ஏஜண்டுகளுந்தான்'' என்றார் அஸிஸ்டெண்ட் கலெக்டர்.

"ஐ. ஸி. எஸ்ஸை அலங்கரிப்பதற்குச் சில சாமர்த் திய சாலிகளும் இந்த ஜில்லாவில் அவ்வப்போது தோன்று வது உண்டல்லவா?''

கலெக்டர் துரையவர்களிட மிருந்து வந்த இந்த வெகு மானத்தை அஸிஸ்டென்ட் கலெக்டர் நடராஜன் விநயத் துடன் அங்கீகரித்துச் சிறிது தலை குனிந்து, இனிய குர லில் மேலும் கூறுவானானன்:

"நான் வற்புறுத்திச் சொல்லுவதற்கு மன்னிக்க வேணும். இந்தத் தரங்கம்பாடி சமாசாரத்தை நாம் காதில்கூட போட்டுக்கொள்ள வேண்டியதில்லை. அது செம்படவர் சண்டைக்கும் கேவலமானது. இந்த ரங்கன் பேச்சில் உபமான உபமேயங்களுடன் அலங்காரமாகப் பேசுவதைத் தவிர விஷயமொன்று மிராது. கல்லுங் கனி யும்படி அழகாகப் பேசுவான்; ஆனால் தரங்கம்பாடிக் கோட்டையில் அளற்டிக்காத ஒரு முழுக்கல்கூடக் கிடை யாது, அவன் பேச்சைக் கேட்டு உருகுவதற்கு! அங்கே கடற்கரையில் நண்டுகள்கூடக் கிடையாது; அவன் பேச்

ளைக் கேட்பதற்கு ஆட்கள் யாரங்கே? அது நோயாளி கட்குத் தகுதியானவிடம். நாம் இவ்விஷயத்தில் ஒன்றும் தலையிடாம விருந்துவிடுவோமாயின், காற்றில் உயரக் கிளம்பின புழுதி தானே யடங்கிவிடுவதுபோல் இதுவும் தானே இருந்தவிடந் தெரியாமல் அடங்கிப்போகும்.''

"ஆமாம் நீ சொல்வது ஒருவிதத்தில் சரிதான். ஆனால் கந்தன் சமாசாரம்? அவனை உனக்கு நன்றாய்த் தெரியுமென்றும், நாட்டுத் தொண்டில் அவனை நன்கு மதிக்கும்படிக்கும் நீ தானே சொன்னாய். அதனால்தானே என் நண்பர் முதலியார் வார்த்தைக்கிணங்க அவனை யொன்றும் செய்துவிடாமல் இதுவரையில் விட்டிருக் கிறேன். அவன் இதில் முனைந்து நின்றால்?''

"ஆம்; கந்தனை யெனக்கு நன்றாய்த் தெரியும். அவன் மனவுறுதியும் பரிசுத்தமுமுள்ள ஒரு தொண்டன். ஆனால் அவனொருவன் என்ன செய்வான்; ஒருவர் இருவரை மாற்றலாம். ஒரு துளி தேன் இப் பரந்த கட லின் உவர்ப்பை என்ன செய்யமுடியும்? கந்தன் தற்புகழ்ச் சியை நாடுபவனல்லன்; அதனால் எதையும் படாடோப மாக விளம்பரப்படுத்தமாட்டான். இவ்வுலகத்தில் படா டோப மில்லாவிட்டால் பெரிய காரிய மொன்றையும் செய்துமுடிக்க வியலாது. நன்மைசெய்வதிலுங்கூடப் பலர்க்கும் பயன்படத்தக்க பெரு நன்மையைச் செய்ய முடியாது. இக்காலத்தில் பிச்சைகூடக் குடுகுடுப்பாண்டி போல ஏதேனும் படபடவென் றடித்தால்தான் போடு வார்கள். அதுவும் வீட்டுக்காரனுக்குக் காது வலியெடுக் கும்வரை குடுகுடு அடிக்கவேண்டும். அப்பொழுதுதான் ஏதேனும் கிடைக்கும்.''

"சரி, நீ சொல்லுகிறபடியே வைத்துக்கொள் வோம். குடுகுடு அடிக்க ரங்கசாமி சேர்த்திருக்கின்றான்; போதாக் குறைக்கு ராஜேச்வரியும் சேர்ந்திருக்கிறாள். அவர்களைச் சேரவொட்டாதபடி செய்யவேண்டிய தவசிய மல்லவோ?"

"அவர்களெல்லாரையும் எனக்குத் தெரியும். ராஜேச் வரியையும் நன்றாய்த் தெரியும். அவளுக்கு நல்ல வசிய சக்தி யுண்டு. அதனை அவள் ஆக்ஸ்போர்டில் காமக் கலகத் திலே பிரயோகித்தாள். இப்பொழுது தேசத்தொண்டில் திரும்பியிருக்கிறாள் போலிருக்கிறது. இது எதுவரை நாளைக்கோ! பாவம், கோடீசுவரன் பெண்; இப்படித் திரும்பிவிட்டாள்! காந்தியின் வேலை அதியாச்சரியமா னதுதான். மிஸ்டர் லான்ஸ்! நீங்கள் அவளைப் பார்த் திருக்கிறீர்களோ?"

லான்ஸ் துரையோ வேறு யோசனையில் முழுகியிருந் தவராதலால் நடராஜனை நோக்கி, "ஏன் நடராஜ்! உனக்கு இந்தத் தடியடி வேலை பிடிக்கவில்லையோ! மனச்சாட்சிக்கு விரோதமென்று தோன்றுகிறதோ?" என்றார்.

"மனச்சாட்சிக்கு விரோத மொன்றுமில்லை. அதுவும் என் வேலைக்கு ஒரு அங்கந்தானே; அதை உபயோகிக்க வேண்டியதும் என் கடமையன்றோ? அதற்காக அன்று நான் சொல்வது. பொதுவாகவே எதையும் நசுக்கிவிட லாம் என்ற அந்தக் கொள்கை தவறானது. அதில் ராஜ தந் திரம் ஒன்று மில்லை. நாயடிப்பது போல் தொண்டர்களை யடிப்பதில் அரசாங்கத்துக்குக் கெட்டபேரைத்தவிர லாப மென்ன? அதனால் ஒத்துழையாமைக் கலகம் அதிகமா

சிறதேயன்றிக் குறைவதாகக் காணவில்லையே? அன்பிேைலல்லவோ ஜனங்களை ஏமாற்றி வசப்படுத்த வேண்டும்! அன்பான வார்த்தை போதுமே, செயலில் ஒன்றுமில்லாவிட்டாலும்! ராம்ஸே மாக்டொனல்டு போன்றவர் வைசிராயாக வந்தால் இந்தக் கலகம் பறந்துபோய்விடும். ஒருவருக்கும் உண்மை புலனாகாத அன்பு மொழிகளை உடைந்த குப்பியினின்றும் தேன் ஒழுகுவது போல ஒழுக்கி எதையும் வென்றுவிடுவார். அவர்தான் சரியான ராஜதந்திரி!"

"உனக்கு அவரை நேரே தெரியுமோ நடராஜ்?"

"எனக்கு நேரே நன்ருய்த் தெரியும். ரங்கசாமிக்கு என்னிலும் இன்னும் நன்ருய்த் தெரியும். எலெக்ஷனில் அவருக்காக ரங்கசாமி இரவு பகல் தூக்க மின்றி மிகவும் வேலை செய்திருக்கிருன். ரங்கசாமியும் அவரைப்போலவே மதுரமான வார்த்தைகளைக் கேட்போர் மெச்சப் பேசுவதில் மிகவும் சமர்த்தன். அவன் வாக்கு நயம் நேரே கேட்டவர்களுக்குத்தான் தெரியும். பருவ மழைபோலப் பொழிவான். கந்தன் அப்படி யில்லை."

"நடராஜ், மாக்டொனல்டைப் பற்றிய பேச்சு இப்போது நமக் கென்ன செய்யப்போகிறது? இப்பொழுது நமது ஜில்லாவைக் கவனித்துக் காக்கவேண்டியதன்ருே நம் கடமை? எனக்கும் இருபத்துமூன்று வருஷ அனுபவம் ஆகிவிட்டது! இது போன்ற குழப்பங்களை நான் பார்த்தது மில்லை, கேட்டது மில்லை. இந்த மூவரும்—கந்தன், ரங்கசாமி, ராஜேச்வரி—சேருவது நிச்சயம் பெரிய அனர்த்தமாகு மென்று எனக்குத் தோன்றுகிறது. நீ சொல்வதைப் பார்த்தால், இவர்

களைப் போன்றவர்கள் ஒரு நண்டைக்கூட அரசனுக்கிச் செங்கோல் செலுத்தச் செய்வார்கள் போலிருக்கிறது! நீ சொல்பவற்றைச் சாதாரணமாய் நான் எப்பொழுதும் எடுத்துக்கொள்வது வழக்கந்தான். ஆனால் இப்பொழுது இவ்விஷயத்தில் நீ நன்கு ஆலோசித்துச் சொல்லவில்லை யென்று கருதுகிறேன். அந்தச் செல்வாக்குள்ள மைனர் முதலியாரும் இதில் சேர்ந்துவிட்டால் நிச்சயம் பெருங் கலகந்தான்; சந்தேகமில்லை. அவர் பண்ணையாட்கள் எதற்கும் துணிந்தவர்களென்று கேள்வி. முதலியார் மேலே கைபோட்டால் அவர்கள் நெருப்பில் விழுந்து உயிரைக் கொடுக்கவும் துணிவார்களாம்!"

"மிஸ்டர் லாஃன்ஸ், முதலியார் இதில் சேர்ந்தால் நீங்கள் சொல்வது வாஸ்தவந்தான்; நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டியதுதான். ஆனால் முதலியார் இதில் ஏன் சேரப்போகிறார்? அவருக்கென்ன, பைத்தியமா? இதிலே லாபமென்ன அவருக்கு? உள்ளதையும் இழந்து விடுவாரே! முதலியாரைப் போன்றவன் எங்கேயாவது சிறைக்குப்போகத் துணிவானோ? அப்படித் துணிந்துவிட்டால் அதன்பின் நாட்டில் தேசபக்திக் கிளர்ச்சியை அடக்கவும் முடியுமோ? முதலியார் கந்தன் பக்கம் சேருவதென்பது புலியும் மானும் ஒரு கொட்டிலில் சேர்ந்திருப்பது போலத்தான்."

"நடராஜ்! நீ முன்னே சொன்னதை நீயே மறந்துவிடுகிறாயே! அவர்கள் மூவரும் ஏதோ தெய்விக சக்தியுடையவர்களென்றும், எவரையும் தம் வசப்படுத்திவிடக் கூடியவர்களென்றும் நீ சொல்லவில்லையா? சென்னை

அரசாங்க அறிக்கையி லிருந்தும் அப்படித்தானே தெரி கிறது!''

"ஆமாம்; அதனுலேதான் நாம் அநாவசியமான போலீஸ் கடுமைகளைக் காட்டவேண்டாமென்று நான் சொல்லுகிறேன். காற்று வலுத்தால் தீயும் தானே வலி யடையுமன்ருே? ரங்கசாமி கல்லையுங் கரைக்கும் சக்தி வாய்ந்த வாக் சாதுர்ய முள்ளவன். அவன் மனவேகங் கொண்டால் காரியம் எவ்வாருகுமோ! அதற்கு நாம் இடங் கொடுக்காமல் நடக்கவேண்டும். இரண்டு கையையும் கொட்டினுல்தானே ஓசை? இருக்கட்டும்; எல்லாவற்றிற் கும் இப்பொழுது அங்கே நடந்துவரும் நடவடிக்கைகளைப் பற்றிச் சரியான விவரந் தெரிந்துகொண்டபின், அதற்கனு குணமாக ஆலோசித்து மேற்கொண்டு நடத்துவோம். நம் ஸூபரின்டெண்டெண்டின் அபிப்பிராய மென்ன? இது வரை அவர் ஒன்றும் சொல்லவில்லையே?''

"நீர் என்ன சொல்லுகிறீரையா, டி. எஸ். பி.?'' என்ருர் பெரிய கலெக்டர்.

"நீங்க ளிருவரும் நேரில் வந்து ஸ்தலத்தில் நடந்த அக்கிரமத்தைப் பார்த்தால் தெரியும்! நமது ஜில்லாவில் எங்கேயாவது எப்பொழுதாவது இப்படி நெற் சேர்களைத் தீயிட்டு இருபதினுயிரங்கல நெல்லைக் கொள்ளையடித்த துண்டோ? அவர்களுக்குத் தலைமையானவர்களை யெல் லாம் பிடித்து ஆறு மாதத்திற்கு நன்னடக்கை ஜாமீனு வது வாங்காதவரை, இதுபோன்ற கலகம் இன்னும் முற்று வது நிச்சயம். அவர்கள் கிராமங் கிராமமாகப் போய்க் கிளர்ச்சியுண்டாக்கப் போகிருர்களாம். ஒரு வருஷம் முன்

தியே நான் அறிக்கை செய்தபடி கந்தனை அடக்கியிருந்தால் இவ்வளவுக்கும் இடமே யிருந்திராது.''

"அவ்விடம் இப்போதைய நடவடிக்கைகளைப்பற்றி இன்று ஏதேனும் சமாசாரமுண்டோ?''

"நிமிஷத்திற்கு நிமிஷம் எதிர்பார்க்கிறேன்; ஸ்பெஷல் தந்தி இப்பொழுது வரும்'' என்று விடை சொல்லி டி. எஸ். பி. நாரைபோல் கழுத்தை நீட்டி நாலாபக்கமும் பார்த்தார். அவர் எதிர்பார்த்தபடி சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு தந்தியை யெடுத்துக்கொண்டு ஒருவன் ஓடி வந்தான்.

உடனே டி. எஸ். பி. தந்தியை வாங்கிப் பிரித்துப் பார்த்து, "நான் எதிர்பார்த்தபடியே நடந்துவருகிறது; இதோ பாருங்கள் தந்தியை!'' என்று கூறி, அதைப் பின்வருமாறு வாசித்தார்:—'காரியம் தென்றல் முற்றிப் புயலாகத்தான் முடியும்போ லிருக்கிறது! வெள்ளிக்கிழமை மாலை நாலு மணிக்கு ஒரு பெரிய கூட்டம் நடத்தப் போகிறார்களாம். அதில் பல புதிய கொள்கைகளைப் போதித்துப் பழைய முறைகளை வேரோடு களைந்து, புதிய முறைகளை ஸ்தாபிக்கப் போகிறார்களாம். ஸி. ஐ. டி. பொன்னனைக்கூட இனி நம்புவதற் கில்லை. அவன் அவர்களுடன் சேர்ந்துவிட்டாற்போ லிருக்கிறது. ஒரு வாரமாக அவன் விஷயம் ஒன்றும் சரிவரச் சொல்லக்கூடவில்லை. கூட்டத்தைத் தடுக்காவிடில் கலகம் நிச்சயம்!''

டி. எஸ். பி. இதனை வாசித்து முடித்ததும் அவர் கைகள் படபடத்தன. நெற்றியில் வியர்வைத் துளிகள் தோன்றின. தம்முடைய போலீஸ் தர்பாரில்கூட இவ்

வளவு தூரத்துக்கு வந்துவிட்டதே யென்று கோபம் பொங்க, நடராஜனைக் கொஞ்சம் வெறுப்புக் கலந்த பார்வையுடன் மரியாதையாகப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானர் :—

"இந்த அறிக்கை எனக்கு மிகவும் நம்பிக்கையும், சாமர்த்தியமும், பொது நோக்கமு முள்ளவனிடமிருந்து வந்திருக்கிறது. இதில் சொல்லியிருப்பது சிறிதும் தவறுது. என் கடமை இதில் தெளிவா யிருக்கிறது. ஆக்கூர் மைனர் முதலியாரும் இந்தக் கலகத்தில் சேர்ந்திருக்கும் பக்ஷத்தில், மாயவரம் போலீஸார் துப்பாக்கிகளிலிருந்து ஒரு குண்டுகூடக் கிளம்பாது. நமது மலபார் ரிஸர்வ் போலீஸை உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டியதுதான். இனிமேல் தாமதம் செய்தால் நம் தலைக்கே வந்துவிடும். அவர்கள் இன்னும் கோட்டையிலேயே இருக்கிறார்கள். தந்தி கொடுத்து உடனே காலிசெய்யச் சொல்லிவிட்டு, நமது ரிஸர்வ் போலீஸை அனுப்பிக் கோட்டையை முதலில் கைப்பற்றிக்கொள்ளவேண்டும்" என்று டி. எஸ். பி. தீர்மானமாகப் பேசினர்.

"ஆம். டி. எஸ். பி., நீர் சொல்வது சரிதான். அப்படியே நடக்கட்டும். நடராஜ்! தமிழில் ஒரு பழமொழியுண்டல்லவா? அதுபோல நாம் தும்பை விட்டு வாலைப் பிடிப்பானேன்? டி. எஸ். பி. ஞாபகப் படுத்துகிறபடி 'சமயத்தில் ஒரு தையல் தைத்தால் ஒன்பது தையல் லாபம்' என்று ஆங்கிலத்திலும் ஒரு பழமொழி யுண்டு. அதன்படி நாம் ஜாக்கிரதையா யிருக்க வேண்டியதுதான். இதுவே என் முடிவான உத்தரவு. வேண்டிய போலீஸ்

பந்தோபஸ்துக்கு உடனே ஏற்பாடு செய்துவிடவும். ஆனால் முரட்டுத்தனமாக ஏதேனும் ஒன்று செய்து பத்துக் கிளப்பிவிடவேண்டாம்; ஜாக்கிரதை! நானும் வெள்ளிக்கிழமை காலையே ஆக்கூரில் முகாம் போட்டு நடவடிக்கைகளைக் கவனிக்கிறேன்.''

கலெக்டர் துரை இவ்வாறு கூறி முடிக்குமுன் மற்றொரு தந்தியுடன் ஒருவன் ஓடிவந்தான். அந்தத் தந்தியிற் கண்ட விஷயம்:—

"தாலுகா முழுவதும் ஒத்துழையாமைக் கலகம் காட்டுத் தீப்போலப் பரவுகிறது. ஜனங்கள் கொந்தளித்து நிற்கிறார்கள். ரங்கனும் ராஜேச்வரியும் ஊரூராய்ப் பறந்துகொண்டிருக்கிறார்கள். இந்தியா முழுவதும் பத்திரிகைகளுக்குத் தந்திகள் பறக்கின்றன. சீமைக்குக் கூடத் தந்தி போயிருக்கிறதாம்! 'வெள்ளிக்கிழமை கலகநாள்' என்று பெரியோர் சொல்வதுபோல, வருகிற வெள்ளிக்கிழமை உண்மையாகவே கலகநாள்தான்; நிச்சயம்!''

லான்ஸ் துரை பெருங் கலக்கங்கொண்டு ஆலோசிக்கலானார். தாழ்ந்த குரலில் தமக்குள்ளேயே பேசிக்கொண்டார்! உதட்டை மடித்து மெல்லச் சிட்டியடித்துக் கைவிரலால் வலது தொடையில் தாளம் போட்டார். மேஜைமீது கிடந்த தந்தியில் பென்ஸிலால், 'கலகம்' 'கலகம்' என்று சிலதடவை எழுதினார். தம்மை மறந்து பெருஞ் சிந்தனையிலாழ்ந்தார். தாம் இதனால் ஒருவேளை இந்தியாவிலுள்ள முந்நூறு கலெக்டர்களுக்குள்ளும் மிகவும் பிரசித்தியடைந்துவிடக்கூடுமோவென் றஞ்சினார். உடனே நடராஜனையும் டி. எஸ். பி யையும் தலையசைப்பினால் போகும்படி உத்தரவு

கொடுத் தனுப்பிவிட்டுத் தமது படிப்பறைக்கு இவ்விஷயத்தைப் பற்றித் தீர்க்காலோசனை செய்யும்பொருட்டுச் சென்றார். தம் இருபத்துமூன்று வருஷ அனுபவத்தில் இதற்கு முன் ஒருகாலும் நேராத இந்தக் கலகத்தை யெப்படி அடக்குவதென்று அவருக் கொன்றும் தெளிவாய்ப் புலப்பட வில்லை. அறைக்கும் தாழ்வாரத்திற்குமாகக் கூட்டிலடைத்த புலிபோலச் சிறிது நேரம் உலாவினார். டபேதார்களும் பட்லர்களும் கைகட்டிச் சிறிது தூரத்தில் மரத்தடியில் நின்று முணுமுணுவென்று பேசிக்கொண்டிருந்தார்கள். 'டெரியர்' நாயும் வாலைக்குழைத்து ஆட்டி யஜமானைப் பார்த்து உறுமியது. ஆனால் பதில் வரவில்லை. துரை அன்றிரவு ஆகாரங்கூட உட்கொள்ளாமல் நேரே படுக்கைக்குச் சென்றார்.

---

## அத்தியாயம்—15

---

### கட்டமேரக் கட்டை

### I

ஒரு நாள் அருணோதய காலம். இருள் இன்னும் நன்கு பிரியவில்லை, காலைக் காற்றுச் சில்லென்று மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. ஆகாயத்தே அருணனொளி மெல்லெனப்பரவ, சுக்கிரனொளி சுருங்கிக்கொண்டிருந்தது. அத்தினந்தான் சுபகாரியங்களுக் குரியதான சுக்கிரவாரம். கதிரவனும் மெல்ல மெல்லத் தன் கிரணங்களைப் பரப்பி உயிர்களுக்கு ஊக்கமளித்தனன்.

கந்தன் தினந்தோறும் இரவில் வெட்ட வெளியிற் படுப்பதும் அதிகாலையில் நாலு மணிக்கே எழுந்து சிறிது தூரம் நடந்து சென்று திரும்பிச் சூரியோதயத்திற்குள் தன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டுவிடுவதும் வழக்கம். அன்றைத்தினம் அவன் வழக்கத்திற்குச் சற்று முன்னேயே எழுந்து, தன் காலை நடையை முடித்துக்கொண்டு, வீரசோழனாறு கடலொடு கலக்குமிடத்தி லுள்ளதொரு மணல் மேட்டி லமர்ந்தான். தன்னெதிரே ஒப்பில்லாத ஓசையுடனும் காம்பீரியத்துடனும் விளங்குங் கடலை யுற்றுநோக்கினான். வெளியே எந்த வியாபாரத்தி லிருந்தாலும் இருதயம் மாறுபடாது சாந்தமாயும் நிர்மலமாயும் விளங்கும் கர்மயோகிகள் போலக் கடலானது புறத்தே பேரலைகளும் ஆரவாரமும் உடையதாயினும் இருதயம் போன்ற நடுவிடத்தே சாந்தமும் காம்பீரியமும் குடிகொண்டு விளங்குவதையும், ஜீவாத்மா பரம்பொருளுடன் கலப்பது போல அக்கடலுடன் வீரசோழனாறு கலக்கும் அழகையும் கண்டு மனத்தே பேரானந்தங் கொண்டு இவ்வுலக வாழ்க்கையைப் பற்றிய தத்துவ விசாரத்தில் ஆழ்ந்தான்.

அப்படி அவன் சிந்தனையி லிருக்கும்போது தன்னையறியாமலே அவன் கையானது மணலைச் சிறிது தோண்ட, உடனே நீர் ஊற்றெடுத்துப் பெருக வாரம்பித்தது. அதைக் கண்ட அவன், 'என்ன ஆச்சரியம்! இம்மண்ணுக்குட் சிறைப்பட்டிருந்த நீரை நான் விடுவித்து விட்டேன். இது போலவே அந்நியர் கையிற் சிக்கியுள்ள என் நாட்டையும் விரைவில் விடுவிப்பேன்!' என்றெண்ணிக் களிகூர்ந்தான்.

மறுபடியும் அவன், தன் மனத்தி லுண்டான பேருணர்ச்சியுடன் மெய் மறந்து, 'இவ்வுலகில் உயிர்களெல்லாம் வெளித்தோற்றத்திற்குப் பலவாகவும் பலவகையாகவும் தோன்றினாலும், உண்மையில் எல்லாம் ஒன்றே' என்பது முதலான சில தத்துவங்களைச் சிந்தித்துக்கொண்டே சிறு துயி லடைந்தான். அச்சமயம் பேரலை யொன்று புரண்டு வந்து அவன் காலடியில் மணலையும் கிளிஞ்சல்களையும் குவித்துச் சென்றது.

இவ்வாறு அலையால் கலைப்புண்ட அவன், கண் விழித்துப் பார்த்துவிட்டுத் திரும்பவும் சிந்திக்கலானான்: "நிலத்தையும் கடலையும் ஒப்பிட்டுப் பார்க்கின் ஒன்றுக்கொன்று எவ்வளவு வேறுபாடு! ஆனால் அவை ஒன்று மற்றொன்றில் அடங்கிக் கிடக்கின்றன. நிலத்தில் நீர் அடிமை; நீரில் நிலம் அடிமை. என்ன ஆச்சரியம்! இவ்வுலகில் எப்பொருளிடத்தும் வெளித்தோற்றத்தால் மட்டும் உண்மை வெளிப்படுவதில்லை. ஆனால், என்றும் மாறாததும் அழியாததுமான உண்மையொன்று எல்லாப் பொருளிடத்திலும் அடங்கியிருக்கின்றது. அதனையறிந்து, அகங்காரத்தை யொழித்துத் தன் வாழ்க்கையை யொழுங்குபடுத்திக்கொள்பவனே ஜீவன் முக்தன். கர்மாவின் உண்மையை யறிந்து, அதனைக் கைவிடாமல், ஞானமார்க்கத்தையும் கடைப்பிடிப்பவனுக்கே ஆத்மஞானம் கிட்டும். அத்தகைய ஆத்மஞானியே இவ் வுலகவாழ் வென்னும் பெருங்கடலில், மானிட சரீரமென்னும் மிதப்புக் கட்டையைத் தீதின்றிச் செலுத்திக் கரை சேர்க்க வல்லவனாவான்."

கந்தன் இப்படிச் சிந்தித்துக்கொண்டே, தன்னைச் சுற்றிலும் சிதறிக் கிடந்த கிளிஞ்சல்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கி அவற்றில் தன் நகத்தால் ஏதோ எழுதிக் கடலலையில் ஒவ்வொன்றாக விட்டெறிந்துகொண்டிருந்தான்.

அப்போது கதிரவன் மேன்மேலெழுந்துவர, அவனொளியும் வெப்பமும் ஓங்கிக்கொண்டே வந்தன. பகலவனுடைய மங்காத புகழைப் பாடி மகிழ்வனபோலக் கடலலைகளும் கொந்தளிப்புடன் மேன்மே லெழுந்து விழுந்தன. அவை சிறிது சிறிதாக வீரசோழனாற்றுக்குள் வெகு தூரம் புகலாயின. அதைக்கண்டு கந்தன், கட்டுமரத்திற்காகக் கொண்டுவரப்பட்டு, வீரசோழன் சங்கமுகத்தருகே கரையோரமாகக் கிடந்ததொரு பெரிய மரக்கட்டையின் மேலேறி யுட்கார்ந்தான். அக்கட்டையானது ஒருகாலத்தில், சிங்களத் தீவி லுள்ளதொரு காட்டில், அக்காட்டிற்கு அரசெனும்படி விளங்கிய மரமாகும். அம்மரம் வெட்டப்பட்டு இக் கட்டை வடிவமாய்க் கடலிலே தள்ளி யிழுக்கப்பட்டுத் தரங்கம்பாடி வந்துசேர்ந்து இப்பொழுது கேட்பாரற்றுக் கடற்கரையிலே கிடக்கின்றது!

ஆற்றில் எதிர்த்துச் சென்ற கடல்நீர் சிறிது சிறிதாக அதிகரித்தது. அது, தன் பதவியை யிழந்த ஓரரசன் போல ஆதரவற்று அங்கே கிடந்த கட்டுமரக்கட்டையைச் சமீபித்து அதில் மோதத் தொடங்கியது. கொஞ்ச நேரத்தில் அக்கட்டையைப் புரட்டி ஆற்றிலும் கடலிலும் இழுத்துவிடு மென்னும்படி அலைகள் மேன்மேலும் வந்துகொண்டேயிருந்தன. காலையில் கடல்நீரால் நனைக்கப்படுவதை விரும்பாத கந்தன் அக்கட்டையை விட்டுக் கீழே

யிறங்கிச் சற்றே ஒதுங்கி, கடல்நீர் மரக்கட்டைகளின் வெற்றி தோல்விகளைக் காண ஆவலுடன் நின்றான்.

கடலில் கிளம்பிய மிகப்பெரிய அலைகளும் ஆற்றினுட் புகுந்தவுடன் விசை யடங்கிச் சிற்றலைகளாகிப் பரவின. அவ்வாறு பரவிவந்த நீர், விரைவில் அம் மரக்கட்டையைச் சூழ்ந்து அதனைச் சிறிது அசைக்கவும் தலைப்பட்டது. தூக்கத்தினின்றும் விழிக்கும் ஓரரசன் தான் எழுமுன் சற்றுப் புரண்டுகொடுப்பதுபோல அக் கட்டையும் கொஞ்சம் அசைந்து புரண்டது. ஆயினும், எதிர்த்துவந்த நீர் வடிந்தவுடன் ஈரமணலில் அம் மரம் முன்போல அசைவின்றி உட்கார்ந்துவிட்டது. மறுமுறை நீர்ப்பெருக்கு வந்தபொழுதும் அக்கட்டை சிறிது அசைந்ததே யன்றி இடம் விட்டுப் பெயரவில்லை.

இதனைப் பார்த்துக்கொண்டே நின்ற கந்தன், தனக்குள்ளே, 'நாம் ஏன் இப்பொழுது ஒன்று செய்யக் கூடாது? நீர்ப்பெருக்கு வந்து அசைக்கும்பொழுது சிறிது சிரமப்பட்டு இக்கட்டையைக் கொஞ்சம் தள்ளி விட்டால், இது திமிங்கலம்போல ஆடி அசைந்து ஆற்றிற் செல்லும் அருமைக் காட்சியைக் கண்டு களிக்கலாமே!' என்று நினைத்தான். மறு நிமிஷம் அவ னெண்ணிய படி செய்யச் சமயம் வாய்த்தது. கடல்நீர் வந்து முன்போல அக் கட்டையைச் சூழ்ந்து அசைத்தது. உடனே கந்தன் சரியான சமயம் பார்த்து அக்கட்டையைக் கொஞ்சம் சிரமத்துடன் கிளப்பி நீரோட்டத்தை யனுசரித்துத் தள்ளினான். அதுவும் சிறிது தலை தூக்கி ஆற்றின் ஓட்டத்தில் ஈடுபட்டு, சுயம்வரத்தின் பொருட்டுக் குதிரையேறிச் செல்லும் ஓரரசகுமாரனைப்போலக் கம்பீரமாய் ஆற்றில்

மிதக்கத் தொடங்கிற்று. அடுத்து வந்த ஓரலையின் வேகம் அக்கட்டையை நட்டாற்றிற் சேர்க்க, கட்டையும் காலை வெய்யிலிற் குளிர்காய்ந்துகொண்டு மெல்லென அசைந்து கலம்போல ஊர்ந்து சென்றது.

அதைக்கண்ட கந்தன், 'என்னடா! ஒரு நிமிஷத்திற்குமுன் உயிரற்ற பிணம்போலப் பொலிவற்றுக் கிடந்த இக்கட்டை இப்பொழுது எவ்வள வழகாகவும் கம்பீரமாகவும் செல்லுகின்றது!' என்று வியப்பும் களிப்பு மெய்தி, வைத்த கண் வாங்காமல் அதனையே பார்த்துக்கொண்டு நின்றான். கட்டையும், சிவிகையூர்ந்து செல்லும் ஓரரசன் போல, சிற்றலைகளுடன் கூடிய அவ்வாற்றில் சிறிது எழுந்தும் படிந்தும் ஏற்றத்துடன் மிதந்து சென்றது. காற்றில் சிறு துரும்பு பறப்பதைக் காணின், அதிலும் தத்துவ விசாரம் செய்யுந் தன்மையுடைய கந்தனுக்கு இப்பொழுது கேட்பானேன்! அவன் அக் கட்டையின் நிகழ்ச்சியிலிருந்து பெரியதோ ரெண்ணத்தி லாழ்ந்து தன்னை மறந்தான். அவ்வெண்ணமாவது :—

"என்னே! இக் கட்டையின் நிகழ்ச்சி, அடிமைப்பட்ட ஒரு நாட்டின் விடுதலையை நமக்குக் குறிப்பிக்கின்றது! சுதந்திரக் கிளர்ச்சி என்னும் ஒரு பெரு வெள்ளம் வருமுன், அடிமைப்பட்ட நாட்டிலுள்ள ஜனங்கள் கரையிற் கிடந்த இக் கட்டை போன்றவர்களேயன்றோ! அவ்வெள்ளம் வந்ததும் இக்கட்டை அடைந்த சிறப்பை அவர்களும் அடைவார்களல்லவா!"

இவ்வாறு கந்தன் எண்ணமிட்டுக்கொண்டு அசைவற்று நிற்கையில் ரங்கன், ராஜேச்வரி, ஸரஸ்வதி, சொக்க

லிங்க முதலியார், காமாக்ஷி ஆகியவர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். கந்தன் அப்பொழுது அங்கு நின்ற தோற்றம், மதப் பிரசாரம் செய்யும் ஒரு பாதிரி பிரசங்கத்துக்காகத் தன் சீடர்களின் வரவை எதிர்பார்த்து நிற்பதுபோ லிருந்தது.

## II

"கந்தா, நீதான் அக்கட்டையை ஆற்றிலே தள்ளினுயோ?" என்று ஸரஸ்வதி அழுத்தமாகவும் அமைதியாகவும் கந்தனைக் கேட்டாள்.

"ஆமாம், நான்தான் தள்ளிவிட்டேன். அஃது உனக்கெப்படித் தெரியும்? நீ எங்கேயாவது ஒளிந்து பார்த்துக்கொண்டிருந்தாயோ!" என்று ஆச்சரியத்துடன் விடையிறுத்தான் கந்தன்.

"நான் ஒளிந்திருந்து பார்ப்பதா! இந்த மணல் வெளியில் அஃதெப்படி முடியுங் கந்தா? இங்கே மருந்துக்குக்கூடப் புல் பூண்டொன்றுங் கிடையாதே! என் அவ்வளவு சிரமம்? நீ அவனுடன் அக்கட்டையின் போக்கைப் பார்க்கும் பார்வையிலிருந்தே நான் ஊகித்தேன்; அது சரிதானே? நிலத்தி லிருந்த அந்தக் கட்டை நீரையடைந்ததும் உனக்கேதேனும் தத்வபோதனை செய்திருக்கும். அதுவும் வாஸ்தவந்தானே?" என்று ஸரஸ்வதி சாந்தமாகவும் புன்சிரிப்புடனும் கூறினுள். கந்தன் இதற்கு விடை கூறு முன்னே ஸரஸ்வதி பின்னுந் தொடர்ந்து ராஜேச்வரியை நோக்கிப் பேசலானுள்:

"ராஜி! கந்தன் எப்பொழுதும் அற்பப் பொருள்களிடத்திலிருந்துகூட அவற்றின் உள்ளுறையான தத்து

வத்தை யறிய முயலுகின்றான். அத்துவைதத்தில் ஊறின மனத்தின் செய்கை அதுதான். உலக முழுதும்—நிலத்தி னுள்ளும் புறமும்—நீர் எப்படி வியாபித்திருக்கிறதோ அதுபோல அத்வைதிகளின் பார்வைக்கு உலக முழுதும் ஒரு பேரொளி பரவி நிற்கின்றது. அந்த ஞான வொளி யைக் கண்ட அவர்கள், காற்றிற் பறக்கும் சிறு துரும்பி லிருந்தும், புல்லின் நுனியிற் படிந்துள்ள பனித் துளியி லிருந்தும், இன்னும் தாம் காணும் எப்பொருள்களிடத்தி லிருந்தும் பல உண்மைகளை, கூடுமாயின் ஒரு நாட்டின் பிற்கால நிலையைக்கூட அறிய வல்லவர்கள். அவர்கள் ஈசனுடைய ஆற்றலை எங்குங் காண்பர்!"

"பரிகாசம் செய்யாதே ஸரஸ்வதி! நான் அவ்வளவு மோசமில்லை. ஏதோ கொஞ்சங் கோணல், தத்துவ விசா ரப் பைத்தியம் உண்டு. அதற்காக நீ என்னை முழு மோச மாக்கிவிடலாமா? சில மந்தமதிகளுக்கு ரங்கன் ராஜேச் வரியைப்போல எதையும் தர்க்க ரீதியால் அறிந்து கூறும் ஆற்றல் இராது. அப்படிப் பட்டவர்கள், விஷயங்களி னுண்மையை அறிய என்ன செய்வது? இத்தகைய சிறு விஷயங்களி லிருந்தும் உண்மையை யுணர்விக்கும்படி ஈசனை வேண்டி, அவனருளுக்குக் காத்திருக்க வேண்டியது தான்."

"அப்படியன்று கந்தா! உன்னைச் சொல்வது போலத் தன்னை நன்கு எடுத்துக் காட்டிக் கொள்ளுகிறாள் ஸரஸ்வதி; வேறொன்றுமில்லை. நீங்களிருவரும் மக்கட் பிறப்பி லுள்ள இன்ப துன்பங்களை உண்மையாக அனுப வத்திற் கண்டறிந்து இன்னும் உயர் பதம் நாட முயலுகி

றீர்கள். நீங்களே இப்பொழுது எனக்கு வழிகாட்டிகள். இந்தப் பத்து நாட்களில் உங்களுடன் பழகியதனால், நான் இதுவரை அறியாத பல அரிய விஷயங்களை அறிந்து கொண்டேன்!'' என்று ராஜேச்வரி மிகவும் உண்மை யோடும் அன்போடும் கூறினாள்.

''சரி சரி; ஒருவரை யொருவர் இப்படிப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தால் நம் கட்டையின் கதை மறந்து விடப்போகிறது; அதைக் கவனிப்போம். கந்தா, அந்தக் கட்டையினிடமிருந்து உனக்கென்ன விஷயம் வெளியா யிற்று? அது பொதுவாக நாட்டின் இப்பொழுதைய நிலைமைக்கு ஒட்டினதாக விருக்குமென்று நினைக்கிறேன்!'' என்று ஸரஸ்வதி பேச்சைத் திருப்பினாள்.

'' ஸரஸ்வதி, நீ சொல்லுவது துண்மையே! இக் கட்டை யினிடமிருந்து நாம் அறிந்துகொள்ளக்கூடிய விஷயமும் உண்டு. இக் கட்டையின் வரலாற்றைக் கூறுகிறேன் கேள்: இஃது இங்கே மணலிற் பதிந்து அசைவற்றுக் கிடந்ததை இன்று அதிகாலையில் நான் பார்த்தேன். நாம் இவ்வூருக்கு வந்தது முதல் இஃது இப்படித்தான் கிடந்தது. இன்று நான் இதைப் பார்த்ததும் இதன் மீது சுமார் அரைமணி நேரம் உட்கார்ந்திருந்தேன். இது பெரும் பாறைபோலச் சிறிதும் அசைய வில்லை. பின்பு, கொஞ்சங் கொஞ்சமாய்க் கடலலைகள் ஆற்றினுள் ளேறி வந்து இதனையும் சூழ்ந்துகொண்டன. அப் போது அவற்றைக் கண்டு, பேரரக்கனை யொத்த இக்கட் டையும் சிறிது அஞ்சினது போலச் சற்றே அசைந்தது. முதல் இரண்டு மூன்று முறை அலைகள் வந்து எவ்வளவோ விசையுடன் மோதியும், இப்படி அசைந்ததே யொழிய

இடம் விட்டுப் பெயரவில்லை. மற்றொரு முறையில் சற்றே புரண்டு கொடுத்தது போலக் காணப்பட்டது. அப்போது நான் 'கடலே புரண்டு வந்தாலன்றி இக்கட்டையை இலகுவிற் புரட்ட முடியாதுபோலிருக்கிறது; நாம் ஏன் இப்பொழுது இதற்கும் அலைகளுக்கும் சிறிது உதவி செய்யக்கூடாது?' என்றெண்ணினேன். உடனே என் மனமும் கைகளும் பள்ளிச் சிறுவன் போல நினைத்த அக் காரியத்தைச் செய்ய விரைந்தன. மறுமுறை அலைகள் வந்து மோதும்பொழுது சரியான சமயம் பார்த்து என் இருகரங்களையுங் கூப்பி ஆதித்தனை வேண்டிக் கொண்டு மூச்சையடக்கி என் முழுவலிமையுடனும் ஊக்கத்துடனும் கட்டையைத் தள்ளினேன். கட்டை கொஞ்சம் நகர்ந்தது. மணல் சரிந்து விழ, நானும் கீழே விழுந்தேன். என் ஆடையும் நனைந்தது. ஆனாலும் நான் நினைத்த காரியம் முடிந்தது. அதாவது கட்டையானது மெல்ல நகர்ந்து ஆற்று நீரோட்டத்திலகப்பட்டு மிதக்கத் தொடங்கிவிட்டது. உடனே நான் மனமகிழ்ந்து கை கொட்டிக் களிகூர்ந்து, அது மிதந்து செல்லும் அழகை யுற்று நோக்கி நின்றேன்; நீங்களும் வந்து சேர்ந்தீர்கள். அதனை இன்று நான் தள்ளியிராவிடினும், சில நாட் சென்றபின்பாயினும் ஒருநாள் அது மிதப்பது நிச்சயம்."

ஸரஸ்வதி: "நான் அப்படி நினைக்கவில்லை கந்தா. ஓங்கி யெழுந்த கடல் பின்வாங்கு மன்றோ? அப்பொழுது அலைகளின் வேகங் குறைந்துவிடுமே? ஆதலால் இந்த மரம் இத்தனை நாளாகக் கிடந்தது போலவே பத்திரமாய் மணலிற் பதிந்து கிடந்தாலுங் கிடக்கலாம். எப்படி நிச்சயஞ் சொல்லமுடியும்?"

கந்தன் : "உண்மையே ; அப்படியு மிருக்கலாம்."

ராஜேச்வரி : "அது கிடக்கட்டும் கந்தா ! இதி லிருந்து நீ யறிந்துகொண்ட தத்துவ மென்ன ? அதனை யெங்களுக்கு விளங்கச் சொல்லவில்லையே ?"

"என்ன ராஜீ ! ஒன்றுந் தெரியாதவள் போலக் கேட்கிறாயே ! கந்தனுடைய அபிப்பிராயப்படி, மணலிற் பதிந்து கிடந்த இந்த மரம் நம் நாட்டுக் கோடிக்கணக்கான பாமர ஜனங்களுக் கொப்பாகின்றது. ஆற்றில் எதிர்த்து வரும் கடலலைகள் தான் சுதந்திரக் கிளர்ச்சி. கட்டையை ஆற்றில் மேல்நோக்கி யோடும்படி செய்ததுதான் தேச பக்தர்களின் தொண்டு!" என்று, கந்தனுடைய மனத்தை அப்படியே அறிந்தவள் போலவும், நன்கு தெரிந்ததொரு விடுகதையின் பொருளை விரிப்பவள் போலவும் ஸரஸ்வதி இலகுவாய் ராஜேச்வரிக்கு விடையளித்தாள்.

உடனே ராஜேச்வரி வியப்புடனும் சிறிது புன்சிரிப் புடனும், "சரி, ரங்கனுடைய இன்று மாலைக் கூட்டம் தேச பக்திக் கிளர்ச்சிக் கடலா, அல்லது அக் கடலின் சிற்ற லையா ?" என்று ஸ்வாரஸ்யமாய்க் கேட்க, எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்.

"ராஜீ ! என் விஷயமென்றால் உனக்கு எப்பொழு தும் பரிகாசந்தான். ஆனால் உன் பரிகாசத்தால் எனது ஊக்கம் மிகுகின்றதே யன்றிக் குறைந்துவிடவில்லை. மாலை யில் என்னுடைய கூட்டத்தைப் பார் ; புயலுண்ட கடல் போ லாகப்போகின்றது ! அக் கடலின் கொந்தளிப்பால் நீ எவ்வளவு அதிசயக் காட்சிகள் காண்பா யென்பது அப் பொழுது தெரியும் ! கூட்டம் முழு வெற்றியுடன் நடை பெறு மென்பதில் ஐயமே யில்லை."

கந்தன்: "ரங்கனுடைய புயற்காற்றுப் பேச்சு இன்று விடியும் ஜாமத்தில் நான் கண்ட கனவை யெனக்கு நினைப்பூட்டுகின்றது! நான் இயற்கையில் எப்பொழுதும் கனவற்ற நல்ல நித்திரையுடையவன். இன்றைக்கு அதிசயமாக நான் கண்ட கனவு எனக்கு மிக்க வியப்பையும் அச்சத்தையும் தருகின்றது. அதை நினைக்கும்பொழுதே யெனக்கு மயிர்க்கூச்செறிகிறது. சொல்லவும் நாவெழவில்லை!"

## III

"என்ன சொப்பனங் கந்தா? ரங்கனுடைய கூட்டத்தைப் பற்றின விஷயமோ? சில சமயங்களிற் கனவுகளும் பின் வரப்போகும் விஷயங்களைத் தெளிவாகத் தெரிவிக்கின்றனவே!" என்று ஆவலுடன் ஸரஸ்வதி கந்தனைக் கேட்டாள்.

ராஜேச்வரி கொஞ்சம் புன்னகையுடன், "அந்தக் கூட்டம் போலீஸாரால் கலைக்கப்பட்ட தென்றுங் கனவிற் கண்டாயோ கந்தா? அது தானே முடிவு?" என்றாள்.

ஸரஸ்வதி, "கந்தன் ஒருநாளும் அப்படிக் கண்டிருக்க மாட்டான்! ஒரு வேளை ரங்கனுக்கு அத்தகைய ஸ்வப்னாவஸ்தை யேற்பட்டிருக்கலாம்" என்றாள்.

"ரங்கனுக்குத் தூக்கமிருந்தாலல்லவோ கனவு காண்பதற்கு! இந்த மனக் கலக்கத்தில் தூக்க முண்டோ?" என்று ராஜேச்வரி திரும்பவும் பரிகசித்தாள்.

இவ்வாறு பரிகாசத்திற் காளான ரங்கன், "இப்பொழுது நகைப்பவர்க ளெல்லாரும் இன்றிரவு என்னைக் கைகூப்பித் தொழப்போகின்றீர்கள்!" என்றான்.

இந்தப் பரிகாசப் பேச்சுக்களை இன்னும் வளரவிட்டாற் காரியங் கெட்டுப்போமென்று நினைத்துக் கந்தன் அமைதியாய்த் தன் கனவைப்பற்றிக் கூறலானான்:—

"நான் கண்ட கனவை உள்ளபடி கூறுகிறேன்; அதன் பயனை நீங்களே அறிந்துகொள்ளுங்கள். பயன் பலவகையாகச் சொல்லலாமென் றெனக்குத் தோற்றுகின்றது!" என்று கூறி, கவலையைக் காட்டும் தாழ்ந்த குரலில் மேலும் சொல்லத் தொடங்கினான். எல்லோரும் அவனைக் கொஞ்சம் நெருங்கிச் சூழ்ந்து நின்றனர்.

"இன்று அதிகாலை சுமார் நாலுமணியிருக்கும் நான் கனவு காணும்பொழுது. உடனே என் உடம்பெல்லாம் வியர்த்து, நாடிகூட விழுந்துவிட்டாற் போலிருந்தது! மானிட வடிவம் கொண்ட ஒரு ராக்ஷஸ ரூபம், கருமேகம் போன்ற நிறத்துடன், வானளாவ என் முன் தூரத்தில் நின்றது. அது மிக்க கோரமாகவு மில்லை, அழகாயுமில்லை; நடுத்தரமா யிருந்தது. இடது கையில் தேர்வடம்போலப் பருமனான ஒரு சாட்டையுடன் வானத்திற்கும் பூமிக்கும் ஒரேணி வைத்தாற்போல நின்றது! அவ்வாறு நின்ற அவ்வரக்கன் புன்சிரிப்புடன் அடிக்கடி தன் சாட்டையைச் சொடுக்கினான். அவன் தனது ஆற்றலைக் குறித்துத் தானே வியந்துகொண்டதாக எனக்குத் தோன்றியது.

"அவன் சாட்டையை வீசும்பொழுது மேகங்களும் பயந்து நிலைகுலைந்தன. வானத்தில் சுழல்காற் றுண்டாயிற்று. அதோ அக்கரையி லுள்ள அந்தத் திட்டில் நின்ற அவன் மெதுவாய் என்னை நோக்கி வந்தான். அவன் பணியாளரான குறளர்கள் ஆயிரக்கணக்காகக் கையில் தீவட்டி

யுடன் அவனுக்கு வழிகாட்டிக்கொண்டும் அவன் விருதுகளைக் கூறிக்கொண்டும் முன்னே வந்தார்கள்.—".

"அவன் எதன்மீதேனும் சவாரி செய்துகொண்டு வந்தானோ?" என்று ஸரஸ்வதி ஆவலுடன் கேட்டாள்.

"ஆம்! சவாரி செய்துகொண்டுதான் வந்தான்! ஆனால் அவனுக்குத் தகுதியில்லாத, மிகச் சிறியதொரு—"

"எருமையின் மீதா" என்று பரபரப்புடன் கேட்டாள் ஸரஸ்வதி.

"நம் நாட்டுச் சாதாரண எருமையன்று; ஆப்ரிக்கா தேசத்து நீர் யானை. அதுவும் சிறிய எருமை போலத்தானிருக்கும். நான் பாலியத்தில் ஆப்ரிக்காவி லிருந்தபொழுது அங்கே அவற்றை மந்தை மந்தையாகப் பார்த்திருக்கிறேன்."

இதைக் கேட்டதும் எல்லாருக்கும் உடம்பு சிலிர்த்து கொஞ்சம் வியர்த்தது. கந்தனுங் கொஞ்சங் கனைத்துத் தன் தொண்டையைத் திருத்திக்கொண்டு மீண்டும் சொல்லுற்றான்:—

"அவ்வளவு பெரிய சரீரமுள்ள அவ்வரக்கன் அவ்வற்ப மிருகத்தின் மீது சவாரிசெய்தது மிகவும் ஆச்சரியமாகவே யிருந்தது. ஆயினும் அவன் அலட்சியமாய்த் தன் வாகனத்தைச் செலுத்திக்கொண்டு ரயிலடியை நோக்கிச் சென்றான். அப்போது நான் அவனை யின்னும் தெளிவாகப் பார்த்தேன். ரயிலடிக்குப் போனதும், அவன் தன் கையி லிருந்த நீண்ட சாட்டையை ஒரு முறை சொடுக்கினான். அதன் நுனி அப்பொழுது மாயவரம் புறப்படுவதற்குத் தயாராயிருந்த 4-நெ. வண்டி எஞ்

சினின் புகைப்போக்கிமேற் பட, எஞ்சின் ஓர் உருட்டுப் பொம்மை போலக் கவிழ்ந்துவிட்டது! உடனே நான் திடுக்கிட்டுப்போனேன். அப்பொழுது தென்னையே தரங் கம்பாடி ஸ்டேஷன்மாஸ்டராக நினைத்துக்கொண்டேன். எஞ்சினைக் கவிழ்த்த புருஷனுடைய காலில் விழுந்து சாஷ் டாங்கமாக நமஸ்கரித்து, 'நான் பிள்ளை குட்டிக்காரன்; என் வேலை தொலைந்து போய்விடும்; தாங்கள் தயவு செய்யவேண்டும்!' என்று முறையிட்டு மன்றாடினேன். அவர் மனமிரங்கி மறுபடி தன் சவுக்கை ஒரு முறை சொடுக்க, கீழே கவிழ்ந்து மணலிற் கொஞ்சம் புதைந்து கிடந்த எஞ்சின் நிமிர்ந்து ரயில் பாதையில் புறப்படுவதற் குத் தயாராய் நேரே நின்றது! பின்பு அவர் ஒரு நிமிஷம் உல்லாசமாக நாற்புறமும் ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு, நேரே தன் வாகனத்துடன் உப்பனாற்றுக்குச் சென்று, அதன் வழியாக நீரிலேயே வாகனத்தைச் செலுத்திக்கொண்டு கடலை நோக்கிச் சென்றார். அங்கே ஆறு கடலோடு கல்க்கு மிடத்தில் சற்று நின்று தன் சாட் டையை யெடுத்துச் சொடுக்கினார். உடனே, என்ன ஆச்ச ரியம்! அத்தரும் பனிநீருங் கலந்து மழை பெய்தாற்போல எங்கும் மணம் நிரம்பிற்று! நான் ஆச்சரியமும் ஆனந்த மும் தாங்காமல் 'கடல் முழுதும் பனிநீ ராய்விட்டதே!' என்று கத்தினேன்.''

இடையே கந்தன், கதையைக் கொஞ்சம் நிறுத்தி, தன் நெற்றியில் அரும்பி நின்ற வியர்வையைத் துடைத் துக்கொண்டு, முன்னிலும் சாந்தமான குரலில் மீண்டும் சொல்லலானான்:

"பின்னர் அவ்வரக்கன் தன் வாகனத்தைக் கடலிற் செலுத்தினன். அதுவும் கடலில் தாராளமாக நீந்திச் சென்றது. சிறிது தூரஞ் சென்றதும் அரக்கன் திரும்பவும் தன் சாட்டையை யொருமுறை வீச, அவன் வாகனம் ஒரே பாய்ச்சலாகத் துள்ளி நடுக்கடலிற் குதித்தது. உடனே பேரலைகள் மலைபோ லெழுந்தன. அவ்விடம் கரையிலிருந்து சுமார் ஒரு மைல் தூர மிருக்கும். அரக்கன் அங்கேயே நின்று திரும்பி, உறக்கத்திலிருந்த என்னை உற்றுநோக்கி, 'நன்றாகத் தூங்கப்பா' என்று சொன்னாற்போ லிருந்தது. பின்பு அவன் சாட்டையை மறுபடியும் சொடுக்கினன். அதன் நுனி என் இடது மார்பில் இதயத்தி னருகே பட்டது. சுறுக்கென்று ஏதோ குத்தினாற்போ லிருந்தது. நான் கதி கலங்கித் திடீரென்று விழித்துக்கொண்டு, கண்களைத் திறந்து பார்க்க,அவ்வளவும் கனவென் றறிந்து சிறிது மனவமைதி யுற்றேன். என்றாலும், நெடுநேரம் என் நெஞ்சு படபடத்தது. என் வயதில் நான் இதுவரை இத்தகைய கனவைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை! பிறகு நான் படுக்கையை விட்டெழுந்து உங்களைப் பார்த்தேன். நீங்களெல்லாரும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தீர்கள். உங்களை அநாவசியமாக எழுப்ப வேண்டாமென்று நினைத்து நான் கோட்டையை விட்டு வெளியே வந்தேன். கடலும் உறங்குவது போல் அமைதியா யிருந்தது. பூர்ண சந்திரன் வெள்ளிமயமான தன் ஒளியை வாரிக் கடலில் இறைத்துக்கொண்டிருந்தான். அத்தோற்றமே என் மனத்திற்கு அமைதியை அளித்தது. அதன் பின்னர் நான் அந்த வெண்ணிலவில் கடற்கரையோரமாக வழக்கம் போல நடக்கலானேன்."

"இந்தக் கனவு நல்லகாலத்திற் கன்று! ஈசனருளால் இன்றைக் கூட்டம் இனிது முடிய வேண்டும். அண்ணு! இன்றைக் கூட்டத்தை நடத்தாமல் நிறுத்திவிட்டா லென்ன? இந்தக் கூட்டத்தால் என்ன பெரிய லாபம் வந்துவிடப்போகிறது?" என்று ஸரஸ்வதி மனங் கசிந்து கூறினாள்.

அதற்கு விடையாகக் கந்தன், "அப்படி யன்று ஸரஸ்வதி! கேவலம் ஒரு கனவுக்காகவா இவ்வளவு தூரம் பகிரங்கப்படுத்திய ஒரு கூட்டத்தை நிறுத்திவிடுவது! அது மிகவும் அவமானத்திற் கிடமாகும். மேலும், நாமெல் லோரும் சேர்ந்து தொடங்கிய முதல் வேலையை இப்படி அரைகுறையாக நிறுத்திவிட்டால், பின்னர் நடக்கவேண் டிய வேலைகளில் மனத்திடங் குன்றிப்போகும். மீண்டும் இத்தகைய கனவுகள் தோன்றிக்கொண்டிருக்கும். ஆத லால் நாம் எடுத்த காரியத்தை விடாது நடத்த வேண்டி யதுதான். ரங்கன் சொல்வதுபோலவே, போலீஸாரும் கலெக்டரும் நமது கூட்டத்தைப் பற்றிக் கவனிக்கவில்லைப் போலிருக்கிறது! ஆகவே கூட்டம்தானே இனிது முடியும். நாட்டுக்காக நாம் செய்யவேண்டியவற்றில் இஃதொரு சிறிய விஷயந்தானே! நாம் இன்னும் மேன்மேலும் செய்ய வேண்டிய முக்கியமான காரியம் கிராமச் சீர்திருத்தம். அதன்பொருட்டு, இக்கூட்டம் முடிந்தவுடன் நாம் ஒரு சரியான திட்டம் போட்டு, அதன்படி காரியங்களைத் தொடங்கவேண்டும்" என்றான்.

ராஜேச்வரி: "ஐந்து வருஷத்திய வேலைத் திட்டத் தை முதலிற் போட்டுக்கொள்வோம்."

கந்தன்: " ஆம். அப்படியே செய்வோம். ராஜியின் மனமும் என் மனமும் இவ்விஷயத்தில் ஒத்திருக்கின்றன. நீ என்ன சொல்லுகிறாய் ரங்கா ?''

" ஆமாம் கந்தா, நீங்கள் சொல்லுவது சரியே. நீ தான் எங்களுக்குத் தலைவன்; எங்களை நடத்துப்பவன். உன் சொற்படியே எல்லாம் நடக்கட்டும். நம்முடைய பாரதத் திருநாட்டை இந்த ஐந்து வருஷங்களுக்குள்ளே யே புதுப்பிக்க வேண்டும்! முப்பத்துமுக்கோடி பாரத மக்களுக்கும் அவரவர் வீட்டு வாசலில் இன்பமும் ஸ்வேச்சையும் மலைச்சாரலில் ஊறும் நல்லூற்றுப் போலச் சுரக்கும்படி நாம் செய்யவேண்டும். அதுவே உண்மைத் தொண்டு. அதுவே நமது கடமை. நாம் சென்று, அதோ அந்த மணல்மேட்டின் கீழே உட்கார்ந்து, மேலே நடக்கவேண்டியவற்றைப் பற்றி விவரமாக ஆலோசிப்போம்'' என்று ரங்கன் தீவிரமான ஒரு புத்துணர்ச்சியுடன் பேசினான்.

ரங்கன் கூறிய அந்த மணல்மேட்டின் மேல் முளைத்துப் படர்ந்திருந்த ' இராவணன் மீசை ' எனப்படும் ஒரு வகைப் பூண்டு காற்றினால் அழகாக அசைந்து கொண்டிருந்தது, நமது பாரத நாட்டுக்குப் புதிய தொருவகையான பச்சைக் கொடி கட்டியது போலிருந்தது. எல்லோரும் குறித்த விடத்தை யடைந்து அமர்ந்தனர். முதலில் கந்தன் பேசத் தொடங்கினான்..

## IV

" ஆமாம் ரங்கா ! 'ஸ்வராஜ்யம், ஸ்வராஜ்யம்' என்று எல்லோரும் சொல்லிக்கொண்டிருக்கிறோம் ! நம் பாரத நாட்டி லுள்ள முப்பத்துமூன்று கோடி மக்களும் தனித்

தனி நன்மையடையாவிடின் அந்த ஸ்வராஜ்யத்தா லென்ன லாபம்? ஒவ்வொருவனும் அவனவன் தகுதிக்கேற்ற பய னைத் தட்டாமல் அடைவதற்குரிய வழிகள் உண்டாக வேண்டாமோ? அவ்வா றுண்டாகாவிடின் ஈசன் அவர் களைப் படைப்பித்ததற்குத்தா னென்ன பயன்? ஒவ்வொரு வரும் அவரவர் தினசரி வாழ்வில் உள்ளும் புறமும் ஒப் பத் திருப்தியடையத்தக்க பலனையன்றோ பெறவேண்டும்? அவ்வாறு பெற்றாலன்றி நம்நாடு செழிப்படைவ தெங் ஙனம்? 'புண்ணியபூமி' என்று வாயாலே பழங்கதைகள் சொல்லுவதிற் பயனென்ன? உண்மையில் உலகம் போற் றத்தக்க புண்ணிய பூமியாக வல்லவோ நம் நாடு ஆக வேண்டும்!"

"ஆமாம் கந்தா! நீ சொல்வது உண்மையே. உண் மையான தேசபக்தர்களும், பெயர் வெளிப்படாத உண் மைத் தொண்டர்களும் நெற்றி வியர்வை நிலத்திற் கொட் டத் தம்மையே அர்ப்பணஞ் செய்து, தம் மனவுறுதி யாகிய நீர்பாய்ச்சி, உழைப்பாகிய எருவிட்டு வளர்த்த திராட்சைத் தோட்டம் போன்ற நம் நாட்டின் சுதந்திரப் பயனை உழைப்பாளிகளான பெரும்பாலோர் அனுபவிக்க வியலாது பட்டினி கிடந்து வருந்த, பேருக்கு மாத்திரம் கனவான்களென்று வழங்கப்படுகிற ஜமீன்தார்கள், வியா பாரிகள், வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்குபவர்கள் முதலிய சிலர் அனுபவிப்பது எவ்வளவு கொடுமை! தேனீக்கள் போலக் கோடிக்கணக்கான ஏழைகள் உழைத் தீட்டிய பொருளின் பயனை அவர்க ளடையாவண்ணம் மேற்கூறிய கனவான்கள் கைப்பற்றுவதை முதலில் தவிர்க்கவேண்டும். உண்மையான குடியரசின் தன்மை,

அவரவர் உழைப்பின் பலனை அவரவர் அனுபவிக்கச் செய்வதன்றோ?"

இதைக் கேட்ட ராஜேச்வரி கண்களில் நீர்ததும்ப மனத்தெழுந்த வுணர்ச்சியுடன் பரவசமாகிப் பேசலுற்றாள்:—"ஆமாம் ரங்கா! நாம் லண்டனி லிருக்கும்பொழுதே இவ்வாறு நீ ஏழைகளுக்காகப் பரிந்து பேசுவதைப் பல முறை நான் கேட்டிருக்கிறேன். நீ சொல்வன முற்றிலும் உண்மையே. கோடிக் கணக்கான மக்களுக்குச் சோற்றுக்கில்லாக் குறையே நம் நாட்டுப் பெருங்குறையாகும்! நாட்டில் பாலும் பழமும் அளவின்றிக் கிடைப்பினும், ஏழைகளுக்கு அதிற் சிறிதும் பங்கில்லை. நம் நாட்டு முப்பத்துமூன்று கோடி மக்களும் ஈசன் அளித்த செல்வமாயிருக்க, அச்செல்வத்தைப் பயன்படுத்த வழியறியாமல் எல்லாவற்றையும் வீணிலே பாழாக்குகிறோம். ஆடிக் காற்றில் ஆலிலைகள் பறந்து சாலையோரத்திற் கிடந்து மண்ணோடு மண்ணாக மடிவதுபோல நம் நாட்டு மக்கள் பெரும்பாலோர் மடிகின்றனர். விழலுக் கிறைத்த நீர் போலாகும் அவர்களுழைப்பை வயலுக் கிறைத்த நீர்போலப் பயன்படும் வண்ணம் செய்யவல்லது ஸ்வராஜ்யமே!"

இதைக் கேட்ட ரங்கனும் மிக்க மனவுணர்ச்சியுடன் பேசுகின்றான்:—"கந்தா, ராஜி சொல்வதுபோல எல்லாம் ஆணலன்றி நம் நாட்டில் அமைதி மீளக் குடிபுகாது. நம் நாட்டைக் கெடுப்பன நம் சில்லறைச் சச்சரவுகள் மட்டுமல்ல. சில உரிமை முறைகளி லுள்ள குறைகளும் நாட்டின் கேட்டுக்கு முக்கிய காரணமாகின்றன. கதிரவனொளி போல எங்கும் ஒரே விதமாகப் பரவவேண்டிய கமலையி

ளுருளை நாம் இருட்டறை போன்ற சில்விடங்களில் அடைத்துவிடுகிறோம். உழைப்பின் பயன் ஓரிடத்திற் போய்த்தேங்க, அதனை யனுபவிப்போ ரொருவராக, உண்மையி லுழைத்தோர் ஒன்றுமற்றுத் திண்டாடுகின்றனர். சேற்றிற் பாடுபடும் கைகள் எந்நாளும் கூலிக்குழைக்கும் கைகளாகவே யிருந்து, கூழ் காய்ச்சிக் குடிக்கின்றனவே யன்றி அவற்றிற்கு ஒன்றும் நன்மையில்லை. அக்கைகள் பாடுபட்டுச் சேகரிக்கும் தானியங்களும் அவற்றைப் போஷிப்பதற்கின்றிப் பாடில்லாத பிறருடைய ஆடம்பரச் செலவுகளுக்குப் போய்ச் சேருகின்றன. நம் நாட்டில் பருத்தி விளையும் நிலம் ஆயிரக்கணக்கான ஏக்கர்க ளிருந்தாலும் அதனால் ஏழைகளுக் கேதேனும் இலாபமுண்டோ? அப்பருத்தியை விளைத்துப் பயனுண்டாக்கும் பேதை ஏழைமக்களுக்கு உடுக்க நல்ல துணியும் இருக்க நல்ல இடமும் உண்டோ? அவர்கள் வீட்டிற் குழந்தைகள் பசி விஞ்சி யழுங் கண்ணீரைத் துடைப்பதற் கொரு கந்தைகூடக் கிடைப்பதரிது! கந்தா! ஒருவனுக்காக மற்றொருவன் கூலிக்குப் பாடுபடுவது இம்மக்கட் பிறப்பிற் பேரநியாயமாகும்! இவ்வுப்புநீர் வெள்ளமே நம்நாட்டு வளப்பத்தை யொழித்துவிடுகிறது! இதனாலேயே நாம் சுவேச்சை என்னும் தேவாமுதத்தை வெளியிலும் உண்மைப் பயனிலும் இழந்து நிர்க்கதியாக நிற்கிறோம்!"

ரங்கன் இவ்வாறு உண்மை யுணர்ச்சியுடன் மனமுருகிப் பேசிய பேச்சைக் கேட்டு ராஜேச்வரி மிக்க ஆனந்தங் கொண்டு, "ரங்கா! நீ சொல்வதுண்மையே; இமயத்தின் உயர் சிகரம்போற் சிறந்த உத்தமர் நம் நாட்டில் எப்பொழுதோ—ஒரு நூற்றுண்டுக் கொருமுறை—உதித்தா

லும் நம் நிலையின் சாதாரண உயரம் மிகத் தாழ்ந்ததே யன்றோ?'' என்றாள்.

ரங்கன்: "ஆமாம் ராஜி! நமக்குச் சுறுசுறுப்புக் கிடையாது; செயலில் திறமையை வெளிப்படுத்தும் ஊக்கமுங் கிடையாது. இவை கூடியிருந்தாலன்றோ நம்முடைய வாழ்வுக்கு மேன்மையுண்டாகும்? இன்னும் நமக்குள் இளைஞருக்கும் முதியோருக்கும் ஒன்றுபட்ட வுணர்ச்சியில்லை. ஒரு நந்தவனத்துள் எத்தனைவகைப் பூக்களிருப்பினும், நாரின்றி அவற்றை ஈசனுக் கினியதொரு மாலையாகத் தொடுக்க வியலாததுபோல ஒற்றுமையின்றி ஒன்றும் நடவாது. கந்தா! உன் கொள்கையே சரியானது. அதனுண்மையை இப்பொழுது நானும் உணர்ந்து, அவ்வழிக்குத் திரும்பிவிட்டேன். வெறும் வாய்ப்பேச்சால் ஒன்றும் நடவாது! எறும்பூரக் கல்லுந் தேய்வதுபோலச் சிறிது சிறிதாகவேனும் செயலாலேதான் ஒரு நாடு சிறப்படையும். பெரியோர்கள் கூறுவதுபோலக் கர்ம பூமியாகிய இப்பூவுலகத்தில் எல்லாம் காரியத்தினாலேதான் முடியும். அதுவும் பல பிறப்புக்களில் உழைத்துக் கடைத்தேறவேண்டும். மனச்சாட்சிக்கு மாறின்றி வாழவேண்டுமாயின், நாம் பொது நலத்திற்கே பாடுபட்டுத் தீரவேண்டும். இந்தக் கிளர்ச்சிக் காலத்தில், நாம் சமயத்தைக் கைவிடாது, இக்கிளர்ச்சியாகிய பாற்கடலில் நம் உழைப்பாகிய மத்தை யிட்டுக் கடைந்து அதன்பயனை மேலெழும் சுவேச்சை யென்னும் அமுதத்தைத் தடையின்றித் துய்க்கவேண்டும்.''

இதனைக் கேட்ட கந்தன் தலையசைத்து ஆமோதித்து உற்சாகத்துடன் கூறலானான்:—

"நாம் நமது பாரத நாட்டைப் புதுப்பிக்க, முதலில், பழைய வெண்ணெயில் உண்டாகும் புழுக்கள் போன்றவர்களாகிய இந்த 'அரசியல் தரகர்கள்' மேன்மேலும் உண்டாகாதபடி அடியோடு தடுக்கவேண்டும். இத்தரகருடைய வியர்பாரங்களாலேதான் ஆயிரம் பொன் பெறும்படியான நம் உரிமைகளை அரைக்காசுக்கு விற்றுவிட நேருகிறது. கோழைத்தனமும் கொடுமையும் பூண்டற்றுப் போனலன்றி நம் நாடு உண்மையன்பென்னும் அருங்குணம் நிறைந்த புண்ணிய பூமி யாகாது. இப்பொழுது நாடுள்ள நிலைமையில் நமக்கு ஸ்வராஜ்யங் கிடைப்பது பெரிய காரியமன்று. மழைக்காலத்தில் மேகங்கள் கூடி நின்றால் மழை பெய்வதில் ஐயமுண்டோ? அதுபோல நமக்குக் கிடைப்பது நிச்சயம். ஆனால், அது கிடைத்த பின் நாம் அதை எவ்வாறு வளர்ப்போ மென்பதுதான் முக்கியமான விஷயம். நம்முடைய புது முறை வாழ்வின் சிறப்புக்கு அறிகுறி நம் நாட்டு முப்பத்துமூன்று கோடி மக்களும் சுவேச்சை பெற்று வாழ்வதாகும். அவ்வாழ்வு கிடைக்கச் செய்வதே நம்முடைய செய்கைக்கு ஓர் அளவு கோலாகும். தடியூன்றிப் பிச்சையெடுத்துச் செல்லும் ஒரு பேதைக் குருடனுக்குங் கூட 'சுவேச்சையிற் பங்கு உனக்கும் உண்டப்பா; கவலைப்படாதே!' என்று கூறத்தக்க புத்தியையும் நிலைமையையும் ஈசன் நமக் கருளவேண்டும்."

ரங்கன்: "கந்தா! நீ சொல்வது, நிலம் விலைக்கு வாங்குமுன் அதில் பழத்தோட்டம் எங்கே எப்படி அமைப்பதென்று திட்டம் போடுவதுபோலிருக்கிறதே! ஸ்வராஜ்யம் கிடைத்துவிட்டதுபோலப் பேசுகிறாயே!"

கந்தன்: "நிலத்தை விலைக்கு வாங்குவானேன்? 'அது நம்முடையது' என்று உனக்குத் தெரிந்தபொழுதே அது நம்முடையதுதானே! இவ்வாறு நாடு முழுதும் ஒருங்கே ஒருநிமிஷம் நினைத்தாற் போதுமே! மேலும் ஒரு நாடு முழுவதும் வறண்டு வருந்திக் கேட்கும் வரனை எவர் தான் அளிக்காம லிருக்க முடியும்? ஒரு நாட்டின் சுதந்திரக் கிளர்ச்சியானது புயலாற் கொந்தளிக்கும் கடல் போன்றது. கடல் பொங்கினால் தடையுமுண்டோ? அத்தகைய காலத்தைக் கைசோர விடாமல் நாம் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். காற்று அனுகூலமா யடிக்கும் பொழுது மாலுமியானவன் பாய்விரித்துக் கண் காணிப்புட னிருக்கவேண்டு மன்றோ? முப்பத்துமூன்று கோடி மக்களையும் ஒன்று சேர்த்து வடம்பிடிக்கச் செய்தா லன்றி நமது பாரத நாட்டு அரசியல் எனும் தேர் எளிதில் நடாத்தக் கூடியதன்று. நமக்கு இது வரை அரசியல் துறைகளில் ஊக்கமே யில்லை; பக்தி மார்க்கத்திலும், வேதாந்த விசாரத்திலுமே நாம் மனத்தைச் செலுத்தினோம். இப்பொழுதுதான் அரசியலிலும் மனத்தைச் செலுத்தி, அங்கங்கே குட்டையாய்த் தேங்கி நிற்கும் சுதந்திர ஊக்கமாகிய நீரைப் பேராறுகப் பெருகச் செய்ய முயலுகிறோம். இவ்வாறு செய்வதற்கு, ராஜ்ய தந்திர முறையையே வேறு உன்னத நிலைக்கு மாற்ற வேண்டியிருக்கிறது."

ராஜேசுவரி: "கந்தா! உன்னத நிலைக்கு மாற்றுவதென்றால் என்ன? எனக்குத் தெளிவாக விளங்கவில்லையே!"

கந்தன்: "நம்முடைய சாஸ்திரங்கள் கூறுகிறபடி, கர்மாவைக் காமியமாகச் செய்யாமல் நிஷ்காமியமாகச்

செய்வதுதான். அதுவே தீமைகளைப் போக்கி, உண்மை யான பயனையும் கெடாத வின்பத்தையு மளிக்கும்! நாட் டில் விளையும் நவதானியங்களும் அவரவருழைப்புக்கும் தேவைக்கும் தக்கவாறு எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும். யாவர்க்கும் தாயகமாம் பூமிதேவி யளிக் கும் நற்பயனைச் சிலர் அடையவும் பலர் பட்டினியால் வாடவும் இடந்தருகின்ற பொருள் நூலை (அர்த்த சாஸ்தி ரத்தை) தீயிலிட் டெரித்துவிடவேண்டும்!"

ராஜேச்வரி: "கந்தா! என்ன நீயும் ரங்கனைப்போல் வாயாற் பொழிய ஆரம்பித்துவிட்டாயே! நீ கூறிய சுவை யோடு கூடிய மொழிகளைக் காரியத்திற் செய்து காட்டுவ தெப்படி? இப்பொழு துள்ள அரசியல் கோலாகலத்தில் நாம் செய்யவேண்டிய தென்ன?"

கந்தன்: "அரசியலென்பது என்ன ராஜி? மக்கள் மேனிலை யடையச் சாதகமான ஓரேணிதானே! மூடர்கள் அவ்வேணிமீது முற்றும் ஏறுமல் அதன் உயரத்தைக் கண்டு களித்தும் பிரமித்தும் அதன் முதற்படியிலேயே நின்றுவிடுகிறார்கள்! இந்த ஏணியைச் சரிவர அமைப்ப தற்குக் கண்டவர்களைக் கூப்பிடுவதிற் பயனில்லை. 'தனது' என்ற நினைவற்ற ஒரு கூட்டத்தைச் சந்நியாசிகளே இதன் பொருட்டுக் கூட்டுவிக்கவேண்டும். அக்கூட்டத் தாருடைய உள்ளத்திலே 'தொண்டு' என்பது பூவில் தேன்போலத் தானுகவே அமைந்திருக்க வேண்டும். மகாத்மா காந்தி போன்ற மகான்கள் இத்தேயத்தின் எழுலட்சங் கிராமங்களிலும் கிராமத்திற் கொருவராவது தோன்றி விளங்கவேண்டும். அப்பொழுதுதான் நம் நாடு முழுதும் சீர்திருத்த மடையும்."

ஸரஸ்வதி: "நம் ஆக்கூரில் கந்தன் போலவே எங்கும் பல கந்தர்கள் தோன்றவேண்டும்."

இதுவரை ஒன்றும் பேசாது, இவற்றையெல்லாம் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த சொக்கலிங்க முதலியார், "கந்தா, அதுவே சரி! நாம் முதலில் நமது கிராமத்தி லிருந்தே சீர்திருத்தத்தை ஆரம்பிப்போம். இனி ஆக்கூர் என்னுடைய தன்று, உன்னுடையதே; உலகத்திற்கே யுரியது!" என்று மனக்கிளர்ச்சியுடன் கூறினர்.

கந்தன்: "சொக்கலிங்கம்! உன் வாய்ச்சொல்லே உயர்ந்தது! அதன்படியே நாம் கூடி உழைப்போம். இன்று மாலைக் கூட்டம் முடிந்தவுடன் நமது வேலையைத் தொடங்கி, ஆக்கூரை உலகத்திற்கே ஓர் எடுத்துக் காட்டாகச் செய்வோம். உனது தென்னந் தோப்பில் கள்ளுக்கடை யிருந்த விடத்திலேயே ஓர் ஆச்சிரமத்தை அமைப்போம். அதிலிருந்து தொடங்கி நம் பாரதநாட்டு ஏழுலட்சங் கிராமங்களையும் திருத்திக் குறைவற்ற நிலைக்குக் கொண்டுவருவோம். நவீன நாகரிகத்தால் உண்டாகும் சிறந்த வெளியின்பங்களும், நமது பழைய நாகரிகத்தா லுண்டாகும் உயர்ந்த உண்மை யின்பங்களுங் கலந்து விளங்குங் காட்சிச்சாலைகளாகக் கிராமங்களைச் செய்வோம்!"

இவ்வாறு பேசிய கந்தன் சற்றுப் பேச்சை நிறுத்திக் கையால் மண்லே வாரிச் சிதறிக்கொண்டு ஒரு நிமிஷம் ஏதோ ஆலோசித்து, மறுபடியும் பேசலானன்:—

"தான், தன்து என்ற நினைவுகளற்றுத் திவ்விய கைங்கரியம் செய்யவேண்டுமாயின் அதற்குச் சிறந்த ஒரே வழி

பிரம்மசரியமே. ராஜி! பிரம்மசரியமின்றிப் பெருஞ் செயல்களொன்றுஞ் செய்து முடிக்க வியலாதென்று இக் கடற்கரையிலேயே ஒருச்சமயம் நீயே எனக்குச் சொல்லி யிருக்கிறாய்! புலனடக்கத்தாலேதான் சிற்றின்ப வேகத் தைப் பேரின்ப வொளியாக மாற்றிச் சிறிது சிறிதாக ஆன்மஞானத்தைப் பெறலாம். ஆதலால், நமக்குச் சுவ ராச்சியங் கிடைக்கும் வரை நாமெல்லோரும் பிரம்மசரிய விரதத்தைக் கைக்கொண்டால்தான் நாட்டுத் தொண்டை நலமுற நடத்தலாம். நம் கடமையை நாம் சரிவரச் செய் தால், அதன்பயனை ஈசன் பார்த்துக்கொள்ளுவார். தோட்டக்காரர் அவரேயன்றி நாமன்று!"

கந்தன் இவ்வாறு பேசி முடித்தான். ஒரு நிமிஷ நேரம் எல்லோரும் வாய்திறவாமல் கந்தன் முகத்தையே பார்த்தனர். அவன் முகத்தில் ஒரு புத்தொளி வீசியது.

கொந்தளித்தெழுந்த கடலும் சிறிது பின்வாங்கத் தொடங்கிற்று. ஆற்றில் எதிர்த்து மேல்நோக்கிச் சென்ற கட்டையும் திரும்பி மிதந்து வந்து சங்கமுகத் தருகில் புக்ககம் போகும் புதுப்பெண் போலத் தயங்கித் தயங்கி நின்றது.

## V

பொன்னன் மிக விரைவாக இவர்க ளிருக்குமிடம் நோக்கி ஓடிவந்தான். அவனைப் பார்க்கும்பொழுது அவன் ஏதோ வொரு பெரிய அபாயத்தைத் தெரிவிக்க வந்தவ னென்று தெளிவாகப் புலப்பட்டது. இல்லாவிடின் பொன் னனா அந்தப் பொதி மணலில் ஓடி வருபவன்!

"யஜமான்! முந்நூறு மலபார் போலீஸ் வீரர்கள் உருவின கத்தியுடன் வந்து கோட்டையைப் பிடித்துக் கொண்டுவிட்டார்கள்! நம் சாமான்களை யெல்லாம் வாரி வெளியே யெறிந்துவிட்டார்கள்! நமது கூட்டத்திற்கும் தடையுத்தரவு போடப்போகிறார்களாம்!"

"இன்னும் ஏதேனும் விசேஷமுண்டோ பொன்னு?" என்று கந்தன் பரபரப்புடன் கேட்டான். ரங்கனுக்கு நெஞ்சம் படபடவென்று துடித்தது.

"ஆனால் யஜமான், இதற்குள் ஆயிரம் பேர் கூடிவிட்டார்கள்! நந்தன், மூக்கன், காட்டேரி முதலாகிய நம் முதலியார் பண்ணையாட்க ளெல்லாரும் வந்துவிட்டார்கள். நல்லானும் கரியனும் அவர்களைத் திரட்டிச் சிப்பாய்கள் போலப் பழக்கித் தடிகளுடன் கொண்டுவந்திருக்கிறார்கள்."

இதைக் கேட்ட ஸரஸ்வதி "சரிதான்; நான் பயப்பட்டபடி எல்லாம் பெருங் கலகமாகத்தான் முடியும்போலிருக்கிறது!" என்று தாழ்ந்த குரலில் அச்சந் தோன்றக் கூறினாள்.

ரங்கன்: "பயப்படாதே, ஸரஸு! நான் பார்த்துக் கொள்கிறேன் எல்லாவற்றையும். போலீஸ்காரர்களுக்குத் தரங்கம்பாடிக் கடற்கரையில் வந்து கொஞ்சம் காற்று வாங்க வேண்டுமென்ற ஆசை யிருந்ததுபோ லிருக்கிறது. என் பேரைச் சொல்லிக்கொண்டாவது அவர்கள் இங்கே வந்து பிழைத்துப்போகட்டும்!"

முதலியாருக்கோ கோபம் பொங்கி யெழுந்தது. போலீஸார் செய்கை தனக்கே ஒரு பெரிய அவமானகர

மானென்று நினைத்தார். கோபத்தாற் கண்கள் சிவக்க, உதடுகள் துடித்தன. கந்தன் அவரைச் சாந்தப்படுத்தினான். எல்லாரும் கவலையுடன் கலந்து கோட்டையை நாடிச் சென்றனர்.

கந்தன் கடலை உற்றுப் பார்த்தவண்ணம் சற்றே நின்றான். அந்த நீலக் கடலின் அலைத்தொகுதிகளுக்கிடையே கதிரவனொளி பளபளவென்று ஜ்வலித்துக் கொண்டிருந்தது. அந்த மரக்கட்டையும் ஒவ்வோரலையாக அலட்சியமாய்த் தாண்டிக்கொண்டு கரையோரமாக வந்தது. அதைப் பார்க்கும்போது, அதுவும் ரங்கனுடைய கூட்டத்தைக் காண வருவது போலத் தோன்றிற்று.

## அத்தியாயம்—16

### காலத்தின் கோலம்

### I

உருவினகத்தியும், ஊன்றிய துப்பாக்கியும், முறுக்கிய மீசையுமாகச் சிங்கக் குட்டிபோல் ஒரு சிப்பாய் கோட்டை வாயிலில் நின்றான். பாழடைந்திருந்த அக்கோட்டையும் அப்பொழுதுதான் கலகலப்பாகக் காணப்பட்டது.

தஞ்சையிலிருந்து நேரே அறுபது மைல், புழுதியும் மேடு பள்ளமும் மிக்க சாலையிலே, பழைய 'போர்டு' மோட்டார்காரில் சவாரி வந்த சிரமம் தாங்காமல், ஜில்லா போலீஸ் ஸுபரின்டென்டெண்ட் துரை (டி. எஸ். பி.)

ஒரு சாய்வுநாற்காலியில் 'அப்பாடா' என்று சாய்ந்து, குளிர்ந்த கடற்காற்றைத் திறந்த வாயுடன் வாங்கி அனுபவித்துக்கொண்டிருந்தார். டிப்டி சூபரின்டெண்டெண்டு, இன்ஸ்பெக்டர், ஸப் இன்ஸ்பெக்டர் முதலியவர்கள் அவரவர் தகுதிக்கேற்றபடி வரிசையாக நின்றார்கள்.

கான்பகதூர் மீரா சாகிப் (டிப்டி சூபரின்டெண்டெண்ட்) தன் நீண்ட மூக்கும், படர்ந்த முகமும், கறுத்த தாடியுமாகக் கம்பீரமாய் நின்றார். அவுரங்கசீப் காலத்தில் செஞ்சிக்கோட்டை முற்றுகை நடந்தபொழுது இவருடைய முன்னோர்களி லொருவர் திறமையுடன் போர் செய்து பேரும் ஜாகீரும் பெற்றிருந்தமையால், அஃது இப்பொழுது நம்சாகிபுக்குப் பேருதவியா யிருந்தது. ராவ்பகதூர் வேதகிரி ஐயர், சற்று வாடிக் கறுத்திருந்தார். ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் ராவ்ஸாகிப் இரத்தினம் பிள்ளையும் உல்லாசமாகப் பக்கத்தில் நின்றார். அவர் வாலிபராயினும் அதிருஷ்ட வசத்தால் விரைவில் இந்த உயர்பதவிக்கு வந்துவிட்டார். அழகாகப் புரளும் அவருடைய விழிகளைப் பார்த்தாலே அவர் பெரிய போலீஸ் உத்தியோகஸ்தரென்று முழு மூடனும் சொல்லி விடுவான். ஒருவேளை அது தவறினாலும், கறுகறுவென்று கறுத்தோங்கி ஆற்றுப்படுகையி லுள்ள செழித்த நாணல் போல நிற்கும் அவருடைய மீசையைப் பார்த்துவிட்டால் அவர் போலீஸ் உத்தியோகஸ்த ரில்லையென்றொருவருஞ் சொல்லமுடியாது.

## II

"கான் பகதூர்! நீர் என்ன நினைக்கிறீர்? முதலியார் பாலியம். தன் பரம்பரை அந்தஸ்தையும் மறந்து

மிகவும் சிறுபிள்ளைத்தனமாக வியாபாரம் பண்ணி விட்டார். அவர் இந்த வேலையில் போய் அகப்பட்டுக்கொண்டது பெரிய முட்டாள்தனம். அவருடைய செல்வத்துக்கும் சரீரத்துக்கும் தகுந்தபடி அவ்வளவு புத்தி அவருக்கில்லை. அது போகட்டும். இங்கே யேன் இவ்வளவு கூட்டம்? ரங்கஸாமி இங்கிலீஷி லல்லவோ பேசப் போகிருனும்? தன் தாய்ப்பாஷை-தமிழ்-அவ்வளவு நன்ருகத் தெரியாதாமே அவனுக்கு! இந்தச் சந்தைக் கூட்டத்தில் இங்கிலீஷ் தெரிந்தவர்களே இல்லைப்போலிருக்கிறதே! முதலியாருக்குக்கூட இங்கிலீஷ் நன்ருக எழுதப் படிக்கத் தெரியாதாம்!'' என்று டி. எஸ். பி. உல்லாசமாக அடிக்கடி நாக்கைத் துழாவிக்கொண்டு பேசினர்.

''இதெல்லாம் வெறும் ஆடம்பரச் சந்தைக் கூட்டம் ஸார்! அவர்கள் 'தத்துப்பித்' தென்று ஏதேனும் இரண்டு உளற ஆரம்பித்தால் கூட்டம் தானே கலைந்துவிடும்! நாம் இதைக் காதிலேயே போட்டுக்கொண்டிருக்க வேண்டியதில்லை. தாங்கள் இதற்காகச் சிரமப்பட்டுக்கொண்டு இவ்வளவு தூரம் நேரில் வந்திருக்கவேண்டிய அவசியமும் இல்லை. நானே பார்த்துக்கொண்டிருப்பேன்! என் ஹெட் கான்ஸ்டேபிள் தாண்டவராயன், பத்துக் கான்ஸ்டேபிள்களை வைத்துக்கொண்டு தானே சமாளித்துக்கொள்வேனென்கிருன்!'' என்று கான்பகதூர் மிகவும் தைரியசாலி போலத் தன் அரைகுறை இங்கிலீஷில் தாராளமாகப் பேசினர். மேலும் தரங்கம்பாடி அவருடைய பொறுப்புக்குட்பட்டது மாகும். கான்பகதூரின் அபிப்பிராயம் ஒருவேளை சரியாயிருக்கலாமோவென்று டி. எஸ். பி. க்கும் பட்டது.

"என் நண்பர் கான்பகதூர் சொல்வதை நான் ஒத்துக் கொள்ளவில்லை. நான் இந்தத் தாலுகாவிலேயே பிறந்து வளர்ந்தவன். இந்த முதலியாருடைய பண்ணையாட்கள் மிகப் பொல்லாதவர்கள். கொள்ளை, கொலை ஒன்றுக்கும் அஞ்சமாட்டார்கள். முதலியாரும் பார்வைக்கு அடக்கமாயிருக்கிறரே யொழிய, கோபம் வந்துவிட்டால் ஒன்றுக்கும் அடங்கமாட்டார். எல்லாவற்றையும் ஒரு நொடியில் எரித்துவிடுவார். இந்தத் தாலுகாவில் அவரிட்டது தான் சட்டம். அவருக்கு மிஞ்சி ஒருவரும் ஒன்றுஞ் செய்ய முடியாது. அவருடைய ஆட்களோ சென்ற வாரந் தான் தங்கள் யஜமானுடைய நெற்களஞ்சியத்தையே சூறையாடிவிட்டார்கள்! இருபதினுயிரங் கல நெல்லை ஒரே இரவிற் கொள்ளையிடுவதென்ருல் அவர்கள் எப்படியிருக்க வேண்டுமோ தாங்களே பார்த்துக்கொள்ளுங்கள்! தாங்கள் செய்ததுதான் சரி. இன்னும் என்னைக் கேட்டால் மூந்நூறுக்கு ஐந்நூருக ரிஸர்வ் போலீஸ் வந்திருந்தாலும் ஸௌகரியந்தான்; சந்தேகமேயில்லை!" என்று வேதகிரி ஐயர், கான்பகதூருக்கு விரோதமாக அழுத்தமாயும், அடக்க ஒடுக்கத்துடனும் கூறினர்.

"மிஸ்டர் வேதகிரி! நீர் சொல்வது பெரும்பாலும் சரியே; சந்தேகமில்லை. இந்த விஷயங்களில் முன் ஜாக்கிரதையுட னிருப்பதனல் நஷ்டமில்லை. எதிலும் முற்கோலிக் கொள்வதுதான் நமக் கழகு. கான்பகதூர்! வேதகிரி பழைய பெருச்சாளி யென்பது உமக்குந் தெரியுமே? நம் இலாகாவில் 'குள்ளநரி' யென்றல்லவோ செல்லப் பெயர் அவருக்கு? (வேதகிரி ஐயருக்குப் போலீஸ் இலாகாவில் 'குள்ள நரி வேதகிரி' என்ற பேர் பிரசித்தம். அது அவர்

ராவ்பகதூர் வேதகிரி போன பின்புதான் கொஞ்சம் மறைய லாயிற்று.)

ராவ் ஸாகிப் இரத்தினம் பிள்ளையைப் பற்றிக் கேட்க வே வேண்டாம். அவர், சர்க்காருக்குப் போலீஸ் தொட்டி லில் வளர்ந்த செல்லப்பிள்ளை. பாவம்! அவர் இந்த நெருக் கடியான நிலையில் விசேஷமாக ஒன்றுஞ் செய்யத் திறமை யற்றவராதலால், தன் கைக்கு எகப்பட்ட மீசையை அழ காக முறுக்கி உருட்டித் திரட்டி ஈட்டி முனைபோல் கூராக் கிக்கொண்டும், கண்டோர் வெருளும்படி கண்களை யுருட் டிப் பார்த்துக்கொண்டும் விறைத்து நின்றார். தான் திரு நெல்வேலிக்கார ராகையாலும், மாயவரத்திற்குப் புதிதாக அப்பொழுதுதான் மாற்றப்பட் டிருப்பதாலும் இந்த நாட்டு இயல்பு தெரியாமல் தான் ஒன்றும் செய்வதற் கில்லையென்று சொல்லிக்கொண்டார். ஆனால் துப்பாக்கி கையி லுள்ளபோது நாட்டியல்பு தெரிந்தா லென்ன, தெரியாவிட்டாலென்ன? அவர் மீசையை முறுக்கினாலே போதாதா? எல்லாரும் நடுங்குவார்கள்! வேதகிரிபோல வாயாற் பேசிப் பயனென்ன? காரியத்திலல்லவோ காட்ட வேண்டும்!

டி. எஸ். பி. சற்றே எழுந்து நின்று சுற்றிலும் ஒரு முறை பார்த்து, தன் புடைகள் சட்டைப் பொத்தான், அரைப்பட்டை முகப்பு முதலிய சாமான்களைச் சிறிதும் மாசின்றிப் பளபள வென்று பொன்போலப் பிரகாசிக் கும்படி விளக்கி வைத்துக்கொண்டு தயாரா யிருப்பதைக் கண்டு களித்து, முடிவான தன் அபிப்பிராயத்தைச் சொல்லலானார்:

"கான்பகதூர் ! எப்படி யிருந்தாலும், நாம் முற்கோலிக்கொண்டுவிட்டபடியால் பயமில்லை. ஆனாலும் கையில் பலமிருக்கிறதென்று முரட்டுத்தனமாய்த் தாக்கி வீண் கஷ்டம் வரவழைத்துக்கொள்ள வேண்டாம். கூட்டத்திற்கு '144' உத்தரவு போட்டிருக்கிறது. டிப்டி கலெக்டரும் இன்னும் கால்மணி நேரத்தில் இவ்விடம் வந்துவிடுவார். அவர் இப்பொழுது ஆக்கூர் கலெக்டர் முகாமில் கலெக்டருடைய உத்தரவை யெதிர்பார்த்து நிற்கிறார் !"

இவ்வாறு பேசிக்கொண்டே டி. எஸ். பி. கடலையும் மைதானத்தையும் பார்த்தார். மைதானத்திற் கூடியுள்ள ஜனங்களின் இரைச்சல் கடலோசையினும் மிகுதியாகிவிட்டது. அதைக் கண்டு, "நீங்கள் ஒரு பெரிய தவறுசெய்துவிட்டீர்கள் ! காலையில் வந்தவுடனேயே வெளிவாயிலில் நாலு சிப்பாய்களைப் போட்டு, கோட்டைக்குள்ளே கூட்டம் வரவொட்டாமலே செய்திருக்க வேண்டும். அப்படியானல் ஒரு கஷ்டமும் நேர்ந்திராது. போனது போகட்டும். இனிமேலாவது மேற்கொண்டு ஒருவரும் வராதபடி வெளிவாயிலில் ஒரு சிப்பாய்த் தொகுதியைக் காவல் போட்டுவிடுங்கள் !" என்றார்.

"நான் காலையிலேயே அப்படித்தான் சொன்னேன் ; கான்பகதூர் என் வார்த்தையை யெடுத்துக்கொள்ளவில்லை !" என்று வேதகிரி ஐயர் மெதுவாக வர்த்தி வைத்தார். ஆனாலும் மகம்மதியக் கோட்டைக்கு இவர் வர்த்தி வெடிமருந்தாகுமா ? அது ஆகாய வாணமாய்த்தான் புகைந்து கரியாகிவிட்டது. மீரா சாகிப் உருத்து வேதகிரியை ஒரு பார்வை பார்த்தார். அந்தப் பார்வையில்

வெறுப்பு அப்படியே குடிகொண்டிருந்தது. காறித் துப் பாததுதான் குறை !

"போனது போகட்டும்! உங்களுக்குள்ளே கிளறி விட்டுக்கொள்ளாமல் இப்பொழுது நான் சொன்னபடி செய்யுங்கள்! இந்த அறுபது மைல் ஒரே மூச்சில் வந்தது கொஞ்சம் சிரமமா யிருக்கிறது; நான் சற்றே உறங் கச் செல்லுகிறேன். இந்த வெயிலுக்கும் காற்றுக்கும் கொஞ்சந் தூக்கம் போட்டால்தான் சௌகரியமாயிருக் கும்! கூட்டம் ஐந்து மணிக்கோ? அநேகமாய் அது நடைபெறுதென்றே நம்புகிறேன். ரங்கசாமி கெட்டிக் காரனுனல் நமக்கு வீண்சிரமம் கொடுக்கமாட்டான்!" என்று கூறி இருவர் முகத்தையும் பார்த்தார் டி. எஸ். பி.

"ஆஹா! நாங்கள் கவனித்துக்கொள்கிறோம். இந்த வெயிலில் தாங்கள் சிரமப்படவேண்டாம்!" என்று ராவ் பகதூர் வேதகிரி இனிமையாய்ப் பதில் கூறினர். 'இதுதான் சமயம்; சரியான வேலை செய்தால் டி. எஸ். பி. ஸ்தானம் காலியானவுடன் நமக்குப் பிரமோஷன் நிச்சயம்' என்று மனத்தில் தீர்மானஞ் செய்துகொண்டார்.

கான்பகதூருக்கும் அன்று விருந்து பலம். அவரும் பாவம், வஞ்சனையின்றி விருந்தை ஒரு கை பார்த்திருந் தார். ஆதலால் கொஞ்சம் அயர்ச்சியாய்த்தா னிருந்தது. ஆகவே அவரும் கொஞ்ச நேரம் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்து பிறகு தூங்கப் போய்விட்டார். அதுவும் வேதகிரியின் அதிர்ஷ்டந்தான். அவர் தமதிஷ்டப்படி தம் திறமையைக் காட்டி வேட்டையாடுவதற் கிடங் கிடைத்தது.

இதுதான் சமயமென்று வேதகிரிஐயர் தம் சிவப்புத் தலைப்பாகையுடன் வெயிலில் அங்கு மிங்கும் திரிந்து, அட்டகாசம் செய்து, போலீஸ்காரர்களை அங்கங்கே நிறுத்திக் கூட்டத்தைப் பிரம்பு முனையால் தட்டி விலக்கவே, கூட்டத்தினர்க்குக் கோபம் சிறிது சிறிதாக மிகலாயிற்று. அவர்கள் முணுமுணுக்கத் தொடங்கினர். ஆனால் வேதகிரி ஐயர் அதை லட்சியம் பண்ணவில்லை. கையில் தடிகளுடன் நின்றிருந்த நந்தன், மூக்கன், காட்டேரி முதலியவர்களுக்குக் கோபம் விஞ்ச, அவர்கள் கைகளும் துறுதுறுத்தன. தரங்கம்பாடியில் இடிந்த வீட்டுக்கும், கற்குவியலுக்கும் குறைவில்லை. மூக்கன் முதலியோருடைய கண்கள் பக்கத்திலிருந்த கற்குவியல்களின்மீது செல்ல, அவர்கள் மனங் களித்து, 'வரட்டும், ஒரு கை பார்த்து விடுவோம்' என்று தீர்மானித்துச் சிறிது பொறுமையுடனிருந்தனர்.

## III

ஒருபுறம், பொன்னனுக்கும் காமாட்சிக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது :—

"ஐயா! நம்முடைய இந்தப் பட்டிக்காட்டுக் கூட்டத்திற்கு இவ்வளவு போலீஸ் பந்தோபஸ்து ஏன்? உருவின கத்தியும் ஏறிட்ட துப்பாக்கியுமாக முந்நூறு சிப்பாய்கள் எதற்காக? நீர் பட்டணத்துப் பேர்வழியாயிற்றே; உமக்கு எல்லாந் தெரிந்திருக்குமே? ரங்கஸாமி உலக சமாசாரத்தைப் பற்றிப் பேசினால் இவர்களுக்கென்ன?" என்று காமாட்சி விளையாட்டாகப் பொன்னனைக் கேட்டாள். பொன்னனோ அன்று மிகவும் அலைந்து திரிந்து களைத்துப்

போய் மனங் கலங்கியிருந்தான். ஆனாலும், அவன், காமாக்ஷிக்குப் பதிலாக,

"காமாக்ஷி! நீ விளையாட்டாகக் கேட்டாலும், அது கேட்கவேண்டிய விஷயந்தான்! இந்தப் போலீஸ் கூட்டத்தால் ஏதேனும் விபரீதம் சம்பவிக்குமென்றே நான் பயப்படுகிறேன். போதாக்குறைக்கு முதலியார் பண்ணையாட்களோ மகா முரடர்கள் எதற்கும் துணிந்தவர்கள். அவர்களில் எவனையாவது ஒருவனைப் போலீஸார் தொட்டால் போதும்! உடனே எல்லோரும் போலீஸார் மீது புலிபோலப் பாய்ந்துவிடுவார்கள். கல்லை வாரி யடிப்பார்கள். போலீஸாரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பிப்பார்கள். கடைசியில் பெருங் கலகமாகத்தான் முடியும்" என்றான்.

காமாக்ஷி இதைக் கேட்டு நடுநடுங்கி, "ஐயா! அவ்வளவு பெரிய கலகத்தில் வந்து முடியுமென்று நினைக்கிறீர்?" என்றாள்.

பொன்னன், "ஆமாம் காமாக்ஷி! வேறு வழியில்லை. இப்பொழுதிருக்கும் நிலையில் எல்லாம் அப்படித்தான் சேர்ந்திருக்கின்றன. மாரிகாலத்தில் வானத்தில் மேகங்கள் திரண்டு நின்றால் மின்னலும் இடியும் நிச்சயந்தானே? இன்னும் அரைமணியில் நாம் தப்பிப் போகக்கூட வழியின்றி ஆகிவிடும்போலிருக்கிறது. காமாக்ஷி! உன்னைக் குறித்துத்தான் நான் வருந்துகிறேன். அதை நீ அறிவாயோ?" என்று காதல் ததும்பும் இனிய குரலில் காமாக்ஷியைக் கண்கொட்டாமற் பார்த்துக்கொண்டே சொன்னான்.

"அநாதையாகிய என்னைப் பற்றி ஏன் அவ்வளவு கவலை உமக்கு?" என்று தயங்கித் தயங்கிக் கேட்டாள் காமாக்ஷி. அவள் நல்ல சாமர்த்திய முள்ளவ ளாகையால், பொன்னன் கருத்தை நன்குணர்ந்துகொண்டாள்.

"என் காதற்கிளியே! நான் இன்னும் விவரித்துக் கூறவேண்டுமோ? நீயின்றி இனி யிவ்வுலகில் நான் உயிர் வாழ முடியாது. உன்னை நான் ஆக்கூரிற் கண்டதுமுதல் என்னுள்ளம் உனக் கடிமையாகிவிட்டது. இன்னும் அது காதலால் துடித்துக்கொண்டே யிருக்கிறது. காமாக்ஷி! நீ என்னை மணக்காவிடில் நான் உலக வாழ் வையே துறக்க வேண்டியவன்தான்!"

"ஐயா! நீர் பேசுவது மிகவும் விந்தையாயிருக் கிறது! நானோ, தாய் தந்தையரற்றவளும் பரம ஏழையு மான ஓரநாதை! என்னிடத்தில்—"

"நானும் அப்படித்தான் காமாக்ஷி! அதனாலே தான் எனக்கு உன்னிடத்தில் அவ்வளவு பற்று உண்டா யிற்று. உன்னை விட்டால் எனக்கு வேறு கதியில்லை!"

"ஐயா! நான் காதல் இன்னதென்றே அறியாத வள். பெரியோர் சொற்படி நடப்பவள். என்னைப் போன்ற குக்கிராமத்துப் பெண்களுக்கு இதெல்லாம் என்ன தெரியும்? என் மாமன் பார்த்து எப்படிச் சொல் லுகிறாரோ அப்படியே நடப்பேன். அவரல்லவோ இதை முடித்து வைக்கவேண்டும்? மேலும் உம்மை நான் கண்ட நாள் முதல் என் அண்ணனைக் கண்டது போன்ற உணர்ச்சி என் மனத்தி லுண்டாகி வளர்ந்துவருகிறது. உம்மைக் காணுந்தோறும் என் தாய் தந்தையரின்

நினைவு வருகிறது. என் மனத்திற்கும் ஓர் ஆறுதலுண்டாகிறது!''

"காமாக்ஷி! அதெல்லாங் கிடக்கட்டும். என் பிரேமையை நீ அறிந்து இணக்கமாக ஒரு வார்த்தை சொல்; அது எனக்குப் போதும்! இன்னும் கொஞ்ச நேரத்தில் இவ்வழகான மைதானம் பெரிய போர்க்களமாகி, இங்கே இரத்த வெள்ளம் பெருகப்போகிறது! ஆதலால் நாம் இவ்விடத்தை விட்டுத் தப்பியோடிவிடுவோம். உன் பொருட்டே நான் உயிர் தப்பவேண்டும். நீ யில்லாவிடின் எனக்கு உயிர்மேலாசையில்லை. அதோ அந்தப் பாழ்மனைக் கருகில் ஒரு கட்டுமரம் தயார்செய்து வைத்திருக்கிறேன். அதன் உதவியால் நாம் விரைவில் திருமுல்லைவாயிலையடைந்து அங்கே இன்பமாய்க் கூடி வாழலாம். கடற்கரைக் கருகே அழகிய சோலைகளுடன் விளங்கும் அத் திருமுல்லைவாயிலின் சிறப்பு, அனுபவித்தவர்க்கே தெரியும். காமாக்ஷி! இனி நான் உனதடிமை; நீ யிட்டது எனக்குச் சட்டம்.''

இவற்றைக் கேட்ட காமாக்ஷி மிகவும் அச்சமும் நாணமுங் கொண்டு, ஒன்றும் பேசமுடியாதவளாய்த் திகைத்து நின்றாள். தெய்வானுக்கிரகத்தால் அச்சமயம், சொக்கலிங்கமுதலியார் அங்கு வந்து சேர, அவள் அச்சமும் கவலையும் நீங்கப்பெற்றாள்.

## IV

"என்ன பொன்னு! நீயும் காமாக்ஷியுமாக இங்கே என்ன கோட்டை கட்டுகிறீர்கள்? ஊரெல்லாம் அமர்க்களப் படுகையில் நீங்கள் இந்தத் தோட்டத்தி லொளிந்து

கொண்டு ஏதோ இரகசியம் பேசுகிறீர்களே ! நன்றாயில்லை யிது " என்றார் சொக்கலிங்கமுதலியார்.

பொன்னன், "இல்லையில்லை முதலியார்வாள்! 'இதெல்லாம் என்னகோலம்' என்று காமாக்ஷி கேட்டாள். ஒரு வேளை கலகம் நேரக்கூடுமோவென்று பயந்து அவளுக்கு விவரம் சொல்லிக்கொண்டிருந்தேன். வேறொன்று மில்லை. நான் தங்களை யொன்று வேண்டிக்கொள்ளுகிறேன். நமது பண்ணையாட்களைக் கொஞ்சம் பொறுமையுடன் பதறாமலிருக்கச் செய்யும்படி நல்லானிடம் தாங்கள் கண்டிப்பாக உத்தரவிடவேண்டும். இத்தகைய கூட்டங்களில் விளையாட்டாக ஏதாவது செய்தாலும் அது வினையாக முடியும். அப்படி யொன்றும் நேராமற் காப்பது தங்கள் கடமை. ஏதேனும் தப்பித்தவறி நேர்ந்தாலும் அதையே சாக்காக வைத்துக்கொண்டு போலீஸ்காரர்கள்—"

"இதற்கெல்லாம் நான் பயந்தவனில்லை. இந்தச் சிவப்புத் தலைப்பாவுக்குக் கூட நான் பயப்படுவதென்றால் பிறகு வேறென்ன விருக்கிறது? அவர்கள் செய்வதைச் செய்யட்டும். என் நந்தன், மூக்கன், காட்டேரி, வகையார்கள் இன்னும் இறந்துவிடவில்லையே! பார்த்துக் கொள்வோம்; கொஞ்சம் கண்ணைக் காட்டிவிட்டாற் போதாதா!"

"அதுதான் வேண்டாமென்று தங்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். டி. எஸ். பி. யும் கான் பகதூரும் நெஞ்சில் கொஞ்சமும் ஈரமற்றவர்கள். காரியத்தில் சளைக்கமாட்டார்கள். வேதகிரியோ ப்ரமோஷனிலே குறியா யிருக்கிறா ராகையால் தன் சாமர்த்தியத்தை முழு

துக் காட்டுவார். அவர்கள் தங்களுக்கு நட்பினராகவும் விருந்தினராகவும் பலநா ளிருந்திருக்கலாம். ஆனாலும், அதெல்லாம் இந்தப் புயலில் அடிபட்டுப் போய்விடும். ஏதோ பேதை உளறுகிறேனென் றெண்ணமல் என் வார்த்தையைத் தயவுசெய்து கேளுங்கள். தாங்கள் இங்கேயே தங்கிவிடுங்கள். நான் வயதில் சிறியவனானாலும், நாடெங்கும் திரிந்து அடிபட்டவன். அதிலும் போலீஸ் விஷயங்கள் எனக்கு நன்ருய்த் தெரியும். பட்டணத்தில் கொஞ்ச காலம் பழகியிருக்கிறேன்."

"பொன்னு! நீ உண்மையாக இவ்வாறு பேசுவாயாயின் அது உனக் கேற்றதன்று; பெருங் கோழைகளின் வார்த்தையாகும்! நம்மவரனைவரும் கூட்டத்தின் நடுவில் அகப்பட்டிருக்க, நாம் இந்தத் தோட்டத்தில் பழைய மாமரப் பொந்திற் பதுங்கியிருப்பது எவ்வளவு கேவலம்?"

முதலியார் இவ்வாறு கூறினும், பொன்னனுங் காமாக்ஷியும் அவரைக் கூட்டத்திற் போகவேண்டாமென்றே மறுபடியும் வருந்தி வேண்டிக்கொண்டனர். அப்படி அவர்கள் மனமொத்து அன்புடன் முதலியாரை வேண்டும்பொழுது, அவர்க ளிருவரும் ஒரு குலையிற் காய்த்த இரண்டிளநீர்போலக் காணப்பட்டனர்.

அவ்விருவருடைய முகச் சாய லொற்றுமையை முதலியார் சிலநாளாகக் கவனித்துச் சந்தேகப்பட்டு வந்தார். அவ்வொற்றுமை இப்பொழுது அவர்கள் மனமொத்து வருந்தி வேண்டும் வேளையில் மிகவும் தெளிவாய்ப் புலப்பட்டது. அதனல் அவர் புன்னகையுடன் அவர்களைப் பின் வருமாறு வினவினர்:

"பொன்னு! இப்பொழுது உங்க ளிருவரையும் பார்த்தால் ஒரு தாய் வயிற்றிற் பிறந்த அண்ணனுந் தங்கையுமாகத் தோன்றுகிறது! இந்தத் தாலூகாவிலே தான் உன் ஊரென்று சொன்னுயே, அது எந்த ஊர்?"

பொன்னன்: "மேமாத்தூர்."

"மேமாத்தூரா?" என்று காமாக்ஷியும் முதலியாரும் ஒரே குரலாக வியப்புடன் கேட்டனர்.

முதலியார்: "மேமாத்தூரில் உன் தகப்பனுர் பேர்!"

பொன்னன்: "பெரிய பண்ணை வைத்திலிங்க முதலியார்."

"பெரிய பண்ணை வைத்திலிங்க முதலியார்!" என்று முன்னிலும் மிக்க வியப்புடன் இருவர் குரலும் ஒத்தெழுந்தது. மூவரும் ஆனந்தத்தால் சற்றுநேரம் ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் நின்றனர். பிறகு, "அப்படியானல் நீ என் அண்ணன்!" என்று காமாக்ஷி மிக்க வியப்புடன் தன்னையே தான் நம்பாமல் கூறினுள்.

"ஆமாம் காமாக்ஷி! பொன்னன் உன் அண்ணன் தான்; நான் ஊகித்தது சரியாய்விட்டது!" என்று முதலியார் களிப்புடன் கூறி, அவர்கள் வரலாற்றைக் கூறலானுர்:

"காமாக்ஷி உன் மாமன் எங்களுக்கு மிகவும் வேண்டியவர். நீ ஐந்துவயதுக் குழந்தைமுதல் அவர் வீட்டில் வளர்ந்து வருவது எனக்குத் தெரியும். உன் தந்தையும் எங்களுக்கு வேண்டியவர்தான். தம் அருமைப் புதல்வன் பொன்னன் ஏழுவயதா யிருக்கும்பொழுது கரடிக்காரன் கையில் அகப்பட்டு எங்கேயோ தப்பிப் போய்விட்டபடி

யரல், உன் தாய் தந்தையரிருவரும் மிகவும் வருந்திப் புலம்பிப் புத்திரசோகத்தாலேயே மாண்டனர். பொன்னு! உன் இளம்பிராயத்து வரலாறேதேனும் கொஞ்சமாவது உனக்கு நினைவிருக்கிறதோ?"

"முதலியார்வாள்! கொஞ்சங் கொஞ்சம் நினைவிருக்கிறது. ஆனால் அதைச் சொல்லிக்கொண்டிருக்க இது சமயமன்று; பின்னர்ப் பார்த்துக்கொள்வோம். ஈசனருளை யென்னவென்பது! இன்று என் தங்கையைக் காணப்பெற்றது என்ன ஆச்சரியம்!"

பொன்னனுக் குண்டான வியப்பாலும் களிப்பாலும் அவன் வார்த்தைகளை முழுதும் முடிக்கக் கூடவில்லை. அழகே உருவாக அயலில் நிற்கும் தன் தங்கையை மனத்தெழுந்து பொங்கிய பேரன்புடன் கண்ணிமையாது நோக்கினன். அதுவரை அவனை மையலில் ஆழ்த்தின அவளழகே அப்பொழுது அவன் மனத்தில் உண்மையான அன்பு வெள்ளத்தைப் பெருக்கியது. காமாக்ஷியும் அடங்காத களிப்போடும் அன்போடும் பொன்னனைச் சார்ந்து நின்றாள். அவளகத்தெழுந்த அவ்விரண்டும் அவள் கண்களில் ததும்பிக் கசிந்தன.

## V

"அதென்னடா அது! ஒரே பேய்க்கூச்சலுங் கலகமுமாயிருக்கிறது! பொன்னு, ஓடிப்போய்ப் பார். கலகம் மிஞ்சும்போலிருக்கிறதே!" என்றார் முதலியார்.

பொன்னனும் பயந்து பரபரப்புடன் வெளியே ஓடினன். அவன் மனம் காமாக்ஷியைப் பாதுகாப்பதில் கவலையுடன் பற்றி நின்றது.

பொன்னன் சென்றதும், முதலியார், தனித்து நின்ற காமாக்ஷியின் ஈடிலாத அழகைக் கண்குளிரக் கண்டு மன முருகி, அத்தகைய சந்தர்ப்பம் தனக்கு வாய்த்ததுபற்றி மகிழ்ந்து வெளியே நடக்கும் கலகத்தையும் மறந்து சற்றுக் கூச்சத்துடன் பேசத் தொடங்கினர் :—

" கண்மணீ காமாக்ஷி! உண்மையில் நீ என் கண் மணியே! உன்னை நான் ஆக்கூர் ரயிலடியில் கண்ட நாள் முதல் எனக்கு ஊணுமில்லை, உறக்கமு மில்லை; மன வமைதியுமில்லை. காதலால் தாமரையிலையில் நீர்த்துளி போல என் மனந் தவிக்கின்றது. அதை நான் வெளியிட இதுவரை எனக்குச் சமயம் வாய்க்கவில்லை இப்பொழுது உன் செவ்வாய் திறந்து எனக்குத் தேறுதல் கூறுவிடின் என்னுயிர் நில்லாது! எனதுடல், பொருள், ஆவி யெல்லாம் உன்னுடையது. நான் உனதேவலின்படி நடப்பேன்" என்றார்.

இதைக் கேட்ட காமாக்ஷி, பருந்தைக் கண்டு பயந்து தன்னையும் மீறி ஆகாயத்தில் எட்டிப் பறக்கும் சிட்டுக் குருவி போல மன நிலையின்றி நடுநடுங்கி, இன்னது சொல்வது, செய்வது என்றறியாதவளாய்த் திகைத்து நின்றாள். இந்நிலையில் வெளியே குழப்பம் மேன்மேலும் மிக பொன்னன் அலறிப் புடைத்துக்கொண்டு தோட்டத்திற்குள் ஓடிவந்தான்.

" முதலியார்வாள்! மோசம் போனோம். இனி நாம் இங்கிருந்தால் உயிர்தப்ப முடியாது. சற்றுநேர முன்பு காமாக்ஷியிடம் நான் கூறினதெல்லாம் அப்படியே பலிக்கும்போலிருக்கிறது! என் யஜமானனையும் ராஜேச்வரி

யம்மாளையும் இனி மீட்க முடியாது. அவர்கள் அலை மோதுங் கூட்டத்தின் நடுவில் அகப்பட்டுக்கொண்டனர். இதைப்போன்ற கூட்டம் இதுவரை நான் எங்குங் கண்டதில்லை! மகா முரட்டுக் கூட்டம். நிச்சயம் பெருங் கலகமாகத்தான் முடியும்.''

"என்ன விஷயம் பொன்னு! தெளிவாய்ச் சொல்!''

"சர்க்கார் உத்தரவை மீறி என் யஜமானன் உபந்நி யாசம் செய்யத்தான் போகிறாராம். அவ்வாறே மற்றவர்க ளும் பேசப்போகிறார்களாம். அப்படியானால் வருவதின்ன தென்று கேட்கவும் வேண்டுமோ? கூட்டத்தில் குழப் பம், கல்லெறிதல், அதன்மேல் துப்பாக்கிப் பிரயோகம் எல்லாம் ஆகும். இதுவோ பட்டணத்துக் கூட்டமில்லை. துப்பாக்கிக் குண்டுக்கும் பயப்படாது. இவர்களெல்லா ரும் பொல்லாப் பயல்கள்! உங்கள் பண்ணையாட்களே போதாதா? மைதானத்தில் பதினாயிரம் ஜனங்கள் வலையி லகப்பட்ட மீன்கள் போலத் தவிக்கின்றனர்! உள்ளே வரமுடியாமல் கோட்டைக்கு வெளியே பதி னாயிரம் பேர் கூடி நிற்கின்றனர். இவ்வழகிய வெளி இன்னும் அரைமணியில் அநியாயமாய்ப் படுகளமாகப் போகிறது! நாம் இங்கிருந்து அதையும் கண்கொண்டு காணவேண்டுமா?''

"இதற் கிப்பொழுது என்ன செய்யலா மென்கிறாய் பொன்னு?'' என்று முதலியார் கவலையுடன் கேட்டார்.

"உயிர் தப்பிப் பிழைக்கவேண்டுமானால் அதற்கு ஒரே வழிதான் உளது. அதாவது அவர்கள் கண்ணிற் படாது கடல் வழியே செல்வதுதான். நான் இத்தகைய

ஆபத்தை யெதிர்பார்த்துக் காலையிலேயே ஒரு கட்டுமரத்தைத் தயார்செய்து, அதோ அவ்விடிந்த கோவிலின் மதிற்புறத்தே மறைத்து வைத்திருக்கிறேன். இப்பொழுதே ஒருவரு மறியாமல் தப்பிப்போனால் பிழைக்கலாம். ஒரு மணி நேரத்தில் பத்துமைல் போய்விடலாம்! காற்றும் நமக் கனுகூலமாயிருக்கிறது. காமாக்ஷியையும் தங்களையும் நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்; தயவுசெய்து உடனே என்னுடன் வாருங்கள்."

"சீ சீ பொன்னு, என்ன கேவலம் உன் புத்தி! உன் ஆலோசனை வெகு நன்றாயிருக்கிறது! நம் நண்பர்களை யெல்லாம் ஆபத்தில் விட்டுவிட்டு நாம் மாத்திரம் திருடர் போலப் பதுங்கி உயிருக்காக ஓடுவதா! நீ உன் தகப்பனார் பேரைக் கெடுக்கிறாயே! அவர் மகா தைரியசாலி; ஒன்றுக்கும் அஞ்சார். அவர் பிள்ளையாகிய நீ இப்படியா நடுங்குவது! நம் உதவி எப்பொழுது அவசியம் தேவையோ அச்சமயத்திலா நாம் ஓடுவது! பொன்னு, கந்தன் கூட எனக்கு எட்டின பங்காளி. ஆனால் அது அவனுக்குத் தெரியாது. இந்த ஆபத்து வேளையில் நான் அந்தஸ்தைப் பார்த்தால் முடியாது. நானே நேரில் போய் டி. எஸ். பி. யைப் பார்க்கிறேன். அவர் என் சிநேகத்தை இவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட முடியாது. நாட்டின் நிலையைக் குறித்து அவரவர் தத்தம் கடமையைச் செய்யும் பொருட்டுச் சற்றுப் பிரிந்து நின்றாலும் நட்பென்பது போய் விடாது. இக்கூட்டம் நான் எதிர்பார்த்ததைவிட மிகவும் அதிகமாகிவிட்டது. இதுவே நாட்டில் பொங்கிவரும் தேச பக்திக் கறிகுறியாகும். எவ்வாறாயினும், இப்பொழுது நான் கூட்டத்தில் வழி செய்துகொண்டு சென்று கோட்

யிலிருக்கும் டி. எஸ். பி. யைப் பார்க்கிறேன். ஒரு வாறு சமாதானத்திற்கு வந்துவிடலாம். அநாவசியமான, காரணமற்ற வீண் கலகம் எதற்கு? பொன்னு! உன் தங்கையைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொண்டு நீ இங்கேயே இரு. கூடுமானல் அவளுடன் ரங்கன், ஸரஸ்வதி முதலியவர்களிருக்குமிடம் போய்ச் சேர்.—இல்லை இல்லை, இது தான் பாதுகாப்பான இடம்; இங்கேயே இரு. நான் போய் விரைவில் வருகிறேன்."

முதலியார் இவ்வாறு கூறிவிட்டுப் புறப்பட்டார். "முதலியார்வாள், ஜாக்கிரதையாய்ப் போகவேணும். கூட்டத்தின் குழப்பத்தில் அவசரப்பட்டு ஒன்றும் உத்தரவு செய்துவிடவேண்டாம். சின்னது பெரிதாகிவிடும்" என்று பொன்னன், பெருக்கெடுத்தோடும் பேராற்று வெள்ளத்தில் புறத்தே பொசியும் நீரும் ஓடிக் கலப்பதுபோல உள்ளன்புடன் தனதபிப்பிராயத்தை வற்புறுத்தினன்.

முதலியார் தன் பார்வைக்கு மறைந்ததும் காமாக்ஷி, "அண்ணு அண்ணு! இப்பொழுது முதலியாரவர்களைக் காப்பாற்ற உன்னையன்றி வேறொருவரு மில்லை. அவர் இப்படிச் செல்லுகிறரே! அவரைக் காப்பது உன் பொறுப்பு" என்று பரிவுடன் புலம்பினள்.

சொக்கலிங்க முதலியாரிடம் பரம்பரைப் பிரபு வென்ற மமதையும், சோம்பலும் குடிகொண்டிருப்பினும் அவர் தைரியத்திற் குறைந்தவரில்லை. சமயங்களில் காரியத்தைக் கைசோர விடமாட்டார். தரங்கம்பாடியோ அவர்கள் தலைமுறை தலைமுறையாக மன்னரைப்போல் ஆண்டுவந்த விடமாகும். இப்பொழுதும் அங்கே அவர்

களுக்கு மூன்னூறு ஏக்கர் நிலமுண்டு. டேனிஷ் அரசாங்கமிருந்தபொழுது அங்கே இவர்களிட்டது சட்டம். அந்தப் பழைய வுரிமைகளையும் இப்பொழுதுள்ள நிலையையும் பார்க்கும்பொழுது முதலியாருடைய உள்ளம் கொதித்தெழுந்தது. அவர் 'நம் முன்னோர், கொள்ளிடக்கரையைப் பாதுகாக்கும் ஒரு படைக்குத் தலைவீரராய் விளங்கினரே! நாம் இவ்வளவு கேவலமாய்ப் போய்விட்டோமா' என்ற மானத்தால் தூண்டப்பட்டுத் தன் நிலை மறந்து கூட்டத்தினுள் விரைவாகப் புகுந்தார். பரம்பரைப் பிரபுவாகிய அவரைக் கண்டதும் கூட்டம் தானகவே மரியாதையாய் விலகி வழிவிட அவர் சுலபமாய்க் கோட்டைவாயிலை அடைந்தார்.

## VI

அங்கே 'மலபார் போலீஸ்' வீரர் பன்னிருவர், சுவரெடுத்தாற்போல் வரிசையாய்க் கையில் ஈட்டிமாட்டிய துப்பாக்கியுடன் நின்றனர். அவர்கள் இந்த நாட்டிற்குப் புதியவர்களாகையால் சொக்கலிங்கமுதலியாரைப் பற்றி அவர்களுக் கென்ன தெரியும்? முதலியாருடைய கம்பீர நடையும், மமதையுள்ள பார்வையும், கூட்டத்தில் அவருக்கிருந்த மரியாதையும் அந்த ரிஸர்வ் போலீஸுக்குப் பிடிக்கவில்லை. அவர்களில் ஒருவன் பூண்பிடித்த கைத்தடியால் முதலியாரைப் பின்னே தள்ளி, "புத்தியில்லாத கழுதையே; நில் இங்கேயே. நீ ஓரடி முன்னே எடுத்து வைத்தால் ஈட்டிதான் உன் தொப்பையில் பாயும். ஒருவரும் இப்பொழுது டி. எஸ். பி.யைப் பார்க்கமுடியாது" என்று அதட்டி, தான் சொன்னதை நிறைவேற்றுபவன்போலத் தன் ஈட்டியை முதலியார் மார்புக்கு நேரே நீட்டினன்.

யஜமானனுக்கு நேர்ந்த அவமானத்தைக் கூட்டத்திலிருந்து தம் கண்ணாரக் கண்ட நந்தன், மூக்கன், நல்லான், கரியன் முதலியோர் சுடப்பட்ட புலிபோல ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து, அங்கு நின்ற பன்னிரண்டு போலீஸ்வீரர்களையும் பின்கட்டு முறையாகக் கட்டி யுருட்டி விட்டார்கள். அவர்களுடைய ஆயுதங்களும் போனவிடந் தெரியவில்லை! அதற்குள் நல்லான், கரியன், அமாவாசையாகிய மூவரும் முதலியாரைத் தூக்கிச்சென்று பாதுகாப்புள்ள ஓரிடத்திற் சேர்த்தார்கள்.

போலீஸ் சங்கட ஊதல் எங்கும் பறந்தது. டி. எஸ். பி. யும் கான்பகதூரும் நித்திரையினின் றெழுந்து கண்ணைத் துடைத்துக்கொண்டு வெளியே வருவதற்குள் இங்கே பேரமர்க்கள மாகிவிட்டது. கூட்டம் அடங்காத கோபங் கொண்டு அங்கங்கே குவியலாகக் கிடந்த கற்களை வாரி வீச ஆரம்பித்தது. ரங்கனும் கந்தனும் தங்களாலியன்றவரை கூட்டத்தை யடக்க முயன்றும் அது முடியவில்லை.

மாயவரம் டிப்டி கலெக்டர் தன் சாக்கு நிஜாருடன் புத்தகமுங் கையுமாக, காகிதம் பென்ஸில்களுடன் கலகத்தையடக்கும்பொருட்டு வந்து கோட்டை மதிலின்மேல் ஏறி நின்றார். "கலகம் மிஞ்சும் போலிருக்கிறது—" என்று தன் உத்தரவை நெடுங் குரலில் வாசிக்கத் தொடங்கினர். அதற்குள் "மண்டை யுடைகிறது" என்னும் கூக்குரல் எங்குங் கிளம்பிற்று. "இன்னும் இரண்டு நிமிஷத்தில் கூட்டம் கலையாவிட்டால் போலீஸார் சுடும்படி நேரிடும்" என்று இழுத்திழுத்துக் கொண்டு கலகக்கூட்டம் கலையும் உத்தரவை விடுத்தார்.

ஆனால் அது அங்கே ஒருவர் காதிலும் படவில்லை. அந்தப் பேராரவாரத்தில் யாருக்கு என்ன கேட்கும்! பக்கத்து ஆலமரத்தில் உட்கார்ந்திருந்த நாலு காக்கைகள் இதைக் கேட்டுக் காகாவென்று ஒரு முறை கத்தி, ஒருவேளை துப்பாக்கிக் குண்டுகள் தங்கள் மேற் பாய்ந்தால் என்ன செய்வதென்று பயந்து மறுபடியும் டிப்டி கலெக்டரைப் பார்த்துக் கா கா கா வென்று கத்திக்கொண்டே கடலை நோக்கிப் பறந்தோடிவிட்டன.

ஈக்கள் போல் மொய்த்துள்ள பதினாயிரம் ஜனங்கள் இரண்டு நிமிஷத்தில் எவ்வாறு கலைந்துபோக முடியும்? கிழக்கே கடல்; தெற்கே கோட்டைச் சுவர்; மேற்கிலும் வடக்கிலும் பெரிய கட்டிடங்கள். ஊருக்குள்ளே வருவதற்கும் வெளியே போவதற்கும் மேற்கேயுள்ள ஒரே பெரு வாயில்தான் வழி. அதுவோ போலீஸாரால் மூடப்பட்டுக் காவலுடனிருக்கிறது. இவற்றையெல்லாம் அந்தக் குழப்பத்தில் யார் ஆலோசித்தார்கள்? டிப்டி கலெக்டர் சட்டப்படி தன் வேலையைத் தான் செய்துவிட்டார்.

'லத்தி சார்ஜ்' (தடியடி) ஒரு முறை இரு முறை மும் முறையும் ஆகி முடிந்தது. கூட்டங் கலைந்தபாடில்லை. போலீஸார் சுட ஆரம்பித்தனர். ஒரு தடவை, இரண்டு தடவை குண்டுகள் ஈசல்போல் ஆகாயத்திற் பறந்தன. தெய்வாதீனமாய்ப் பல குண்டுகள் பக்கத்துத் தோட்டத்திலே போய் விழுந்து மா, பலா, வாழை, மாதுளை முதலிய பழங்களில் பாய்ந்தன.

பொன்னன் குதிகாலில் ஒரு குண்டு பாய்ந்தது! அவன் நொண்டிக்கொண்டு அங்குமிங்கும் அலைந்தான்.

குண்டுகள் பறக்கும்போதெல்லாம் ரங்கன், கந்தன், ராஜேச்வரி, ஸரஸ்வதி ஆகியவர்கள் மிகவும் அமைதியுடன் கூட்டத்தினிடையே நின்று சாந்தப்படுத்தினர்கள்.

திடீரென்று கந்தன் வீறிட்டுக் கதறித் தன் வலது கையை இடது மார்பில் அணைத்துக்கொண்டு தரையிற் சுருண்டு வீழ்ந்தான். அவன் முன்னே கண்ட கனவிலே சாட்டை நுனி பட்ட அதே இடத்தில்-இதயத்தில்-கொலைக்குண்டு பாய்ந்துவிட்டது! ஆஹா! கொலை செய்யுங் குண்டுக்குக் கூட அவனிதயம் அன்புடனிடங் கொடுத்தது!

'கந்தா,' 'கந்தா' என்று பதினயிரம் ஜனங்களுங் கதறினர். கடலலைகளும் பொங்கி யார்த்தன. கடலில் மிதந்த அக் கட்டுமரக் கட்டையும் தன் தலைதூக்கி யீசனை வேண்டுவதுபோல் அலையில் எழும்பியது.

"ஆ ராஜி, ரங்கா! என் வாழ்வு முடிந்துவிட்டது! குண்டு கொலைக் குண்டுதான்; சந்தேகமில்லை. ஈசன் செயல்! இன்று அதிகாலையில் பூர்ணசந்திரன் என்னுடன் பேசியபொழுதே இதுதான் கடைசி நாளென் றெண்ணினேன்; அவ்வாறே யாயிற்று. நான் போகிறேன். மறுபிறப்பில் திரும்பவும் இச் சோழநாட்டிலேயே பிறந்து உங்களுடன் கூடி உழைப்பேன். நீங்கள் இப்பொழுது சிறை சென்று திரும்பு முன் நான் மறுபிறப்படைந்துவிடுவேன். நீங்கள் என்னைக் குறித்துச் சிறிதும் வருந்த வேண்டாம். நாம் ஆலோசித்துத் தீர்மானித்தபடி நடத்த முயலுங்கள். அதுதான் நீங்கள் செய்ய வேண்டியது. உண்ண உணவும், இருக்க நிழலு மின்றித்

தவிக்கும் கோடிக்கணக்கான பேதை மக்கள் பொருட்டு உழையுங்கள். ஈசன் வழிவிடுவார்!"

கந்தனுக்கு மேல்மூச்சு வாங்கத் தொடங்கிற்று. அவன் கொஞ்சம் முகம் சிவக்க "ராஜீ! ரங்கனை நீ தவறாமல் மணம் புரிந்துகொள். இந்நாட்டில் அவனிலும் முயர்ந்தோ ரில்லை. சொக்கலிங்கம்! உன்னைப்போன்ற மிராசுதார்களாலேதான் நம் நாடு முன்னேற்ற மடைய வேண்டும். உன் தியாகமே தியாகம்! அழியாத பரம்பரைச் செல்வத்திற் பிறந்த சீமானாகிய நீ, இந்த வாலிபத்தில் அச் செல்வத்தைத் தியாகம் செய்து எங்களுடன் உழைக்க முன்வந்தது நாட்டின் பாக்கியமே. நீ காமாக்ஷியை மணம் புரிந்துகொண்டு அவளுடன் இல்லறத்தை இனிது நடத்தி வாழ்வாயாக! அவளால் நீ மிக்க சிறப்படைவாய். பொன்னு, நீ பரிசுத்தனாகிவிட்டாய். உன் செயல்களே நெருப்புப்போல உன்னைத் தீய்த்துப் பரிசுத்தமாக்கிவிட்டன!" என்றான். இவ்வாறு கூறிய கந்தன் தன்னருகே தலைகுனிந்து உட்கார்ந்திருந்த பொன்னனைக் குழந்தையைப்போல் முதுகிலே தட்டிக் கொடுக்க, அவன் கந்தனுடைய கால்களைப் பற்றிக்கொண்டு நமஸ்கரித்தான்.

பின்பு கந்தன் மிக்க சிரமத்துடன் ஸரஸ்வதியிருந்த பக்கமாகத் திரும்பி, "ஆ ஸரஸ்வதி! இப்பொழுது உன்னைப் பார்த்தபின்னரே நான் மனக்குறையின்றி உயிர் விடுகிறேன்! உன்னைப்போன்ற ஸ்த்ரீ ரத்னங்கள் இருக்கும்வரை நம் நாட்டின் சுதந்திரத்திற்கு இனிச் சந்தேகமில்லை. உங்களுடைய உறுதியான எண்ணத்தை ஒரு

வரும் முறிக்க வியலாது. குண்டுகூட உங்களைத் தொட முடியாது. உன்னைப்போன்று உயர்ந்த வாழ்க்கையைக் கைக்கொள்ளும்படி எல்லோருக்கும் நீ உபதேசம் செய்!" என்று கூறி மரண வேதனையால் மேலே பேச முடியாதவனானான். அவன் அம் மரண வேதனையை மிகவும் சாந்தமாகப் பொறுத்துக்கொண்டான்.

“கந்தா! இப்பொழுது உன்முடிவு ஈசன் கட்டளையாயின், உன் ஆசீர்வாதமே எங்களுக்கு வேண்டுவது. நாட்டின் சுதந்திரம் நண்ணும் வரை நாங்கள் மணம் புரியவும் இல்லற வின்பத்தை நுகரவும் நினையோம்" என்று எல்லோரும் ஒரே குரலாக வாக்களித்தனர்.

கந்தனுக்கு நினைவு சோர ஆரம்பித்தது. அவன், “காலம் குறுகிவிட்டது ராஜி! ஆனால், இத்தகைய முடிவு கிடைத்தது என் பாக்கியமே. கொஞ்சம் தாகமாயிருக்கிறது. ராஜி, ஸரஸ்வதி! கொஞ்சம்........"

கந்தன் மேலே நாவெழாதவனாய் அலைமோதும் கடலை ஆவலுடன் உற்றுப் பார்த்தான். ராஜேச்வரியும் ஸரஸ்வதியும் கடற்கரையி லிருந்த நன்னீர்க் கிணற்றுக்கு ஓடினார்கள். பொன்னனும் நொண்டிக்கொண்டே அவர்களைப் பின் தொடர்ந்தான். அவர்கள் நீர்கொண்டு திரும்பு முன்னே கந்தன் கண்மூடிவிட்டான்!

“ஹா! ஐயோ! தாகத்துக்கு நீர் வேண்டி அதனைப் பெறுமலே கந்தன் உயிரிழந்தானே" என்று ராஜேச்வரி புலம்பினாள். “ஐயோ, சுதந்திர தாகத்தால் வருந்தி, அது தீருமுன்னே கந்தன் உயிர் நீத்தானே" என்று ஸரஸ்வதி புலம்பினாள்.

“நாம் கந்தனுக்கு வாக்களித்ததை மறவாமல் மனத்தில் வைத்து அவன் கோரிக்கையை நிறைவேற்றுவோம். அதுதான்—நாம் உண்மையுடன் இயற்றும் நாட்டுத் தொண்டுதான்—அவன் தாகத்தைத் தணிக்கவல்லது” என்று ரங்கன் தீர்மானமாக இனிய குரலிற் கூறினான். அவன் இப்பொழுது மொழியின் சுவையினும் செயலின் சிறப்பை நன்குணர்ந்தவனைக் காணப்பட்டான்.

“கந்தன் ஒரு தேசபக்தத் துறவியாகவே உயிர் நீத்தமையால், அவன் சமாதியை ஆக்கூரில் கள்ளுக்கடையிருந்தவிடத்திலேயே அமைத்து, அதனருகிலேயே நம்முடைய நோக்கங்களைப் பூர்த்திசெய்வதற் குரியதோர் ஆச்சிரமத்தையும் அமைப்போம். நாட்டின் உண்மைத் தொண்டனுகி, என்று மழியாத புகழுடம்பைப் பெற்ற கந்தனுக்கு நாம் காட்டக்கூடிய ஞாபகச் சின்னமாக அவை விளங்கட்டும்” என்று ராஜேச்வரி கூற, ஸரஸ்வதி அதனை அன்புடன் ஆமோதித்தாள்.

## அத்தியாயம்—17

### முடிவு

I

இச் சம்பவங்கள் நடந்த ஒருமாதத்திற்குப் பிறகு தரங்கம்பாடி நிருபரிட மிருந்து சென்னைப் பத்திரிகைகளுக்குப் பின் வரும் செய்தி கிடைத்துப் பிரசுரிக்கப்பட்டது :—

" தரங்கம்பாடி கொள்ளைக்கேஸ். மேற்படி வழக்கில், மிஸ்டர் ஏ. பி. நடராஜன், எம். ஏ., ஐ. ஸி. எஸ்., ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட், நேற்றைத் தினம் தீர்ப்புச் சொல்லிவிட்டார். தண்டனைகள் பின் வருமாறு:—

" மிஸ்டர் ஆர். எஸ். ரங்கஸாமி பார்-அட்-லா., ஒரு வருஷம் கடுங்காவல். ராஜேச்வரிபாய் - ஆறுமாத வெறுங் காவல். ஸரஸ்வதி - ஆறுமாத வெறுங்காவல். காமாக்ஷி - ஆறுமாத வெறுங்காவல். பொன்னுசாமி - ஆறுமாத வெறுங்காவல். சொக்கலிங்க முதலியார் ஒருவருஷக் கடுங்காவல்.

" சொக்கலிங்க முதலியாரின் பண்ணை யாட்களான நந்தன், மூக்கன், காட்டேரி, அமாவாசை, நல்லான் பாவாடை முதலிய எழுபத்திரண்டு பேருக்குத் தலைக்கு இரண்டிரண்டு வருஷம் கடுங்காவல்."

இடி யிடித்தாற்போன்ற இவ்விஷயத்தைக் கேட்ட அன்றிரவே பொற்கொடியாச்சி துக்க மேலீட்டால் உயிர் நீத்தாள்.

## II

பத்திரிகைகளுக்கு இந்தச் செய்தியை அனுப்பிய திருபர் யாராயிருக்கலாம்? நமது ஆக்கூர் ஸ்டேஷன்மாஸ்டர் சுந்தரமே! அவன் எப்பொழுதும் அதிர்ஷ்டசாலி தான். ஸரஸ்வதியை மணந்தவன் அதிர்ஷ்டசாலியாகத் தானே யிருப்பான்! அந்த அதிர்ஷ்டம் அன்று தரங்கம் பாடிக் கூட்டத்திலும் அவனைக் கைவிடவில்லை. சுந்தரம் அன்று கூட்டத்திற்கு வந்து, தானும் அதிற் புகுந்து வேலை செய்திருக்கிறான். ஆயினும் அவனைக் குண்டும் தொட வில்லை; அரசாங்கத்தாரும் அவன்மீது கைவைக்கவில்லை. ஆமாம்! எப்பொழுதும் ஓரிடம் நிலையின்றி அலைந்து திரியும்படி கர்லில் சக்கரரேகை உள்ள சுந்தரத்திற்குச் சிறைவாசம் ஏலா தன்றோ?

## III

சுந்தரத்தையும் கந்தனையும் நாம் முறையே ஒரேணி யின் முதற்படியும் இறுதிப்படியுமாகக் கொள்ளலாம்.

சஞ்சல புத்தியுடன் ஒருநிலை யின்றித் திரிபவனும், நிஷ்டையில் தன்னை மறந்து நிற்கும் ஞானியாகிய ஜீவன் முக்தனும் சஞ்சரிக்கும் வழி ஒரே மலை வழியே! ஆனால் முன்னவன் அதன் அடிவாரத்திலேயே நின்றுவிட, ஞானி யானவன் மேகமண்டலத்திற்கும் மேற்படச் செல்லும் அம்மலையின் உன்னத சிகரத்தை யடைகிறான்.

ஆம்! ஜீவன் முக்தி யென்பதென்ன, ஞான மென்பதென்ன? உலகத்தி லுண்டாகும் வாழ்வுதாழ்வுகளிலும் வெற்றி தோல்விகளிலு மிருந்து கிடைக்கும் அனுபவ

வுணர்ச்சியே யாகும்! அஃது இடியில் மின்னல்போல எல்லார்க்கும் உடன்பிறந்ததே.

கடைப்படியில் அது உலகானுபவத்திற் குரிய கர்மாக்களைக் காம்யமாகச் செய்யும்படி தூண்டுகிறது. இடைப்படியில் கலைப்புலமை, கவிதாசக்தி, தெய்வபக்தி, தேசபக்தி, அன்பு, அருள், தத்துவவிசாரம் முதலிய சிறப்புக்களைத் தந்து நிற்கிறது. உயர்படியில் உன்னதமாகிற பிரம்மசரியத்தையும் யோகமார்க்கத்தையும் தருகிறது. அதையுங் கடந்த, படியற்ற நிலையி லிருப்பவனே பரம ஞானியாகிய ஜீவன் முக்தன். அவனே, 'எப்பொருளிடத்தும் ஒளிரும் பரமாத்ம சக்தி ஒன்றே' என்னும் மெய்யுணர்வாகிய பேரின்ப வுணர்ச்சியைப் பெறுகிறான்.

இவ் வுண்மைகளை யுணர்ந்தோர் தமக்குரிய கடமைகளையும் நன்குணர்ந்து அவற்றை நிஷ்காம்யமாகச் செய்வர். அவ்வா றுணர்ந்து செய்வதே இம்மையில் ஒருவர் சிறப்பெய்துதற்குரிய சீரிய வழியாகும். அதுவே எவர்க்கும் சித்திக்கத்தக்க யோகமும் ஞானமு மாகும். அதுவே இன்பநிலை.

முற்றும்

KESARI PRINTING WORKS, G. T., MADRAS

## Books by K. S. Venkataramani

(In English)

**A New Novel**

**KANDAN THE PATRIOT** (A Novel of New India in the Making)

Featherweight Crown 8 vo., pages 261. Rs. 2.

| | | RS. | A. |
|---|---|---|---|
| 1. | **Paper Boats.** (Sketches of Indian Village Life) Third Edition ... ... ... | 1 | 0 |
| 2. | **On the Sand-Dunes,** (Musings on Life in Free Verse) Second Edition (Revised & Enlarged) ... | 1 | 0 |
| 3. | **Murugan, The Tiller,** (a Novel of Indian Rural Life, Pp. 336.) Second Edition ... ... | 2 | 0 |
| 4. | **The Next Rung.** (A Constructive Study of Modern Civilisation) ... ... ... | 1 | 8 |
| 5. | **A Day with Sambhu.** (Talks to a Boy) ... | 0 | 8 |
| 6. | **Renascent India.** (A Study of Indian Problems) Second Edition (Revised & Enlarged) ... | 1 | 0 |
| *Reprints :—* | | | |
| 1. | **Swaraj Constitution** ... ... ... | 0 | 4 |
| 2. | **The Indian Village** ... ... ... | 0 | 4 |
| | நமது கிராம வாழ்க்கை. ... ... | 0 | 2 |

*SOME OPINIONS*

1. Mr. Venkataramani writes beautifully about Indian Village Life. I have read books of his for some years and now "Paper Boats" is in its third edition. Charming and accurate descriptions: attractive essays.—*Hamilton Fyfe in the Daily Chronicle.*

2. Mr. Venkataramani is known to a small but di criminating public as the author of some attractive sketches of Indian village life—*G. T. Garratt in the Nation.*

3. One of the best of Indian writers of to-day is Mr. K. S. Venkataramani.—*Cape Argus.*

4. Mr. Venkataramani is a village prose-poet. He frames a political programme while he plays the lyre.—*The Literary Guide.*

**Svetaranya Ashrama, Mylapore, Madras.**

## Books by K. S. Venkataramani

5. An Indian who writes with rare charm and sympathy about his own people.—J. A. SPENDER in *The Changing East.*

6. One of the foremost writers of India; an Indian thinker—*Public Opinion.*

7. As a writer of short sketches and essays, Mr. K. S. Venkataramani has achieved no small reputation. Prominent Br [illegible] ters have commeoded his work, so respected an authority as [illegible] eric Harrison remarking that " the English style is graceful a [illegible] t,'' while Mr. William Archer found in the author's sketc [illegible] ich grace and sincerity of feeling."—*Madras Mail.*

8. Steadily advancing to the front rank of his g [illegible] is Mr. Venkataramani. We first knew this author from " Pa [illegible] s," a fine performance which earned him just praise for his [illegible] of that almost lost art, the Essay.—*The Daily Herald.*

9. Mr. Venkataramani is a man of refinement of se [illegible] of lofty ideals, and immensely sincere. He is an artist [illegible] his *genère*, the interpretation of his own people.—*The New* [illegible] 's, *New York.*

10. Mr. Venkataramani writes a sensitive, idiomatic [illegible] nd the sympathy and intimate understanding with which h [illegible] ets his people should make the reading of his book a liberal ed [illegible] for Englishmen.—*The Bookman.*

11. The success he has achieved in English authorsh [illegible] ed remarkable—*The Cape Times.*

12. The writer is a complete master of English simp [illegible] y, with a sense of humour steeped in the sweetness of affectio [illegible] ng through the living descriptions.—*Dr. Annie Besant* in th [illegible] *rd to Paper Boats.*

13. An Indian idealist: clear reasoning and obvious [illegible] ty tranquil charm and boundless human sympathy; idealis [illegible] it large in every page of Mr. Venkataramani's book.—*The Abe* [illegible] ss.

14. *Lord Haldane*: A little time ago you were so kin [illegible] nd me through His Holiness Shri Sankaracharya Swamigal, [illegible] of your book, *Murugan, The Tiller.* I have now read your vo [illegible] e-fully through. I have been much impressed by the art [illegible] u have displayed in the story, and the way in which you have made village life in India live for the reader. The picture has value for the student of native institutions. I have read your story, and have gained not only pleasure but knowledge.

Svetaranya Ashrama, Mylapore, Madras.